தமிழாக்கம்

# Character Development

Berean Scripture Lessonson

# ஜெபம்



தமிழாக்கம்

# Character Development

Berean Scripture Lessonson

## ஜெபம்

## பொருளடக்கம்

# ஜெபம்

# ஜெபம்

### 1. ஜெபம் என்றால் என்ன?

"ஜெபம் என்பது உச்சரிக்கப்படும் அல்லது வெளிப்படுத்தப்படாத இருதயத்தின் உண்மையான ஆசையாகும்."

**R2251 [col. 1 :3]:**

"ஜெபம் என்பது உச்சரிக்கப்படும் அல்லது வெளிப்படுத்தப்படாத இருதயத்தின் உண்மையான ஆசை" என்று கவிஞர் கூறுகிறார். மற்றும் உண்மையை சொல்வோமானால், "தேவன் இருதயத்தில் உள்ள எண்ணங்களையும் நோக்கங்களையும் புரிந்துகொள்ளக் கூடியவர்" என்று வேத வசனங்கள் நமக்கு தெரிவிக்கிறது. மீண்டும், பரிசுத்தவான்களின் விஷயத்தில், துன்பகரமான நேரங்களில் நாம் அவரை அணுகும்போது, நம்முடைய உணர்வுகளையும், விருப்பங்களையும் வெளிப்படுத்துவதற்கு எந்த வார்த்தைகளும் இல்லாதபோது, நம்முடைய வார்த்தைகளினால் வெளிப்படுத்த முடியாமல், ஆவியில் கலங்கி அவரிடத்தில் வரும் போது, நம்முடைய சிந்தை அல்லது நோக்கம் ஆண்டவரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. (ரோமர் 8:26) இருப்பினும், நம்முடைய ஜெபங்கள் சொல்லப்பட்டு, வடிவமைக்கப்பட வேண்டும் என்று வார்த்தைகளினாலும், உதாரணங்களினாலும் நம்முடைய ஆண்டவர் நமக்கு கட்டளை கொடுத்திருக்கிறார். கூடுமானால், புரிந்து கொள்ளப் படாத உணர்வுகளையும் பெருமூச்சுகளையும் விட்டுவிட வேண்டும். இதனுடைய முடிவில், "ஆண்டவரே, எங்களுக்கு ஜெபிக்க கற்று தாரும்" (லூக்கா 11:1) என்ற அப்போஸ்தலர்களின் வேண்டுகோலுக்கு இணங்க தற்போதைய படிப்பினைக்குரிய கட்டளைகளை அவர் கொடுத்தார்.

**F680 [¶2, (முதல் வாக்கியம்) :**

வசனங்கள் விவரிக்கிறபடி, ஜெபம் என்பது தேவனுடைய பிரசன்னத்தை அணுகுவதற்கான முயற்சி மற்றும் அவரோடு தொடர்பு கொள்ளக்கூடிய ஒரு பிடிமானமாகும்.

### 2. ஜெபத்தின் சலுகை மற்றும் வல்லமை

**R1864 [col. 1 : 6]:**

சிந்திக்கக் கூடிய மற்றும் நன்றியுணர்வுள்ள மனப்பான்மைக்கு, இராஜாதி இராஜா மற்றும் கர்த்தாதி கர்த்தாவோடு கொண்டுள்ள தனிப்பட்ட ஐக்கியமே, தேவன் அளிக்கும் மிகப்பெரிய சிலாக்கியங்களில் ஒன்றாகும். நம் தேவன் எவ்வளவு பெரியவர் என்பதையும், அவருடைய நிலை எவ்வளவு உயர்வானது என்பதையும் நாம் கருத்தில் கொள்ளும்போது, அவர் நம்முடைய அற்பமான நிலையைக் கருத்தில் கொள்வது எவ்வளவு அற்புதமானது ! இப்படிப்பட்டவருடைய மகிமையினால் வானங்கள் மூடப்பட்டுள்ளது, இந்த முழு பிரபஞ்சத்தையும் இவருடைய இராஜ்யம் ஆட்சி செய்கிறது. இவர் நாட்களின் துவக்கமும், வருடங்களின் முடிவும் இல்லாதவர். "நித்திய நித்தியத்திற்கும் அவரே தேவன்" அவர் அழியாதவரும், தன்னில் தான் ஜீவனுடையவரும், ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம் செய்பவரும், ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாக இருக்கிறார். வானங்கள் அவருடைய மகிமையையும், ஆகாய விரிவு அவருடைய கையின் கிரியைகளையும் அறிவிக்கும். அவரது பரந்த உலகளாவிய ஆட்சியில், அவருக்கு மறைவானது எதுவும் இல்லை. அல்லது அவைகளை கவனிப்பதினால் அவர் சோர்வடைவாரா? அவருடைய ஞானம், யாரால் புரிந்துகொள்ள முடியும்? அவருடைய வழிகள், யாரால் அறிந்துகொள்ள முடியும்? அல்லது அவருக்கு ஆலோசனை கூறுபவன் யார்? சிறிதானதிலிருந்து பெரியதான வரை அனைத்திலும் அவரது பரந்த அறிவியலின் அனைத்து நலன்களையும் எளிதாக்கிக் கொள்ளும் வல்லமை வாய்ந்த அறிவாற்றல், எப்படிப்பட்டது! அவருடைய கண்கள் உறங்குவதுமில்லை, தூங்குவதுமில்லை. சிறிய விஷயம் கூட அவருடைய கவனத்திலிருந்து தப்பிபோவதில்லை. அடைக்கலான் குருவிகளில் ஒன்றுக்கூட அவருடைய சித்தம் இல்லாமல் விழுவதில்லை, நம்முடைய தலையில் இருக்கும் முடியெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் பூத்து, நாளைக்கு அடுப்பில் போடப்படும் காட்டு புஷ்பத்திற்கு தேவன் உடுத்துவிக்க திறன் கொண்டவராக இருக்கிறார். நாம் அவருடைய கரத்தின் அற்புதமான கிரியைகளாக இருக்கிறோம் அல்லவா? அவருடைய அன்பிற்கும் பராமரிப்புக்கும்

பாத்திரவான்களாக இருக்கிறோம் அல்லவா ? -"கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர். என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர் என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர், என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும் என் நாவில் சொல் பிறவாததற்கு முன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர். முற்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி, உமது கரத்தை என்மேல் வைக்கிறீர். (சங்கீதம் 139:1-5)

**R2004 [Col. 1 :4]:**

தேவன் தம்முடைய ஜனங்களுக்கு அளித்திருக்கும் ஜெபத்தின் சிறப்புரிமை, கற்பனைக்கு எட்டாத மிகப் பெரிய வரங்களில் ஒன்றாகும். "ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத் தண்டையிலே சேரக்கடவோம்." (எபிரெயர் 4:16 ) கிறிஸ்துவின் மாபெரும் பலியினால், தேவன் அளித்திட்ட கிருபையானது, கடந்த கால பாவங்கள் அனைத்தையும் மூடுவதற்கு போதுமானது. ஆனால் நாம் இந்த கிருபையை பெறுவதற்கு விசுவாசத்தோடு கிருபாசனத் தண்டைக்கு செல்லவேண்டும். அது போல, கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக நம்முடைய அனைத்து தேவைகளையும், ஒவ்வொரு முறையும் கோருவதற்கு நமக்கு கிருபாசனம் உண்டு. பரலோக தந்தை நம்முடைய தேவைகளை முன்னறிந்திருந்தாலும், நமக்கு ஏராளமான முன்னேற்பாடுகளை செய்திருக்கிறார். ஆயினும், அவருடைய ஜனங்கள் அவரிடம் கேட்டு பெற்றுகொள்ளவேண்டும். பூமிக்குரிய பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதை காட்டிலும், இப்படிப்பட்ட கிருபைகளை கொடுப்பதற்கு அவர் பிரியமுள்ளவராக இருக்கிறார் என்று அவர் நமக்கு உறுதியளிக்கிறார்.

**3. ஜெபத்தின் பொருள் என்ன?**

**R2004 [col. 1 :5]:**

நம்முடைய தேவைகளை தேவனுக்கு அறிவிக்கவேண்டும் என்ற நோக்கத்திற்காக அவருடைய ஜனங்கள் அவரை ஜெபத்தில் அணுகவேண்டுவதில்லை. ஏனெனில், நம்மை விட நம்முடைய தேவைகள் என்னவென்று அவர் நன்கு அறிந்திருக்கிறார். ஆகையால், நம்முடைய ஆவிக்குரிய நன்மைகளுக்காக, அதாவது கிறிஸ்துவின் மூலமாகவும் புதிய உடன்படிக்கையின் மூலமாகவும் தெய்வீக குடும்பத்திற்கு வந்த அனைவரிடமும் எப்போது அவருடைய அன்பையும் அக்கறையையும் மற்றும் கிருபையை உணர்ந்து கொள்ள நாம் அவருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருப்பதற்காக அவரிடம் ஜெபிக்க வேண்டும். இந்த காரணத்திற்காக, பொதுவாக இந்த பூமியின் மேல் மழையை பெய்யசெய்து, சூரியனை அனுப்பினாலும், தேவன் தம்முடைய ஜனங்களின் விசுவாசத்திற்கும், ஜெபத்திற்கும் பதில் அளிக்கும்படியாகவே, சிறிதும், பெரிதுமான பல நன்மைகளை அவர் கையில் வைத்திருக்கிறார்.

**R2252 [Col. 2 :2]:**

"உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்." ஆகையால், கிறிஸ்தவ ஜெபமானது, தேவனுக்கு தகவல் கொடுக்கும் நோக்கம் அல்ல அல்லது அவர் கவனிக்காமல் அல்லது மறந்துவிடக்கூடிய காரியங்களை அவருக்கு நினைவூட்டுவதற்காக அல்ல மாறாக, ஜெபம் ஒருவருக்கு நன்மை யளிப்பதால், அவர் ஜெபிக்கவேண்டும் என்றும் அது மிக அவசியம் என்றும் சொல்லப்படுகிறது. நம்முடைய தேவைகளில் தேவனுடைய உதவியை உணருவதற்கும், அவர் மேல் நாம் சார்ந்திருப்பதிற்கும் அவரிடத்தில் அதற்காக ஜெபிக்கும் வரையில், அப்படிப்பட்ட பல ஆசீர்வாதங்களை தன்னிடமாக அவர் வைத்திருக்கிறார். எனவே, தேவன் நமக்கு தடை செய்யும் காரியங்களை, அவர் கொடுப்பதற்காக நம்முடைய ஜெபங்கள், தூண்டுதலாக இருக்கக் கூடாது. ஆனால் அவர் நமக்கு கொடுக்கவிரும்பும் வாக்களிக்கப்பட்ட காரியங்ளை அவர் பாதுகாத்து வைத்திருக்கிறார். அவைகளை தன்னிடம் வைத்திருப்பதை விட கொடுக்க விரும்புகிறார். மேலும் தெய்வீக ஒழுங்கு எவ்வளவு ஞானமாக உள்ளது. "கேளுங்கள் உங்களுக்கு கொடுக்கப் படும், தேடுங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள்

திறக்கப்படும்" என்ற இந்த தெய்வீக ஒழுங்கின் கீழ், தேவனுடைய ஜனங்கள் எத்தனை பேருக்கு இது மிகுந்த நன்மையை உணர்த்தியுள்ளது. மேலும் இவ்வாறு, கேட்டு, பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு கூடுதலாக, நம்முடைய மிக சிறந்த சலுகைகள் மற்றும் ஆசீர்வாதங்களில் ஒன்றில் நாம் களிக்கூறும்படியாக, தேவனோடு நெருக்கமான ஐக்கியத்திற்கு நம்மை, ஜெபத்தின் அவசியம் கொண்டு சேர்க்கிறது.

**F679 [¶1]:**

"உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு" (சங்கீதம் 16:11 ) என்று தீர்க்கதரிசி அறிவிக்கிறார். ஏனெனில் ஜெபம், தெய்வீக ஆசீர்வாதத்திற்கும் மிகுந்த மகிழ்ச்சிக்குள் வழியை ஆயத்தப்படுத்தி, ஆத்துமாவை தேவனுடைய பிரசன்னத்திற்கு கொண்டு செல்கிறது. தெய்வீக சித்தம் அல்லது திட்டங்களை மாற்றும் நோக்கத்துடன், தேவனுடைய ஜனங்கள் கிருபாசனத்தண்டைக்கு அணுகுவதற்கான வழி திறக்கப்படவில்லை. இத்தகையான சிந்தனை எந்த நியாயமான காரியத்திற்கும் பொருந்தாது. எனவே, தெய்வீக சித்தத்திற்கு எதிராக, நம்முடைய சித்தங்களை விண்ணப்பிக்கக்கூடிய ஜெபங்கள் சரியானது அல்ல என்றும், அவருடைய சித்தத்திற்கு முழுமையான அர்ப்பணிக்கப் பட்டவைகள் மட்டுமே சரியானது என்றும் கர்த்தர் கட்டளையிடுகிறார். "நீங்கள் கேட்டாலும் ஏன் அடைவதில்லை? ஏனெனில் நீங்கள் தீய எண்ணத்தோடு கேட்கிறீர்கள், சிற்றின்ப நாட்டங்களை நிறைவேற்றவே கேட்கிறீர்கள்." (யாக்கோபு 4:3 திருவிவிலியம்) என்று அப்போஸ்தலர் அறிவிக்கிறார்.

**4. ஜெபம் செய்ய வேண்டியதன் அவசியம் என்ன?**

**R2004 [Col. 2 :8]:**

ஜெபம் வெறுமனே ஒரு சலுகையல்ல, அது ஒரு அத்தியவசிய தேவையாகவும் இருக்கிறது - கிறிஸ்தவ வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒரு கட்டளையாகவும் கொடுக்கப்பட்டுள்ளது. (ரோமர் 12:9-13 , 1தெசலோனிக்கேயர் 5:17) இரக்கங்களை உடைய பிதாவோடு ஐக்கியப் படுவதற்கும், ஆராதிப்பதற்கும், நன்றிகளை ஏறெடுப்பதற்கும் விருப்பத்தை இழக்கும் எவரும், புத்திர சுவிகாரத்தின் ஆவியை இழந்துவிட்டார் என்று உறுதியளிக்கலாம். மேலும் - உலகம், மாம்சம் அல்லது பிசாசு ஆகிய தடைகளை கண்டுபிடித்து நீக்க, துரிதமாக முயற்சிக்க வேண்டும். தேவனுடைய நற்குணங்கள் அவருடைய திட்டத்தினை நமக்கு படிபடியாக வெளிப்படுவதே, நமக்குள்ளிருக்கும் தேவ நம்பிக்கைக்கு ஒவ்வொரு கூடுதலான சான்றுகளும் ஆதாரம். இதுவரை, குறைந்து கொண்டிருக்கும் ஜெபங்களையும், ஆராதனைகளையும் நாம் பெறுக்கி கொள்ள வேண்டும். நம்முடைய இருதயங்கள் நல்ல நிலமாக இருந்தால், மிகுதியாக பலனளிக்கும்.

**R2502 [Col. 1 :1]:**

இந்த கோணத்தில், எதிராளியின் தாக்கம், நிச்சயமாக கேடு விளைவிக்கும். தேவனுடைய ஜனங்கள் இந்த ஜீவனைப் பற்றிக் கவலைப்படும் போது, தங்களுடைய ஆபத்தை உணர்ந்து வாழ்க்கையின் விவகாரங்களை வித்தியசமான கோணத்தில் தேவனுடைய உதவியை நாடுவதற்கு பதிலாக, அவர்கள் ஜெபிக்க மிகவும் சோர்வாக இருக்கிறார்கள் என்றும் சாதகமான மற்றொரு நேரத்தில் ஜெபிக்கலாம் என்றும் அல்லது அவர்கள் முழுமையாக தேவனிடம் பயபக்தியும் ஒப்புதலும் கொண்டுள்ளதையும், ஒவ்வொரு நல்ல மற்றும் பரிபூரணமான ஈவும், தேவனிடம் இருந்து வருவதை முற்றிலும் மறந்து, அல்லது பாவம் வாசற்படியில் படுத்திருப்பதையும் மற்றும் ஆண்டவரைப் பற்றி சிந்திப்பதை தேடாமல் கிருபாசனத்தை தவிர்க்கவும், அல்லது ஒருவேளை சற்று வேறு சில காரணங்களினால் குளிர்ந்து, தேவனை விட்டு வெகு தூரம் சென்று, ஜெபம் வெறும் சம்பிரதாயமாகி, நாள் செல்ல செல்ல அது கைவிடப்படுகிறது என்று பரிந்துரைக்கப்படுகிறது. இருதயத்தில் சரியான நிலையை கொண்ட தேவனுடைய பிள்ளை, அவருடைய சிருஷ்டிகரோடு பேச விரும்புவார் - அவருடைய வார்த்தைகளை கேட்பதோடு மட்டும் அல்ல, தன்னுடைய இயற்கையான சரீரம்

ஜீவனோடிருப்பதற்கு இயல்பாகவே புசித்து குடிப்பதை விரும்புவதை போல நிச்சயமாக தேவனுக்கு நன்றிகளை ஏறெடுக்கவும், அவரை ஆராதிக்கவும் விரும்புவார். இந்த அனுபவத்தை பெறாதவர்கள் அதை தேடவேண்டும். நம்முடைய ஆண்டவர் வாக்களித்தபடி, அவரை தேடுபவர்கள் கண்டடைவார்கள், தட்டுபவர்களுக்கு திறக்கப்படும்.

**R2692 [Col. 1 :1]:**

ஜெபம் நல்லது, கிறிஸ்தவ வாழ்க்கைக்கு இது முற்றிலும் இன்றியமையானது. இது ஜீவனுள்ள விசுவாசம் மட்டுமல்ல, வளர்ச்சியடையும் விசுவாசம் என்றும் பொருள்படுகிறது. தனிப்பட்ட ஜெபம் (மத்தேயு 6:6) அல்லது தேவனுடைய ஜனங்களோடு சபையில் ஜெபத்தின் புறக்கணிப்பு (அப்போஸ்தலர் 12:12; 1:14; 16:13, Iகொரிந்தியர் 11:4,5; 14:13,14) ஆத்துமாவின் தளர்ச்சிக்கும், ஆவிக்குரிய காரிங்களில் வெதுவெதுப்பான நிலைக்கும் நிச்சயமாக வழி நடத்தும் என்று அனுபவங்கள் நிரூபிக்கும் - அவிசுவாசம், குளிர்ந்த நிலை, மரணம். இதற்கு எதிராக, ஜெபத்தின் வழியாக தேவனுடைய தொடர்பு, நம்முடைய விஷயங்களில், அவருடைய மேற்பார்வை பற்றிய நம்பிக்கை அதிகரிக்கும். அவருடைய வார்த்தையின், மிக அருமையானதும் விலையேற பெற்றதுமான சகல வாக்குத்தத் தங்களிலும் விசுவாசத்தை அதிகரிக்கும். கடந்த காலத்திலும், நிகழ்காலத்திலும் அவருடைய வழி நடத்துதலின் உணர்வை அதிகரிக்கும், கிறிஸ்துவின் சகல சகோதரர்கள் மேலுள்ள அன்பு அதிகரிக்கும் மற்றும் அவர்களின் நலனுக்காகவும், ஆன்மீக முன்னேற்றத்திற்கான அக்கறையும் அதிகரிக்கும். இவ்வாறாக ஜெபம், தேவனிடத்திலும், சகோதரர்களிடத்திலும் மற்றும் எல்லா மனுஷரிடத்திலும் ஆவிக்குரிய காரியங்களின் முன்னேற்றத்திலும், ஆவியின் கனிகளின் வளர்ச்சியிலும் தீவிரமான அடையாளம் காணப்படுகிறது.

ஜூலை 24, மன்னா - நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதா யிருக்கிறது. யாக்கோபு (யாக்கோபு 5:16) ஜெபத்தின் வழியாக தேவனுடைய தொடர்பு, நம்முடைய விஷயங்களில், அவருடைய மேற்பார்வை பற்றிய நம்பிக்கை அதிகரிக்கும். அவருடைய வார்த்தையின் மிக அருமையானதும் விலையேறபெற்றதுமான சகல வாக்குத்தத் தங்களிலும் விசுவாசத்தை அதிகரிக்கும், கடந்த காலத்திலும், நிகழ் காலத்திலும் அவருடைய வழிநடத்துதலின் உணர்வை அதிகரிக்கும், கிறிஸ்துவின் சகல சகோதரர்கள் மேலுள்ள அன்பு அதிகரிக்கும் மற்றும் அவர்களின் நலனுக்காகவும், ஆன்மீக முன்னேற்றத்திற்கான அக்கறையும் அதிகரிக்கும். இவ்வாறாக ஜெபம், தேவனிடத்திலும், சகோதரர்களிடத்திலும் மற்றும் எல்லா மனுஷரிடத்திலும் ஆவிக்குரிய காரியங்களின் முன்னேற்றத்திலும், ஆவியின் கனிகளின் வளர்ச்சியிலும் தீவிரமான அடையாளம் காணப்படுகிறது.

**R3640 [Col. 1 :4]:**

இது தொடர்பான மற்றொரு சிந்தனை, ஜெபத்திற்கான தகுதியுடைமை மற்றும் தேவை. சில சந்தர்ப்பங்களில் பெயர் கிறிஸ்தவர்கள், ஜெபத்தின் பொருத்தமற்ற தன்மையை வலியுறுத்துவதை கண்டு நாம் ஆச்சரியப் படுகிறோம். அதாவது வாழ்க்கையே ஜெபமாக இருக்கவேண்டும். ஆண்டவருக்கு நன்றிகளை ஏறெடுப்பதற்கும், அவரை ஆராதிப்பதற்கும் முறையான முழங்காலில் நிற்கவேண்டாம். இதுபோன்ற கருத்துக்கள் எங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கிறது - இதனுடைய தாக்கம் புரிந்துக்கொள்ள முடியவில்லை. உண்மையில் நாம் இடைவிடாமல் ஜெபம் பண்ணவேண்டும். நம்முடைய முழு வாழ்க்கையும் தேவனுக்காகவும், அவருடைய சித்தத்திற்காகவும் அர்ப்பணிக்கப்படவேண்டும். மேலும் நம்முடைய சிந்தை அவருடைய நன்மைகளினால் நிரம்பி யிருக்க வேண்டும். மேலும் ஒவ்வொரு காரியங்களிலும் அவருடைய சித்தம் நம்முடைய சிந்தையில் எப்போதும் இருக்கும் படியாக, நாம் அவருக்குள் வைத்திருக்கும் விசுவாசம் நிலையாகவும், மிகுந்த பிரகாசமாகவும் இருக்கவேண்டும். ஆனால் எந்த கிறிஸ்தவருமே முழங்காலில் நின்று, கூடுமானால் தனிமையில் இப்படியாக ஜெபிக்காவிட்டால், தன்னுடைய இருதயத்தின் நோக்கங்களை சரியாக வைத்துக் கொள்ள முடியாது என்று நாம் நம்புகிறோம் - "நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து.. அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு" (மத்தேயு 6:6)

**5. ஜெபத்தில் உறுதியாக இருக்க வேண்டிய அவசியம் என்ன?**

**R2005 [Col. 2:5, 6]:**

அப்படியாக, உண்மையான விசுவாசம், கர்த்தருடைய வார்த்தையை ஜாக்கிரதையாக கவனித்து, அதன் தரத்தை உறுதிப்படுத்துகிறது. பின்னர், அந்த வார்த்தையின்படி கேட்டு, அதன் பலன்களின் மேல் நம்பிக்கை கொண்டு, ஜெபத்தோடு, விழிப்புடன் விடாமுயற்சியோடும் பொறுமையோடும் காத்திருக்கும். நம்முடைய கர்த்தர் அடிக்கடி கட்டளையிட்டது போல, " பெற்றுகொள்வோம் என்ற நம்பிக்கையோடு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்." ஒரு ஏழை விதவையின் வற்புறுத்தலால், அவளுக்கு நியாயம் செய்யும்படி ஒரு அநீதியான நியாயாதிபதி தூண்டப்பட்டார் என்ற ஒரு உவமையை அவர் கூறினார், அதன்பின் உண்மையான நீதிபதியாகிய தேவன் சரியான நேரத்தில் அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபைக்கு செவி கொடுக்க மாட்டாரா என்றும், அவர் "குறித்த காலம்" வரும் வரையில், நீண்ட காலமாக காத்திருந்தாலும், அவர்களின் நியாயமான காரணத்திற்கு பழி வாங்காமல் இருப்பாரா என்றும், விசாரித்தார். சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ண வேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் இந்த உவமையை சொன்னார் என்று நமக்கு சொல்லப்படுகிறது - லூக்கா 18:1

ஜெபத்தின் உறுதி மற்றும் நிச்சயத்தை குறித்த நம்முடைய மனோபாவங்கள் என்னவாக இருந்தாலும் சரி, வேத வசனங்களிலிருந்து கட்டளைகளை நாம் எடுத்துக்கொள்ளவேண்டும். நம்முடைய இயற்கையான விருப்பங்களை மீறி, "சிறு பிள்ளைகள்" மற்றும் "அன்பான பிள்ளைகள்" போல மேலிருந்து வரும் கட்டளைகளுக்கு, நம்முடைய கண்ணோக்கத்தையும், நடத்தையையும் இணங்கச் செய்யவேண்டும்." "(யோவான் 16:24) என்ற வார்த்தைகளை நாம் அனைவரும் நினைவில் கொள்ளுவோம். தேவன் அவருக்கு கீழ்ப் படிந்த வர்களுக்கும், அவருடைய இரக்கங்களையும், ஆசீர்வாதங்களையும் மற்றும் முன்னேற்பாடு களையும் விரும்பி கேட்கக்கூடிய விசுவாசமுள்ள பிள்ளைகளுக்கு அவைகளை திரளாக வைத்திருக்கிறார்.

**R2865 [col. 2 :3]:**

இந்த சூழ்நிலையில் ஆவிக்குரிய இஸ்ரயேலுக்கு உண்டான பாடமானது, "மனுஷர் சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ண வேண்டும்" என்ற நம்முடைய ஆண்டவருடைய வார்த்தைகளுக்கு இசைவாக உள்ளது. தேவன் நம்மை உறுதியாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறார். மேலும் நம்முடைய இந்த உறுதித் தன்மை, நம்முடைய விருப்பத்தின் ஆழத்தை அளவிட்டு காட்டுகிறது. நம்முடைய ஜெபத்திற்கான பதில் (ஆசீர்வாதம்) கேட்கும் தருணத்தில் வரவில்லை என்றால், நாம் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். அதை பெற்று கொள்வதில் அதிக ஆர்வம் காட்டவேண்டும் என்று எண்ணி, தேவன் ஒரு கால அவகாசத்தை வைத்திருந்தாலும், அவர் வாக்களித்த ஆசீர்வாதங்களை கொடுக்க அவர் முழு விருப்பமுள்ளவராக இருக்கிறார் என்ற விசுவாசத்தோடு அவரை முழுமையாக நம்பி, தேவன் குறித்த காலத்திற்கு நாம் பொறுமையோடு காத்திருக்கவேண்டும்.

**R3662 [Col.2:4, 5]-ஜெபத்தின் முக்கியத்துவம்**

நம்முடைய பாடம் பிரதானமாக, யூதேயாவின் நிலைமையை கேள்விப்பட்டபின் நெகேமியா ஏறெடுத்த ஜெபத்தோடு தொடர்புடையதாக உள்ளது. அவருடைய ஜெபம், தேவனுடைய ஆசீர்வாதங்களையும், வழிநடத்துதலை பெறவும், பரிசுத்த நகரத்தை பொருத்தவரை, ஆண்டவருடைய நல்ல வாக்குறுதிகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற எண்ணங்களை கொண்டிருந்தது. நெகேமியா, அவருடைய ஜெபத்தில் சொல்லப்பட்ட வார்த்தைகள் அனைத்தையும் நமக்கு கொடுக்கவில்லை. ஏனெனில், அதற்கான பதில் கிடைப்பதற்கு நான்கு மாதங்களுக்கு முன்னிருந்தே இப்படியாக ஜெபித்து வந்தார் என்று நாம் மற்ற பகுதிகளை பார்க்கும்போது அறிந்துக் கொள்ளலாம். எனவே, அந்த நான்கு மாதங்களிலும், வெவ்வேறு காலங்களில் பல்வேறு வடிவங்களில் அவர் வெளிப்படுத்திய உணர்வுகளின் பொதுவான வெளிப்பாட்டையே இங்கு நாம் வாசிக்கிறோம். நிச்சயமாக இந்த நேரத்தில் அவர் தனது கடமைகளை செய்திருக்கவேண்டும், ஆனால்

இந்த ஜெபம் எப்போதும் அவருடைய இருதயத்தில் இருந்தது. எல்லா திட்டங்களும், ஒழுங்குகளும் அவருடைய சிந்தையில் ஏதோ ஒரு வகையில் அதற்கு தொடர்புடையதாக இருந்தது.

இவ்வாறாக, ஆண்டவரின் ஜனமாகிய ஆவிக்குரிய இஸ்ரயேலரும் இருக்கவேண்டும். நமக்கு குறைந்த விருப்பமுள்ள காரியங்களுக்காக ஒரு முறை அல்லது இரண்டு முறை கிருபாசனத் தண்டைக்கு செல்லுவோம், ஆனால் நம்முடைய இருதயத்திற்கு அருகாமையில் இருக்கும் காரியங்களுக்கு ஜெபம் தொடருகிறது. நம்முடைய மனதில், சகல பொறுப்புகளும், நலன்களும் தொடர்புடையதாக இருந்தாலும், நாம் கர்த்தரிடத்தில் விரும்பியதை, நம்முடைய இருதயம் தொடர்ந்து ஈர்க்கிறது. நாம் விண்ணப்பிக்கக்கூடிய காரியங்கள் அவருடைய வாக்குத்தத்தங்களுக்கு இசைவாக இருப்பதை உறுதி செய்துகொண்டு, பொருத்தமான வாய்ப்புகளில் மீண்டும் விண்ணப்பிக்கலாம். இத்தகையான ஜெபத்தையே ஆண்டவர் பரிந்துரைக்கிறார், "சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும்" - ஆண்டவருடைய ஜனங்கள் சரியான காரியங்களுக்காக தொடர்ந்து, ஓரளவுக்கு விடா முயற்சியுடன் ஜெபிக்கவேண்டும். விசுவாசமற்றவர் களாகவும், நம்பிக்கையற்றவர்களாகவும் மனதில் சோர்ந்து போகக்கூடாது.

**6.நாம் யாரிடம், யார் வழியாக ஜெபிக்க வேண்டும்?**

**R2252 [col. 1 :3]:**

" பரலோகத்திலிருக்கும் எங்கள் பிதாவே" என்று "உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு," என்று நம்முடைய ஆண்டவர் கட்டளையிடுகிறார். ஆனால் "நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுப்பார்" (யோவான் 15:16; 16:23 ) என்ற இந்த அறிவுரையோடு மேற்கூறப்பட்ட கட்டளை இணைக்கப்படவேண்டும்." என்னாலே யல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14:6 ) இது யூதர்களையும், முஹமதியர் களையும், புற இணத்தவர்களையும், மற்றும் கிறிஸ்துவைப் பற்றிய அறிவு பெறாதவர்களையும், அவரை ஒரு இரட்சகராக விசுவாசிக்காதவர் களையும் உள்ளடக்குவதில்லை. கிறிஸ்துவை ஏற்றுகொண்ட விசுவாசிகள் மட்டுமே ஜெபத்தின் வழியாக தேவனிடத்தில் சேர்ந்து, அவரை "அப்பா" என்று அழைக்க முடியும். அதே நேரத்தில் மற்றவர்கள் வேண்டுகோள் விடுக்கலாம், ஆனால் அவர்கள் பதில்களை எதிர்பார்க்க முடியாது. நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, அவருடைய இரத்தத்தினால், பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்ற விசுவாசத்தினால் மட்டுமே, "நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவின் வழியாக புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு பண்ணினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கும்." (எபிரெயர் 10:19,20) புதிய உடன்படிக்கையின் கீழ் நாம் அனுபவிக்கும் இந்த சலுகைகள், இயேசுவின் இரத்தத்தினால் முத்திரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. இது நிழலான மாம்ச இஸ்ரயேல் மற்றும் காளைகளின் இரத்தத்தினாலும், வெள்ளாட்டுக் கடாக்களின் இரத்தத்தினாலும் முத்திரிக்கப்பட்ட நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு ஒத்திருக்கிறது. ஆகையால், யூதர்கள் அவர்களின் உடன்படிக்கைக்கு உட்பட்ட ஜனங்களாக இருந்ததினால், அவர்கள் ஜெபத்தினால் தேவனிடம் அணுக அனுமதிக்கப் பட்டனர்- ஆயினும் நாம் புதிய உடன்படிக்கைக்கு நெருக்கமாகவும், அருகாமையிலும் இருப்பது போல அவர்கள் இல்லை.

**E457 [¶2, கடைசி இரண்டு வரிகள் ]:**

கிறிஸ்து இயேசுவுக்காக நிச்சயிக்கப்பட்ட மணவாட்டி, தன்னுடைய நேசிக்கப்பட்ட மணவாளன் இன்றி தந்தையிடம் நெருங்கமுடியாது. அவளுடைய விண்ணப்பங்கள் மணவாளனுடைய நாமத்தினாலும், அவருடைய புண்ணியத்தினாலும் ஏறெடுக்கப்படுகிறது. மேலும் அவள் பூரணப்பட்டு, மகிமைக்குள் பிரவேசித்து-முதலாம் உயிர்த் தெழுதல் வழியாக தேவனுடைய புத்திரர்களாக முழு சுதந்திரத்தை அடையும் வரையில் அவள் இவ்வாறு தொடரவேண்டும்.

## 7. யாரிடத்தில் நாம் ஜெபிக்க வேண்டும்?

### மறைவாக

**மத்தேயு 6:5-9** அன்றியும் நீ ஜெபம்பண்ணும் போது மாயக்காரரைப்போலிருக்க வேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ ஜெபம் பண்ணும் போது, உன் அறைவீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். அன்றியும் நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானிகளைப் போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள். அவர்களைப் போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.

### விசுவாசிகளுக்கு முன்

**யோவான் 17:1-26**

இயேசு இவைகளைச் சொன்னபின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து: பிதாவே, வேளை வந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு மாம்சமான யாவர்மேலும் நீர் அவருக்கு அதிகாரங் கொடுத்தபடியே, உம்முடைய குமாரன் உம்மை மகிமைப் படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும். ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன். பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன். பிதாவே, உலகம் உண்டாகிறதற்குமுன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப் படுத்தும். நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப் படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களா யிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக் கொண்டிருக்கிறார்கள். நீர் எனக்குத் தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயினவென்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள். நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்; அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு, நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள். நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறேன்; அவர்கள் உம்முடையவர்களா யிருக்கிறார்களே. என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள், உம்முடையவைகள் என்னுடையவைகள்; அவர்களில் நான் மகிமைப்பட்டிருக்கிறேன். நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும். நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்; நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக் கொண்டுவந்தேன்; வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, கேட்டின் மகன் கெட்டுப்போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை. இப்பொழுது நான் உம்மிடத்திற்கு வருகிறேன்; அவர்கள் என் சந்தோஷத்தை நிறைவாய் அடையும்படி உலகத்தில் இருக்கையில் இவைகளைச் சொல்லுகிறேன். நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்; நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது. நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல. உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம். நீர் என்னை உலகத்தில் அனுப்பினது போல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன். அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன். நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள்

தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறது போல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். பிதாவே, உலகத் தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்த படியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன். நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன்; நீர் என்னை அனுப்பினதை இவர்களும் அறிந்திருக்கிறார்கள். நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும் படிக்கும், நானும் அவர்களிலிருக்கும் படிக்கும், உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்; இன்னமும் தெரியப்படுத்துவேன் என்றார்.

யோவான் 11:41-42. அப்பொழுது மரித்தவன் வைக்கப்பட்ட இடத்திலிருந்த கல்லை எடுத்துப் போட்டார்கள். இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து: பிதாவே, நீர் எனக்குச் செவி கொடுத்த படியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்துநிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும் படியாக அவர்கள் நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார்.

மத்தேயு 18:19 அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

## விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள் முன்

லூக்கா 3:21 ஜனங்களெல்லாரும் ஞானஸ்நானம் பெற்றபோது, இயேசுவும் ஞானஸ்நானம் பெற்று, ஜெபம் பண்ணுகையில், வானம் திறக்கப்பட்டது;

யோவான் 12:27-29, இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது, நான் என்ன சொல்லுவேன். பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ; ஆகிலும், இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன். பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்றார். அப்பொழுது: மகிமைப் படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன் என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று. அங்கே நின்று கொண்டிருந்து, அதைக் கேட்ட ஜனங்கள்: இடிமுழக்க முண்டாயிற்று என்றார்கள். வேறு சிலர்: தேவதூதன் அவருடனே பேசினான் என்றார்கள்.

மத்தேயு 27:46 ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு: ஏலி! ஏலி! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்.

## பரிசுத்தவான்களின் பொது சபையில்

அப்போஸ்தலர் 12:12அவன் இப்படி நிச்சயித்துக் கொண்டு, மாற்கு என்னும் பேர் கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் வீட்டுக்கு வந்தான்; அங்கே அநேகர் கூடி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

அப்போஸ்தலர் 1:14 அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங் கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்.

1கொரிந்தியர் 11:4,5 ஜெபம் பண்ணுகிற போதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக்கொண்டிருக்கிற எந்தப் புருஷனும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறான். ஜெபம் பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற போதாவது, தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்; அது அவளுக்குத் தலை சிரைக்கப்பட்டது போலிருக்குமே.

1கொரிந்தியர் 14:13,14 அந்தப்படி அந்நிய பாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும்.

### R2251 [col. 1 :6] through R2252 [col. 1:2]:

தேவனுடைய பிள்ளைகளாக ஜெபத்தில் அவரிடம் நெருங்குபவர்கள் மத்தியில், ஆராதிக்கும் முறைமைகள், வெவ்வேறு சூழ்நிலைகள் மற்றும் நிபந்தனைகள் வேறுபடும். பூமிக்குரிய கண் காணாமலும், பூமிக்குரிய காது கேளாமலும், சில நேரங்களில் அவர்கள் ஒழுங்காக சென்று, மறைவாக பிதாவுடன் தொடர்பை பற்றிக்கொள்கிறார்கள். இந்த சிலாக்கியத்திற்கு நம்முடைய கர்த்தரின் முன்மாதிரியே சிறந்த எடுத்துக்காட்டாகும். அவர் தனித்து ஜெபம் பண்ணும்படியாக, தம்முடைய சீஷர்களிடமிருந்து அடிக்கடி பிரிந்து சென்றார் என்றும், சில நேரங்களில் முழு இரவும் தனித்து ஜெபித்தார் என்றும் அவரை குறித்தும் எழுதியிருப்பதை நாம் நினைவுக்கூறலாம்.

மற்ற நேரங்களில் ஜெபம் ஒழுங்காகவும், லாபகரமாகவும் சக விசுவாசிகளின் முன்னிலையில் சத்தமாகவும் ஏறெடுக்கப்படுகிறது. இதில் அனைவரும் ஆர்வத்தோடு இணைந்து, அனைவருக்கும் ஜெபங்கள் ஏறெடுக்கப்படுகிறது.

இதற்கான எடுத்துக்காட்டும் நம்முடைய ஆண்டவரின் எடுத்துக்காட்டிலிருந்து காணலாம். உதாரணமாக, அவருடைய ஜெபங்கள் யோவான 11:41,42; 17, மத்தேயு11:25,26, லூக்கா 10:21; 11:1வில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அப்போஸ்தலர்கள் கேட்காவிட்டால், இந்த ஜெபங்கள் பதிவு செய்யப்பட்டிருக்காது. மேலும், அவர்களின் முன்னிலையில் ஜெபம் ஏறெடுக்கப்பட்டதன் முக்கிய நோக்கம், அவர்களுக்காகவும், அது முதல் விசுவாச வீட்டாரின் ஆசீர்வாதங்களுக்காகவும், நன்மைகளுக்காகவுமே என்பது வெளிப்படையாக உள்ளது. மோசே, சாலோமோன், தாவீது, எரேமியா, எசேக்கியேல் மற்றும் தானியேலின் ஜெபங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, குறைந்த பட்சம், தேவனுடைய ஜனங்களுக்கு முன்பாக சொல்லப்பட்டது. ஆதி சபையின் பதிவுகளை, பொறுத்தவரையில் அவர்கள் ஒரே குடும்பமாக சந்தித்தார்கள் என்றும், அவர்களின் ஜெபங்கள், பாடல்கள் அனைத்தும் அங்கு கூடியிருந்த அனைவரின் நலனுக்காக பொதுவாக ஏறெடுக்கப்பட்டதாக தோன்றுகிறது. "அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்." என்று அப்போஸ்தலர் 1:14 ல் கொடுக்கப்பட்டுள்ளவைகளில் இது குறிக்கப்பட்டுள்ளது. மீண்டும் அப்போஸ்தலர் 1:24ல் அவர்களது ஜெபங்களில் ஒன்று மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. மேலும், சபையில் நன்றி ஏறெடுத்தலான ஜெபங்களுக்கும், விண்ணப்பங்களுக்கும் அனைவரும் "ஆமென்" என்று சொல்லத் தக்கதாக அனைவராலும் புரிந்துக்கொள்ளப்படும் மொழியில் சத்தமாக சொல்லப்பட வேண்டும் என்று 1கொரிந்தியர் 14:16 ல் அப்போஸ்தலர் காண்பிக்கிறார்.

சில நேரங்களில் விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள் கலந்திருக்கும் கூட்டங்களுக்கு முன்பாக தேவனுக்கு நன்றி செலுத்துவது தவறானதாக இராது. இதற்கான உதாரணத்தை நம்முடைய ஆண்டவரின் சொந்த நடைமுறையில் காணலாம் - யோர்தானில், அவருடைய ஞானஸ்நானத்தின் போது, அவருடைய ஜெபம், திரளானவர்களால் தெளிவாக காணமுடிந்தது. (லூக்கா3:21 ) மீண்டும் நம்முடைய ஆண்டவர் லாசரின் கல்லறையில், பல ஜனங்கள் கூடியிருக்கையில், பொதுவாக ஜெபித்தார். மீண்டும் நம்முடைய ஆண்டவரின் ஊழியத்தின் முடிவில், "பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும்", "பிதாவே உம்முடைய நாமம் மகிமைப்படுவதாக" என்று அவர் ஜெபித்தபோது, யோவான் 12:29ல் கூறப்பட்டுள்ளபடி சுற்றியுள்ள ஜனங்கள் தெளிவாகக் கேட்டிருக்க வேண்டும் அல்லது ஏதோ ஒரு விதத்தில் அந்த ஜெபத்தை அறிந்திருக்கவேண்டும். மீண்டும், சிலுவையின் மேல் நம்முடைய ஆண்டவரின் இறுதி ஜெபம், அவருடைய எதிரிகளால் கூட கேட்கப்பட்டது. -மத்தேயு27:46,50.

"நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறைவீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி..." என்ற ஆண்டவரின் வார்த்தைக்கு அவர் எண்ணியிருந்த காரியத்தைவிட, அதிகமாக முக்கியத்துவம் கொடுத்த சில தேவனுடைய அன்புள்ள ஜனங்கள், இந்த வசனத்தின்படி, மற்றவர்களின் முன்னிலையில், அதாவது சபையிலாவது உலகத்திலாவது ஜெபிப்பது பாவம் அல்லது தவறு என்ற பிழையில் விழுந்திருப்பதினால், இந்த பாடத்தை பொறுத்தவரையில் நாம் விவரமான ஆதாரங்களுக்குள் சென்றோம். நாம் அவரின் சொந்த செயலிலிருந்து காண்பித்தபடியே "அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை." என்ற அவருடைய உபதேசத்தின் ஆவிக்கு மேற்கூறப்பட்டவைகள் நிச்சயமாக, சிறந்த உதாரணமாக இருக்கிறது. பெரும்பான்மையான கிறிஸ்தவர்களுக்குள் பொதுவாக காணப்படும் எந்த பழக்கங்களையும் நாம் ஆதரிப்பதில்லை. சொல்ல போனால், வரம்பு மீறுகிறவர்களுக்கு பிரசங்கிப்பது மேலும் தேவனுக்கு ஏறெடுக்கும் ஜெபங்களில் அவர்களை மேம்போக்காக காயப்படுத்துவது... இந்த பொதுவான மனப்பாங்கு மற்றவர்களால் கண்டுபிடிக்கப்படுகிறது. இது கீழ்காணும் வாக்கியத்தில் மிக சரியாக எடுத்துக்காட்டப்படுகிறது. "போஸ்டன் பார்வையாளர்களுக்கு எப்போதும் வழங்கப்பட்ட ஜெபங்களில் இதுவே மிக சிறந்த ஜெபமாகும் " என்று அந்த நகரத்தின் மிக பிரபலமான மந்திரியின் உரையாடலில் ஒரு சாதகமான கருத்தை வெளியிட்டார். சர்வவல்லமையுள்ளவரைக் காட்டிலும் கேட்கும் சபைகளுக்கு வழங்கப்படும் பல ஜெபங்கள் அதிகம் என்று நம்புவதற்கு உண்மையில் வலுவான காரணங்கள் உள்ளது. இது தேவனுடைய பிள்ளைகளுக்கு அளிக்கப்பட்ட ஜெபத்தின் அற்புதமான சிலாக்கியத்தின், மொத்தமான விரயமாகும். மேலும் "இவ்வாறு ஜெபிப்பவர்கள் மாயக்காரர்களாக இருக்கிறார்கள், மனுஷர் (புகழவேண்டும்) காணவேண்டும் என்று ஜெபிக்கிறார்கள் என்றும், அவர்கள் தேடும் பலனை அடைந்தார்கள்" என்றும் சொல்லி, நம்முடைய

கர்த்தராகிய இயேசுவின் நாளில், இந்த பாசாங்குதனத்தை குறித்து அவர் தம்முடைய சீஷர்களை எச்சரித்தார்.

இன்றுவரை, தூர கிழக்கில் பயணிப்பவர் எல்லா திசைகளில் இருந்து வரும் ஜெபங்களை கண்டும் கேட்டும் இருக்கிறார்கள். அவற்றில் சில, தவறாக வழிநடத்தப்பட்ட ஆற்றல் மற்றும் மனசாட்சியின் விளைவாக இருக்கலாம். ஆனால் அவற்றில் பல சந்தேகத்திற்கு இடமின்றி, நம்முடைய தேவனால் அறிவிக்கப்பட்டபடி, இவைகள் ஆவிக்குரிய பெருமை மற்றும் பக்தியுள்ளவர்களாக கருதப்படுவதற்கான விருப்பத்தின் விளைவுகளாகும். "அதிகாலையில் நாம் ஜெபத்தின் சத்தத்தினால் விழித்தெழுந்தேன், அது தேவனால் கேட்கப்பட்டதோ இல்லையோ, அது மனிதர்கள் கேட்கவேண்டும் என்ற நோக்கத்துடன் ஏறெடுக்கப்பட்டதென்று தெளிவாக தெரிந்தது. அது நீண்டதாகவும் மிக சுறுசுறுப்பாகவும், அவ்வப்போது குரல் எழும்பி, மிக ஆழ்ந்த நித்திரையில் இருப்போரையும் எழுப்பியது. இப்படியாக ஜெபித்த இவர், காலை வந்தனம் செய்தவுடன், "காலையில் என்னுடைய ஜெபத்தை கேட்டீர்களா? என்று என்னிடமாக கேட்டார், ஆம் என்று நான் பதில் அளித்தேன். பின்னர் அவர் ஜெபத்தின் மேலுள்ள தனது வைராக்கியம் மற்றும் ஆர்வத்தையும் பற்றி என்னிடம் கூறினார். " என்று கிழக்கு பயணி ஒருவர் எழுதினார். கிறிஸ்தவ மண்டலத்தில் பழக்கங்கள் வேறுப்படுகிறது, ஆயினும், பரலோக தகப்பனிடம் தொடர்பு கொள்வதற்கு பதிலாக, தேவபக்தியுள்ளவர்களைப் போல காண்பிக்கக்கூடிய மேலான நோக்கம், அனைவரிடமும் ஒரு நல்லெண்ணம் உருவாக்கவேண்டும் என்ற முயற்சி போன்ற ஒரே ஆவியினுடைய ஆதாரத்தை எத்திசையிலும் நாம் காணலாம். பிதாவோடும் நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவோடும் உள்ள ஐக்கியத்தை தேடி மகிழக்கூடிய அனைவருக்கும் எதிராக இப்படிப்பட்ட பாசாங்குத்தனம் மிக வலுவாக நிற்க இயலாது.

## 8. நாம் எந்த முறையில் தேவனிடத்தில் ஜெபத்தில் அணுக வேண்டும்

**R1864 [col. 1 ¶8 through col. 2 ¶2]:**

உருவாக்கப்பட்ட உன்னதமான நிலையிலிருந்து, நாம் விழுந்துபோன சிருஷ்டிகளாக இருப்பினும், நாம் பாவிகளாக இருக்கும்போதே, தேவன் நம்மை மிக அதிகமாக நேசித்ததினால், நம்முடைய மீட்புக்காகவும், நாம் இழந்ததை திரும்ப கொடுப்பதற்காகவும், பின்னர் நித்திய மகிமையை அடையும்படியாகவும், மிக பெரிய கிரயத்தை அவர் ஏற்பாடு செய்தார். ஆகையால், அவர் நம்மை நேசிப்பதினால், கிறிஸ்துவின் வழியாக, அவருடைய பிள்ளைகளாக வருவதற்கான ஒரு அருமையான தயவை நமக்கு வழங்கினார். தேவனுடைய அன்பும், அருளும், இரக்கமும் தயவும் எவ்வளவு அற்புதமானது !

ஆயினும், நம்முடைய தேவன் மதிப்புக்குரியவர் : அவர் நம்மை போன்றவர் அல்ல, நமக்கு சமமானவரும் அல்ல. அவரது மகிமையான மற்றும் அலுவலகத்தின் காரணமாக அந்த விழா மற்றும் அலங்காரமின்றி நாம் அவருடைய சமூகத்திற்கு வரலாம். (யோபு 9:1-35) பரலோக நீதிமன்றத்திற்கு அதற்கே உரிய மரியாதையான ஒழுங்குகளும் விழாக்களும் உள்ளது. இராஜாதி இராஜாவுக்கு முன் பார்வையாளராக இருக்கும் வாய்ப்பை பெறக்கூடிய ஒவ்வொரு மனுஷனும், இந்த ஒழுங்கு முறைகளோடு இசைந்திருக்கவேண்டும். ஆகவே, நாம் அவரை சந்திக்கும் முன் இந்த ஒழுங்குகளை பற்றி அறிந்துக்கொள்வது நமது கடமையாக உள்ளது. இங்கு தேவனுடைய வார்த்தை, வெளிப்படையான வழிமுறைகளை தருகிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசு, நியமித்த "மனுஷகுமாரனுடைய நாட்களுக்கு", யோபு மிகவும் ஆவலோடு காத்திருந்தார். (யோபு 9:32,33) "நானே வழி, என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் "(யோவான் 14:6 )என்றும் கூறினார். பின்னர், கர்த்தரின் ஜெபம் (மத்தேயு6:9-13 ) என்று அழைக்கப்படுவதில், நாம் அவரை அணுகவேண்டிய முறைக்கு ஒரு எடுத்துக்காட்டை கொடுத்தார். இந்த எடுத்துக்காட்டு நமக்கு கற்பிக்கும் பாடங்கள் பின்வருமாறு : (1) தேவனுடைய மதிப்பீட்டில் விசுவாசிகளாகிய நாம் (கிறிஸ்துவின் வழியாக விசுவாசித்து) தேவனுடைய உண்மையான புத்திரர்களாக நம்மை எண்ணிக்கொண்டு, "எங்கள் பிதா" என்று நம்பிக்கையுடன் கூறலாம். (2) நம்முடைய பங்கில், இது உயர்ந்த மற்றும் புனிதமான ஒரு ஆராதனை வழிபாட்டையும், நம்முடைய தேவனுடைய நற்பண்புகள் மற்றும் மகிமையான குணலட்சனங்களின் ஆழ்ந்த பயபக்தியையும் குறிக்கிறது -"உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக".(3) அவருடைய சித்தத்தின்படி, வரவிருக்கும் இராஜ்யத்தினுடைய திட்டத்தை முழுமையான வெளிப்பாட்டின் மேல் உள்ள பரிவை காட்டுகிறது - "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூலோகத்திலும் செய்யப்படுவதாக." இருதயத்தின் நோக்கம் நீதியை நோக்கி

இருப்பதற்கும், தேவன் அவருடைய நல் மகிழ்ச்சிக்காக கிரியை செய்வதற்கு, தெய்வீக சித்தத்திற்கும் நோக்கத்திற்கும் முழுமையாக அர்ப்பணிப்பதையும் காட்டுகிறது. (4) அநுதின தேவைகளுக்கு தேவன் மேல் சார்ந்திருப்பதை மிக எளிய மொழியில் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது மேலும், ஒரு குழந்தை அதனுடைய தேவைகளை தன் தந்தையின் ஏராளமான நிறைவுகளிலிருந்து பெறும்படியான முழு நம்பிக்கை வைத்திருப்பதை காட்டுகிறது. - "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை எங்களுக்கு தாரும்" (5) இது மீறுதல்களுக்கான மன்னிப்பை கோருகிறது மேலும் நமக்கு எதிராக இதே குற்றம் புரிந்தவர்களுக்கான மன்னிப்பையும் பெறும் பொறுப்பை அங்கீகரிக்கிறது - "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" மற்றும் (6) - சோதனைகளுக்கு எதிராகவும், எதிராளியின் சகலவிதமான தந்திரங்களிலிருந்து தேவனுடைய அபரிமிதமான கிருபையே வலுவாக நம்மை காத்துக்கொள்ள முயலுகிறது -"எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்"

**R2251 [col. 1 ¶4, 5]:**

அனைத்து ஜெபங்களுக்கும் சில விதிமுறைகள் இருப்பதால், தேவனிடத்தில் தொடர்பு கொள்ளும் அனைவரும், மனத்தாழ்மையோடும், எளிமையோடும், பயபக்தியோடும் இயேசுவின் நாமத்திலே அணுகவேண்டும். ஆயினும், சில குறிப்பிட்ட விஷயங்களில் சூழ்நிலைகளே ஆட்சிச் செய்யும்.

(1) பாவிகள், அந்நியர் மற்றும் பரதேசிகளின் ஜெபம், பாவ மன்னிப்பை பெற்று, தெய்வீகமாக நியமிக்கப்பட்ட ஒழுங்குகளுக்கு உட்பட்டு ஒப்புரவான தேவனுடைய பிள்ளையின் ஜெபத்திலிருந்து வேறுபட வேண்டும். எடுத்துக்காட்டாக, யேகோவா தேவனை, "பிதா" என்று அழைக்காமல் தேவன் என்று அழைத்த, ஆயக்காரனுடைய ஜெபம் - "தேவனே, பாவியாகிய என் மேல் இரக்கமாயிரும்" - நம்முடைய ஆண்டவரால் அங்கீகரிக்கப்பட்டது. இதற்கு எதிரிடையாக, கிறிஸ்துவுக்குள்ளான உடன்படிக்கையின் கீழ் தேவனோடு தொடர்பு கொள்பவர்களுக்கு, தேவனை சிருஷ்டிகராகவோ, ஆளுனராகவோ மட்டும் அல்ல அவர்களின் "பரலோக தந்தையாக" அழைக்க சிறப்புரிமைப் பெற்றிருக்கிறார்கள்.

**R3352 [col.1 ¶3]—"** உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.**"**

இது பக்தியுள்ள ஆராதனையையும், தெய்வீக நற்குணத்தையும், மகத்தவத்தையும், உயர்வாக மதித்தலையும், அதனுடன் தொடர்புடைய பக்தியையும் தெரிவிக்கிறது. நாம் நம்முடைய விண்ணப்பத்தை ஆண்டவரிடம் தெரிவிக்கும்போது, நம்முடைய முதலாவது சிந்தை, நம்மை குறித்து சுயநலமானதாக இருத்தல் ஆகாது. அல்லது நம்மை பொறுத்த வரையில், நமக்கு மிக மதிப்புள்ளதாக தோன்றும் மற்றவர்களின் விருப்பங்களையும் அல்ல. அதற்கு பதிலாக நம்முடைய எண்ணங்களிலும், நோக்கங்களிலும் மற்றும் கணிப்புகளிலும், தேவனே முதன்மையாக இருக்க வேண்டும். நம்முடைய பரலோகத் தகப்பனின் பெயருக்கு நன்மதிப்பை தராத எதற்கும் நாம் ஜெபிக்கக் கூடாது. தேவன் முழுமையாக அங்கீகரியாததும், நாம் ஜெபிப்பதற்கு சொல்லப்படாத எந்த காரியத்திற்காகவும், நமக்கென்றோ, நம்முடைய அன்பார்ந்தவர்களுக்கென்றோ, நாம் எதையும் ஜெபிக்க விரும்பவும் கூடாது. அநேகமாக, கிறிஸ்தவர்களாக தங்களை சொல்லிக் கொள்பவர்கள் மத்தியில், தேவனுக்கு பயபக்தியுள்ள சிந்தனை, இராததினால், அந்த இருதயத்தின் தரநிலை வெளியேறுவதற்கான அபாயத்தில் உள்ளது. நாம் அறிவில் வளர்ச்சி அடைந்திருந்தாலும், மூடநம்பிக்கைகளிலிருந்தும், தவறுகளிலிருந்தும் நாம் விடுவிக்கப்பட்டிருந்தாலும், மற்றும் கிறிஸ்தவர்களின் நிலைப்பாடு ஒரு நூற்றாண்டுக்கு முன்னிருந்ததை காட்டிலும் சிலவற்றில் மேம்பட்டு இருந்தாலும், பெயர் சபைகளில் மட்டும் அல்ல "பரலோகத்தில் பெயர் எழுதியிருக்கும், ஜீவனுள்ள தேவனுடைய சபையிலும்" தேவனுக்குரிய பயபக்தி இழந்துகொண்டிருப்பதை எண்ணி அஞ்சுகிறோம். பயபக்தியின் ஒவ்வொரு இழப்பும் ஒரு தனித்தன்மை வாய்ந்த நஷ்டமாகும். இது சபையிலும், இந்த உலகத்திலும், பல்வேறு தீமைகளுக்கும், இறுதியில் அராஜகத்திற்கும் வழிவகுக்கும்.

## 9. ஜெபத்தில் நம்முடைய நிலைமை என்னவாக இருக்க வேண்டும்

**R2501 [col. 2 ¶5]:**

இந்த சுவிசேஷ யுகததில், மிக சிறந்த சிலாக்கியங்கள், வாய்ப்புகள் மற்றும் மகா பெரிய வாக்குத்தத்தங்களின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கும் அநேகர் ஓய்வெடுத்த பிறகு வெறும் கண்களை மூடிக்கொண்டு ஜெபிப்பது போலொத்த ஜெபங்களில் தானியேல் திருப்தி அடையவில்லை. பயபக்திக்கும், ஆராதனைக்கும் பாத்திரமான ஒரு மிக பெரிய தேவனை அவர் தேவனாக கொண்டிருந்தார். அவர் தன்னுடைய சிருஷ்டிகரோடு நெருங்கின தொடர்பையும்,

ஐக்கியத்தையும் பெற்றிருந்த மிகப்பெரிய சிலாக்கியத்தை, உணர்ந்து பாராட்டும் அளவுக்கு ஒரு மனிதனாக இருந்தார். அவர் சர்வவல்லவருக்கும் முழங்காலில் நிற்க வெட்கப்படவில்லை. ஆனால் பூமிக்குரிய இராஜாக்களுக்கு, அவரும் மற்றவர்களும் தேவனிடம் வெளிப்படுத்தும் தாழ்மையை அவர்களுக்கு கொடுக்க விரும்பவில்லை.

எந்த ஒரு கிறிஸ்தவரும் வாழ்க்கையில் சீரான நடத்தையை சரியாக பராமரிப்பது இயலாத காரியம் என்பதே எங்களது தீர்ப்பு மேலும், அப்போஸ்தலராகிய பவுலினால் இப்படிப்பட்ட நற்பண்புகள் மற்றும் விசுவாசத்தின் கட்டமைப்பை, "பொன், வெள்ளி மற்றும் விலையேறப்பெற்ற கல்லினால்" செய்யப்பட்டதற்கு அடையாளமாக காட்டுகிறார். ஜெபம் இல்லாமல் - இன்னும், ஜெபத்தில் ஒரு ஒழுங்கில்லாமல் - ஜெபத்தில் முழங்கால் படியிடாமல் - என்று சொல்லும் அளவுக்கு நாம் இதற்கு இசைந்திருக்கவேண்டும் : இது வரையில் வாழ்ந்த உண்மையானவர்கள் மற்றும் தேவ ஜனங்களில் சிறந்தவர்களின் சாட்சி இக்கருத்தை நிச்சயமாக ஆதரிக்கும் என்று நாம் நம்புகிறோம்.

**R3640 [col. 1 ¶4]:**

இது தொடர்பான மற்றொரு சிந்தனை, ஜெபத்திற்கான முக்கியத்துவம் மற்றும் அதற்கான தேவை. சில சந்தர்ப்பங்களில் பெயர் கிறிஸ்தவர்கள், ஜெபத்தின் பொருத்தமற்ற தன்மையை வலியுறுத்துவதை கண்டு நாம் ஆச்சரியப்படுகிறோம். அதாவது வாழ்க்கையே ஜெபமாக இருக்கவேண்டும், ஆண்டவருக்கு நன்றிகளை ஏறெடுப்பதற்கும், அவரை ஆராதிப்பதற்கும் முறையான முழங்காலில் நிற்கவேண்டாம். இதுபோன்ற கருத்துக்கள் எங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கிறது - இதனுடைய தர்க்கம் புரிந்துக்கொள்ளமுடியவில்லை. உண்மையில் நாம் இடைவிடாமல் ஜெபம் பண்ணவேண்டும். நம்முடைய முழு வாழ்க்கையும் தேவனுக்காகவும், அவருடைய சித்தத்திற்காகவும் அர்ப்பணிக்கப்படவேண்டும். மேலும் நம்முடைய சிந்தை அவருடைய நன்மைகளினால் நிரம்பியிருக்கவேண்டும், மேலும் ஒவ்வொரு காரியங்களிலும் அவருடைய சித்தம் நம்முடைய சிந்தையில் எப்போதும் இருக்கும்படியாக, நாம் அவருக்குள் வைத்திருக்கும் விசுவாசம் நிலையாகவும், மிகுந்த பிரகாசமாகவும் இருக்கவேண்டும். ஆனால் எந்த கிறிஸ்தவருமே முழங்காலில் நின்று, கூடுமானால் தனிமையில் இப்படியாக ஜெபிக்காவிட்டால், தன்னுடைய இருதயத்தின் நோக்கங்களை சரியாக வைத்துக்கொள்ள முடியாது என்று நாம் நம்புகிறோம் - "நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து..அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு" (மத்தேயு 6:6)

## 10. தேவனால் ஏற்றுக்கொள்ளப்படும் ஜெபத்திற்கான நிபந்தனைகள் என்ன?

**F679 [¶2] through F681 [¶2]:**

இதேபோல நம்முடைய ஆண்டவரின் அறிவுரை: "ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள், இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள், இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்."(மத்தேயு. 6:25-34 ) "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத் திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்ளுவ தெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்." (யோவான் 15:7 ) என்று மீண்டும் நம்முடைய ஆண்டவர் கூறுகிறார். பின்வரும் நிபந்தனைகள் மிக முக்கியமானது :

(1) ஜெபிக்கக்கூடியவர் கிறிஸ்துவுக்குள் இருக்கவேண்டும் - ஒப்புரவாக்குதலின் பலியின் புண்ணியங்களினால், அவரால் ஏற்றுகொள்ளப்பட்டு, உயர்நிலையான ஐக்கியத்திற்குள் வந்திருக்க வேண்டும். மற்றும் அவருடைய சித்தத்திற்கும், ஊழியத்திற்கும் அர்ப்பணித்து, அதற்கும் மேலாக இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் ஜெபத்தில் சலுகைகளை பெற்றுக்கொள்வதற்கு, புது சிருஷ்டிகளாக, அவர் கிறிஸ்துவின் சரீர அங்கமாக தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும்.

(2) அவர் தனக்குள் தேவனுடைய சத்தியம் நிலைத்திருக்க அனுமதிக்கவும் வேண்டும். அவர் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக, அவர் தருவதற்கு விரும்பக்கூடிய காரிங்களை கேட்கக்கூடிய ஞானத்தை பெற்றிருந்தால், அவர் சத்தியத்தின் வார்த்தையிலும், கிருபையிலும் பங்கெடுக்கவேண்டும் - இல்லையேல், கிறிஸ்துவுக்குள் ஒரு புது சிருஷ்டிகளாக இருப்பினும், அவருடைய ஜெபங்கள் ஒழுங்கற்று இருப்பதினால், அடிக்கடி பதிலளிக்கப்படாமல் போகும். இந்த இரண்டு தகுதிகளைப் பெற்றவர்கள் மட்டுமே, முழு நம்பிக்கையுடனும், முழு உத்தரவாதத்தடனும், தேவன் குறித்த காலத்தில் அவர்களின் விண்ணப்பங்கள் பதில் அளிக்கப்படும் என்று விசுவாசத்தில் முழு உறுதியோடு

கிருபாசனத்தண்டைக்கு அணுகலாம். இப்படிப்பட்டவர்கள் மட்டுமே மகிழ்ச்சியை முழுமையாக உணரமுடியும்.

வசனங்கள் விவரிக்கிறபடி, ஜெபம் தேவனுடைய சமுகத்திற்கு அணுகுவதற்கும், அவரோடு ஐக்கியப்படுவதற்கான ஒரு முயற்சியாகும். "ஏற்ற சமயத்தில் கிருபையை அடையவும், இரக்கத்தை பெறவும்" யாரால் தைரியமாய் கிருபாசனத்தண்டைக்கு சேர முடியும் ? (எபிரெயர் 4:16) பொதுவாக இந்த உலகத்திற்கு இப்படிப்பட்டதான தொடர்பும், ஜெபத்தில் சிலாக்கியமும் இல்லை என்று அப்போஸ்தலனாகிய பவுலோடுகூட நாமும் பதில் அளிக்கிறோம். உண்மையில், நிச்சயமாக, கோடிக்கணக்கான அந்நியர்கள் பல கருத்தாக்கங்கள் கொண்ட தெய்வங்களை அவைகளுக்கு ஏற்றமுறையில் வழிபடுகிறார்கள். ஆனாலும் அவர்களின் ஜெபங்கள் தேவனால் அங்கீகரிக்கப்படுவதில்லை. "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்." (எபிரெயர் 11:6) கொர்நெலியு இப்படிப்பட்டவராக இருந்தார். இவர் உண்மையான தேவனை அடையாளம் கண்டுகொண்டு அவரிடம் பயபக்தியுடன் இருந்து, அவருடைய சித்தத்தை செய்வதற்கு வாஞ்சித்து அதை அறிந்துக்கொள்ள விரும்பினார். தேவனுடைய தெய்வீக திட்டத்தில், அவருடைய தயவு புறஜாதிகளுக்கு நீடிப்பதற்கு அனுமதிக்கப்படும் தேவையான வளர்ச்சியின் காலம் அடைந்தவுடன், அவருடைய ஜெபத்திற்கும், தானதர்மங்களுக்கும் பதில் அளிக்கப்பட்டது. இருப்பினும், அவர் தேவனோடு முழுமையாகவும், சரியான நிலையில் தொடர்பு கொள்ள அனுமதிக்கப்படாமல், அந்நியரும், புறம்பாக இருக்கும் அவருடைய நிலையிலுமிருந்து, தேவனோடு இசைந்திருப்பதற்கான நிலையை அதாவது புத்திரராக இருக்கும் சிலாக்கியத்தை, இன்னும் சொல்லப்போனால், தேவனுடைய கிருபாசனத்தண்டைக்கு அணுகுவதற்கான சிலாக்கியம் பெற்றுக்கொள்வதற்கான "வார்த்தைகளை" அறிவிக்கும் படிக்கு பேதுரு அனுப்பப்பட்டார். இந்த விஷயத்தை பொருத்த வரையில் பொதுவாக தளர்வான (தளர்ச்சியான) கருத்துக்கள் உள்ளது. அதாவது எந்த நபரும், எந்த இடத்திலும், எந்த நேரத்திலும், எந்த சூழ்நிலையிலும், அங்கீகிகாரத்துடன் கிருபாசனத் தண்டைக்கு செல்லலாம் என்று தப்பாக கருதப்படுகிறது.

ஜெபத்தில் தொடர்புக்கொள்ளக்கூடிய இந்த சிலாக்கியத்தை முந்தி கொர்நேலியு பயன்படுத்துவது மிக அவசியமாக இருந்ததினால், பேதுருவின் வார்த்தைகளைக் கேட்டு, விசுவாசித்து, அவைகளை ஏற்றுக்கொள்ளவேண்டியதாக இருந்தது. கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் கிடைக்கும் இரட்சிப்பையும், அதனால் வரும் ஒப்புரவாக்குதலையும், இப்படியாக, தேவனுடைய குடும்பத்திற்குள் வருவதற்கு கிடைத்த சிலாக்கியத்தையும் பேதுரு அவருக்கு விவரித்தார். இந்த ஒரு அறிவு ஒவ்வொரு நபருக்கும் சமமாக தேவை. கிறிஸ்து நமக்காக "புதிதும் ஜீவனுமான" அல்லது "புதிதான ஜீவனுக்குரிய வாழ்க்கையை" தமது மாம்சத்தின் திரை வழியாக திறந்தார் என்று அப்போஸ்தலனாகிய பவுலும் இதே சிந்தயை வெளிப்படுத்துகிறார். சொல்லப் போனால், பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய சகோதரர்களாகிய நமக்கு இயேசுவின் இரத்தத்தினால் தைரியம் உண்டாயிருக்கிறது. தேவனுடைய வீட்டின்மீது மகா பிரதான ஆசாரியரோடு சம்பந்தப்பட்டிருக்கும் இத்தகைய "சகோதரர்கள்", உண்மையான இருதயத் தோடும், தங்களுடைய பாவங்களும், அக்கிரமங்களும் முழுமையாக மூடப்பட்டு, பிதாவாகிய தேவனால் அவர்கள் முழுமையாக அங்கீகரிக்கப்பட்டார்கள் என்பதை உணர்ந்தவர்களாக விசுவாசத்தின் முழு உறுதியுடனும் அவரிடம் நெருங்கி வரும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள். (எபிரெயர் 10:17-22) நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிற படியால், நாம் இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தைண்டையிலே சேரக்கடவோம் என்று மீண்டும் அதே அப்போஸ்தலர் கூறுகிறார். எபிரெயர் 4:15,16

**R1865 [Col. 1 :1]:**

பரலோக கிருபாசனத்தண்டைக்கு சென்று, விண்ணப்பிக்கக் கூடிய சிலாக்கியத்தை நாம் பெறும் போது, இத்தகைய கோட்பாடுகள் என்றுமே நம்முடைய இருதயம் மற்றும் மனதின் நோக்கமாக இருக்க வேண்டும். (சுருக்கமாக, நம்முடைய ஜெபங்கள், தேவனால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும், உறுதியான விசுவாசத்தை வெளிப்படுத்தக்கூடியதும், அன்புமிக்க மதிப்பும், பயபக்தியோடும், தெய்வீக திட்டத்தோடு முழு பரிவுடன், அவருடைய தெய்வீக சித்தத்திற்கு முழுமையாக அர்பணித்து, ஒரு குழந்தையை போல் தேவன் மேல் சார்ந்து, பாவங்களையும், குறைகளையும் ஒப்புக்கொள்ளக்கூடிய மனப்பாங்கை பெற்றவர்களாக, அதற்கான மன்னிப்பை விரும்பி, அதே

மனப்பான்மையோடு மற்றவர்களுக்கும் மன்னிப்பை வழங்கக் கூடியவர்களாக தெய்வீக வழிநடத்து தலுக்காகவும், பாதுக்காப்பிற்காகவும் தாழ்மையோடு வாஞ்சிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். இவைகள் எப்போழுதும் வார்த்தைகளினால் வெளிப்படுத்த முடியாமல் இருக்கலாம், ஆனால் குறைந்தபட்சம் இது நம்முடைய ஆத்துமாவின் நோக்கமாக இருக்கவேண்டும். மன்னா, ஜீன் 10: ஆண்டவரே, எங்களுக்கு ஜெபிக்க கற்றுதாரும். (லூக்கா11:1) சுருக்கமாக, நம்முடைய ஜெபங்கள், தேவனால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும், உறுதியான விசுவாசத்தை வெளிப்படுத்தக்கூடியதும், அன்புமிக்க மதிப்பும், பயபக்தியோடும், தெய்வீக திட்டத்தோடு முழு பரிவுடன், அவருடைய தெய்வீக சித்தத்திற்கு முழுமையாக அற்பணித்து, ஒரு குழந்தையை போல் தேவன் மேல் சார்ந்து, பாவங்களையும், குறைகளையும் ஒப்புக்கொள்ளக்கூடிய மனபாங்கை பெற்றவர்களாக, அதற்கான மன்னிப்பை விரும்பி, அதே மனப்பான்மை யோடு மற்றவர்களுக்கும் மன்னிப்பை வழங்கக் கூடியவர்களாக் தெய்வீக வழி நடத்துதலுக்காகவும், பாதுக்காப்பிற்காகவும் தாழ்மை யோடு வாஞ்சிக்கக் கூடியவர்களாக இருக்கவேண்டும். இவைகள் எப்போழுதும் வார்த்தைகளினால் வெளிப்படுத்த முடியாமல் இருக்கலாம், ஆனால் குறைந்தபட்சம் இது நம்முடைய ஆத்துமாவின் நோக்கமாக இருக்க வேண்டும்."ஜெபம், சொல்லப்படாத அல்லது வெளிப் படுத்தப்படாத ஆத்துமாவின் உண்மையான விருப்பம்"

**R 3663 [Col. 1:6 through Col. 2:3] - நெகேமியாவின் உபவபாசம் மற்றும் ஜெபம்**

"பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மில் அன்புகூர்ந்து, உம்முடைய கற்பனைகளைக் கைக் கொள்ளுகிறவர்களுக்கு, உடன்படிக்கையையும் கிருபையையும் காக்கிற மகத்துவமும் பயங்கரமுமான தேவனே.." என்று நெகேமியாவின் ஜெபங்களுக்கான பொருள் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் ஜெபிக்கும்போது, தேவனுடைய வார்த்தைக்கு சாட்சிகளாக இருந்த மோசே, தீர்க்கதரிசிகள் மற்றும் கடந்த காலத்து இராஜாக்களோடு அவர் கொண்டிருந்த தொடர்பை அவர் மனதில் முன் வைத்திருந்தார். அவரது பங்கிற்கு உடன்படிக்கையை காத்துக்கொள்ளவில்லை என்று நெகேமியா தேவனை பழித்துரைக்காமல், அதற்கு எதிரிடையாக, இஸ்ரயேலுடனான தேவனுடைய வழிகளும், கையாளும் முறைகளும், நீதியாகவும், உண்மையாகவும் இருந்ததென்று அவர் ஒப்புக்கொண்டார். மற்றும் சீனாய் மலையின் உடன்படிக்கையை மீறியதற்காகவே அவர்கள் ஒரு தேசமாக உபத்திரவப்பட்டார்கள். ஆண்டவர் அவருடைய உடன்படிக்கையை காத்துக்கொண்டு, ஜனங்கள் மேல் இரக்கமாக இருப்பார் அல்லது குறைந்தபட்சம் அவருடைய பாதையில் நடக்க வேண்டும் என்று தேடக்கூடியவர்களுக்கு இரக்கம் பாராட்டுவார் என்ற அவரது நம்பிக்கையை நெகேமியா வெளிப்படுத்தினார்.

"உமது அடியாராகிய இஸ்ரயேல் புத்திரருக்காக இன்று இரவும் பகலும் உமக்கு முன்பாக மன்றாடி, இஸ்ரயேல் புத்திரராகிய நாங்கள் உமக்கு விரோதமாகச் செய்த பாவங்களை அறிக்கையிடுகிற அடியேனுடைய ஜெபத்தைக் கேட்கிறதற்கு, உம்முடைய செவி கவனித்தும், உம்முடைய கண்கள் திறந்தும் இருப்பதாக, நானும் என் தகப்பன் வீட்டாரும் பாவஞ்செய்தோம்." என்று அவர் கூறினார். கிருபாசனத்தண்டைக்கு சேரும் யாவரும், ஏதோ சில பலவீனங்கள், குறைபாடு, அபூரணம், பாவம் ஆகியவற்றை ஒத்துக்கொள்ளாமல், மகா பெரிய சிருஷ்டிகருக்கு சரியான முறையில் ஜெபங்களை ஏறெடுக்கமுடியாது. கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக இருக்கும் நாமும் கூட தேவைப்படும்போதெல்லாம் கிருபாசனத் தண்டைக்கு அணுகுவதற்கு இப்படியாகவே செல்ல வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். ஆனால் நம்முடைய தைரியம், நம்முடைய துணிவு, நம்முடைய சுய-நம்பிக்கையின் மேல் அல்ல, நம்மை நேசித்தவரும், தம்முடைய விலைமதிப்புள்ள இரத்தத்தினால் நம்மை விலைகொடுத்து வாங்கினவர் மேல் நம்பிக்கையாக இருக்கவேண்டும். ஏனெனில், நம்முடைய பாவங்களுக்காக அவர் மரித்தார் மேலும் அவருடைய அங்கியின் மறைவில் நாம் சமாதானத்தையும், மன்னிப்பையும், தேவனோடு இசைவையும் பெற்றிருக்கிறோம். ஓ, இது நமக்கு எவ்வளவு அர்த்தமுடையதாக உள்ளது!

இதற்கும் மேலாக, நெகேமியா மற்றும் ஒப்புரவாக்குதலின் பலி செலுத்தப்படுவதற்கும் முன் வாழ்ந்தவர்களுக்கும், இது இன்னும் மதிப்புள்ளதாக இருந்திருக்கும். தேவன் எவ்வளவு நீதியுள்ளவராக இருந்தாலும், இயேசுவின் மேல் விசுவாசமுள்ளவர்களை அவராலே எவ்வாறு நீதிமான்களாக்குகிறார் என்பதை நாம் காண்பது நம்முடைய சிலாக்கியமாக உள்ளது. தேவனுடைய கிருபையினாலே, இயேசு கிறிஸ்து ஒவ்வொரு மனுஷனுக்காக மரணத்தை ருசிப்பார்த்தார் என்று காண்கிறோம். மேலும் இறுதியில் அவரது பலியின் புண்ணியம், ஆண்டவரின் சொந்த வழிகள் மற்றும் முகவர்கள் மூலம் ஒவ்வொரு மனுஷனுக்கும் பயன்படுத்தப்படும்.

நெகேமியாவின் பாவ அறிக்கை வெளிப்படையாக இருந்தது. தேவனை அணுகும் அனைவருக்கும் இது போன்ற ஒரு அணுகுமுறை சரியானது என்று நாம் நம்புகிறோம். நாம் மாம்சத்தில் நடவாமல், ஆவியில் நடப்பதற்கு நம்மால் சிறப்பானவைகளை செய்ய முயலும் போது, மற்றவர்களின் கண்களுக்கு நியாயமாக தோன்றினாலும், நம்முடைய பாவங்களையும், பலவீனங்களையும் நாம் கர்த்தரிடத்தில் அறிக்கையிட வேண்டும்."நாங்கள் உமக்கு முன்பாக மிகவும் கெட்டவர்களாய் நடந்தோம், நீர் உம்முடைய தாசனாகிய மோசேக்குக் கற்பித்த கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயங்களையும் கைக் கொள்ளாதே போனோம். நீங்கள் கட்டளையை மீறினால், நான் உங்களை ஜாதிகளுக்குள்ளே சிதறடிப்பேன் என்றும் நீங்கள் என்னிடத்தில் திரும்பி, என் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவைகளின்டி செய்வீர்களானால், உங்களிலே தள்ளுண்டு போனவர்கள் வானத்தின் கடையாந்தரத்தில் இருந்தாலும், நான் அங்கேயிருந்து அவர்களைச் சேர்த்து, என் நாமம் விளங்கும்படி நான் தெரிந்துகொண்ட ஸ்தலத்துக்கு அவர்களைக் கொண்டுவருவேன் என்றும் தேவரீர் உன்னுடைய தாசனாகிய மோசேக்குக் கட்டளையிட்ட வார்த்தையை நினைத்தருளும். தேவரீர் உமது மகா வல்லமையினாலும், உமது பலத்த கரத்தினாலும், மீட்டுக்கொண்ட உமது அடியாரும் உமது ஜனங்களும் இவர்கள் தானே." என்று அவர் கூறினார்.

இந்த ஜெபம் ஆண்டவருடைய அச்சுறுத்தல் களையும், அவைகளின் நீதியையும், அவர்களது மீறுதல்களையும், அதற்கு விதிக்கப்பட்ட தண்டனைகளையும் குறிப்பிட்டது. இவ்வாறாக, தேவனுடைய மன்னிப்பு, இரக்கம் மற்றும் ஒப்புரவாக்குதலுக்கான வாக்குத்தத்தங்களின் பக்கமாக திரும்பும் காரியம், ஜெபத்தின் சரியான முறையை வெளிப்படுத்துகிறது. யூதர்களானாலும், புறஜாதியானாலும் அனைவரும் இம்முறையை பின்பற்றவேண்டும். தெய்வீக கட்டளைகளை மீறுகிற "உண்மையுள்ள இஸ்ரயேலர்", தேவனால் சிட்சிக்கப் படும்போது, பாவத்தினால் மனம் வருந்துகிறவர்கள், ஆண்டவருடைய வாக்குறுதிகள் மிகவும் இரக்க முள்ளதாக இருக்கவேண்டுமென்று மன்றாடலாம். மீட்பின் பலியின் அடிப்படையில் மன்னிப்பை வேண்டி, விசுவாசத்தினால் தெய்வீக வாக்குத்தத்தத்தை உடனடியாக ஏற்றுக்கொண்டு, தவறான புலம்பல்களை அவருடைய எல்லா வல்லமையோடு துரிதமாக திருத்தி கொண்டால், இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கலாம்.

**11. தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்வதற்கும் வெறும் உதடுகளினால் தொழுது கொள்கிறதற்கும் உள்ள வேறுபாட்டை எப்படி காண்பிப்பது?**

மத்தேயு15:7-9 "மாயக்காரரே, உங்களைக் குறித்து : இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக்கனம்பண்ணுகிறார்கள், அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது, மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்". யோவான் 4:23,24 "உண்மையாய்த் தொழுதுகொள்ளு கிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது, தம்மைத் தொழுதுகொள்ளு கிறர்வர்கள் இப்படிப்பட்டவர் களாயிருக்கும்படி பிதாவானர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிற வர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்றார்."

**R2070 [Col. 1 :2, 3]:**

முன்னர் உண்மை வணக்கத்தார் இருந்ததே இல்லை என்று ஆண்டவர் சொல்லவில்லை, இதற்கு எதிரிடையாக, பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் "ஆவியோடு தேவனை தொழுதுக்கொள்ளாதிருந்தும்" (இயேசு மகிமைப்படாததினால் இன்னும் பரிசுத்த ஆவி கொடுக்கப்படவில்லை - யோவான் 7:39) அவர்களது ஜெபங்கள் தேவனுக்கு முன் அங்கீகரிக்கப்பட்டு, அவரால் பதில் அளிக்கப்பட்டதென்று வசனங்கள் கற்ப்பிக்கிறது. அவர்களுக்குள் ஆவியின் வழி நடத்துதலினால் மட்டுமே சத்தியம் வெளிப்படுத்தப்படும் என்பதை நாம் பார்க்கும்போது, அவர்கள் சத்தியத்திலும் தேவனை தொழுதுக் கொள்ளவில்லை. - யோவான் 14:16,17.

உண்மையில், இப்போது நாம் தேவனுடைய புத்திரர்களாகும்படிக்கு, பரிசுத்த ஆவியினால் "முத்திரிக்கப்பட்டு" அல்லது புத்திர சுவிகார ஆவி கொடுக்கப்பட்டு, அதன் விளைவாக தெளிவான சத்தியத்தின் அறிவு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இதன் விளைவாக இன்னும் அதிகமான ஆவிக்குரிய மற்றும் அறிவார்ந்த தொழுகை செய்தவற்கு சாத்தியம் இருந்தாலும், பழைய ஏற்பாட்டு சில நீதிமான்களை காட்டிலும், எந்த விதத்திலும் நாம் சிறந்தவர்கள் அல்ல என்பதைக் குறிக்கிறது. எல்லா வழிகளிலும் பயனற்றவர்களான புறஜாதியினரின் மத்தியில் இருந்த சிலரை விட இஸ்ரயேலர் தேவனுடைய இரக்கத்திற்கு

பாத்திரவான்களாக நிரூபிப்பதற்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது.(ரோம்3:2.). வரக்கூடியகிருபைகளுக்கான நிழல்களை அனுப்புவதற்கான ஏற்ற காலம் வந்தபோது, அதை தொடர்ந்து வரும் சுவிசேஷ யுகத்தின் ஆசீர்வாதங்களுக்கு நிழலிடும்படியாக, இஸ்ரயேல் தேசத்தை தன்னுடைய முகவராக அல்லது காரியதரிசியாக தேவன் தேர்வு செய்தார். ஆனால் பிரமாணத்தை கேட்பவர்களாக அல்ல, அதை செய்பவர்களாக இருந்தால் மட்டுமே அதனால் நீதிமான்களாக முடியும். எனவே, வழிபடுவதற்கான வாய்ப்புகளை அதிகமாக பெற்றவர்கள் அல்ல, ஒருவர் தம்முடைய மிக பெரிய சிலாக்கியங்களை பயன்படுத்தி, அவர் பெற்ற ஆவிக்கும், சத்தியத்திற்கும் ஏற்றபடி தேவனை ஆராதிப்பதே சிறந்த ஆசீர்வாதமாகும்.

**R2070 [col. 2 ¶1]:**

அக்கிரமங்களுக்காக கொடுக்கப்பட்ட நிஜமான பாவநிவாரண பலி, உண்மையான ஒப்புரவாக்குதலை ஏற்படுத்தியதால், அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகளை தேவனுடைய புத்திரர்களாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு இது சாத்தியமாக்கிற்று. (யோவான் 1:12 ) மேலும் அதற்கு ஏற்றபடி, ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதற்கு, குமாரர்கள் உயர்வான பரிசுத்த ஆவியின் நிலையை பெற சாத்தியமாயிற்று. இது ஏற்ற காலத்தில், ஆயிரவருட ஆட்சியில், புது உடன்படிக்கையின் கீழ் அனைவரும் தேவனோடு ஒப்புரவாகும்படிக்கு இந்த ஆவி மாம்சமான அனைவர் மேலும் ஊற்றப்படும். (யோயேல் 2:28) இந்த சுவிசேஷ யுகத்தின் போது, இந்த ஜெநிப்பிக்கும் ஆவி, குமாரர் வகுப்புக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது. இவர்கள் இப்போது தேர்வு செய்யப்படும், கிறிஸ்துவினுடைய உடன் சகோதரர்களும், திவ்விய சுபாவத்திற்கு பங்காளிகளாகவும், பரிசுத்த ஆவியினால் பிறப்பிக்கப் படும் புது சிருஷ்டிகளாக இருப்பார்கள். சீஷர்கள் நம்முடைய ஆண்டவருடைய பரிசுத்த ஆவியோடு (அளவில்லாமல் பெற்றிருந்த) தொடர்பு கொண்டபோது, அதனுடைய தாக்கத்தை அவர்கள் எதிர்க்காததினால், (யூதாஸை தவிர)அவர்கள் அதிகமாக ஆசீர்வதிக்கப் பட்டார்கள். ஆயினும், அவர்கள் பெற்ற அனைத்து ஆவிக்குரிய நன்மைகளை காட்டிலும், ஆண்டவரின் பலியினாலும், அதை தம்முடைய தந்தையிடம் ஒப்புவிப்பதினாலும், இன்னும் அதிகமான ஒரு ஆசீர்வாதம் வரும் என்று நம்முடைய ஆண்டவர் உறுதி யளித்தார். மேலும் தம்முடைய நாமத்தினாலே பிதா அவர்களுக்கு தேற்றவாளனாகிய பரிசுத்த ஆவியை அனுப்புவார் என்றும் அது அவர்களுக்குள் நிலைத்திருப்பதற்கு அதனோடு அதிகமான தொடர்பு வைத்திருக்கவேண்டும் என்றும் அவர்களுக்கு உறுதியளித்தார். இவர்களின் வழியாக இந்த வல்லமை மற்றவர்கள் மேலும் தாக்கத்தை ஏற்படுத்தும். (அப்போஸ்தலர் 24:25 ) தேவ புத்திரர் களுக்கான அடையாளமாக இருப்பதினால் வேறொருவரும் இந்த வல்லமையை உள்வாங்கவோ, அல்லது அதைப் பற்றி அறிந்துகொள்ளவோ முடியாது. குமாரர்களை தவிர வேறு ஒருவரும் இந்த பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள வும் முடியாது. - யோவான் 14:16,17

**R2071 [Col. 2:3, 4]:**

"இப்படிப்பட்டவர்கள், ஆவியோடும் உண்மையோடும் தேவனை தொழுதுக்கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்" என்று உண்மையில் நம்முடைய ஆண்டவர் அறிவிக்கிறார். பொதுவான மனுக்குலத்திலிருந்து உண்மையாக தேவனை தொழுகக்கூடியவர்களை தேடும் நோக்கத்தை சரியாக புரிந்துக்கொள்வதே, இந்த சுவிசேஷத்தின் முழுமையான பணி என்பதை நாம் காண்கிறோம். சுவிசேஷத்தின் பூமிக்குரிய ஊழியர்கள், முதலாவது பக்தியோடு தொழுகக்கூடியவர்களாக தோன்றியவர்களை கண்டார்கள். மேலும் அவர்கள் கொண்டுவந்த செய்தி கேட்கக்கூடியவர்களுக்கு ஒரு பரிட்சையாக அமைந்தது. உண்மையான பக்தியுள்ளவர் களையும், பக்தியுள்ளவர்கள் போல தோற்றம் அளித்தவர்களையும் அது பிரித்தது. அப்போஸ்தலனாகிய பவுலின் ஊழியம், அவரை குற்றம் சாட்டினவர்களால் இவ்வாறு சுருக்கமாக சொல்லப்பட்டது: "இவன் வேதப் பிரமாணத்துக்கு விகற்பமாய்த் தேவனைச் சேவிக்கும்படி மனுஷருக்குப் போதிக்கிறான் என்றார்கள்"-அப்போஸ்தலர் 18:13

ஆவியோடும், உண்மையோடும் தேவனை தொழுதுக்கொள்வது, வெறுமனே - ஜெபம், துதித்தல், விண்ணப்பங்கள் மற்றும் நன்றி கூறுதல் அல்ல. இவைகள் அனைத்தை காட்டிலும் ஆழமாக சென்று இருதயத்தின் நேசத்தைப் பற்றி கொள்வதினால், இது "ஆராதிக்கும் செயலை" அல்ல, மாறாக வாழ்க்கையே ஆராதனை என்று குறிக்கும். ஆவியினால் ஜெநிப்பித்தல் மற்றும் தெய்வீக திட்டத்தின் அறிவை அறிவதன் மூலம், ஒரு தனிநபர் தேவனோடு ஒன்றிணைந்து, தேவனுடைய திட்டத்தின் எல்லா அம்சங்களிலும், அவருடைய பிரமாணங்களோடு இசைந்திருக்கும் ஒரு வாழ்க்கையாகும். நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளில் சொல்லுவோம் என்றால், "பிதாவின் சித்தம் செய்வதே என்னுடைய போஜனமாக இருக்கிறது." இதுவே ஆவியோடும், உண்மையோடும்

தேவனை தொழுதுக்கொள்ளும் ஆராதனையாகும். தேவனை அனுகக்கூடிய தனிப்பட்ட ஜெபத்திலும், குடும்ப ஜெபத்திலும், விசுவாச வீட்டாரோடு ஒருமித்து ஜெபிக்கையிலும், ஒழுக்கத்துடன் பயபக்தி வெளிப்படுத்தும்படியாக முழங்காலில் நம்மை நிற்கும்படி செய்யும். மேலும், வாழ்க்கையின் அனைத்து செயல்கள் மற்றும் வார்த்தைகளிலும் அதன் வெளிப்பாட்டை காணலாம். இப்படியாக பிடிப்பட்ட இருதயம், தன்னுடைய சீரத்தின் ஒவ்வொரு தாலந்துகளையும், தேவனுடைய மற்றும் கிறிஸ்துவுனுடைய சித்தத்திற்கு முழுமையாக கீழ்படுத்த முயலும். இப்படிப்பட்ட முழுமையான அர்ப்பணிப்பே தேவன் தேடும் தொழுகையாகும். மேலும், இப்படியாக தேவனால் ஆக்கிரமிக்கப்பட்ட இருதயங்களும், அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுக்கொள்கிறவர்களும், அவருடைய சித்தத்தை தங்களுடைய இருதயத்திலும், வார்த்தையிலும், கிரியைகளிலும் நிறைவேற்ற பெறும் முயற்சி எடுப்போர், நிச்சயமாக தேவனால் தேடப்படும், மெய்யான தொழுகையை ஏறெடுக்கும் "சிறு மந்தையாகவும்", "விசுவாசமுள்ள இராஜரீக ஆசாரியர்களுமாக" இருக்கிறார்கள்.

**E468 [top]:**

தன்னை தொழுதுகொள்ளுகிறவர்கள் வேறுவிதமாகவோ அல்லது கட்டாயமாகவோ அவரை தொழுதுக்கொள்ளவேண்டும் என்று அவர் விரும்பாமல், "உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள" வேண்டும் என்று அவர் விரும்புகிறார் - இவைகளை அடையாளப்படுத்தும், அவரையும், அவருடைய நீதியின் கொள்கைகளையும் புரிந்துப் பாராட்டி, நேசித்து மனப் பூர்வமாக தொழுதுகொள்ள வேண்டும். யோவான் 4:23

### 12. நம்முடைய விண்ணப்பங்கள் தேவைப்படும் நேரத்தின் உதவிக்காக ஏன் இருக்க வேண்டும்?

எபிரெயர் 4:16 ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், எற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.

**R2249 [Col. 2 :2]:**

அல்லது தெய்வீக உதவியை முன்கூட்டியே நாம் தேடக்கூடாது. எடுத்துக்காட்டாக, வரக்கூடிய ஒரு வருடத்திற்கு அல்லது வரக்கூடிய ஒரு மாதத்திற்கு அல்லது வரக்கூடிய ஒரு வாரத்திற்கு அல்ல அதற்கு மாறாக, நாம் கர்த்தரிடத்தில் ஒரு உடன்படிக்கை செய்து, நாம் அவருடையவர்களாக இருக்கிறோம் என்பதையும், ஒவ்வொரு சோதனையின் போதும் அவர் நம் அருகில், இருக்கிறார் என்பதையும், நாம் ஏற்றுக்கொண்டு, அதன்படி செயல்படுவோம் என்ற மனதுடையவர்களாக இருந்தால், அவரது உதவி நம்முடைய பயன்பாட்டிற்காக தயாராக உள்ளது என்பதையும்நாம் அறிந்துக்கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம். எனவே நம்முடைய ஜெபங்கள் தேவை நேரத்தில் உதவி வேண்டுவதாக இருக்கவேண்டும், அதேபோல் ஒவ்வொரு நாளுக்கான பாதுகாப்பு மற்றும் அவருடைய ஆசீர்வாதங்களுக்காக பொதுவான ஜெபங்கள் ஏறெடுக்கப்படவேண்டும். சோதனையின் அந்த நொடிபொழுதில், விசுவாசத்தின் முழு உறுதியோடும், அவருடைய அன்பையும், ஞானத்தையும், நமக்கு அவர் உதவி செய்யும் திறனையும், அவரிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகல காரியங்களையும் நன்மைக்கு ஏதுவாக நடத்திவரும் அவருடைய விருப்பங்களை நாம் உணர்ந்தவர்களாக, நம்முடைய இருதயம் ஆண்டவரை நோக்கி உயர்த்தவேண்டும். அத்தகைய தேவைக்கான உதவிகளை வேண்டும் போது, நம்மை நிச்சயமாக ஆண்டவரின் ஆலோசனைக்கும், உதவிக்கும் நீதிக்காக பெலத்திற்கும், சத்தியத்திற்கும், பரிசுத்தத்திற்கும் மற்றும் அன்பினிடத்திற்கும் இழுத்துச்செல்லும். மேலும் இவ்வாறாக, ஒவ்வொரு மணிநேரமும் ஜெயித்து, ஒவ்வொரு நாளும் ஜெயித்து, இறுதியாக முற்றிலும் ஜெயம் பெறவேண்டும்.

### 13. நாம் ஜெபிப்பதற்காக தேவனிடத்தில் அடிக்கடி அணுகலாமா அல்லது அவரது கவனத்திற்குகொண்டு செல்ல அற்பமாக காரியங்கள் ஏதாகிலும் உண்டா?

**R1865 [Col. 1 :3 through Col. 2:7]:** பாடத்தின் முடிவில் காணலாம்.

### 14. நம்முடைய பரலோக தந்தை தேவையானவைகளை நாம் விண்ணப்பிக்காமல் ஏன் கொடுப்பதில்லை?

**R3128 [Col. 2 :5]:**

நமக்கு தேவையானவைகளுக்காக நாம் விண்ணப்பிக்காமல், அவருடைய வாக்குத்தத்தங்களை கோராமல் அவைகளை தேவன் நமக்கு ஏன் கொடுப்பதில்லை என்ற கேள்வி எழும்பலாம். சந்தேகமின்றி, அவருடைய கிருபைகளைப் பெறுவதற்கும் அவைகளினால் நன்மையடைவதற்கும், முன்னதாகவே நம்முடைய இருதயத்தை சரியான மனநிலைக்கு கொண்டுவரவேண்டும் என்பதே காரணமாகும். அப்படியாக இருந்தாலும், இதுவரை

நமக்கு வழங்கப்பட்ட, பொழிந்திட்ட தெய்வீக கவனிப்பை நாம் போதிய அளவில் புரிந்துப் பாராட்ட வில்லை என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம். அநேகமாக ஜெபம் மற்றும் நன்றியுணர்வுக்கான காரணங்களுக்கு ஒரு பகுதியும் கூட நாம் பகுத்துணராதவர்களாக இருக்கிறோம் நாம் அறியப்பட்டதை போல, நாம் அறிந்துகொள்ளும் போது காலப்போக்கில் நாம் அதை காண்போம். இது இயற்கையான பசியாக இருந்தாலும் சரி. நாம் ஒரே ஒழுங்கு முறையில் சரியான நேரத்தில் அதிகமாக உணவை உட்கொண்டிருப்பதை காட்டிலும் நாம் மிகுந்த பசியாக இருந்தால் மட்டுமே, உணவுக்கான நம்முடைய தேவையை நாம் உணர்ந்துக்கொள்ள முடியும்.

**R2865 [Col. 2 ¶2]:**

இங்கு, தேவதூதனுடனான யாக்கோபின் போராட்டத்திற்கு சம்பந்தப்பட்ட ஒரு சரியான பாடம் வருகிறது. பண்டைய காலத்தில் அடிக்கடி நடந்ததுபோல, ஒரு தூதன் மனுஷனைப் போல தோன்றினார். இருப்பினும், அவர் தேவனால் அனுப்பப்பட்ட பிரதிநிதி என்று யாக்கோபு அவரை அடையாளம் கண்டுகொண்டவராக, அவரை பிடித்துக் கொண்டு, தன்னை ஆசீர்வதிக்கவேண்டும் என்று கெஞ்சினார். தேவதூதன் யாக்கோபின் பிடியில் இருந்து தன்னை விடுவிப்பதற்கு போதுமான வல்லமை இல்லாதவராக, விடியற்காலம் வரைக்கு, "நான் போகட்டும்" என்று தூதன் சொன்னபோது, "என்னை ஆசீர்வதித்தால் மட்டுமே உம்மை விடுவேன்" என்று யாக்கோபு சொல்லி போராடி கொண்டு இருந்ததாகவும் நாம் எதிர்ப்பார்க்க முடியாது. இதற்கு மாறாக நாம் நினைக்கவேண்டிய காரியம் என்னவெனில், தேவன் யாக்கோபை ஆசீர்வதிப்பதற்கு பிரியமுள்ளவராக இருந்தார். அந்த நோக்கத்திற்காக அவர் ஒரு தூதனையும் அனுப்பினார். தேவனுடைய ஆசீர்வாதத்தையும், அவருடைய கிருபைகளையும் யாக்கோபு எந்த அளவுக்கு விரும்புகிறார் என்பதை நிரூபிக்கும்படியாக, இந்த சூழ்நிலை யாக்கோபின் ஏக்கத்தை வெளிக்காட்டும் ஒரு வாய்ப்பாக இருந்தது. விரும்பப்பட்ட பலன் கிடைத்தபோது, தேவனோடு இசைந்திருப்பதற்கும், தேவன் மட்டுமே இத்தகையான ஆசீர்வாதங்களை கொடுப்பார் என்பதற்குமான, விருப்பத்தின் தீவிரத்தை யாக்கோபு நிரூபித்தபோது - அந்த ஆசீர்வாதம் யாக்கோபுக்கு வந்தது-அவர் வெற்றிப்பெற்றார். தேவன் கொடுப்பதற்கு விருப்பம் இல்லாத ஒன்றை, அவருடைய தூதன் மூலமாக பெறுவதற்கு, யாக்கோபு போராடினார் என்பதல்ல. ஆனால், யாக்கோபு அந்த ஆசீர்வாதங்களை பெறுவதற்கு, தேவன் கண்டு பரிசளிக்கக் கூடிய அவருடைய பக்திவைராக்கியம், பெலன், பொறுமை மற்றும் விசுவாசத்தை வெளிப்படுத்தும்படிக்கு போராடினர்.

**15. நாம் "தகாதவிதமாய்" விண்ணப்பம் செய்யாதபடிக்கும், நம்முடைய எல்லா விண்ணப்பங்களும் பதில் அளிக்கப் படுவதற்கும் நாம் எவ்வாறு கற்றுக் கொள்ளலாம்?**

1யோவான் 5:14,15 நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்.

**R2005 [Col. 2 ¶7-9]:**

உண்மையில், சரியானதும், அங்கீகரிக்கப் பட்டதுமான, சில விரும்பக்கூடிய விண்ணப்பங் களுக்கான பதில்கள் நீண்ட காலம் தாமதிக்கலாம் - எடுத்துக்காட்டாக, பதினெட்டு நூற்றாண்டுகளாக, "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படுவதாக" என்று சபை விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறது. தேவன் அதை கேட்டுக் கொண்டிருக்கிறார், ஆனால் அவர் இன்னும் பதில் அளிக்கவில்லை. ஆனாலும், அந்த இராஜ்யத்தை விரும்பி அதற்காக ஜெபித்த அனைவரும், இன்னும் அந்த இராஜ்யம் வராதபோதிலும், அவர்களது விசுவாசத்திற்காக ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். - ஆனால் இப்போது அந்த இராஜ்யம் மிக அருகில் உள்ளது. ஆயினும், மற்ற வேண்டுதல்கள் - நம்முடைய அன்றாட உணவு மற்றும் சோதனையில் ஜெயம் பெறுதல் மற்றும் தீமையினின்று இரட்சிப்பு - உடனடியாக பதில் அளிக்கப்படுகிறது.

இதன் தொடர்பில் ஜெபத்தின் சிலாக்கியத்தை குறிப்பாக கவனிக்கவேண்டும் அல்லது தேவனுடைய மற்ற எந்த கிருபைகள், சுயநலமான நோக்கத்திற்கு

வழங்கப்படுவதில்லை. சரியான விருப்பத்தோடு கேட்கப்படக்கூடிய ஒரு காரியம், மற்றொரு நோக்கத்தில் தவறாக இருக்கலாம். நம்முடைய தோழர்களுக்கு முன்பாக மகிமைப்பட வேண்டும் என்று நாம் விரும்பி, கேட்கக்கூடிய சில நன்மையான காரியங்கள், அது தவறான நோக்கமுடையதாக இருப்பதால், இது ஒரு தவறான விண்ணப்பமாகும்.

வெறுமனே, நம்முடைய வசதிக்காகவும், எளிதாக நடப்பிக்கவேண்டும் என்பதற்காகவும், ஒரு நல்ல காரியத்திற்காக விரும்பப்படுவது, ஒரு தவறான, சுயநலமான நோக்கமாகும். இப்படிப்பட்ட விஷயங்களை குறித்து, " நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்." (யாக்கோபு 4:3) என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். வெறுமனே சோதிப்பதற்காக, சில நல்ல காரியங்களுக்கு விண்ணப்பித்து, அதன் வழியாக நம்முடைய விசுவாசத்தை நிலைநிறுத்தவேண்டும் என்பது ஒரு தவறான வேண்டுதலாக தோன்றுகிறது. ஆனால் மற்ற எவருக்கும் இல்லை, விசுவாசமுள்ளவர்களுக்கு எதுவும் வாக்களிக்கப் பட்டுள்ளது.

**R3217 [Col. 2 :2, 3]:**

நாம் ஒரு பெரிய தேசிய அளவிலான முன்மாதிரியை பார்த்தோம், இப்போது நமக்கு நெருக்கமான ஒரு சிறிய வழியில் முன்மாதிரியை காணலாம். நம்மில் எத்தனை பேர், நம்முடைய அறியாமையிலும், குருட்டாட்டத்திலும், சில நேரங்களில் நம்முடைய ஜெபங்களில், பல்வேறு கட்டுகளுக்காகவும், கிறிஸ்தவ மண்டலத்தின் வெவ்வேறு பிரிவுகளுக்காகவும் ஜெபித்திருப்போம். மேலும் அவைகளை மேம்படுத்துவதற்காக எவ்வளவு உழைத்திருப்போம். ஆனால் இவ்வாறு நாம் ஜெபித்ததற்காகவும், உழைத்ததற்காகவும் நம்முடைய ஆவிக்குரிய விதத்தில் காயம் அடைந்தவர்களாக காணப்பட்டோம். இஸ்ரயேலின் மூப்பர்களை போல நாம் தகாதவிதமாக விண்ணப்பித்தோம், அதேநேரத்தில் அதற்கு பதிலாக, நம்முடைய மற்றும் அவர்களின் இருதயங்கள் தொடர்ந்து தேவனுடைய வழிகளையும், அவருடைய வழிநடத்தல்களையும் விசாரித்து அறிந்திருக்கவேண்டும். அவருடைய மகிமைக்காகவும், நம்முடைய சொந்த நலனுக்காகவும் நாம் அறியாமலும் தவறாகவும் நினைத்ததை அவருக்கு சாதகமாகவும் ஆசீர்வதிக்கவும் கேட்கக்கூடாது. சரியாக ஜெபிக்க அதுபோல சரியாக உழைப்பதற்கும் நம்புவதற்கும் நாம் கற்றுக்கொள்ளுவோம். இவ்வாறாக நாம் செய்வதற்காக கேட்பதற்கு தீவிரமாகவும், பேசுவதற்கு தாமதமாகவும், தேவனுடைய வார்த்தைகளுக்கு செவிக்கொடுத்து, அவர் நமக்கு முன்னதாக கொடுத்த பாடங்களையும், அவர் நமக்கு கற்பிக்கக்கூடியதும், வழிநடத்தக்கூடியதும் மற்றும் ஆசீர்வதிக்கக்கூடியதுமான அவருடைய வழிமுறைகளையும் பெற்றுக்கொள்ள தீவிரிக்கவேண்டும். நம்முடைய விருப்பத்தேர்வுகள் என்ன என்பதை அவருக்கு தெரிவிப்போம், உண்மையில், கிறிஸ்துவின் குணலட்சணங்களில் வளர்ச்சி அடைவதற்கு முயலுவோம், இது நம்முடைய சித்தத்தை தேடுவதை அனுமதிக்காமல், பரலோகத்தின் பிதாவின் சித்தத்தையும், வழியையும் தேட வழிநடத்தும்.

அதே கொள்கையை நம் அன்றாட வாழ்க்கையின் தனிப்பட்ட விவகாரங்களில் பொருத்துவோம்.ஜெபங்கள் பதில் அளிக்கப்பட்ட பின்னர், பல பெற்றோர்கள், வேதனை உள்ள இருதயத்தோடு,அந்த ஜெபங்கள் பதில் அளிக்கப்படாமல் இருந்திருக்கலாம் என்று விரும்புவதை கூறுகிறார்கள். அதாவது உம்முடைய சித்தமே ஆகக்கடவது என்ற வார்த்தைகளையோ, அல்லது உணர்வுகளையோ பயன்படுத்தாமல், நண்பர்கள் மற்றும் குழந்தைகள் தங்கள் மரணப் படுக்கையில் இருந்தபோது, அவர்களின் ஜீவனுக்காக முக்கியத்துவத்தோடு ஜெபித்தபோது, தேவன் எவ்வாறு அந்த ஜெபங்களுக்கு பதில் அளித்தார். மேலும் அந்த பதில்களினால் அவர்களுக்கு எப்படிப்பட்ட பயங்கரமான தீமைகள் வந்தது என்று கூறுகிறார்கள். எல்லா சந்தர்ப்பங்களும் ஒரே மாதிரி இருக்காது. ஆனால், ஒழுங்காக செயல்படும் தேவனுடைய வளர்ச்சி அடைந்த பிள்ளைகளின் இருதயம், அவர்களின் அனைத்து ஜெபங்களும் பதில் அளிக்கப்படும் இடத்தை அடைவதற்கு எதிர்பார்க்கவேண்டும். மேலும் தேவனுடைய வார்த்தைகள் அவர்களுக்குள் அபரிமிதமாக நிலைத்திருப்பதினால், சிறந்த முறையில் திருப்தியாக பதில் அளிக்கப்படுவதற்கு சாத்தியமான வழிகளை காணவேண்டும். தகாதவிதமாக ஜெபிக்கக்

கூடாது- தெய்வீக சித்தத்திற்கும், முன்னேற்பாடுகளுக்கும் விரோதமான எந்த காரியத்தையும் கேட்கக்கூடாது. ஆனால் அதற்கு மாறாக, தெய்வீக ஞானத்தின் மேல் நம்பிக்கை யுள்ள வர் களாக,"ஆண்டவரே என்னுடைய சித்தம் அல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது" என்று ஜெபிக்கவேண்டும்.

**R3338 [Col. 2 :5]:**

புறஜாதியார் செய்யும் காரியங்களுக்கும், அவருடைய சீஷர்களாகிய நாம் செய்யவேண்டிய காரியங்களுக்கும் இடையிலான வித்தியாசத்தை நம்முடைய ஆண்டவர் தாமே குறிப்பிடுகிறார். அதாவது நம்முடைய வேண்டுதல்களும் தேடல்களும் புறஜாதியாரை போல வெறுமனே அழிந்து போகும் போஜனத்திற்காக இருக்கக்கூடாது ஏனெனில், அவர்கள் பூமிக்குரிய காரியங்களை திரும்ப திரும்ப தேடுபவர்களாக இருக்கிறார்கள். நாமோ, முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடவேண்டும். மற்ற எல்லா பூமிக்குரிய காரியங்களையும் நம்முடைய தேவைக்கு ஏற்றபடி கொடுக்கப்படும் என்று இயேசு கூறினார். ஆகவே நம்முடைய விண்ணப்பங்கள், நம்முடைய வேண்டுதல்கள், நம்முடைய மன்றாட்டுகள் அனைத்துமே, நம்முடைய இருதயத்தின் பரிசுத்தத்திற்காகவும், அவருடைய ஆவியினால் நாம் நிரப்பப்படுவதற்காகவும், ஆவிக்குரிய ஆகாரத்திற்காகவும், புத்துணர்வுக் காகவும், பலத்திற்காகவும் மட்டுமே இருக்க வேண்டும். மேலும் இயற்கையான காரியங்களை பொறுத்த வரையில், புது சிருஷ்டிகளாகிய நமக்கு சிறந்த நன்மைக்கானவைகளை அவர் அறிந்திருக்கிறார். ஆகவே அவைகளை நாம் அவரிடம் விட்டுவிட வேண்டும். அவர் நமக்குக் கொடுக்காத காரியங்களுக்காக நாம் அவரிடத்தில் மறுபடியும் மறுபடியும் விண்ணப்பிப்பது அவருக்கு பிரியமில்லாத காரியமாகும். நாம் இவ்வாறு செய்தால், அவர் மேல் நாம் வைத்திருக்கும் விசுவாசத்திற்கு முன்மாதிரியாக இராமல், அதற்கு எதிராக இருக்கும் -சந்தேகத் திற்கான மாதிரியும், பயத்தின் வெளிப்பாடும், மேலும் அவர் நமக்கு தேவையான விஷயங்களை கொடுக்க தனது வாக்குறுதியை புறக்கணிக்கிறார் என்ற காரியங்கள் நமக்குள் காணப்படும்.

**R3354 [col. 1 :1]:**

**[இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்]** என்ற பாடத்தின் முடிவாக நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகள், விசுவாசிகளுக்கு முழு ஆத்தும திருப்தியாக இருக்கிறது. "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள். தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்" இதற்காக ஆண்டவருடைய வார்த்தைகள் நமக்குண்டு. ஆனால் ஜெபத்தில் நமக்கு முன்னதாகவே சொல்லப்பட்ட ஒழுங்கை நினைவில் வைக்கவேண்டும். நம்முடைய பரலோக தந்தையின் நாமத்தை பரிசுத்தப்படுத்தாத மற்றும் கனப்படுத்தாத எந்த காரியத்தையும் நாம் கேட்கக்கூடாது. அவருடைய வரக்கூடிய இராஜ்யத்திற்கோ அல்லது பரலோகத்தில் அவருடைய சித்தம் செய்யப்படுவதை போல பூமியில் செய்யப்படுவதிலோ, தெய்வீக திட்டத்தில் இசைவான எந்த அளவிலும் தடைச் செய்யக்கூடிய காரியங்களை நாம் கேட்கக்கூடாது. மேலும், அந்த வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்ட, தெய்வீக திட்டத்திற்காக நாம் செய்திட்ட ஜெபங்கள், இறுதியாக முழுமையாக நிறைவேற்றப்படும் என்பதில் உறுதியாக இருக்கவேண்டும். மேலும் நாம் அதை பெற்றுக் கொள்ளும்போது, நம்முடைய இருதயத்திற்கு மிகுந்த திருப்தி அளிக்கும் பகுதியாக அது இருக்கும்.

**R2865 [col. 2 :4]:**

யாக்கோபு "கிறிஸ்து இயேசுவுக்குள் ஒரு புது சிருஷ்டியாக" இராமல், ஒரு இயல்பான புருஷனாக இருப்பினும், குறிப்பாக அவருக்கு வாக்களிக்கப்பட்ட பூமிக்குரிய எந்த காரியங்களையும் அவர் விண்ணபிக்கவில்லை என்பதில் அவருடைய ஜெபம் நமக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கிறது. அவர் கேட்ட ஒரே காரியம் - தேவனுடைய ஆசீர்வாதம், அதுவும் தேவன் அவருக்கு கொடுக்க பிரியமுள்ள எந்த ஒரு முறையிலும் அவர் பெற விரும்பினார். அந்தோ, எத்தனை ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் யாக்கோபை போல இப்படிப்பட்ட காரியங்களை புரிந்துக்கொள்கிறார்கள். பலர் தங்களது பூமிக்குரிய ஆசைகள், செல்வம், புகழ் அல்லது காலத்திற்குரிய நற்காரியங்கள் ஆகியவற்றிற்காக தகாதவிதமாக ஜெபிப்பதினால், அவர்கள் விண்ணப்பித்தவைகளை பெற்றுக் கொள்வதில்லை. (யாக்கோபு 4:3) ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட பிள்ளைகளின் தற்காலிக தேவைகளை கவனித்துக்கொள்வதாக ஆண்டவர் ஏற்கனவே வாக்குறுதி அளித்திருக்கிறார் என்பதையும்,

அவர்கள் எப்படி கேட்பது அல்லது சிந்திப்பது என்பதை காட்டிலும்அதிகமாகவே அவர் செய்வார் என்பதையும் எத்தனைபேர் மறந்துவிட்டார்கள். புது சிருஷ்டிகளை பொறுத்தவரை, நம்முடைய நிலைமைகள் மற்றும் விருப்பங்கள், விசேஷமாக புது சிருஷ்டியை சார்ந்திருக்கக் கூடிய காரியங்களாக மட்டுமே இருக்க வேண்டும் என்பதை வெகு சிலரே நினைவில் கொள்கிறார்கள். மேலும், இந்த ஒரு வகுப்பாருக்கான ஆசீர்வாதத்திற்காக தேவன் நம்மை அழைத்திருக்கிறார். அதை பெற்றுக்கொள்ள போராட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். பூமிக்குரிய பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளை கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதா தம்மிடம் வேண்டிக்கொள்பவர்களுக்கு பரிசுத்த ஆவியை கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்று நமக்கு தேவையான வாக்குறுதியும் கொடுத்திருக்கிறார். (லூக்கா 11:13) தேவனுடைய ஆவி, பரிசுத்தமான ஆவி, சத்தியத்தின் ஆவி, கிறிஸ்துவின் ஆவி, நல்ல சிந்தையின் ஆவியை அளவில்லாமல் பெறுவதே ஆண்டவருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் அனைவருக்கும், வாழ்க்கையில் பிரதான நோக்கமும், ஜெபத்தின் சுமைகளுமாக இருந்தால், இது எப்படிப்பட்ட ஆசீர்வாதமாக இருக்கும்! அப்படியானால், விரும்பத்தக்க ஆசீர்வாதங்களை பெறுவதற்கு, அவர்கள் பொழுது விடியும் வரை ஆண்டவரோடு போராடவேண்டும். தேவனுடைய ஆசீர்வாதங்களை புரிந்து பாராட்டி, ஆர்வத்தோடு விரும்ப வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக, அவைகளை அவரிடம் வைத்திருக்கிறார் என்று தேவன் தாமே அவருடைய ஜனங்களிடம் வெளிப்படுத்தியிருக்கிறார்.

## 16. நம்முடைய ஜெபங்களுக்கு தேவன் ஏன் தாமாக பதில் அளிக்கிறார்?

லூக்கா 11:5-8- பின்னும் அவர் அவர்களை நோக்கி - உங்களில் ஒருவன் தனக்குச் சிநேகிதனாயிருக்கிறவனிடத்தில் பாதிராத்திரியிலே போய், சிநேகிதனே, என் சிநேகிதன் ஒருவன் வழிப்பிரயாணமாய் என்னிடத்தில் வந்திருக்கிறான், அவன் முன் வைக்கிறதற்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை, நீ மூன்றுஅப்பங்களை எனக்குக் கடனாகத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். வீட்டுக்குள் இருக்கிறவன் பிரதியுத்தரமாக - என்னைத் தொந்தரவு செய்யாதே, கதவு பூட்டியாயிற்று, என் பிள்ளைகள் என்னோடேகூடப் படுத்திருக்கிறார்கள், நான் எழுந்திருந்து, உனக்குத் தரக்கூடாது என்று சொன்னான். பின்பு தனக்கு அவன் சிநேகிதனாயிருக்கிறதினிமித்தம் எழுந்து அவனுக்குக் கொடாவிட்டாலும் தன்னிடத்தில் அவன் வருந்திக் கேட்கிறதினிமித்தமாவது எழுந்திருந்து, அவனுக்குத் தேவையானதைக் கொடுப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

### R335[col. 2:4, 5]- தாமதித்ததினால் விசுவாசம் நம்பிக்கை வளர்ச்சி அடைதல்

முதலில் கோரிக்கையை நிராகரித்த பூமிக்குரிய நண்பர் ஒருவர், திரும்ப, திரும்ப அவரிடம் கேட்கும்போது, பதில் அளித்தார் என்பதை நம்முடைய ஆண்டவர் லூக்கா 11ம் அதிகாரம் 5-8 வசனங்களில், ஒரு உவமையாக கூறுகிறார். நம்முடைய ஆண்டவர் பரலோகத் தகப்பனைப் பற்றி விளக்குவதற்கு ஒரு எடுத்துக்காட்டை பயன்படுத்துகிறார். அதாவது தேவனானவர் தம்முடைய ஜனங்களின் வேண்டுகோள்களை வெறுக்கிறவராயும், மேலும் அவர்கள் தொடர்ச்சியாகத் தம்மிடத்தில் வருவது அவருக்குச் சலிப்பூட்டுகிறதாய் இருக்கும் போது மாத்திரமே அவர்களுக்கு வேண்டியதை அருளுகிறவராயும் இருக்கிறார் என்கிற முறையில் குறிப்பிடாமல், மாறாக வாஞ்சிக்கிற சில சொற்ப பூமிக்குரிய தயவுக்காக மனிதர்கள் எவ்வளவு பொறுமையுடன் நிலைத்திருக்கிறார்கள் என்பதனைக் காண்பிக்கும் வண்ணமாக நம்முடைய கர்த்தர், பரம பிதாவைக் குறித்து உவமையை கூறினார். நம் பரலோகத் தகப்பன் நல்ல விஷயங்களை வைத்திருக்கிறார். அவர் நமக்கு அவைகளை வாக்களித்தும் இருக்கிறார். அதை நமக்கு தருவதில் அவர் மகிழ்ச்சி அடைகிறார். ஆயினும், அதில் சிலவகை இன்னும் தொலைவில் உள்ளது. எடுத்துக்காட்டாக, "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படுவதாக.." என்று தேவன் அவருடைய ஜனங்களை ஜெபிக்கும்படி கடந்த பத்தொன்பது நூற்றாண்டுகளாக அனுமதித்திருக்கிறார். இந்த விண்ணப்பத்திற்கு தேவன் ஏன் விரைவாக பதில் அளிக்கவில்லை ? இதற்கான பதில் தாமதிக்கும் என்பதை அறிந்திருக்கும்போது, நாம் அதற்காக ஜெபிக்கவேண்டும் என்று அவர் ஏன் கூறவேண்டும்?

நமக்கு இந்த ஜெபத்தை கற்றுக்கொடுப்பதற்கு முன்னதாகவே, அவர் இராஜ்யத்தைப் பற்றியும், அதன் காலத்தைப் பற்றியும் ஒரு திட்டத்தை வடிவமைத்தார்

என்று நாம் பதில் அளிக்கிறோம். மேலும், கிட்டத்தட்ட பத்தொன்பது நூற்றாண்டுகளாக இந்த ஜெபம், அவருடைய ஜனங்களின் இருதயங்களுக்குள் தொனித்துக் கொண்டிருப்பதினால், அது அவர்களுக்கு ஆசீர்வாதமாக உள்ளது. மேலும் அவர்கள் ஜெபிக்கா விட்டால், நீண்ட காலமாக இந்த இராஜ்யத்தைப் பற்றி அவர்கள் அறிந்திராமல், அதற்காக வாஞ்சையோடு காத்திருக்க மாட்டார்கள். அந்த இராஜ்யத்திற்கான வாஞ்சிக்கும் எதிர்ப்பார்ப்பே ஒரு ஆசீர்வாதமாகவும், ஊக்கம் அளிக்கக் கூடியதாகவும் உள்ளது. ஆகவே இந்நாளிலும், முன்னிருந்ததை விட அதிக ஆர்வத்துடன், "உம்முடைய இராஜ்யம் வருவதாக" என்று நாம் ஜெபித்துக் கொண்டிருக்கிறோம். ஏனெனில், அந்த இராஜ்யம் நமக்கு கொடுக்கப் படுவதற்கு ஆயத்தமான நேரத்திற்கு நாம் நெருங்கி வரும் பொழுது, தேவனுடைய இராஜ்யத்தின் தேவையை இன்னும் அதிகதிகமாக மதித்து உணருகிறவர்களாக இருக்கிறோம்.

**R2865 [col. 2 :3]:**

இந்த சூழ்நிலையில், ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கான பாடமானது, "சோர்ந்து போகாமல், இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள். " என்ற நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளுக்கு இசைவாக உள்ளது. நாம் தொடர்ந்து உறுதியோடு இருக்கும்படிக்கு தேவன் விரும்புகிறார். நம்முடைய விடாமுயற்சியின் அளவு, நம்முடைய விருப்பங்களின் ஆழத்தை குறிப்பிடும். நம்முடைய ஜெபத்திற்கான பதில், நாம் கேட்டவுடன் வரவில்லை என்றால் - நாம் கேட்ட ஆசீர்வாதங்கள் மேல் நாம் அதிக ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறோமா என்று நம்மை பார்ப்பதற்காக தேவன் கொஞ்ச காலம் அந்த ஆசீர்வாதங்களை கொடுக்க தாமதித்தாலும் தேவன் குறித்திருக்கும் நாளுக்காக காத்திருந்து, அவர் வாக்களித்த ஆசீர்வாதங்களை அவர் கொடுக்க விருப்பம் உள்ளவர் என்று அவர் மேல் நம்பிக்கையோடு விசுவாசம் வைத்தவர்களாக, நாம் "ஜெபத்தில் உறுதியாக தரித்திருக்கவேண்டும்.

**R3663 [col. 1 :1-4] -நீண்ட காலம் தாமதித்து பதில் அளிக்கப்படுதல்.**

நம்முடைய விண்ணப்பங்கள், தேவனுடைய வார்த்தைக்கும், அவருடைய சித்தத்திற்கும் இசைவாக இருந்தாலும், தேவன் உடனடியாக அவைகளுக்கான பதில் அளிக்காமல் இருப்பதற்கு பல காரணங்கள் இருக்கலாம். அனைத்து காரணங்களையும் நாம் அறிந்துக்கொள்ள முடியாது, ஆனால் அவைகளில் சில வெளிப்படையானவைகள். நாம் வேண்டிக்கொண்ட நன்மையான காரியங்களுக்காக நாம் கொண்ட விருப்பத்தின் ஆழத்தையும் பலத்தையும் சோதிப்பதற்காக அநேக முறை, தேவன் நமக்கு பதில் அளிப்பதில் தாமதிக்கிறார் என்பது ஒரு முக்கிய காரணமாகும். எடுத்துக்காட்டாக, பூமிக்குரிய பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளுக்கு நன்மையான காரியங்களை கொடுக்க அறிந்திருக்கும்போது, அவரிடம் பரிசுத்த ஆவியை கேட்பவர்களுக்கு அவர் நிச்சயமாக கொடுப்பேன் என்று தேவன் நமக்கு வாக்களித்தபோதிலும், அந்த ஆவியை அவர் படிப்படியாக தான் தருகிறார். நாம் எந்த அளவில் சுயத்தின் ஆவியையும், உலகத்தின் ஆவியையும் வெளியேற்றுகிறோமோ, அந்த அளவான பரிசுத்த ஆவியை மட்டுமே அவர் நமக்கு தருகிறார். நம்முடைய சுயத்தை வெளியேற்றி, கிறிஸ்துவின் சிந்தைக்கு நம்மை ஆயத்தம் செய்வதற்கு காலம் தேவைப்படுகிறது - சிலருக்கு மற்றவர்களைவிட அதிகமான கால அவகாசம் தேவைப்படலாம். ஆனால் அனைவரும் தேவனுடைய ஆவியை பெறுவதற்கு தங்களில் உள்ள ஆவியை வெளியேற்றியே தீரவேண்டும். தேடுகிறவன் கண்டடைவான், ஆனால் அதிகமாக தேடுகிறவன் அதிகமாக கண்டடைவான். தட்டுகிறவனுக்கு திறக்கப்படும், தொடர்ந்து தட்டுகிறவனுக்கு, தட்டுகிறதின் மேல் ஆர்வம் அதிகரித்து, அதற்குள் பிரவேசிக்கும் விருப்பமும் அதிகரித்துவிட்டது என்று பொருளாகும். அப்போது சிறப்புரிமை என்ற வாய்ப்பின் கதவு, அவருக்கு முன் மெதுவாக திறக்கப்படும்போது, அவருடைய தைரியமும், வலிமையும் அதிகரிக்கும். இவ்விதமாக, ஆண்டவர் அவருடைய வேண்டுகோளுக்கு மிக விரைவாக பதில் அளிப்பதை காட்டிலும், எல்லா விதங்களிலும் ஆசீர்வாதங்கள் பெரிதாக இருக்கும்.

நாம் எப்போதெல்லாம் ஜெபம் மற்றும் அதற்கான பதிலைப் பற்றி சிந்திக்கிறோமோ, அப்போதெல்லாம், "நீங்கள் என்னிலும், என் வார்த்தை உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் என் பிதாவினிடத்தில் எதை கேட்பீர்களோ, அவைகளை பெற்றுக்கொள்வீர்கள்" (யோவான்15:7) என்ற நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளை நினைவுக்கூற வேண்டும். ஆம், இந்த வாக்கியத்தில் ஒரு விதிமுறைகள் உண்டு. கிறிஸ்துவில் நிலைத்திருப்பவர்கள் விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும் அர்ப்பணிப்பு என்பனவற்றால் அவருக்குள் வந்திருக்க வேண்டும், மேலும், அவரில் நிலைத் திருக்கிறேன் என்றால் விசுவாசமும் நிலைத்திருக்கும், பாவத்திற்கான மனந்திரும்புதலும் அதற்கு எதிரான எதிர்ப்பும் நிலைத்திருக்கும். மேலும் கர்த்தருக்கான

அர்ப்பணிப்பும் ஆராதனையும் நிலைத்திருக்கும் மற்றும் வெளிப்படுத்தப்பட்டும் இருக்கும்.

இதற்கான மற்றொரு நிபந்தனையும் கனமானது. "என் வார்த்தை உங்களில் நிலைத்திருந்தால்". ஆம், ஆண்டவர் தம்முடைய வார்த்தைகளையும், வசனங்களையும், மனதிலும், இருதயங்களிலும், வாழ்க்கையிலும், அவருக்கு உண்மையாக இருக்கும் அனைவரின் ஜெபங்களிலும் தன்னை தானே இணைத்துக்கொள்ளுவதாக பொருள்படுத்துவது இங்கு எவ்வளவு தெளிவாக உள்ளது. தேவ சித்தம் அறிந்துக்கொள்வதற்கும், அவர் வாக்குத்தத்தம் செய்ததை அறிந்துக்கொள்வதற்கும் மற்றும் அவர் எவைகளை வாக்குத்தத்தம் செய்யவில்லை என்பதை அறிந்துக்கொள்வதற்கும், நாம் எதை கேட்கவேண்டும் என்பதற்கும், எதை கேட்கக்கூடாது என்பதற்கும் நாம் வேத வசனங்களை தேட வேண்டும். மேலும் , இவை அனைத்தையும் உறுதிப்படுத்துவதன் மூலம், முழுமையாக தன்னை அர்ப்பணித்தவர், ஆண்டவருக்கு பிரியமில்லாத எந்த காரியத்தையும் செய்ய விரும்பாமல், "என்னுடைய சித்தம் அல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது" என்று ஜெபிப்பார். இந்த ஒரு நிலையை அடைந்தபின், தெய்வீக வாக்குத்தத்தங்களை பற்றி நன்கு அறிந்து, தெய்வீக சித்தத்திற்கு முழுமையாக கீழ்ப்படியக்கூடியவர்கள், எதை கேட்டாலும், அதற்கு பதில் அளிப்பதற்கு தேவன் பிரியமுள்ளவராக இருக்கிறார்.

நம் பரலோக தகப்பனை ஐசுவரியமுள்ளவராகவும், இரக்கமுள்ளவராகவும், அன்பானவராகவும், தாராளமானவராகவும், ஆயினும் ஞானமுள்ளவராகவும் நாம் சிந்திக்கவேண்டும். தேவனுடைய திட்டத்திற்கு அதாவது நம்முடைய மற்றும் அவருடைய மற்ற அனைத்து சிருஷ்டிகளின் மிக உயர்ந்த மற்றும் சிறந்த நலன்களுக்காக அவர் முன்னதாகவே வடிவமைத்திருக்கும் அந்த திட்டத்திற்கு இசைவாக இருக்கும், நம்முடைய இருதயங்களின் அந்த விருப்பங்களை தேவன் கொடுப்பதற்கு மகிழ்ச்சியுள்ளவராக இருக்கிறார் என்பதை நாம் சிந்தையில் கொள்ளவேண்டும். அதன் பிறகு, "எது வந்தாலும், விசுவாசம் அவரை உறுதியாக நம்பும்". மேலும் அவரைப் பற்றி நன்கு அறிந்த பிள்ளைகள், ஆண்டவரோடு முழு இசைவாக தங்களுடைய இருதயங்கள் இருப்பதால், அவர்களின் இருதயங்கள் விரும்பும் அனைத்தையும் அவர்கள் பெற்றுக் கொள்ளலாம். மேலும், அவருடைய நோக்கம் மற்றும் வாக்குத்தத்தத்தின் நன்மையான காரியங்களை தவிர அவர்கள் வேறு எதையும் விரும்பமாட்டார்கள்.

**R3664 [col. 2 :2]:**

நெகேமியாவின் ஜெபத்திற்கான பதில் நான்கு மாதங்கள் தாமதித்தபோதும், மற்றும் இராஜாவின் பார்வைக்கு இந்த விஷயங்களை கொண்டு வருவதற்கான வாய்ப்பின் எந்த வாசலும் இல்லாதது போல தோன்றிய விதமாக, நம்மிடமும் காணப்படலாம். - நம்முடைய விண்ணப்பங்களுக்கான பதில்கள் தாமதிக்கும்போது, நாம் கற்றுகொள்ளவேண்டிய பாடங்களில், நீடிய பொறுமை மற்றும் விசுவாசம் என்னும் பாடத்தை நாம் கற்றுக்கொள்ளவேண்டும் என்று நம் ஆண்டவர் விரும்புகிறார். அதேபோல, தாமதமான அந்த நாலு மாதங்கள் நெகேமியாவின் வேண்டுகோலுக்கு இணங்கும்படிக்கு, இராஜா தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்வதற்கு, ஆண்டவரினால் பயன்படுத்தப்பட்டதை காணலாம். மேலும், நம்மிடத்திலும் இப்படிப்பட்ட காரியங்கள் நடைப்பெறலாம். நாம் ஜெபம் செய்கையில், நாம் விரும்பும் சிலாக்கியம் மற்றும் வாய்ப்பு மற்றும் ஆசீர்வாதங்களுக்கு நம்மைத் தயார்படுத்துவது மட்டுமல்லாமல், அந்த வாய்ப்புகள் மற்றும் சிலாக்கியங்கள் நமக்கு சிறந்த விடிவில் வந்தடைவதற்கு ஏற்ற சூழ்நிலைகளையும், சந்தர்ப்பங்களையும் அவர் ஆயத்தம் செய்யக் கூடியவராக இருக்கிறார். ஆகவே, " சோர்ந்துபோகாமல், எப்பொழுதும் ஜெபம் பண்ணுங்கள்" (லூக்கா 18:1) என்ற நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளை நம் இருதயத்திற்குள் வைத்து, அதற்குள்ளிருக்கும் பாடங்களை நாம் பயன்படுத்துவோம்.

## 17. நம்முடைய ஜெபங்களுக்கு தேவன் பதில் அளிக்க, நாம் அவரோடுக்கூட ஒத்துழைக்கும் படிக்கு முயற்சிக்க வேண்டுமா?

**R3657 [col. 2:1-3]:**

இராஜாவினிடத்தில் அணுகுவதற்கு, வேறு எந்த வழியும் இல்லாததினால், எஸ்தர் தனது உயிரை பணையம் வைப்பதற்கு அறிவுறுத்தப்பட்டாள். இதினிமித்தம் அரண்மனையிலுள்ள அனைத்து யூதர்களும் மூன்று நாட்கள் உபவாசித்து ஜெபிக்கும் படிக்கு மொர்தெகாயினிடம் சொல்லி அனுப்பினாள். அவர்கள் மூன்று நாட்களும் புசியாமலும், குடியாமலும் இருந்திருப்பார்கள் என்று நாம் நினைக்க முடியாது. ஆனால் அவர்கள் தங்களை மகிழ்விக்கும் எல்லாவற்றையும், சகல ஆடம்பரங்களையும் தவிர்த்திருப்பார்கள். இந்த காரியம் (ஜெபமும், உபவாசமும்)ஆண்டவர் மீது விசுவாசம் கொண்ட அனைத்து யூதர்களும் பாலஸ்தீனத்திற்கு

திரும்பவில்லை என்று நமக்கு உறுதியளிக்கிறது. இவ்விதமாக, சிலர் இன்னும் ஆசியா முழுவதிலும் சிதறியிருக்கின்றனர். (சுமார் 100 வருடங்களுக்கு முன் எழுதப்பட்டது.) இவ்வாறு சந்தேகமில்லாமல் இந்த சந்தர்ப்பத்தில், எஸ்தர், மொர்தெகாய் மற்றும் அனைத்து யூதர்களுக்கும் விதிவிலக்கான இந்த சோதனை, ஒரு மிகபெரிய ஆசீர்வாதமாகவும், அவர்களின் விசுவாசத்திற்கு பலமாகவும் நிரூபிக்கப்பட்டது.

மூன்றாம் நாளின் முடிவில் இராணி, தன்னால் முடிந்த வரைக்கும் மிக கவர்ச்சிகரமாக தோற்றம் அளிப்பதற்கு அவரது சிறந்த இராஜரீக ஆடையை அணிந்தவளாக, இராஜாவினிடம் அணுகினாள். இவ்வாறு எஸ்தர் இராஜாத்தி தன்னுடைய ஞானத்தை பயன்படுத்தி, தெய்வீக வழிநடத்துதலுக்காகவும், ஆசீர்வாதங்களுக்காகவும் அவளுடைய ஜெபங்களோடு ஒத்துழைத்தார். இராஜா அவளுக்கு மிகவும் கரிசனையுள்ளவராக, தன்னிடமாக இருந்த பொற்செங்கோலை அவள் தொடும்படியாக அவளிடம் நீட்டினார். பின்னர் அவள் வேண்டுகோளின் சில அவசர காரியங்களை அவள் கொண்டு வந்திருப்பதை உணர்ந்து, அவளுக்கு என்ன செய்யவேண்டும் என்று விசாரித்தார். அவரது இராஜ்யத்தில் பாதி வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளும்படிக்கு உறுதியளித்தார். ஆயினும் இது மிகுந்த ஆர்வத்தை குறிக்கும் ஒரு சாதாரண முறை என்று குறிப்பிடப்படுவது சந்தேகமில்லை.

ராணியின் திட்டங்கள் அனைத்தும் நன்கு திட்டமிடப்பட்டு அறியப்பட்டிருந்தாலும், அந்நேரத்தில் அவள் வயது பதினைந்து மட்டுமே. சந்தேகமில்லாமல், ஆண்டவர் அவளுக்கு தேவையான ஞானத்தை அத்தருணத்தில் அவளுக்கு அருளினார். அவள் தன்னுடைய வேண்டுகோலை கூறாமல், இராஜாவின் ஆர்வத்தை அதிகரிக்கும்படியாக, முதலில் இராஜாவை கனப்படுத்தும்படியாக அவள் ஏற்பாடு செய்திருந்த விருந்துக்கு வரும்படிக்கு அவருக்கும், அவருடைய நம்பகமான அதிகாரி ஆமானுக்கு அழைப்பு தந்தாள். அந்த நியமனம் வைக்கப்பட்டிருந்தது, அந்த விருந்தில் ராணி மீண்டுமாக தன்னுடைய கோரிக்கை தள்ளிவைத்து, தன்னுடைய உண்மையான ஆசைகளை பற்றி கூறுவதற்கு மறுநாளிலும் அவர்களை கௌரவிக்கும்படியாக ஏற்பாடு செய்யப்படும் விருந்துக்கு அந்த இரண்டு பேருக்கும் அழைப்பு கொடுத்தாள். இதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆவிக்குரிய இஸ்ரயேலரில் ஆண்டவருடைய சில அருமையான ஜனங்கள் கொஞ்சம் அதிகபடியாகவே சென்று, ஆண்டவர் மேல் நம்பிக்கை கொண்டவர்களாக, அவர்கள் விரும்பும் காரியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஒன்றும் செய்யாமல் இருக்கிறார்கள். எஸ்தரின் பாதையானது ஒரு சிறந்த உதாரணம் என்று நாம் நம்புகிறோம். நாம் விழித்திருந்து ஜெபிக்கவேண்டும், முயற்சித்து, காத்திருக்கவேண்டும், சர்ப்பத்தைப் போல வினாவுள்ளவர்களாகவும், புறாவைப் போல கபடற்றவர்களாகவும் இருக்கவேண்டும். முடிவுகளுக்காக ஆண்டவர் மேல் நம்பிக்கை வைக்கும் போது, நம் குறைபாடுகள் அனைத்தையும் அவர் நிறைவாக்குவார் என்ற உறுதியோடும், அதேநேரத்தில் முடிந்தவரையில் குறைபாடுகளை குறைத்து, நம்முடைய முழு பலத்தோடு முயற்சிக்கவேண்டும்.

**E224 [2] through E225 [2]:**

தம்முடைய பிள்ளைகள் வேறொரு தேவனை கேட்பதை பரலோக தந்தை எந்த விதத்திலும் பிரியப்படமாட்டார் என்று வேத வசனங்களின் ஆராய்ச்சி காட்டுகிறது - திரித்துவத்தின் சமமான கடவுள்களில் மூன்றாவது நபர். அத்தகைய சிந்தனை அந்த பகுதிக்கும் அதன் தொடர்புடையதற்கும் விரும்பதகாததும், ஒவ்வாததுமாக உள்ளது. இத்தகைய தவறான கண்ணோட்டத்தில் ஆர்வமுள்ளவர்கள், உண்மையாகவே இந்த வாக்குத்தத்தத்தின் வல்லமைக்கும், சத்தியத்தின் உண்மைக்கும் குருடாகவே இருக்கிறார்கள். ஒரு சரிசமநிலையான திரியேகத் தேவர்களின் ஓர் உறுப்பினர், இன்னொருவரை பூமிக்குரிய பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அப்பம், மீன் மற்றும் முட்டைகள் கொடுப்பது போன்று மூன்றாம் நபருக்குக் கொடுக்க இயலும் மற்றும் சித்தமுள்ளவராய் இருக்கிறார் என்று குறிப்பிட்டால் அது மெய்யாகவே விநோதமாகவே இருக்கும். (முந்தைய வசனம் காண்க) பரிசுத்த ஆவி, ஒரு தெய்வீக சிந்தை அல்லது தேவனுடைய பிள்ளைகளுக்கு ஆறுதலையும், ஆவிக்குரிய வளர்ச்சியை ஏற்படுத்தும் தாக்கம் என்று சரியாக புரிந்துக்கொள்ளப்பட்டால் மட்டுமே, இந்த முழு வேத பகுதியும் உறுதிப்படும்.

பூமிக்குரிய அன்பான பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளுக்கு இயற்கையான உணவை கொடுப்பதற்கும், நம்முடைய அன்பான பரலோக பிதா அவரிடம் கேட்பவர்களுக்கு பரிசுத்த ஆவியை கொடுப்பதற்கும் இடையில் ஒரு ஒப்பீட்டை நம்முடைய பகுதி கொடுக்கிறது. பூமிக்குரிய பெற்றோர் அவருடைய குடும்பத்திற்கு தேவையான உணவை ஏற்பாடு செய்தாலும், அதை அவர்கள் மீது கட்டாயப்படுத்தாதது

போல, நம்முடைய பரலோக பிதாவும், அவருடைய ஆவிக்குரிய குடும்பத்தாருக்கு, அவருடைய கிருபையின் நன்மையான ஏற்பாடுகளையும் வைத்திருக்கிறார். ஆனால் அவைகளை அவர்கள் மேல் கட்டாயப்படுத்துவதில்லை. அவைகளுக்காக நாம் பசி தாகமுள்ளவர்களாக இருக்கவேண்டும், சந்தேகமில்லாமல், அவர் நமக்கு நன்மையான ஈவுகளை கொடுப்பதற்கு அவர் விருப்பமுள்ளவராக இருக்கும்பட்சத்தில் நாம் அவைகளை தேட வேண்டும். எனவே நாம் பரிசுத்த ஆவிக்காகவும், ஆண்டவரின் ஆவியினால் நிரப்பப்படுவதற்காகவும் ஜெபிக்கும்போது, நம்மை சுற்றி பார்த்து, இந்த ஜெபங்களுக்கான பதில்களை நாம் பெறுவதற்காக தேவன் செய்திட்ட ஏற்பாடுகளை கண்டறிந்துக்கொண்டு, இவ்வாறாக அவர் நமக்களித்த உற்சாகத்தையும் வழிக் காட்டுதல்களையும் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

இந்த ஒரு ஏற்பாட்டை நாம் சத்திய வார்த்தைகளில் காணலாம். அவைகள் எங்கு காணப்படுகிறது என்று கண்டுபிடிப்பது போதுமானதாக இல்லாமல், நாம் தேவ ஆவியினால் நிரப்பப்படுவதற்கு விரும்பினால், நாம் புசிக்கவேண்டும், உறுதியாக நாம் விருந்தில் பங்கு கொள்ளவேண்டும் இல்லாவிட்டால், அவைகளை நாம் உண்டு அடையக்கூடிய திருப்தியான அனுபவத்தை பெறமுடியாது. மேஜை நிறைய இருப்பதை முழுமையாக புசியாதவர்கள், உண்மையில் போஜனம் இல்லாததுபோல, பசியோடும் பட்டினியோடும் இருப்பார்கள். உணவுக்கான ஆசீர்வாதங்களை கேட்பது நம்மை நிரப்பாது, ஆனால் அதற்குபின் தேவனுடைய வார்த்தையில் உள்ளவைகளையும், நம்முடைய வேண்டுதலின் பலிகளும் ஆவியினால் நிரப்பப்படுவதற்கு நாம் அதில் பங்கெடுக்கவேண்டும். அதுவும் நமக்கு போதுமானது அல்ல. தேவனுடைய வார்த்தைகளிலிருந்து அவருடைய ஆவியை நாம் பெற்றுக் கொள்வதற்கு நாம் தேவனுடைய வார்த்தைகளை உட்கொள்ளவேண்டும்.

"ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது." (யோவான் 6:63 )என்று நம்முடைய ஆண்டவர் அறிவித்திருக்கிறார். மேலும் தேவனுடைய ஆவியினால் நிரப்பப்பட்ட அனைவரும் " உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட் கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமா யிருந்தது; சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது. நான் தூதனிடத்தில் போய்: அந்தச் சிறு புஸ்தகத்தை எனக்குத் தாரும் என்றேன். அதற்கு அவன்: நீ இதை வாங்கிப் புசி; இது உன் வயிற்றுக்குக் கசப்பாயிருக்கும், ஆகிலும் உன் வாய்க்கு இது தேனைப்போல மதுரமாயிருக்கும் என்றான். " (எரேமியா 15:16 வெளிப்படுத்தல் 10:9 ) என்று தீர்க்கதரிசி உண்மையாக கூறுகிறார். நம்மை நிரப்பக்கூடிய ஆவியை கொடுக்கும் சத்தியத்தின் வார்த்தைகளை நாம் புறக்கணித்து, ஆண்டவரே எங்களுக்கு உம்முடைய ஆவியை தாரும் என்று அவரிடம் ஜெபிப்பது முற்றிலும் பயனற்றதாக இருக்கும். நாம் தேவ ஆவியைப் பெறுவதற்கு வெறுமனே ஜெபித்து, அந்த சத்திய ஆவியை பெறுவதற்கு சரியான வழிமுறைகளை பயன்படுத்தவில்லை என்றால், ஆண்டவர் கொடுத்திருக்கும் சத்திய வார்த்தைகளின் வழியாக, அவரோடு தொடர்பு கொள்வதற்கான ஆதாரமாக, உள்ளார்ந்த சாட்சிக்கு பதிலாக வெளிப்புறமான அடையாளங்களை தேடிக்கொண்டு, நாம் தொடர்ந்து "கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாகவே" இருப்போம்.

### 18. நாம் எதற்காக ஜெபிக்க வேண்டும்?

### பரிசுத்த ஆவிக்காக ஜெபிக்க வேண்டும்

**R3665 [col. 1 :2]:**

ஒருவேளை அவர் நீண்ட காலம் தாமதித்தாலும், ஒருவேளை அவர் நமக்கு படிப்படியாக கொடுத்தாலும், கேட்ட உடனடியாக அதை முழுமையாக கொடுக்கா விட்டாலும், நம்முடைய பரலோக பிதா கொடுக்க விரும்பும் காரியங்களை, நிச்சயமாக நாம் பெற்றுக் கொள்ளுவோம் என்ற உறுதியோடு நாம் எதை வேண்டுமானாலும் கேட்கலாம் என்று நம்முடைய ஆண்டவர் கூறுகிறார். " பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார். "(லூக்கா 11:13) என்ற நம்முடைய ஆண்டவருடைய வார்த்தைகளை வாசிக்கலாம். பரிசுத்த ஆவி என்பது அன்பின் ஆவியாகும்-- தேவனுக்கும் மனுஷனுக்கும். தற்போதைய நிலைமைகளின் கீழ் நமக்கு இது கொடுக்கப்பட முடியாது. பழைய சுயநலம், நம்முடைய இருதயங்களில் உள்ள தவறான ஆவி நீக்கப்படும்போது, படிப்படியாக கொடுக்கப்படும்.

ஆகவே, நாம் தேவனுடைய ஆவியினால் நிரப்பப்படுவதற்கு, நம்முடைய வாழ்நாள் பயணம் முடியும் வரையில் தொடர்ந்து ஜெபிக்கவேண்டும். மேலும் இவ்வாறு ஜெபிப்பது என்றால், தினம் தினம் நாம் உழைக்கும்போது, ஆண்டவர் நம்மை தொடர்ந்து ஆசீர்வதித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியின் கனிகளை பிறப்பித்து, நம்முடைய வாழ்க்கையில் அதனுடைய சந்தோஷங்களையும், சமாதானத்தையும் ஆசீர்வாதத்தையும் கொடுப்பார் என்பதே. லூக்கா 11:13 "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்."

**E222 through E225-** பரிசுத்த ஆவிக்காக ஜெபித்தல். பாடத்தின் இறுதியில் காணலாம்.

**ஞானத்திற்காக ஜெபித்தல்.**

யாக்கோபு1:5,6 "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்."

**F686 [ 2]:**

நமக்காக தெய்வீக ஏற்பாடுகள் முன்னதாகவே ஆயத்தம் செய்யப்பட்டபின், இந்த உலகத்தின் சார்பாக நாம் எதை கேட்கமுடியும் ? ஒன்றும் இல்லை. தேவனுடைய வார்த்தையின் உறுதியளிக்கப்பட்ட மகிமை வாய்ந்த "மறுசீரமைப்பின் காலங்களில்", மனிதர்களில் ஞானமுள்ளவர்களின் இதுவரையில் சிந்தித்திராத, அனைத்து மகத்தான எதிர்பார்ப்புகளை காட்டிலும் அதிக அதிகமான காரியங்களை நிறைவேற்றும். அதற்காக நாம் தேவனுக்கு நன்றிகளை மட்டுமே செலுத்தி, அவருடைய நன்மைகளை ஏற்றுக்கொண்டு, அவரோடுக்கூட இசைந்திருக்க முயன்று, ஞானத்தை பற்றிய நம்முடைய தேவையை நாம் உணரவேண்டும். எனவே, இதற்காக நாம் தேவனுடைய ஆவியை அல்லது வல்லமையை அதாவது "உன்னதத்தின் ஞானத்தை" உதவியாக கேட்கலாம். "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனா யிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்." -( யாக்கோபு1:5) இந்த ஞானம், நாம் மற்றவர்களுக்கு உதவக்கூடிய விதமாக நம்மை நடத்தி கொள்வதற்கும், பேசுவதற்கும், செயல் படுவதற்கும் நம்மை நடத்தும். ஆகவே, இவ்வழியில் நாம் செல்லும்போது, முன்னதாகவே தேவன் குறிப்பிட்டுள்ள நல்லதொரு கோட்பாடுகளுக்கும், தாராள மனப்பான்மைக்கும் இசைவாக இணைந்து செயல் படுவதற்காக நாம் ஜெபிக்கவேண்டும். உலகத்திற்கு ஒத்திராத போதிலும், சிறப்பான இக்காரியங்களுக் காகவே நாம் ஜெபிக்கவேண்டும்.

**ஒருவருக்காக ஒருவர் ஜெபித்தல்**

1தெசலோனிக்கேயர் 5:25 சகோதரரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

யோவான் 17:20 நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும், வேண்டிக்கொள்ளுகிறேன்.

எபேசியர் 1:16.

கொலோசேயர் 4:2,3.

**அறுவடையாளர்களுக்காக ஜெபித்தல்**

மத்தேயு 9:38 .

**R2636 [col. 1 :3]:**

யூத யுகத்தின் அறுவடையின் முடிவு, சுவிசேஷ யுக அறுவடையை நிழலிட்டு காட்டுகிறது. மேலும் அப்பொழுது இருந்தது போல, இப்பொழுதும், அறுவடையின் ஆண்டவர் இயேசுவாகவும், அவருடைய சீஷர்களும், தூதுவர்களும், கூட்டிச்சேர்க்கும் வேலையின் முகவர்களாக இருக்கிறார்கள். "அறுவடையோ மிகுதி, வேலை ஆட்களோ குறைவு" என்று ஆண்டவர் அன்று சொன்னது போல இப்பொழுதும் கூறுகிறார். நாம் இந்த விஷயத்தில் அவருடைய ஆவியை பெற்று, அவருடைய வேலைக்காக நம்மை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளும் போது, அவர் அவ்வாறு செய்வதற்கு பிரியமாக இருப்பார். மேலும் பலர் நாளுக்கு நாள் இவ்வாறு ஜெபித்து, அறுவடை வேலையில் தங்கள் கைகளால் என்ன செய்ய முடியும் என்பதை செய்ய முயலுகிறார்கள். இப்படிப்பட்டவர்களின் ஊழியத்தை வழிநடத்த ஆண்டவர் கிருபையுள்ளவராக இருந்து, அவர்களின் நலனுக்காகவும், மற்றவர்களின் நலனுக்காகவும் ஆசீர்வதிக்கப்பட்ட முடிவுகளை ஆண்டவர் அவர்களுக்கு கொடுக்கிறார். அன்று சீஷர்கள் அனைவரும் இந்த ஜெபத்தை செய்து, அறுவடையின் வேலைகளில் ஒரு பகுதியானவைகளை செய்வதற்கு

வாய்ப்பு கிடைத்தது போல, இன்றும் அவருடைய உண்மையான சீஷர்கள் இந்த ஜெபத்தை ஏறெடுத்து, ஊழியத்திற்கான வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ள எதிர்ப்பார்க்கவேண்டும்.

**நம்முடைய சத்துருக்களுக்காக**

மத்தேயு 5:44 .

அப்போஸ்தலர் 7:60 .

மன்னா, மார்ச் **21:** " நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களைச் ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர் களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர் களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்." (மத்தேயு5:44)

இப்படிப்பட்டவைகளை குறித்த நம்முடைய சொந்த இருதயத்தின் உண்மையான மனநிலையை ஆய்வு செய்ய இங்கு ஒரு வழி உண்டு. நீங்கள் மகிழ்ச்சியுடன் அவர்களுக்கு தயவு காட்டி, அவர்களுடைய வழியில் இருக்கும் தவறுகளை காண்பதற்கும் அதை மேற்கொள்வதற்கும், உங்கள் திறனைப் பயன்படுத்தி உதவுவீர்களா? அவர்களுக்காக மென்மையாக ஜெபிப்பீர்களா? அவர்களின் பலவீனங்களையும், அவர்களின் அறியாமைகளையும், வளர்ச்சி குறைவுகளையும் பொறுமையோடு சகிப்பீர்களா? இன்னும் சிறப்பாக வழிக்காட்டுவதற்கும் ஒரு உன்னதமான மாதிரியாக இருக்க முயற்சிக்க முடியுமா ? அப்படியானால், நீங்கள் பாவியை அல்ல பாவத்தை இகழக்கூடியவர்களாக இருப்பீர்கள். என்றுமே, நீங்கள் பாவியை அல்ல பாவத்தை வெறுக்கக்கூடியவர்களாக இருக்கவேண்டும். பாவமும் அதை செய்த பாவியும் இனி பிரிக்கமுடியாத அளவுக்கு இணைந்திருக்கிறார்கள் என்று தேவனுடைய தவறிழைக்காத நியாயத்தீர்ப்பு அறிவிக்கப்படும் வரையில், உங்கள் அன்பு அந்த சகோதரர் மீது தொடர்ந்து பற்றிக்கொண்டிருக்கட்டும்.

"எல்லா மனுஷருக்கும், இராஜாக்களுக்கும், அதிகாரத்துக்குள்ளானவர்களுக்கும்" ஜெபித்தல்

I தீமோத்தேயு2:1,2 .

**R3600 [col. 1:4 to end of answer]—** பூமிக்குரிய ஆளுனர்களுக்காக ஜெயுங்கள்.

கேள்வி - நாம் எல்லாத் தெய்வபக்தியிலும், நேர்மையிலும் சமாதானமான வாழ்க்கையை அமைதியுடன் வாழ்வதற்கு, "இராஜாக்களுக்காகவும், அதிகாரத்தில் உள்ளவர்களுக்காகவும்" ஜெபங்களையும் வேண்டுதல்களையும் செய்வது ஏற்புடையது என்ற அப்போஸ்தலரின் வெளிப்பாட்டை (I தீமோத்தேயு2:1-4) நாம் எவ்வாறு புரிந்துக்கொள்ள வேண்டும்?

பதில் -- இந்த உலகம் முழுவதிலும் உள்ள, பெரிய மற்றும் ஏழ்மையானவர்களின் நலன்களில் நாம் ஆர்வம் காட்டவேண்டும். நம்முடைய மாம்சத்தை பொருத்தவரை அவர்கள் நம்முடைய சகோதரர்கள் மற்றும் அயலகத்தார்களாக இருப்பதினாலும், தேவன் அவர்களை நேசித்து, அவர்கள் மீது இரக்கம் கொண்டு, அவருடைய இரத்தத்தினால் அவர்களை இரட்சித்து, அவர்களது மறுசீரமைப்பிற்காக ஒரு இரக்கமுள்ள ஏற்பாட்டை செய்திருப்பதினாலும், நாம் அவர்கள் மீது அக்கரைக்கொண்டிருக்கவேண்டும். நாம் நம்முடைய கர்த்தருடன் ஒத்துப்போகும் விகிதத்தில், அவருடைய கிருபையான திட்டத்தின் எல்லா அம்சங்களிலும் இணக்கமாக இருக்கவேண்டும். மேலும், இது மனுக்குலத்தின் மீதுள்ள அன்பையும், ".. நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்வதே...." - கலாத்தியர் 6:10 இதன் பொருளாகும்.

உலகிற்காக இத்தகைய உணர்வையும், அவர்கள் மீது அக்கறைக்கொண்ட மனதுள்ளவர்களாகவும், "உம்முடைய இராஜ்யம் வருக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படுவதாக" என்று ஜெபிப்பது பொருத்தமாக இருக்கும். உண்மையில் மனுக்குலத்தின் நலன்களைக் கொண்டிருக்கும் எந்தவொரு காரியமும், அன்பின் பரிசுத்த ஆவியை பெற்றவர்களின் இருதயங்களுக்கு நெருங்கி இருக்கும். ஆகவே, அதிகாரத்தில் உள்ளவர்கள் கெட்ட சூழ்நிலைகளில், தவறான வழியில் விரைந்து, சென்று நிச்சயமாக காயப்படுவார்கள் என்று அறிந்தபோதிலும், நாம் நீதியின் வழியில் நடத்தப்படவும், அவர்களின் நலன்களின் நம்முடைய நல்ல விருப்பங்களை குறிப்பிடும்படிக்கும், சரியான தருணங்களில் அவர்களுக்காக ஜெபிப்பது பொருத்தமாக இருக்கும்.

எல்லா நேரத்திலும், தேவனுடைய ஜனங்களின் இருதயங்களை தேவ சமாதானம் ஆண்டு கொள்ளும்படி யாகவும், இந்த உலகின் அராஜகவாத அல்லது வெறுப்புணர்ச்சியையும், குருடர்களின் குருட்டுத் தலைவர்களிடமும் பயப்படாதபடிக்கு, நாம் சமாதானத்தோடும், அமைதியான வாழ்க்கை

வாழவேண்டும் என்ற நோக்கத்துடன், இந்த ஜெபங்களை ஆட்சியாளர்களுக்காக ஏறெடுக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். எனவே, நம்மால் முடிந்தளவு அவர்களை பற்றி நல்ல விஷயங்களைச் சொல்ல முடியாத போதிலும், நம்முடைய மனசாட்சிக்கு விரோதமாக அவர்களோடு ஒத்துழைக்க முடியாமல் போனாலும், குறைந்தபட்சம் அவர்களுக்காக ஜெபித்து, நாம் எந்த ஒரு மனுஷனைப் பற்றி தீமை பேசுவதில்லை என்று உறுதிக்கொள்ளலாம்.

"நான் உலகத்திற்காக வேண்டிக்கொள்ளாமல்,." என்று யோவான் 17ல், நம்முடைய ஆண்டவரின் ஜெபத்தில் பதிவு செய்யப்பட்ட இந்த வார்த்தைகளை அப்போஸ்தலருடைய வார்த்தைகளுக்கு முரண்பாடாக புரிந்துக்கொள்ளக்கூடாது. மாறாக, "நான் இப்போது இந்த உலகத்திற்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்கு தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்கிறேன்." என்ற அர்த்தத்தை நாம் சரியாக புரிந்துக்கொள்ள வேண்டும்.

ஆண்டவர் நமக்கு கட்டளையிட்டவைகளுக்கு ஏதோ எதிரானதற்காக நாம் ஜெபிக்கவேண்டும் என்று அப்போஸ்தலர் பொருள்படுத்தினார் என்று நாம் புரிந்துக்கொள்ளவும் கூடாது, உபத்திரவ காலம் அவசியமில்லாமல், அது வராதபடிக்கும், இராஜாக்களும், ஆட்சியாளர்களும், தேசங்களும், மனம் மாறவேண்டும் என்று எதிர்பார்த்து ஜெபிக்கவும் கூடாது. இதற்கு எதிராக, இனி நடக்கபோகிற யுகத்தின் மாற்றத்திற்கு ஏற்றவாறு, இந்த உலகின் மனநிலை சரியானதாக இல்லாததினால், உபத்திரவ காலம் வரும் என்பதை நாம் புரிந்துக்கொள்ளவேண்டும். புதிய ஒழுங்கு முறைகளுக்காக ஆயத்தமாகும்படிக்கு இந்த உலகம் "இரத்தம்", "அக்கினி", "கோபாக்கினை" போன்ற ஸ்நானங்களின் வழியாக கடக்கவேண்டியதாக உள்ளது. ஆகவே, இவைகள் வருங்காலத்திற்கு அநேக ஆசீர்வாதங்களாக இருக்கும். எழுதப்பட்டவைகளுக்கு முழு இசைவாக நம்முடைய ஜெபங்கள் இருக்க வேண்டும், ஆனால் அனைவருக்கான நல்ல விருப்பங்களை இது நம்மை தடை செய்யாது. மேலும், இந்த உலகின் அதிபதியினால் அவர்கள் குருடாக்கப் பட்டிருப்பதினால், அநேகர் மூர்க்கத்தனமாக இருப்பதை எண்ணி அவர்கள் மேல் அனுதாபமுள்ளவர்களாக இருக்கிறோம்.

**ஜெபத்திற்காக விசேஷித்த சந்தர்ப்பங்கள்**

**R2006 [col. 1:2-7]-** "நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை" (யாக்கோபு **4:2**)

கிறிஸ்துவுக்குள்ளும், அவருடைய வார்த்தை களுக்குள்ளும் நிலைத்திருப்பவர்கள், அவரிடம் கேட்பதற்கும், தேடுவதற்கும், கண்டுபிடிப்பதற்கும், அவர்களுக்காக தனித்து வைக்கப்பட்டிருக்கும் அவருடைய தெய்வீக கிருபையின் மிகப்பெரிய பங்கை தாங்கள் பயன்படுத்திக்கொள்ளாததே, பலரிடம் உள்ள பிரச்சனையாக இருக்கிறது. எல்லா ஜெபங்களும் சுயநலமாக இருக்கக்கூடும் என்று ஒருவரும் எண்ணிவிடக்கூடாது. இதற்கு நேர்மாறாக, தேவனுடைய வார்த்தை மற்றும் அவருடைய சித்தத்திற்கு முழு இசைவாக, ஜெபத்திற்கான சுதந்திரம் பரந்தளவில் உள்ளது.

விசுவாசம் மற்றும் பொறுமையின் ஒவ்வொரு சோதனையும், ஜெபத்திற்கான தருணம். வெற்றி பெறுவதற்காக அடையும் ஒவ்வொரு தோல்வியும், மன்னிப்புக்காகவும், நம்முடைய சொந்த பலவீனத்தின் படிப்பினை ஆழமாக புரிந்துக்கொள்ளப்பட்டதால், தெய்வீக ஆசீர்வாதங்களுக்காக ஜெபிக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பமாகும். எனவே இதே போன்ற அடுத்த சோதனையில் நாம் உடனடியாக விண்ணப்பிக்கவும், வாக்குறுதியளிக்கப்பட்ட "கிருபாசனத்தை" பற்றி கொள்ளலாம். நாம் நம்மையே உயர்த்திக் கொள்ளாத படிக்கும், மேட்டிமை அடையாதபடிக்கும், தாழ்மைப்பட்டு, மிகப்பெரிய எதிராளியாகிய சாத்தானுடைய அடுத்த தாக்குதல்களுக்கு கவனத்தோடு இருக்கும்படியாக, நம்முடைய சுயத்தின் மீது நாம் அடையக்கூடிய ஒவ்வொரு வெற்றியும், ஜெபத்திற்கான சந்தர்ப்பமாக உள்ளது. சத்தியத்திற்காக நாம் செய்யக்கூடிய ஒவ்வொரு ஊழியமும், மகா இராஜாவை சேவிக்கக்கூடிய வாய்ப்புக்காக நன்றிகளை ஏறெடுக்கும் ஜெபத்திற்கான சந்தர்ப்பமாக உள்ளது. மேலும் அவருக்காக ஏதாவது பாடுகளை அனுபவிப்பதற்கும், இன்னும் அவருடைய பணியில் வாய்ப்புகளை பெறுவதற்கும், அவைகளை ஞானமாக பயன்படுத்திக்கொள்வதற்கு கிருபையையும் விண்ணப்பிக்கலாம்.

நீங்கள் ஜெயிக்கத்தக்கதான சோதனை களையும், பரீட்சைகளையும் பெற்றிருந்தால், மேலும் அவைகள் நற்குணங்களாகிய பொறுமை, அனுபவம், சகோதர சிநேகம், இரக்கம், மற்றும் அன்பு

போன்றவைகள் உங்களுக்குள் வளர்ச்சி அடைந்தால், தெய்வீக இரக்கத்தையும் உதவியையும் பெற்றதை ஒப்புக்கொண்டு, மகிழ்ச்சியுடன் நன்றியறிதலான ஜெபங்களை ஏறெடுங்கள். தாங்க முடியாத அளவுக்கு உங்கள் சோதனை பாரமாகவும், உங்களை நொருக்கி போடும் அளவுக்கு வேதனையாகவும் இருந்தால், உங்கள் பிரச்சனையை பாரம் சுமப்பவரிடம் கொண்டு செல்லுங்கள். இதை சுமப்பதற்கு உதவியாக, உங்களுக்கு நன்மை செய்யக்கூடிய எந்த காரியத்தையும் கேளுங்கள். உங்களுக்கு நன்மை செய்யாத மற்றும் உங்களை காயப்படுத்தக்கூடிய எல்லாவற்றிலுமிருந்து உங்களை விடுவிக்கும்படி ஜெபியுங்கள். கர்த்தருடைய கட்டளைக்கும் "சபை கூடிவருதலை விட்டுவிடாதீர்கள்" என்பதற்கும் கீழ்ப்படிய வேண்டும் என்கிற வாஞ்சை தங்கள் இருதயத்தில் நிறைந்திருந்தும் - தாங்கள் ஜெயங்கொள்ள முயன்றும் முடியாது போன ஒரு வழியில் தாங்கள் நியாயமற்ற முறையில் தடையுற்றிருந்தால், இந்த விஷயத்தை ஜெபத்தில் கர்த்தரிடம் எடுத்துச் செல்லுங்கள், தங்கள் ஜெபத்தின்படி கவனித்து காத்திருந்து பிரயாசப்படுங்கள், நிச்சயமாக தங்கள் சார்பாக தெய்வீக வல்லமையின் வெளிப்பாட்டை தாங்கள் விரைவில் காண்பீர்கள்.

ஒரு உண்மையான சகோதரன், ஒரு போர் சேவகன் தடுமாறிக்கொண்டு ஆபத்திலிருப்பதை நீங்கள் கண்டால், அவரை விடுவிப்பதற்கு உடனடியாக நீங்கள் ஓடுவதோடு கூட, அவரை மீண்டும் புதுபிக்கும் வரையில் அல்லது முழுமையாக அவர் நெருக்கமான பாதையில் முழு விருப்பத்தோடு பயணிக்கும் வரையில், அவருக்காக இடைவிடாமல் கிருபாசனத்தண்டைக்கு சென்று ஜெபிக்கும் அளவுக்கும் உங்கள் இருதயம் முழுமையான அன்பினால் பெருகக்கடவது. தவறு தங்களுடையதாக இருக்குமாயின், தங்கள் ஜெபங்களும் முயற்சிகளும் நிச்சயமாக தங்கள் சொந்த ஆதாயத்திற்காக ஆசீர்வதிக்கப்பட்டு நீக்கப்படும். மிகுந்த மகிழ்ச்சியை கொடுக்கும் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்கு உங்களிடம் எந்த விதமான பக்தியும் உங்களிடம் இல்லை என்றால், அதற்காக விசுவாசத்தோடும், ஆர்வத்தோடும் விடாமுயற்சியோடும் ஜெபியுங்கள். விரைவில் நீங்கள் அதைப் பெறுவீர்கள். சுவிசேஷத்திற்காக நீங்கள் பக்தி வைராக்கியமும் அன்பையும் கொண்டிருந்தாலும், அதை வெளிக்காட்ட திறமை இல்லாதவர்களாக இருந்தால், நீங்கள் பெற்றிருப்பதை முழுமையாக பயன்படுத்திக்கொண்டு, அந்த திறனுக்காக ஜெபியுங்கள். உங்களுக்கு வைராக்கியமும், திறமையும் இருந்தபோதிலும், வாய்ப்புகள் இல்லை என்றால், உடனடியாக அதற்காக ஆண்டவரிடத்திற்கு ஜெபியுங்கள். உங்களுக்கு கிடைத்த எல்லா வாய்ப்புகளையும் நீங்கள் உண்மையாக பயன்படுத்துகிறீர்கள் என்று அவரிடம் சொல்லுங்கள். அதற்குபின், உங்கள் கரங்களை மடக்கி கொள்ளாமல், நீங்கள் எட்டிபிடிக்கும் அளவுக்கு உள்ள குறைவான மற்றும் மிகச் சிறிய வாய்ப்புகளையும் கூட, அதிகமாக கவனித்து பயன்படுத்துங்கள்.

உங்கள் வீட்டிற்கும், குடும்பத்திற்கும், மற்றும் தேவனுடைய விசுவாச வீட்டில் உள்ள சகோதரர்களுக்கும், உங்களுடைய சண்டை போடும் மனப்பான்மை, அல்லது தவறான பழக்கங்கள் பாரமாக இருக்கிறதாக நீங்கள் உணருகிறீர்களா? இதை ஆண்டவரிடம் ஜெபத்தில் எடுத்துச் செல்லுங்கள், அவைகளை ஜெயிப்பதற்கு கிருபையையும், உதவியையும் கேளுங்கள், இதற்கு இடையில் உங்கள் ஜெபத்திற்கிணங்க உங்கள் சிறப்பான விடாமுயற்சி யையும் பயன்படுத்துங்கள்.

தேவனுக்கும் சத்தியத்திற்கும் ஊழியம் செய்வதற்கான உங்கள் முயற்சிகள் பொதுவாக தோல்வி அடையும் அளவுக்கு நீங்கள் ஞானத்தில் குறைவுள்ளவர்களா? "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக் கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்." (யாக்கோபு1:5) என்ற வாக்குத்தத்தத்தை நினைவுக் கூர்ந்தவர்களாக, ஆண்டவரிடம் ஜெபியுங்கள்.

உங்களது தவறான நியாயத்தீர்ப்பு அல்லது மற்றவர்களின் நேர்மையற்ற தன்மை அல்லது ஏழைகளிடம் நீங்கள் காட்டின தாராள குணம் போன்றவைகளினால் உங்கள் தொழிலில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதா ? இவைகள் உங்களை குழப்பமடையச் செய்து, ஆவிக்குரிய விஷயங்களில் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கிறதா? மேலும் இவைகள் புதுசிருஷ்டியின் பொதுநலனை அச்சுறுத்துகிறதா ? ஆண்டவருடைய கிருபாசனத்தண்டையில் முன் வைப்பதற்கு இது சரியான விஷயமாகும். உங்களுடைய விடுதலை எவ்வாறு வரவேண்டும் என்று நீங்கள்

ஆணையிட முயற்சிப்பது சரியானதாக இல்லாவிட்டாலும், உங்கள் புத்திசாலித்தனமான முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேற்ற ஆண்டவர் ஒரு அதிசயத்தை செய்யவேண்டும் என்று எதிர்ப்பார்க்கவும் கூடாது. ஆயினும், உங்கள் ஞானத்தால் செய்ய முடிந்ததை காட்டிலும், உங்களுக்கு வழிகாட்டு வதற்கும், முடிவுகளை மேற்கொள்வதற்கும் அவருடைய ஞானத்தை நீங்கள் கேட்கலாம்.

இங்கு பரந்த அளவிலான பாடங்கள் உள்ளது (அது பரவலாக விரிவாக்கப்படலாம்), அதன் அடிப்படையில் நாம் இயேசுவின் நாமத்தினால் தைரியமாக கிருபாசனத்தண்டைக்கு சென்று தேவனுடைய போதுமான கிருபையை கேட்டு பெற்றுக்கொள்ளலாம், தேடி கண்டுபிடிக்கலாம். ஆனால் ஜெபத்தில் நாம் தேவனானவரை அணுக முடியாமல் போகக்கூடிய பாடங்களின் அளவும் பெரியளவில் உள்ளது. பெருமை அல்லது சுயநலம் அல்லது லட்சியத்திற்கு ஊழியம் செய்யும்படியாக நாம் எதையும் கேட்கக்கூடாது. அல்லது மற்றவரை காயப்படுத்தும் எதையும் நாங்கள் கேட்கக்கூடாது அல்லது அவருடைய வார்த்தையின் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய திட்டத்திற்கு முரண்படும் எதையும் நாம் கேட்கக்கூடாது. ஆஹா! எத்தனை பேர், தங்களுடைய பூமிக்குரிய விருப்பங்களின் மேலுள்ள பற்றினால், "விண்ணப்பம் பண்ணியும்..... தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிற படியினால், பெற்றுக் கொள்ளாமலிருக்கிறார்கள்."

மன்னா ஜூன் 25 தொடர்ந்து ஜெபித்து, நன்றியுணர்வோடு விழித்திருங்கள். கொலோசேயர் 4:2 விசுவாசம் மற்றும் பொறுமையின் ஒவ்வொரு சோதனையும், உதவி அளிக்கும் வாக்குத்தத்தங் களுக்காக ஜெபம் செய்வதற்கான ஒரு சந்தர்ப்பமாகும். வெற்றி பெறுவதற்கான ஒவ்வொரு தோல்வியும், மன்னிப்பைப் பெறுவதற்காக ஜெபிக்கும் ஒரு சந்தர்ப்பமாகும். மேலும் நம்முடைய சொந்த பலவீனத்தின் படிப்பினை ஆழமாக புரிந்துக்கொள்ளப் பட்டதால், இதேபோன்ற அடுத்த சோதனையில் நாம் உடனடியாக விண்ணப்பிக்கவும், வாக்குறுதியளிக்கப் பட்ட "கிருபாசனத்தை" பற்றி கொள்ளக்கூடிய தெய்வீக ஆசீர்வாதங்களுக்காக ஜெபிக்கக்கூடிய ஒரு சந்தர்ப்ப மாகும். நாம் நம்மையே உயர்த்திக்கொள்ளாதபடிக்கும், மேட்டிமை அடையாத படிக்கும், தாழ்மைப்பட்டு, மிக பெரிய எதிராளியாகிய சாத்தானுடைய அடுத்த தாக்குதல்களுக்கு கவனத்தோடு இருக்கும்படியாக, நம்முடைய சுயத்தின் மீது நாம் அடையக்கூடிய ஒவ்வொரு வெற்றியும், ஜெபத்திற்கான சந்தர்ப்பமாக உள்ளது. சத்தியத்திற்காக நாம் செய்யக்கூடிய ஒவ்வொரு ஊழியமும், மகா இராஜாவை சேவிக்கக்கூடிய வாய்ப்புக்காக நன்றிகளை ஏறெடுக்கும் ஜெபத்திற்கான சந்தர்ப்பமாக உள்ளது. மேலும் அவருக்காக ஏதாவது பாடுகளை அனுபவிப்பதற்கும், இன்னும் அவருடைய பணியில் வாய்ப்புகளை பெறுவதற்கும், அவைகளை ஞானமாக பயன்படுத்திக்கொள்வதற்கு கிருபையையும் விண்ணப்பிக்கலாம்.

### 19. நாம் எதற்காக ஜெபிக்கக் கூடாது?

1யோவான் 5:16:மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால், அவன் வேண்டுதல் செய்யக்கடவன், அப்பொழுது மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு, அதைக்குறித்து வேண்டுதல் செய்ய நான் சொல்லேன்.

**R2612 [col. 1 :5]:**

இரண்டாம் மரணத்திற்கான பாவத்திற்காக மன்னிப்பை கேட்பது பயனற்றது என்று அப்போஸ்தலர் கூறுகிறார். (1யோவான் 5:16) இது மனப்பூர்வமான செய்த பாவம் மட்டுமல்ல, தெளிவான அறிவுக்கு எதிரான பாவமாகும். இந்த பாவத்தை மன்னிப்பதற்கு எந்த ஒரு காரணமும் இல்லை. ஏனெனில், இந்த பாவம் தெளிவான அறிவுக்கு அல்லது பரிசுத்தத்தின் அறிவொளிக்கு எதிரான பாவமாக இருக்கிறபடியால், இது "பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம்" என்று அழைக்கப்படுகிறது. (மத்தேயு12:31,32) இதற்கு மன்னிபே இல்லை.

**R2006 [col. 2 :1]:**

இங்கு பரந்த அளவிலான பாடங்கள் உள்ளது (அது பரவலாக விரிவாக்கப்படலாம்), அதன் அடிப்படையில் நாம் இயேசுவின் நாமத்தினால் தைரியமாக கிருபாசனத்தண்டைக்கு சென்று தேவனுடைய போதுமான கிருபையை கேட்டு பெற்றுக்கொள்ளலாம், தேடி கண்டுபிடிக்கலாம். ஆனால் ஜெபத்தில் நாம் தேவனானவரை அணுக முடியாமல் போகக்கூடிய பாடங்களின் அளவும் பெரியளவில் உள்ளது. பெருமை அல்லது சுயநலம் அல்லது லட்சியத்திற்கு ஊழியம் செய்யும்படியாக நாம் எதையும் கேட்கக்கூடாது. அல்லது மற்றவரை காயப்படுத்தும் எதையும் நாங்கள் கேட்கக்கூடாது அல்லது அவருடைய வார்த்தையின் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய திட்டத்திற்கு

முரண்படும் எதையும் நாம் கேட்கக்கூடாது. ஆஹா! எத்தனை பேர், தங்களுடைய பூமிக்குரிய விருப்பங்களின் மேலுள்ள பற்றினால், "விண்ணப்பம் பண்ணியும்..... தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிற படியினால், பெற்றுக் கொள்ளாமலிருக்கிறார்கள்."

**R3665 [col. 1 :1]:**

எந்த ஒரு "புது சிருஷ்டிக்கும்" தற்காலிகமான ஆசீர்வாதங்களுக்காக விண்ணப்பிப்பது பாதுகாப்பற்றதாக இருக்கும். "இவைகளை எல்லாம் அஞ்ஞானிகள் நாடி தேடுகிறார்கள்" (மத்தேயு 6:32) ஏனெனில் அவர்கள் உயர்ந்த மற்றும் சிறந்த ஆவிக்குரிய விஷயங்களை அறியாததினால் இப்படிப்பட்ட காரியங்களை தேடுகிறார்கள். ஆவிக்குரிய உடைகள், ஆவிக்குரிய உணவு, பரலோக ஐசுவரியங்கள் ஆகியவற்றைப் பாராட்டும்படிக்கு தேவன் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களை அறிவுறுத்துகிறார். அவைகளை பூச்சும், துருவும் அழிக்க முடியாததினால், அவைகளை தேடும்படி வலியுத்துகிறார்.

**20. ஜெபம்பாவிகள் மனமாற்றத்திற்காக ஜெபிப்பது சரியானதா?**

**R2252 [col. 2 last of top and 1]:**

பொது ஜெபங்களை ஏறெடுக்கும் சிலர், சர்வல்லவரைவிட அதிகதிகமான ஞானம் உள்ளவர்களாக ஜெபிப்பதை நாம் கேட்டிருக்கிறோம். ஏனென்றால், வீட்டிலும், வெளியிலும், இந்த உலகம் முழுவதிலும், எப்படி, எப்போது, எங்கே என்ன செய்யவேண்டும் என்பதை சர்வவல்லமையுள்ளவரிடம் சொல்ல அவர் மேற்கொள்கிறார். -- அவர் ஜெபம் செய்த கூட்டத்தில் எத்தனை பேர் மாற்றப்பட வேண்டும் என்பதையும், உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு புறஜாதியினரும் எவ்வாறு கையாளப்படவேண்டும் என்பதையும் எடுத்துரைக்கிறார்.

இவை அனைத்தும் கொடூரமான தவறாகும். முதலில் தன்னுடைய சொந்த அறியாமை மற்றும் ஞானமின்மை பற்றியும், தேவனுடைய எல்லையற்ற உயர்ந்த அறிவு, ஞானம் வல்லமை மற்றும் அன்பு ஆகியவற்றைப் பற்றியும் கற்றுக்கொள்ளாத எந்த மனுஷனும் தேவனிடத்தில் அணுகுவதற்கு ஏற்ற இருதய நிலையைப் பெறாதிருக்கிறான்.பரலோக வழிக்குரிய அறிவிலும் அனுபவத்திலும் முன்னேறிய கிறிஸ்தவர் இதற்கு மாறாக அல்லது எதிராக இருக்கிறார். இவர் தன்னுடைய சொந்த அறியாமையிலும், குறைபாடுகளிலும் நிறைந்திருப்பதை உணர்ந்தவராக, தேவனே உம்முடைய சித்தத்தை எங்களுக்கு கற்பியும், கிறிஸ்தவ மண்டலத்திற்கும் புறஜாதிகளுக்கும் உள்ள இரட்சிப்பின் திட்டத்தையும் உம்முடைய வழிகளையும் எங்களுக்கு காண்பியும் மேலும் உம்முடைய மகத்தான, அற்புதமான, ஞானமான, நல்ல நோக்கங்களை நிறைவேற்றுவதில் நான் உம்முடன் ஒரு சக ஊழியனாக எவ்வாறு பணியாற்றவேண்டும் என்று தேவனிடத்தில் ஜெபிப்பார். உண்மையில், கிறிஸ்தவரின் அனுபவம் வளரும்போது, பிரதானமாக ஏற்கனவே அவர் பெற்ற இரக்கங்கள் மற்றும் கிருபைகளுக்காகவும், தேவனுடைய விருப்பம் மற்றும் தற்காலிகமானதும், ஆவிக்குரியதற்கான அவருடைய வார்த்தையின் கருணைமிக்க வாக்குறுதிகளை நிறைவேற்று வதற்கான திறனின் மேல் நம்பிக்கையை வெளிப்படுத்து வதற்காகவும், மற்றும் தெய்வீக சித்தம் மட்டுமே செய்யப்பட வேண்டும் என்றே தேவனிடத்தில் ஜெபங்களை ஏறெடுப்பதற்கான இருதய நிலையை மேலும் மேலும் பெற்றிருப்பார்.

**R3354 [col. 1 :2]:**

கேட்டல், தேடல், தட்டுதல் ஆகியவற்றை நாம் தனியாக செய்யவேண்டும். நாம் தேவனிடத்தில் இராஜ்யத்தில் ஒரு பங்கை கேட்கலாம், அதற்காக நாம் உழைக்கலாம், நம்முடைய உழைப்பை ஆசீர்வதிக்கும் படியாக ஜெபிக்கலாம், ஆனால் நாம் தெய்வீக ஏற்பாட்டை இயக்கவோ, இராஜ்யத்தோடு தொடர்புடைய காரியங்களில், மற்றவர்களுக்கு சிறப்பு உதவிகளை கேட்க முயற்சிக்கக்கூடாது. ஏனென்றால், ஒருவர் நமக்கு சொந்தக்காரரும், மாம்சத்தின்படி மிக நெருக்கமானவர்களாக இருக்கலாம், ஆனால் அப்படிப்பட்டவர்களை மணவாட்டியின் அங்கத்தின் ஒருவராக கட்டாயமாக தேர்வு செய்யவேண்டும் என்று நாம் தேவனிடம் முடிவை சொல்வதற்கு எந்த காரணமும் இல்லை. இதற்கு மாறாக, இப்படிப்பட்டவர்களும் நாம் தேவனுடைய வார்த்தையை பிரசங்கித்து, தேவனுடைய இரக்கத்தையும், நன்மையையும், இராஜ்யத்தைக் குறித்தும், அதனுடைய ஆசீர்வாதங்களைப் பற்றி கூறி, தேவனிடத்தில் தங்களை அர்ப்பணிப்பதற்கு அவரை ஊக்குவிக்க வேண்டும். மேலும் அர்ப்பணிப்புக்கு தொடர்பான காரியங்களில், தேவனுடைய ஆசீர்வதிக்கப்பட்ட கிருபைகளுக்குள் பிரவேசிக்கும்படியாக, அவைகளை சுயமாகவே கேட்கவும், தேடவும், பெற்றுக்கொள்வதற்கும் அவர்களை துரிதப்படுத்த வேண்டும்.

## 21. சுயநலமான ஜெபங்களின் கட்டணம் என்ன?

**R3061 [col. 1:2-4]:**

சில நேரங்களில்ஆவிக்குரிய இஸ்ரலேர்களுடனும் இதே போன்ற காரியங்கள் நடக்கிறதல்லவா? சிலர் ஆவிக்குரிய மன்னாவை திருப்தியாக புசித்த பிறகும், பூமிக்குரிய பெரிதும், மாம்சமான நன்மைக்காக தேவனுடனான அவர்களின் ஐக்கியத்தை தடைச்செய்யக்கூடிய வாஞ்சையுள்ள ஆவியாகிய சுயநலத்தை அனுமதிக்கிறார்களே. நம்முடைய தலைவருமாகிய ஆண்டவருடைய ஞானத்தைப் பெறுவதற்கும், இதுவரை நம்மை விடுவித்து, உணவளித்து, வழிநடத்திய அவருடைய அன்பு, இன்னும் ஞானமாகவும் நித்தியத்திற்கு நன்மையாகவும் இருக்கிறது அல்லவா,

சில நேரங்களில் நம்முடைய வாழ்க்கையில் அதிகபட்சமான மறுசீரமைப்பை கொண்டுவரும், அதாவது நம் வசம் இருப்பதை விட, அதிக வசதி, சுகம், செல்வம் மற்றும் சமூக செல்வாக்கிற்கான ஆசை. சிலநேரங்களில் அது தவிர்க்கக்கூடிய சிருஷ்டியின் வலி மற்றும் வேதனைகளின் நமது பங்கிற்கும் மேலும் இவைகளை அகற்றுவதற்கான நம்முடைய இயலாமைக்கும் எதிராக உள்ளது. சில நேரங்களில் அது நோய்களுக்கும், நேசிப்பவரின்மரணத்திற்கும்எதிராகஉள்ளது.

எவ்வளவு விவேகமற்ற காரியம்! ஆவிக்குரிய இஸ்ரயேலின் அனைத்து விவகாரங்களும் தேவனுடைய பராமரிப்பு மற்றும் மேற்பார்வையின் கீழ் இருப்பதை, ஆவிக்குரிய மன்னாவினால் போஷிக்கப்பட்டவர்கள் உணரவேண்டாமோ?" அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்." (புலம்பல், எபிரெயர் 12:10) ஆஹா! முணுமுணுப்பவர்களின் ஜெபங்கள், பதிலளிக்கப்படும் போது கூட (இஸ்ரயேலை போல) சில சமயங்களில் எதிர்பாராத பின்னேற்றத்தை கொண்டு வருவதாக சிலர் கண்டறிந்துள்ளனர் - அதாவது சுயநலமான ஜெபங்களுக்கு அதிக செலவுள்ளது. சிலர் செல்வத்தைப் பெற்றிருக்கிறார்கள், சத்தியத்தையும் அதன் ஊழியத்தையும் இழந்துவிட்டார்கள். ஒருசிலர் ஆஸ்தியைச் சேர்த்து, இதனிமித்தம் தேவ ஊழியத்தையும் சத்தியத்தையும் இழந்துவிடுகின்றனர், சிலர் சரீர பெலனைப் பெற்று அதனிமித்தமாகக் கடினமான பல சோதனைகளை அடைகின்றனர், சிலர் தாங்கள் நேசிப்போரை மரணத்தின் பிடியிலிருந்து மீட்டுக்கொண்டாலும் அவர்களது ஜெபத்திற்கு தேவன் பதிலளிக்கவில்லை எனப்தைப் பிற்பாடு உணர்ந்து கொண்டனர்.

அவர்கள் கர்த்தரை மறைமுகமாக நம்பவேண்டும் மற்றும் அவர்கள் பெற்றிருந்த அனைத்தையும் ஏற்றுக்கொண்டு, பயன்படுத்தி, சுற்றுப்புறங்கள் வழங்கும் அனைத்தையும் புத்திசாலித்தனமாகவும், முடிந்தவரை முழுமையாகவும் பயன்படுத்தவேண்டும் என்பதே இஸ்ரயேலுக்கான ஒரு பாடமாக இருந்தது - எல்லாவற்றையும் தேவனுடைய பரிசுகளாக இயற்கையாகவும், அதிசயமாகவும் ஏற்றுக்கொள்வது. அங்கு அவர்கள் திருப்தியோடும் நன்றியோடும் மகிழ்ச்சியாக இருந்திருக்கவேண்டும். அதேபோல ஆவிக்குரிய இஸ்ரயேலரும், அவர்கள் வசம் இருப்பதை ஞானமாக பயன்படுத்தவேண்டும் - தேவனுடைய பரிசுகள் அனைத்தையும் நன்றியோடு ஏற்றுகொள்ளவேண்டும். ஆனால் அவர்களின் விண்ணப்பம் நீடிய பொறுமை மற்றும் இருதயத்தின் நிறைவை, உள்ளடக்கிய ஆவிக்குரிய வரங்களுக் காகவே இருக்கவேண்டும்.

## 22. ஜெபத்தில் வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள் என்பதற்கான பொருள் என்ன?

**R2252 [col. 1 :4]:**

"அன்றியும் நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்." சிருஷ்டிகரை அணுகுவதில், மனுஷனின் மனதின் இயல்பான போக்கில், அதன் வெளிப்பாடு மிகவும் எளிமையுள்ளதாக இருக்கிறபடியால், சொன்ன காரியங்களை மீண்டும் மீண்டும் கூறி, இதை சரி செய்ய முயற்சிக்கிறது. இவ்வாறு ஜெபிப்பவர்கள் மீண்டும் மீண்டும் நினைவில் வைத்துக் கொள்ள முடியாத நீண்ட ஜெபங்களையும், அவர்களுடைய விருப்பத்தையும், சித்தத்தையும் அடையாளப்படுத்தும்படியாக, சீனர்களிடம் "ஜெப சக்கரங்கள்" உள்ளது. இதே கோட்பாட்டை ரோம கத்தோலிக்கர்களிடமும் பயன்படுத்தப்படுகிறது. அவர்கள் ஒரே ஜெபத்தை நூற்றுக்கணக்கான தடவைகள் மீண்டும் மீண்டுமாக உச்சரிக்கிறார்கள். மேலும் இந்த ஜெபங்களை "குறிப்பிட்ட" எண்ணிக்கையிலான முறைகள் "சொல்லுவதற்கு" சில சிறப்பு வெகுமதிகளை அவர்கள் பாதிரியார்கள் வாக்களிக்கிறார்கள் - பல நாட்கள் அல்லது வருடங்கள், உத்தரிக்கும் துன்பங்களிலிருந்து நீக்கப்படுதல். இதே போன்ற தாக்கங்கள் புரோட்டஸ்டன்ட்டுகள் மீதும்

குறைவாக செயல்படுவதாகத் தெரிகிறது. இவைகள் பெரும்பாலும் நீண்ட ஜெபங்களுக்கும், சர்வல்லமையுள்ள வருடைய போதனைகளைப் பற்றி தவறான விவரங்களுக்கும் வழிவகுக்கிறது. கர்த்தர் தம்மைப் பின்பற்றுபவர்கள், புத்திசாலித்தனமாக ஜெபிக்க வேண்டும் என்று விரும்புகிறார். மேலும், நமக்கு என்ன தேவை என்பதை நம்மை காட்டிலும் தேவன் முன்னதாகவே நன்கு அறிந்திருப்பவரிடம் நாம் அணுகுகிறோம் என்ற உணர்வோடும், பூமிக்குரிய பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளுக்கு கொடுக்கக் கூடிய நன்மையான ஈவுகளை காட்டிலும் அதிகமான நன்மைகளை கொடுக்க தேவன் சித்தமாக இருக்கிறார் என்பதையும் நாம் உணரவேண்டும் என்று அவர் விரும்புகிறார். ஆகவே நம்முடைய விண்ணப்பங்களை மீண்டும் மீண்டும் கூறுவது வீணானது மட்டுமல்ல, அது நமக்கு எந்த பயனையும் அளிக்காது. ஆனால் இது குறைந்த அளவிலான ஆன்மீக வளர்ச்சியையும், தேவனைப் பற்றி அபூரணமான கருத்துக்களையும், அவரோடு அபூரணமான உறவையும் குறிப்பிடுகிறது. கிறிஸ்தவர்கள் எந்த விதமான ஜெபங்களையும் காலவரையறையின்றி மறுபடியும் மறுபடியும் செய்ய வேண்டியதும் இல்லை, உலகத்தின் விவகாரங்கள் மற்றும் சபையின் விவகாரங்களை எவ்வாறு தேவன் கட்டுப்படுத்தவேண்டும் என்பதைக் குறித்தும் அவரிடத்தில் ஜெபத்தில் சொல்லவேண்டிய அவசியமும் இல்லை. பொது ஜெபங்களை ஏறெடுக்கும் சிலர், சர்வல்லவரைவிட அதிகதிகமான ஞானம் உள்ளவர்களாக ஜெபிப்பதை நாம் கேட்டிருக்கிறோம். ஏனென்றால், வீட்டிலும், வெளியிலும், இந்த உலகம் முழுவதிலும், எப்படி, எப்போது, எங்கே என்ன செய்யவேண்டும் என்பதை சர்வவல்லமையுள்ளவரிடம் சொல்ல அவர் மேற்கொள்கிறார் -- அவர் ஜெபம் செய்த கூட்டத்தில் எத்தனை பேர் மாற்றப்பட வேண்டும் என்பதையும், உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு புறஜாதியினரும் எவ்வாறு கையாளப்படவேண்டும் என்பதையும் எடுத்துரைக்கிறார்.

**23. நாம் ஜெபத்தில் உறுதியாய் தரித்திருப்பது எப்படி?**

**R2213 [col.2:4-6]: ஜெபத்தில் உறுதியாய் தரித்திப்பது.**

உரையாற்றப்படும் வகுப்பிற்கு அப்போஸ்தலர் வழங்கக்கூடிய எந்த ஆலோசனையும் இதைவிட மிக முக்கியமானதாக இருக்க முடியாது. "ஆஹா, சோதிக்கப்படும்போதும், விரக்தியடையும் போதும், திகைக்கும் போதும் உதவிக்காக தப்பிச் செல்ல முடியுமா? அல்லது பாவ சேனையினால் தோல்வியுற்றபின் உபத்திரவப்படும் பரிசுத்தவான்களுக்கு கிருபாசனம் இல்லை என்று சொல்கிறது சாத்தியமாப் பாருங்கள்!

ஜெபமும், தேவனோடு ஐக்கியமும், நம்முடைய ஆவிக்குரிய நலனுக்கு இன்றியமையாத அவசியமாகும். மேலும், உன்னதமானவருடனும், நம்முடைய மீட்பருடனுமான ஐக்கியத்தில் சிலாக்கியத்தை பாராட்டுதல், அல்லது அத்தகைய பாராட்டு இல்லாத காரியமானது, தேவனுடைய விஷயங்களில் நாம் குளிர்ச்சியாக இருப்பதை தெளிவாக குறிக்கிறது. ஜனங்கள் தங்கள் சொந்த திட்டங்கள் அல்லது மனித அமைப்புகள் மற்றும் கோட்பாடுகளின் திட்டங்களுக்கு ஆர்வமுடன் ஊழியம் செய்து, ஜெபத்திற்கு ஆர்வம் இல்லாதவர்களாக காணப்படுகிறார்கள். ஆனால் தேவனையும் அவருடைய சத்தியத்தையும், அனலான இருதயத்தில், ஆர்வத்தோடு சேவிப்பவர்கள், தெய்வீக பணியில் தங்களுடைய சொந்த இயலாமைகளையும், அபூரணங்களையும் உணர்ந்துக்கொண்டவர்களாக, ஆண்டவருக்கு செய்யும் சேவைகளில் தொடர்ந்து ஆண்டவருடைய வழிநடத்தலை தேடுவதையே அவர்கள் விரும்புவார்கள். ஆகையால் தனிஜெபம் அல்லது பொது ஜெபம் அல்லது வீட்டு ஜெபம், ஆகியவற்றில் அலட்சியம் வளர்ந்துவருவதை நாம் எப்போதாவது உணர்ந்தால், இந்த இரண்டு விஷயங்களில் ஒன்றின் மிகவும் ஆபத்தான அறிகுறி என்று நாம் உறுதியாக நம்பலாம். (1)ஒன்று நம்முடைய அன்பு தனிந்துகொண்டிருக்கவேண்டும் அல்லது (2) தேவன் மேல் ஆர்வம் கொள்ளாமல், நம்முடைய அன்பு இடம் மாற்றப்பட்டும், தவறாக வழிநடத்தப்பட்டும், ஏதோ பூமிக்குரிய திட்டம் அல்லது லட்சியத்தின் மீது வைக்கப்பட்டிருக்க வேண்டும். இதில் நாம் எதை கண்டுபிடித்தாலும் சரி, அதை உடனடியாக சரி செய்ய வேண்டும். ஜெபத்தைப் பாராட்டுவது, அன்பில் வளர்ச்சி அடைவது, ஆவியின் மேல் ஆர்வம் அதிகரிப்பது, வளர்ச்சியின் காரியத்திற்கு சிறந்த எரிபொருளாகும். மேலே பரிந்துரைக்கப்பட்டபடி, இவைகள் எற்கனவே அனுபவித்த தெய்வீக இரக்கங்கள் என்று கருதப்படுகிறது.

**R1866 [col. 1 :2]:**

கர்த்தருடைய அன்பான சக சீஷர்களோடு நம்முடைய ஐக்கியம், ஜெபத்தில் உறுதியாக இருப்பது, எப்போதும் ஜெபிப்பது - நமக்கு எத்தனை ஆசீர்வதிக்கப்பட்ட சிலாக்கியம் - எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் நம் இருதயங்களையும் மனதையும் தேவனிடம் உயர்த்துவதற்கும், பிதாவும், நம்முடைய

அன்பான கர்த்தராகிய இயேசுவும் தொடர்ந்து நம்முடன் நிலைத்திருப்பதை தினமும், ஒவ்வொரு மணிநேரமும் உணரக்கூடிய பாக்கியத்தையும் பெற்றுள்ளோம். பின்னர், அவரது பார்வை மற்றும் கண்காணிப்பின் கீழ், அன்றாட கடமைகள் செயல்கள் நடத்தப்படும்போது, அல்லது தேவனோடு தனிமையில் அவருடைய கிருபாசனத்தண்டையில் நம்முடைய இருதயங்களின் பாரங்களை இறக்கி வைக்கக்கூடிய மிக நெருக்கமான உறவில் நுழையக்கூடிய சிலாக்கியம் எவ்வளவு விலையேறப்பெற்றது என்றும் அதன் தேவையை நம்முடைய ஆத்துமா எந்த நேரத்திலும் உணருவது எப்படிப்பட்ட ஆசீர்வதிக்கப்பட்ட சிறப்புரிமையாக உள்ளது.

## 24." இடைவிடாமல் ஜெபம் செய்வதன் அர்த்தம் என்ன?

**R3136 [col. 2 :5, 6]:**

"இடைவிடாமல் ஜெபிப்பது. ஒவ்வொரு காரியத்திற்காகவும் நன்றி செலுத்துங்கள்". கிறிஸ்துவின் பள்ளியில் மேம்பட்ட மாணவர்கள் சிலர் மட்டுமே இந்த அறிவுரையை தெளிவாக புரிந்து கொள்ள ஆயத்தமாக உள்ளனர். பரலோக நலன்களுக்காக பூமிக்குரிய நலன்களை விட்டுகொடுத்து, அவர்களின் சித்தங்கள், தற்கால அவர்களது விருப்பங்களையும் தேவனிடம் ஒப்படைத்த பின்னர், தேவனுடைய ஜனங்கள், பூமிக்குரிய நல்ல விஷயங்களுக்காக இடைவிடாமல் ஜெபிப்பதில் மற்றவர்களை காட்டிலும் சற்று குறைவாகவே உள்ளார்கள். மேலுள்ள விஷயங்களின் மேல் தங்களுடைய நாட்டத்தை வைத்திருப்பதினால், அவர்களின் ஜெபங்கள் அவைகளைப் பற்றியதாகவே உள்ளது - பரலோக வஸ்திரம், பரலோக உணவு, பரலோக இரக்கம். அவர்களின் ஜெபம் விசேஷமாக இப்படிப்பட்ட தெய்வீக முன்னேற்பாட்டின் வழிநடத்துதல்களுக்காக உள்ளது. இப்படிப்பட்ட தெய்வீக கிருபையான உதவிகள், அவர்களது சிறந்த ஆவிக்குரிய வளர்ச்சிக்கு இரக்கமுள்ள தேவன் கொடுக்கக்கூடிய இப்படிப்பட்ட அனுபவங்களில் எப்போதும் அவர்கள் மகிழ்ச்சியாக இருக்க உதவும். ஏற்கெனவே பெறப்பட்ட ஆசீர்வாதங்களுக்கும், இன்னும் பெறப்போகிறவைகளுக்கும் நன்றி செலுத்துவதையே அவர்களின் ஜெபங்களில் அதிகதிகமாக காணப்படுகிறது. இவைகளை விசுவாசத்தினால் பற்றிக்கொள்கிறார்கள். தேவனோடு ஐக்கியப்பட்டு, அவருடைய சித்தத்தை செய்வதில் முழுமையாக அர்ப்பணிக்கக்கூடிய மனநிலையைப் பெற்றிருப்பதால் அவர்களின் ஜெபங்கள் இடைவிடாமல் ஏறெடுக்கப்படுகிறது. அவர்கள் ஒவ்வொரு நாளின் தொடக்கத்திலும் அவருடைய ஆசீர்வாதங்களுக்காகவும், ஒவ்வொரு நாளின் முடிவிலும் தங்கள் நன்றிகளை ஏறெடுப்பதற்காகவும் மட்டுமே ஜெபங்களை ஏறெடுக்காமல், வாழ்க்கையின் எல்லா விவகாரங்களிலும் அவர்களின் அனைத்தையும் தேவனிடம் அர்ப்பணித்து விட்டதை நினைவுக் கூர்ந்தவர்களாக, வாழ்க்கையில் நடக்கும் எல்லா காரியங்களிலும், அவரை விசுவாசத்துடன் நோக்கி பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும் அவர்கள் செய்யும் பணிகளின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப, விசுவாசத்தினால், வாழ்க்கையின் அனைத்து நலன்களுடனும், தேவனுடைய ஏற்பாட்டின் தொடர்பை உணர்ந்து அதற்கேற்ப நன்றி செலுத்துவார்கள். இதுவே நம்மை குறித்த தேவனுடைய விருப்பமாகும் ; -நாம் தொடர்ந்து அவருடைய சித்தத்தையும் ஆசீர்வாதத்தையுமே நோக்கி இருக்கக்கூடிய மன நிலையில் வாழவேண்டும் என்று அவர் சித்தம் கொண்டிருக்கிறார். நாம் குறுகிய பாதையில், முன்னேறி செல்வதற்கு மிகவும் சாதகமான நிலையாக இது இருப்பதினாலும், நம்முடைய அழைப்பையும் தெரிந்துக்கொள்ளுதலை உறுதிப் படுத்திக் கொள்வதற்கும் இது சிறந்த உதவியாக இருப்பதினாலும் நம்மை பொறுத்தவரை இவைகளையே அவர் விரும்புகிறார்.

**R3351 [col. 1 :8]:**

தேவனுடைய ஜனங்கள் தொடர்ந்து முழங்காலில் நிற்கவேண்டும் என்று அப்போஸ்தலர் அர்த்தம் கொள்கிறார் என்று நாம் புரிந்துக்கொள்ளக்கூடாது. ஆனால் அதற்கு மாறாக, அவர்களின் இருதயம், மனரீதியாகவும், ஆவிக்குரிய வகையிலும், வாழ்க்கையின் எல்லா விஷயங்களிலும் தேவனுடைய வழிநடத்துதலுக்காக எதிர்பார்த்து, தொடர்ந்து ஜெப சிந்தையோடு, அவர்களது நடத்தைகள் முழுமையாக தெய்வீக அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதா என்று கவனித்திருக்கவேண்டும். ஆண்டவரோடு நித்தியமான ஐக்கியத்தில் இருக்கவேண்டும் என்ற சிந்தை, தொடர்ந்து அவரது முகத்தில் உள்ள புன்னகையை பார்த்து, பூமிக்குரிய எந்த மேகமும் நம்முடைய தந்தையின் முகத்தையும் அவருடைய ஆசீர்வாதத்தையும் நம்மை மறைக்காதபடிக்கு தொடர்ந்து விழித்திருந்து கவனித்திருப்பதே ஒரு வளர்ச்சி அடைந்த கிறிஸ்தவருடைய மனநிலையாக இருக்கும். இப்படிப்பட்டவருக்கு ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணி நேரமும் தேவனோடு ஐக்கியம் கொள்ளுவதற்கான காலமாகும். தொழிலைப் பற்றிய கவலைகள், வீட்டு

கவலைகள் போன்றவைகள், இப்படிப்பட்ட ஐக்கியத்தை குறுக்கிட்டால், இந்த வாழ்க்கையின் கவலைகளினால் நாம் அதிகமாக சுமத்தப்பட்டிருப்பதற்கு ஆதாரமாக உள்ளது. அது உடனடியாக சரிசெய்யப்படவேண்டும். நம்முடைய தொழில் உள்ள பொறுப்புகளை குறைத்து, காரியங்களை சரிசெய்யவேண்டும் அல்லது இது இயலவில்லை என்றால், இவைகளை சமநிலைப் படுத்தும்படிக்கு வாழ்க்கையின் அற்பமான விஷயங்களில் கூட, (மிக பெரிய காரியங்களானாலும் சரி) வழிகாட்டு தலுக்காக நம்முடைய இருதயங்களை தொடர்ந்து தேவனிடம் மறுபடியும் மறுபடியும் திருப்பக் கூடியவர்களாக இருக்கிறோம்.

## 25. நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்கு செய்யப்படும் என்பதை நாம் எப்படி புரிந்துகொள்வது?

யோவான் 15:7 - நீங்கள் என்னிலும், என் வார்த்தை உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.

**R1998 [col. 2 :6**

"நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ" (பாடத்தின் முடிவில் காணலாம்.)

**R3407 [col. 1 :3, 4]:**

" நீங்கள் என்னிலும், என் வார்த்தை உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்பதே நம்முடைய ஆண்டவரின் முக்கியமான வார்த்தைகளாகும். கர்த்தருடைய காது நமக்கு இருக்கவேண்டும் என்றால், நாம் அவருக்குள், அவருடைய சரீரமான அங்கத்தினராகவும், அவர் வழியாக பிதாவுக்கு புத்திரர்களாகவும் நிலைத்திருக்கவேண்டியது மிக அவசியம். அவருடைய வார்த்தைகள் நம்மில் நிலைத்திருப்பதும் மிக அவசியம். தேவனுடைய வாக்குத்தத்தங்களை நாம் படித்து, அவர் எதை வாக்களித்திருக்கிறார் என்பதை அறிந்து, இதனால் நமக்கு வழங்குவதில் அவர் மகிழ்ச்சி அடையக்கூடிய காரியங்களை அதாவது, அவர் முன்னதாகவே வாக்களித்த விஷயங்களை மட்டுமே நாம் கேட்கலாம். ஜெபத்தில் நாம் கேட்கக்கூடியவற்றையும், கேட்கக்கூடாவற்றையும் குறித்த மற்றொரு ஆலோசனை, இந்த விஷயத்தின் முழுமையான பரிசோதனையை மற்றொரு நேரத்திற்கு விட்டுவிடு கிறதாகும். நம்முடைய நண்பர்களின் மனமாற்றத்தை நாம் கேட்கக்கூடாது. ஏனெனில் அவர்களுக்கு ஜெபிக்கும்படி கர்த்தர் சொல்லவில்லை. அவர் அப்படிப்பட்ட மாதிரியையும் முன்வைக்கவில்லை. அவருடைய அப்போஸ்தலர்களும் அப்படியாக எதையும் சொல்லவில்லை. வேத வசனங்களில் உள்ள போதனைகள் முற்றிலும் முரணாக உள்ளது. எவ்வாறாயினும், நாம் நேசிப்பவர்களுக்கும், சத்தியத்தின் செல்வாக்கின் கீழ் கொண்டுவர விரும்பு வோருக்கும், ஆண்டவருடைய செய்தியை தெளிவாகவும், வல்லமையாகவும், அதை மெய்ப்பிக்கக் கூடிய வகையில் எவ்வாறு வழங்க வேண்டும் என்பதை நாம் அறிந்துகொள்வதற்கு முதன்மையாக ஞானத்திற்காகவும், நம்முடைய இருதயங்களிலும், உதடுகளிலும் தேவைப்படும் கிருபைக்காகவும் நாம் ஜெபிக்கவேண்டும்."சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்." என்பதே தேவனுடைய ஒழுங்காகும்.

மேலும் அவசியமில்லாதபோது, அதிசயமான முறையில் நம் மனதில் சத்தியம் புகுத்தப்படாது. ஆனால், அதை ஏற்கனவே கற்றுக்கொண்டவர்களால் அறிவிக்கப்படும். ஆகவே, இந்த சுவிசேஷ யுகத்தில், சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்கு இதுவே தேவனுடைய வழிமுறையாகும். சத்தியத்தின் ஆசீர்வாதத்தை, அவருடைய கிருபையின் வழியாக பெற்றுக்கொள்ள சரியான மனநிலையில் உள்ளவர்களுக்கு அதை வழங்குவதில் தேவன் மகிழ்ச்சியாக இருக்கிறார். மற்றொரு விளக்கத்தை எடுத்துக்கொள்ளலாம் : பணம் அல்லது ஆடம்பரங்களுக்காக ஜெபிப்பதற்கு நாம் கற்பிக்கப்படவில்லை. ஆனால் நாம் உழைத்தபின், நம்முடைய உழைப்பிற்கான ஆசீர்வாதங்களை கேட்கலாம். மேலும் அதிகமானாலும் சரி, குறைவாக இருந்தாலும் சரி, ஆண்டவர் நமக்கு சிறந்தவைகளை வழங்கும்போது, அதை நன்றியுள்ள உணர்வோடு பெற்றுக்கொள்ள ஆயத்தமான மனநிலையைப் பெற்றிருக்கவேண்டும் என்ற வழிகாட்டுதலே சிறந்ததாக இருக்கும். "எங்கள் அநுதின ஆகாரத்தை எங்களுக்கு தந்தருளும்." என்று நம்முடைய ஆண்டவர் கற்பித்த காரியம் மட்டுமே நம்முடைய முழுமையான தேவையாக உள்ளது. "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படுவதாக", என்று பதினெட்டு நூற்றாண்டுகளாக கிருபாசனத் தண்டைக்கு சென்ற இந்த விண்ணப்பத்திற்கு தேவன் ஏற்ற காலத்தில் பதில் அளிப்பார் என்றும், நம்முடைய இராஜாவின் இரண்டாம் பிரசன்னத்தின்போது ஆண்டவரிடம் இருந்து மழைபோன்று ஆசீர்வாதங்கள் வந்து, இந்த உலகம் இழந்த அனைத்தையும் திரும்ப கொடுக்கப்படும் என்பதை உறுதியாக நம்பி உரிமையோடும் நாம் ஜெபிக்கலாம்.

**R3546 [col.2:1, 2]** -திராட்சைக் கொடியின் உறுப்பினரின் கனிகள்

நம்முடைய ஆண்டவரின் ஐக்கியத்தினால் வரும் கனிகள் என்னவாக இருக்கும் என்பதை அவர் நமக்கு தெரிவிக்கிறார்:-

முதலாவதாக, அவர்கள் என்ன கேட்டுக் கொள்கிறார்களோ, அது அவர்களுக்கு செய்யப்படும். இதற்கு ஒரு நிபந்தனை மட்டும் உண்டு. அதாவது, அவர்கள் இவ்வாறு கேட்பதற்கு ஆயத்தமாகும் முன், அவருடைய சித்தம் இன்னது என்பதையும், அவருடைய சித்தத்தின்படி அவர்கள் என்ன கேட்கலாம் என்பதை அறிந்துக் கொள்ளும்படிக்கு, அவர்கள் தேவனுடைய வார்த்தைகளுக்கு கவனம் செலுத்தியிருக்கிறோமா என்று பார்க்கவேண்டும். கிறிஸ்துவில் நிலைத்திருப்பவர்களுக்கு சொந்த விருப்பம் இருக்கக்கூடாது. அவர்களுடைய சித்தம் தலையின் சித்தமாகவே இருக்கவேண்டும். மேலும் அவர்களின் தலை, பிதாவின் சித்தமே அவருடைய சித்தம் என்று முன்னதாகவே அறிவித்திருக்கிறார். நம்முடைய இருதயத்தில் பிதாவின் சித்தத்தையும், அவருடைய வாக்குத்தத்தங்களையும் கொண்டிருந்தால், நம்முடைய விண்ணப்பங்களும் இவற்றுக்கு இணங்க இருக்கும். இப்படிப்பட்ட அனைத்தையும் வழங்குவதற்கு தேவன் மகிழ்ச்சியுள்ளவராக இருக்கிறார். இவைகளே கொடுக்கப்பட்டுள்ள வரம்புகள் அல்லது நிபந்தனைகளாகும்.

**F679 [¶1] through F680 [¶2]** "கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்" (யோவான் **16:24**)

"உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு" (சங்கீதம் 16:11) என்று தீர்க்கதரிசி கூறுகிறார். தெய்வீக ஆசீர்வாதங்களுக்கும், மிகுதியான மகிழ்ச்சிகளுக்கும் வழியை ஆயத்தப்படுத்தும்படியாக ஜெபம் ஆத்துமாவை தேவனுடைய சமூகத்திற்கு கொண்டுவருகிறது. தேவனுடைய ஜனங்கள், தெய்வீக சித்தத்தையோ, திட்டத்தையோ மாற்றவேண்டும் என்ற நோக்கத்துடன் அவருடைய கிருபாசனத்தை அணுகுவதில்லை என்பது தெளிவாக காணப்படுகிறது. அத்தகைய சிந்தனை, இந்த விஷயத்தின் ஒவ்வொரு நியாயமான கருத்திற்கும் பொருந்தாது. ஆகவே, முறையான ஜெபம் என்பது தெய்வீக சித்தத்திற்கு மாறாக, நம்முடைய விருப்பங்களைச் செய்ய வேண்டும் என்று கோரிக்கைகளை வைப்பத்தில் இல்லை, ஆனால் தேவனுடைய சித்தத்திற்கும், திட்டத்திற்கும் முழுமையாக அடிபணிய வேண்டும் என்று அவர் நமக்கு அறிவுறுத்துகிறார். "...தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால் பெற்றுக் கொள்ளாமலிருக்கிறீர்கள்." (யாக்கோபு 4:3) என்று அப்போஸ்தலர் சிலரைப் பற்றி அறிவிக்கிறார். இவர்கள் தெய்வீக ஒழுங்கிற்கும், திட்டத்திற்கும் இசைவாக அல்ல, தங்களுடைய விருப்பத்திற்கு இசைவாகவே வேண்டுதல் செய்கிறார்கள்.

இதே வார்த்தைகளை கூறி நம்முடைய ஆண்டவரும் நம்மை எச்சரிக்கிறார். "ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை; என்றாலும், சாலொமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன். அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். ஆகையால், நாளைக்காகக் கவலைப் படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவை களுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்." (மத்தேயு 6:25-34) மீண்டுமாக, "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள்

கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்."(யோவான் 15:7) என்று நம் ஆண்டவர் கூறுகிறார். பின்வரும் நிபந்தனைகள் அனைத்தும் முக்கியமானவைகள்:

(1) ஜெபிக்கக்கூடியவர் கிறிஸ்துவுக்குள் இருக்கவேண்டும். அவருடைய ஒப்புரவாக்குதலின் புண்ணியத்தை ஏற்றுக்கொண்டு, அவருடைய சித்தம் மற்றும் ஊழியத்திற்கு அற்பணிப்பதன் மூலமாக அவருடன் நெருங்கிய ஐக்கியத்தை பெற்றிருக்க வேண்டும். இதற்கும் மேலாக, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஜெபத்தின் சலுகைகளை பெற்றுக்கொள்வதற்கு, அவர் தொடர்ந்து கிறிஸ்துவுக்குள் அவருடைய சரீர அங்கத்தினராகவும், புது சிருஷ்டியாகவும் நிலைத்திருக்க வேண்டும்.

(2) தேவனுடைய வார்த்தைகள் அவருக்குள் நிலைத்திருக்க வேண்டும், கர்த்தருடைய சித்தத்திற்கு இணங்க, அவர் கொடுப்பதில் மகிழ்ச்சியடையக்கூடிய விஷயங்களைக் கேட்பதற்குத் தேவையான ஞானம் அவருக்கு இருந்தால், அவர் சத்திய வார்த்தைக்கும், கிருபைக்கும் பங்காளியாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவர் கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய சிருஷ்டியாக இருந்தாலும், அவருடைய ஜெபங்கள் தகாத விதமாக இருப்பதினால், அவைகளுக்கு பதிலளிக்கப்படாமல் போகலாம். இந்த இரண்டு தகுதிகளையும் பெற்றதாக சொல்பவர்கள் மட்டுமே, தேவன் குறித்த காலத்தில், தங்களுடைய விண்ணப்பங்கள் பதில் அளிக்கப்படும் என்ற முழு நம்பிக்கையுடனும், விசுவாசத்தின் முழு உறுதியுடனும், பரலோக சிருபாசனத்தண்டை அணுகலாம். இப்படிப்பட்ட வர்கள் மட்டுமே முழுமையான மகிழ்ச்சியை உணர முடியும்.

வசனங்கள் விளக்குகிறபடி, ஜெபம் என்பது தேவனுடைய பிரசன்னத்தை அணுகுவதற்கும் மற்றும் அவருடன் ஐக்கியப்படுவதற்குமான ஒரு முயற்சியாகும். "இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும்" யார் தைரியமாய்க் கிருபாசனத்தைண்டையிலே சேரமுடியும்? (எபிரெயர் 4:16) பொதுவாக இந்த உலகத்திற்கு ஜெபத்தின் சிலாக்கியமும், தேவனிடம் அணுகுவதற்கான வாய்ப்பும் இல்லை என்று அப்போஸ்தலரின் வார்த்தையின் படி நாம் பதில் அளிக்கலாம். உண்மை என்னவென்றால், மில்லியன் கணக்கான புறஜாதிகள் அவர்களின் தெய்வத்திற்கு ஏற்றபடி விதவிதமான ஜெபங்களை செய்கிறார்கள். ஆனாலும் அவர்களின் ஜெபங்கள் தேவனுக்கு ஏற்கத்தக்கவை அல்ல. "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம், ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறர்வர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்." (எபிரெயர் 11:6) கொர்நெலியு இப்படிப்பட்டவராக இருந்தார். அவர் உண்மையான தேவனை கண்டறிந்து, அவரை பயபக்தியோடு ஆராதித்து, அவரையும், அவருடைய சித்தத்தையும் அறிந்துக்கொள்ள விரும்பினார். தெய்வீக திட்டத்தில், தேவனுடைய தயவு புறஜாதியாருக்கும் கொடுக்கப்படுவதற்கு, தேவையான காலக்கட்ட வளர்ச்சி அடைந்தவுடன், அவருடைய ஜெபங்களுக்கும், தர்மங்களுக்கும் பதில் அளிக்கப்பட்டது. அதுவரையில், தேவனுடன் முழுமையாகவும், சரியான முறையிலும் தொடர்பு கொள்ள அவர் அனுமதிக்கப்படவில்லை. ஆனால், அவர் அந்நியரும், பிரிந்திருக்கும் நிலையிலிருந்து, தேவனுடைய புத்திரனாகும்படிக்கும், தேவனோடு இசைந்திருப்பதற்கான தேவனுடைய வார்தைகளை அவருக்கும் அறிவிக்கும்படி, பேதுருவை அழைக்க அவருக்கு அறிவுறுத்தப்பட்டது - இது கிருபாசனத் தண்டையில் பிதாவிடம் அணுகக்கூடிய ஒரு சிலாக்கியம்.

**R3663 [col. 1 ¶2]:**

ஜெபத்தைப் பற்றி நாம் எப்போதெல்லாம் நினைக்கிறோமோ, அப்போதெல்லாம் அதற்கான பதில்களுக்கு நம்முடைய கர்த்தருடைய வார்த்தைகளை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்." (யோவான் 15:7) ஆ, இந்த அறிக்கையில் நிபந்தனைகள் உள்ளது. கிறிஸ்துவில் நிலைத்திருப்பவர்கள் விசுவாசத்திலும், மனந்திரும்புதலிலும் அர்ப்பணிப்பிலும் வேரூன்றியிருக்க வேண்டும். அவரிடத்தில் நிலைத்திருப்பது என்பது விசுவாசத்திலும், பாவத்திற்கான மனந்திரும்புதலிலும், அதை எதிர்ப்பதிலும் நிலைத்திருக்க வேண்டும். மேலும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பதிலும், அவருடைய ஊழியத்தில் நிலைத்திருப்பதிலும் நிலைத்திருந்து அவைகளை வெளிப்படுத்தவேண்டும்.

## 26. ஜெபம் நீதிமானாக்கப்பட்ட மற்றும் அர்பணிக்கப்பட்ட நபர்கள், ஜெபத்தில் என்ன சலுகைகளைப் (ஒப்பிடக்கூடிய) பெறுகிறார்கள்.,

**F681 [3] through F684 [1]:**

ஆனால் புதிய சிருஷ்டிகளாகிய, அர்ப்பணித்த ஆசாரியர்கள் மட்டுமே, தைரியத்துடனும்

நம்பிக்கையுடனும் கிருபாசனத்தண்டைக்கு செல்ல ஊக்குவிக்கப்படுகிறார்கள். அதேநேரத்தில் ஒப்புரவாக்குதலின் (ஈடுபலி) புண்ணியத்தின் வழியாக பாவங்களை முழுமையாக மன்னிப்பதற்காக தேவன் செய்த ஏற்பாட்டை உணர்ந்த, விசுவாச வீட்டார் கூட ஓரளவிற்கு நன்றிகள் மற்றும் துதிகள் செலுத்தி, தேவனுக்குள் மகிழ்ச்சியடையக்கூடிய சிலாக்கியத்தை அனுபவிக்கக்கூடும். ஆயினும்கூட, தைரியத்துடன், வேறு எந்த வகையிலும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் வருவதற்கான சிலாக்கியம் அவர்களுக்கு கொடுக்கப்படுவதில்லை. பிரதான ஆசாரியருடைய சரீர அங்கத்தினராகிய அர்ப்பணிக்கப்பட்ட புது சிருஷ்டிகள் மட்டுமே, ஜெபத்தில் தேவனுடைய சமூகத்தில் நிற்பதற்கான சிலாக்கியம் பெற்றவர்கள். இவ்வாறாக, எஜமான் வாக்களித்த, முழுமையான மகிழ்ச்சியை அவர்கள் மட்டுமே, பெற்றுக்கொள்ளமுடியும். ஆகவே, அவிசுவாசிகள் ஜெப உரிமையை முழுமையாக பெறவில்லை என்று நாம் கருதினாலும் கூட, தேவனுக்கு முன்பாக அவர்கள் நிற்பதற்குமுன், அவர்கள் யாரை விசுவாசிக்க வேண்டும் என்றும் யாரை அறிந்துக் கொள்ளவேண்டும் என்றும், பேதுரு கொர்நேலியுவை "தேவனுடைய வார்த்தைகளினால்" தட்டியெழுப்பியது போல, அவர்களுக்கு நாம் அறிவுறுத்த வேண்டும். ஆயினும், கர்த்தராகிய இயேசுவை விசுவாசிக்கும், அனைவரும் இயேசு கிறிஸ்துவின் மூலம் பிதாவை மகிமைப்படுத்துவதற்கும், நன்றி செலுத்துவதற்கும் நாம் ஊக்குவிக்கலாம். எவ்வாறாயினும், விசுவாசத்தின் மூலம் பெற்ற தற்காலிகமான நீதிமானாக்கப்பட்ட நிலை, தெய்வீக சித்தத்தை நிறைவேற்றுவதல்ல, மாறாக தேவனை அணுகுவதற்கு சரியான ஒரு தொடக்கம் என்பதை இப்படிப்பட்டவர்கள் புரிந்து கொள்ள சுதந்திரத்தை வழங்கவேண்டும் - அந்த அணுகுமுறையின் முதல் படி - மற்றும் ஜெபத்தின் சரியான சலுகைகளை அனுபவித்து, தேவனோடு தொடர்பு கொண்டு, மேலும் அதனுடன் தொடர்புடைய மகிழ்ச்சியின் முழுமை அடையும் யாவரும், தெய்வீக விருப்பத்திற்கு முழு ஒப்புக்கொடுப்பதற்கான இரண்டாவது படியை மேற்கொள்ளவேண்டும்.

இரண்டாவது படியை கடக்க தவறியவர்கள் தேவனுடைய கிருபையை (நீதிமானாக்கப்பட்ட நிலையை) வீணாகப் பெறுகிறார்கள் என்பதை அவர்களுக்கு சுட்டிக்காட்ட வேண்டும். (2கொரிந்தியர் 6:1) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இந்த வகையான ஜெப சிலாக்கியங்களை அனுபவித்த பிறகு, அவர்கள் தங்களை ஆண்டவருக்கென்று முழுமையாக பிரதிஷ்டை செய்ய மறுக்கும் போது, இவர்கள் ஜெபத்திற்கு தொடர்பான ஒரு கூச்சத்தை (சந்தேகம்) சரியாக உணரவேண்டும் - கர்த்தரிடத்தில் தங்களை ஒப்புக்கொடுப்பதற்கு மறுக்கும்போது, அவர்கள் தேவனை புத்தியோடு ஆராதிப்பதற்கு, தொடர்ந்து தெய்வீக உதவிகளையும், மேலும் பல காரியங்களை கேட்பது முறையற்றது என்று அவர்கள் உணர வேண்டும். வசனங்களில், கிறிஸ்துவின் மணவாட்டியாக சபை நியமிக்கப்படுகையில், பொதுவான விசுவாச வீட்டார், மணவாட்டிக்கான சலுகைகள் வழங்கப்படுபவர்களை அடையாளப்படுத்துவார்கள். புதிய சிருஷ்டிகளாகிய கிறிஸ்துவின் மணவாட்டி, தங்கள் இருதயத்தையும், நாவையும், மற்றும் ஒவ்வொரு வல்லமையையும், சக்தியையும் கர்த்தருடைய ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்ததினால், அவர் தனக்காக நியமிக்கப்பட்ட மணவாட்டிக்கு பிரியமாக வாக்களித்த ஆசீர்வாதங்கள், சலுகைகள், பாதுகாப்பு, கவனிப்பு மற்றும் வரங்களை அவரிடமிருந்து நன்றியுணர்வோடு பெறுவது நியாயமானதாகும்.

ஒரு மாப்பிள்ளையை நிராகரித்து, அவனுடைய இருதயத்தை அவருக்கு கொடுக்க மறுக்கும் ஒரு பெண், அவர் ஏற்கனவே இலவசமாக கொடுத்திட்ட பராமரிப்பு, பாதுகாப்பு, ஆசீர்வாதங்கள், சலுகைகள் மற்றும் சந்தோஷங்களை அவரிடம் அவள் தொடர்ந்து எதிர்ப்பார்ப்பது நியாயமல்ல. ஆகவே, தெய்வீக தயவை தொடர்ந்து நிராகரித்து, தங்கள் சிறிய காரியங்களை கூட கர்த்தரிடம் ஒப்புக்கொடுக்க மறுக்கக்கூடியவர்கள் எந்த விதமான உரிமையுடன் அவரை பார்க்கமுடியாது அல்லது அவரை நேசிப்பவர்களுக்கும், தங்கள் பக்தியினாலும், அர்ப்பணிப்பினாலும் தங்களுடைய அன்பை வெளிப்படுத்துபவர்களுக்கு அவர் வாக்களித்த ஆசீர்வாதங்களையும் கேட்க முடியாது. கர்த்தரிடத்தில் பாவ மன்னிப்பை பெற்றோம் என்று நம்புகிறவர்களுக்கும், அந்த தயவைப் நன்கு புரிந்துகொண்டு, தங்களை கர்த்தருக்கென்று அர்ப்பணித்து, ஆண்டவரோடு முழு ஐக்கியத்திற்குள் சென்றவர்களுக்கும் இடையிலான வேறுபாட்டை சரியாக அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். உண்மை என்னவெனில், விசுவாசிகளின் வெவ்வேறு வகுப்பினரிடையே தெய்வீகமாக வரையப்பட்ட இந்த கோடு, இன்னும் தெளிவாக அடையாளம் கண்டு கொள்ளப்படாததே, இரு வகுப்பினருக்கும் பாதகமாக உள்ளது. விசுவாசிகளுக்கும் அவிசுவாசிகளுக்கும் இடையிலான வேறுபாட்டை கூர்ந்து வரையறுக்க வேண்டும். பிந்தி

சொல்லப்பட்டவர்கள் அல்ல, முன்பு சொல்லப்பட்டவர்கள் அனைவரையுமே சகோதரர்களாக, "விசுவாச வீட்டாராக" அங்கீகரிக்க வேண்டும். மறுபடியும், தங்களை அர்ப்பணித்த விசுவாசிகளுக்கும், அர்ப்பணிக்காத விசுவாசிகளுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை தெளிவாகக் கண்டறிந்து, முன் சொல்லப்பட்ட வகுப்பாராகிய சபை, புது சிருஷ்டிகளும், இராஜரீகமான ஆசாரியர்களும் கொடுக்கப்பட்ட அனைத்து மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் சொந்தமானவைகள் என்பதைஅறிந்துக்கொள்ளவேண்டும்.

இந்த வேறுபாடுகள் தெளிவாக கண்டறியப் பட்டால் அது நன்மை பயக்கும் (1) உலகுக்கு, மேலும் முழுமையான ஆராய்ச்சி மற்றும் உறுதியான நம்பிக்கைக்கு வழிவகுக்கிறது, (2) தங்களை அர்ப்பணிக்காத விசுவாசிகளுக்கு நன்மையாக, அவர்கள் தங்களை முழுமையாக அர்ப்பணிக்காவிட்டால், அவர்கள் எந்த விதத்திலும் பரிசுத்தவான்களின் உடன்பங்காளிகளாகவோ, எதிர்கால மகிமை அல்லது தற்போதைய சலுகைகள் மற்றும் சந்தோஷங்களை அனுபவிக்க எந்த வாய்ப்பும் இல்லை என்பதை அவர்கள் உணர வழிவகுக்கும். (3) இதை உணரும்படியாக, அர்ப்பணிக்கப்படாதவர்கள் மீது ஒரு ஊக்குவிக்கும் விளைவை ஏற்படுத்தும் என்று நாம் நம்புகிறோம். இது அவர்களின் ஆதாரமற்ற கற்பனைகளை அதாவது ஏதோ ஒரு விதத்தில் கிறிஸ்துவின் மேல் வெறும் விசுவாசம் கொண்டவர்களாக, தங்களை அர்ப்பணிக்காமல், அவர்கள் தங்களை தேவனுடைய புத்திர்கள் என்றும், அவருடைய சுதந்திரவாளிகள் என்றும், அவர்களின் தவறான சிந்தனைகளை அகற்றி, தற்காலத்திலும், இனி வருங்காலத்திலும் ஐசுவரியமுள்ள தெய்வீக வாக்குத்தத்தங்களுக்கு அவர்களை பங்காளிகளாகும்படிக்கு நன்மைக்கு ஏதுவான முடிவுகளை அவர்கள் எடுக்கும்படிக்கு அவர்களை வழிநடத்தும்.

நெரிந்த நாணலை நாம் முறிக்க மாட்டோம். மங்கி எரிகிற திரியை நாம் அணைக்க மாட்டோம். ஆனால், இக்காலத்திலும், வருங்காலத்திலும் தேவனுடைய ஆசீர்வாதங்களை சரியாக பகிர்ந்து கொள்வதற்கும், அவர்கள் தெய்வீக நிலைமைகளின் அடிப்படையில் தெய்வீக தயவைப் பெறவேண்டும், அதாவது அவர்கள் தங்களை முழுமையாக அர்ப்பணித்து தேவனுடைய பணியில் பயனுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பதை அவர்கள் உணரவேண்டும். மங்கி எரியும் விசுவாசத்தை நாம் தணிக்க மாட்டோம், மாறாக அந்த தனலை விசிறியினால் வீசி, சுயத்தை முழுமையாக ஒப்புக்கொடுப்பதற்கு தூண்டும்படிக்கு, அதை பரிசுத்தமான அன்பின் சுடர்களாக மாற்றுவிடுவோம். அதாவது தெய்வீக அழைப்பின் படி, முழுமையாக அர்ப்பணித்து, தற்போதும், இனி வரக்கூடிய சந்தோஷங்களில் பங்கேற்க வழிவகுக்கும்.

## 27. அர்ப்பணிக்கப்பட்ட பெற்றோரின் பிள்ளைகள், ஜெபத்தின் என்ன சலுகைகளை அனுபவிக்கிறார்கள்?

**F531 [1] through F532 [2]** நீதிமானாக்கப்பட்ட நிலையில் பிறந்த பிள்ளைகள் இந்த எல்லா விஷயங்களிலும் புதிய சிருஷ்டிகள் தங்களது குழந்தைகளைப் பொறுத்தவரை மற்ற அனைவருக்கும் மேலாக, தீர்மானிக்கப்பட்ட ஒரு நன்மையைப் பெற்றுள்ளார்கள். ஆரம்பத்தில் அவர்கள் சிறப்பாக பிறக்க வேண்டும், அதாவது பிறக்கும்போதே அவர்கள் சிறந்தவர்களாக இருக்கவேண்டும். மேலும் இந்த பெற்றோர் வழியாக வரும் ஆஸ்தி, குழந்தை பருவத்தின் ஆரம்ப தருணங்களிலிருந்தே அவர்களை உருவாக்கவேண்டும். பிறந்து சில நாட்களான குழந்தையின் தாய் பதட்டமாகவும், எரிச்சலுடனும் துயரத்துடனும் இருந்தால் அந்த குழந்தையும் அப்படியே இருக்கும் என்பது நிச்சயம். தாயின் பாலின் மூலமாக மட்டுமல்ல, தொலைபேசியின் வழியாகவும், மின்சார ரீதியாகவும், அந்த தாயின் மூலமாகவும் ஒரு தாக்கம் அந்த குழந்தையிடம் செல்கிறது. அப்படியானால், கர்த்தருடைய ஆவியில், அதனுடைய சமாதானத்தோடும் அன்போடும் மகிழ்ச்சியோடும் புதிய சிருஷ்டிக்குள் வாசமாக இருப்பதற்கு என்ன ஒரு பொதுவான நன்மை காணப்படுகிறது! மேலும் அத்தகைய பராமரிப்பில் இருக்கும் குழந்தை எவ்வளவு சாதகமான சூழ்நிலையில் காணப்படுகிறது! மனித ரீதியாகப் பார்த்தால், உன்னதமான ஆண்மை மற்றும் பெண்மைக்கு தொடர்பாக மற்றவர்களின் சாத்தியக்கூறுகளுடன் ஆவிக்குரிய காரியங்களை ஒப்பிட்டு பார்க்கும்போது, அதன் சாத்தியங்கள் எவ்வளவு பெரியவைகள். மேலும், கர்த்தருடைய வார்த்தையின் நிலைப்பாட்டில் இருந்து பேசும்போது, ஆண்டவருடைய பரிசுத்தவான்களின் பிள்ளைகள், தங்களைப் போலவே, அவர்களின் எல்லா காரியங்களிலும் தெய்வீக முன்னேற்பாட்டின் மேற்பார்வையில் உள்ளனர் என்பதையும் விசுவாசிகளின் பிள்ளைகளும் கூட "சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது" என்ற வாக்குறுதியின் நிபந்தனையின் கீழ் வருகிறார்கள் என்பதையும் நினைக்கும்போதும், அதன் நன்மை எவ்வளவு ெரியதாக உள்ளது!

நல்லொழுக்கத்தினால் புதிய சிருஷ்டிகளும் அவர்களுடைய பிள்ளைகளும் தேவனோடு தற்காலிகமான நீதாமானாக்கப்பட்ட நிலையில் உள்ளார்கள் என்பதை காண்பது கடினமல்ல. ஆதாம் மற்றும் ஏவாளின் கீழ்ப்படியாமையினால், பரலோக தந்தையிடமிருந்து அவர்கள் பிள்ளைகளும் ஒதுக்கிவைக்கப்பட்டது போல, தேவனுடைய ஜனங்களின் ஒப்புரவாக்குதலின் புண்ணியங்களின் வழியாக, அவர்களை மீண்டும் தேவனோடு இசைந்திருப்பதோடு, அவர்களின் பிள்ளைகளும் நீதிமான்களாக என்னப்படுகிறார்கள். ஆனால் அவர்களின் பிள்ளைகள் புத்தி அடைந்து, தங்களுடைய சொந்த சித்தம் செய்யும் வரையில் இவர்கள் இந்நிலையைப் பெறுவார்கள். எவ்வாறாயினும், பெற்றோரில் ஒருவர் தேவனுடையவரும் மற்றவர் அந்நியராகவும் இருந்தால் இந்த கேள்வி சிக்கலானது. அத்தகைய சந்தர்ப்பத்தில், பெற்றோரில் யார் ஒருவர் தேவனுடைய பிள்ளையாக இருந்தாலும் சரி, அவருடைய குழந்தைகளை தேவன் தன்னுடையவைகளாக எண்ணிக்கொள்கிறார் என்று பவுல் உறதியளிக்கிறார். குழந்தையைப் பொருத்தவரை, விசுவாசமுள்ள பெற்றோர், அர்ப்பணிக்கப்பட்ட பெற்றோரின் தாக்கம், அர்ப்பணிக்கப் படாத பெற்றோரின் செயல்பாடுகளை மேற்கொள்ளும் என்று கணக்கிடப்படுகிறது. இந்த விஷயத்தைப் பொருத்தவரை அப்போஸ்தலர் கூறுவது :" என்னத்தினாலெனில், அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான்; அவிசுவாசியான மனைவியும் தன் புருஷனால் பரிசுத்தமாக்கப்படுகிறாள். இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே; இப்பொழுதோ அவைகள் பரிசுத்தமாயிருக்கின்றன." (Iகொரிந்தியர் 7:14)

**F684 [2]:**

நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, விசுவாசிகளின் பிள்ளைகள் நீதிமான்களாக்கப்படும் தெய்வீக கிருபையின் பங்காளிகளாக எண்ணப்படுவதாக அப்போஸ்தலர் அறிவிக்கிறார். இனி அவர்கள் தூய்மையற்றவர்கள் அல்ல என்றாலும், ஒரு தற்காலிகமான நிலையில் நீதிமான்களாக்கப் படுகிறார்கள். இந்த நீதிமானாக்கப்பட்ட நிலை மற்றும் தெய்வீக கவனிப்பும் மற்றும் முன்னேற்பாடுகளுக்கான அதன் தொடர்பும் குழந்தைகளின் பிறப்பு முதல் விவேகமுள்ளவர்களாக வளரும் வரை அவர்களை பாதுகாக்கும். மேலும் அத்தகைய குழந்தைகள் ஜெபத்தின் விஷயத்திலும் நீதிமானாக்கப்பட்ட அதே சிலாக்கியத்தை பெறுகிறார்கள். அதற்கேற்ற விகிதத்தில் சந்தோஷங்கள் மற்றும் ஆசீர்வாதங்களையும் அதன் பலனாக பெறுகிறார்கள். தங்களுடைய பெற்றோரின் சர்வவல்லமையுள்ள தேவனை, தங்களுடைய தேவனாக ஏற்றுகொள்வதற்கு ஆரம்பத்திலிருந்தே குழந்தைகளுக்கு கற்பிக்க வேண்டும். மேலும் பெற்றோர் கிறிஸ்துவின் வழியாக தேவனோடு தொடர்புகொள்கிறார்கள் என்பதைப் சிறு வயதிலிருந்தே அவர்கள் புரிந்துக்கொள்ளும்படிக்கு அவர்களுக்கு கற்பிக்கவேண்டும். இப்படியாக மறைமுகமாக அந்த குழந்தைகளும் கிறிஸ்துவுடனான அதன் நிலைப்பாட்டையும் தொடர்பையும், பெற்றோர் மூலம் பெற்றுக்கொள்வார்கள். ஒவ்வொரு கிறிஸ்தவ வீட்டிலும் அர்ப்பணிக்கப்பட்ட பெற்றோர் அல்லது பெற்றோர்கள், ஒரு விதத்தில் விசுவாச வீட்டின் ஆசாரியர்களாக கருதப்படுகிறார்கள். தேவனிடம் ஜெபிக்க, குழந்தைகள் சரியாக ஊக்கவிக்கப்படும் போது, அர்ப்பணிக்கப்பட்ட பெற்றோர் அல்லது புது சிருஷ்டியின் அங்கத்தினர்கள், குடும்பம் மற்றும் அதன் அனைத்து காரியங்களும், அதன் நலன்களும் ஒரு தெய்வீக மேற்பார்வையில் உள்ளன என்ற பாடத்தை, தங்களுடைய பிள்ளைகளுக்கு, கற்பிக்கவேண்டும். அந்த பிள்ளைகளின் மனது, நியாயத்தீர்ப்பின் அறிவை சரியாக புரிந்துகொண்டு தேவனிடம் தன்னை முழுமையான ஒப்புக்கொடுப்பதற்கு, சரியாக அனுமதிக்கப்படும் நேரத்தை ஆவலுடன் எதிர்நோக்குவதற்கு கற்ப்பிக்கப்படவேண்டும். இதனால் அத்தகைய பிள்ளை வாக்களிக்கப்பட்ட சிறப்புரிமைகள் மற்றும் சந்தோஷங்களுக்குள் பிரவேசிப்பார்கள்.

## 28. ஜெபத்தின் மூலம் ஒருவருக்கொருவர் நலன்களை நாம் எவ்வாறு கவனிக்க வேண்டும்?

**R3223 [col. 2 :5]:**

சாமுயேலின் மேன்மையான வாழ்க்கை, பல்வேறு சூழ்நிலைகளை, கர்த்தருடைய பிள்ளைகள் மாதிரியாக பின்பற்றலாம். நமக்கு நெருக்கமாகவும், அன்பாகவும் இருப்பவர்களுக்கு, நம்முடைய அன்பும் இரக்கமும் அவசியமானது. மேலும் நம்முடைய அன்பான எஜமான் நமக்குக் காட்டியபடி, நம்முடைய எதிரிகளுக்காகவும் ஜெபித்து, அவர்களின் நலனை விரும்பவேண்டும். நம்முடைய எதிரிகளுக்காகவும் நமது ஜெபங்கள் இருக்கவேண்டும் மற்றும் அவர்களுக்குப்புரிதலின் வாய்ப்பினைக் கர்த்தர் தமது பராமரிப்பில் வழங்கவேண்டும் என்றும், தெய்வீக ஞானத்தின் இத்தகைய அனுபவங்கள், கர்த்தருடன் முழுமையாக ஒத்துப்போகவேண்டி அவர்களின் உன்னத நலனுக்காக இருக்கிறது என்றும், இதனால் நம்மிடமும்

மற்றவர்களிடமும் அவர்கள் மீண்டும் இணக்கமாக வர வேண்டும் என்றும் நம்முடைய நல்வாழ்த்துக்கள் இருக்கவேண்டும். தங்களுடைய நியாயாதிபதியாகவும், ஆளுனராகவும் இராதபடிக்கு தீர்க்கதரிசி நீக்கப்பட்டிருந்தாலும், தேவனுடைய முன்னேற்பாட்டில்,அவர்களுக்கு சேவை செய்ய அவர் அனுமதிக்கும் வரை, அவர்கள் அவரது உதவியை ஏற்றுக் கொள்ளும் வரை, சரியான வழியில் அவர்களை பயிற்றுவிப்பாளராக இருப்பதிலிருந்து அவர் பின்வாங்க மாட்டார் என்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார்.

**R1842 [col. 2 :4]:**

மரணத்திற்கு ஏதுவான பாவம் செய்யாதவர்களின் சார்பாக பரிந்துரைக்கப்பட்ட ஜெபத்தின் மதிப்பின் ஒரு வகை இங்குள்ளது. (Iயோவான் 5:16) இப்படிப்பட்ட அனைவருக்காகவும் ஜெபிக்கக்கூடிய இந்த கடமையையும் சிறப்புரிமையையும் நாம் மனதில் கொள்வோம். மேலும் நம்மை ஊக்குவிக்கும்படியாக, தேவன் அவருடைய பழைய ஏற்பாட்டின் விசுவாசிகளுடன் நடந்துகொண்ட விதத்தை நினைவில் கொள்வோம். மேலும், தேவனுக்கு எதிராக விசுவாசமற்ற காரியங்களை நோக்கி அணுகும் எந்தவொரு விஷயத்திலும் நாம் எச்சரிக்கையாக இருப்போம். அதாவது அவருக்கு எதிராக கலகம் செய்து எகிப்தாகிய உலகத்திற்கு திரும்புவதற்கான எந்தவொரு மனநிலையையும் பெறவேண்டாம். மேலும் விசுவாச குறைவு, கடந்த நாட்களில் தேவன் நம்மை வழிநடத்தினதையும், அவர் செய்த அனைத்து உதவிகளுக்காக அவரை பாராட்டுவதிலும், புகழ்வதிலும் குறைவுப்படுவதை குறிக்கிறது. ஆகவே, இனி வரும் நாட்களில் அவரை விசுவாசிப்பதற்கும் தவறிவிடுவோம்.

## 29.விசுவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தொடர்பு என்ன?

யாக்கோபு1:6 " ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்.".

மாற்கு 11:24 " ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன். "

**R2005 [col. 2 ¶1-4]:**

நம்முடைய ஜெபங்கள் "வீண் வார்த்தைகளாகவும்" நாம் எதிர்பார்க்காதவற்றிற்கான முறையான கோரிக்கைகளாகவும் இருக்கக்கூடாது. நாம் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கவேண்டும். (யாக்கோபு1:6) மேலும் நீங்கள் எவைகளை கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளை பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், ஏனெனில் விசுவாசத்தினால் வராத யாவும் பாவமே. -மாற்கு11:11,24, ரோமர் 14:23. தேவனுடைய பிள்ளை தனது தந்தையின் வார்த்தைக்கு நெருங்கிய மாணவனாக இருக்கவேண்டும். ஏனெனில், அவருடைய சந்தோஷம் நிறைவாகும்படி, அவர் பெற்றுக்கொள்ளக்கூடியதை கேட்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், தனது தந்தை வழங்க விருப்பமுள்ள காரியங்களை மட்டுமே கேட்க வேண்டும் அவர் எச்சரிக்கப்படுகிறார். அவைகளையும் விசுவாசத்தோடே மட்டுமே கேட்கவேண்டும், இல்லாவிட்டால் பெற்றுகொள்ள முடியாது. மற்ற காரியங்களைப் போலவே, இந்த ஜெபத்தின் விஷயத்திலும், நம்முடைய பரலோக தகப்பன், அவருடைய ஜனங்களுக்குள் விசுவாசத்தை வளர்க்கும்படியாக, வடிவமைத்திருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. "விசுவாசம் இல்லாமல் தேவனுக்கு பிரியமாக இருப்பது கூடாத காரியம்" என்றும், "உங்கள் விசுவாசமே இந்த உலகத்தை ஜெயிக்கும் ஜெயம்" என்றும் அவர் கூறுகிறார். ஆகவே, விசுவாசத்தை நடைமுறைப்படுத்துபவர்களும், வாக்குறுதியளிக்கப்பட்ட இரக்கங்களை ஜெபத்தில் கேட்பவர்களும் மட்டுமே தேவனுடைய நியாயத்தீர்ப்பு மற்றும் ஏற்பாட்டின் படி அவற்றைப் பெற ஆயத்தமாக இருப்பார்கள். இப்படி இருக்கும்போது, "ஆண்டவரே, எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும்" என்று அப்போஸ்தலர்கள் போலவே, இன்றும் தேவனுடைய ஜனங்களின் ஜெபமாக இருக்கவேண்டும். இவ்வாறு ஜெபிப்பதும், இந்த நோக்கத்திற்கு முடிவு பரியந்தம் உழைத்தால், ஒருவருக்கொருவர் இந்த உலகத்தையும் அதன் நம்பிக்கையற்ற தாக்கங்களையும் மேற்கொள்வதற்கும் மேலும் மேலும் உறுதியாக இருக்கும். உண்மையான விசுவாசம் எளிதில் நம்பக தன்மையுடைது அல்ல. இது நெருக்கடியானது (critical), நல்ல ஆதரங்களை மட்டுமே நம்புகிறது. இது மனிதர்களின் போதனைகளுக்கும் தேவனுடைய ஆதாரமான வார்த்தைக்கும் உள்ள வித்தியாசத்தை தெளிவாகவும் நெருக்கமாகவும் வேறுபடுத்தி காட்டுகிறது. ஆனால் தேவனுடைய வார்த்தையை கண்டறிந்த பின்னர், அதன் ஆசிரியர் பொய் சொல்ல இயலாதவர் என்பதை அறிந்து

அவருடைய நோக்கங்கள் மற்றும் வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்பதை மறைமுகமாக நம்புகிறது.

**F691 [2]:**

"உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும், ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்.." என்று யாக்கோபு கூறி, முன்னறிவிக்கப்பட்ட வரவிருக்கும் ஆசீர்வாதங்களையும், நம்முடைய நிகழ்கால சுதந்திரங்களையும் அடைவதற்கும், அவைகளை தக்கவைத்துக்கொள்வதற்கும் விசுவாசம் எவ்வளவு அவசியமானது என்பதை அப்போஸ்தலன் யாக்கோபு தெளிவாகக் காட்டுகிறார். ஏனெனில் சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக, இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்." (யாக்கோபு1:5-8 ) எனவே விசுவாசத்தில் வலுவற்று இருந்தால், ஒருவரும் வெற்றி அடைய முடியாது என்பதை அப்போஸ்தலர் காட்டுகிறார். ஆகவே, வேத வசனங்கள் எல்லா இடங்களிலும் விசுவாசத்தின் வளர்ச்சியைத் துாண்டுகிறது. மேலும் அப்போஸ்தலர்களை போல, தேவ ஜனங்கள் எல்லாரும், "எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கவேண்டும்" என்றே ஜெபிக்கவேண்டும். இவ்வாறு ஜெபித்து, இந்த ஜெபங்கள் நிறைவேற்றப்படுவதற்கு தேவன் வடிவமைத்துள்ள வழிகளை அவர்கள் பயன்படுத்தவேண்டும். அவர்களின் ஜெபம் நேர்மையாக இருந்தால் அவர்கள் அந்த வழிகளை ஆர்வத்துடன் அல்லது உண்மையுடன் பயன்படுத்துவார்கள்- அவர்கள் ஜெபத்தில் கர்த்தரைத் தேடுவார்கள், அவருடைய வார்த்தையை அறிந்துகொள்ள முற்படுவார்கள், அதைக் கீழ்படிந்து, அவருடைய தேவையை நாடி மகிழ்வார்கள், ஆவியின் கனிகளை தரித்துகொள்ள முற்படுவார்கள், இதுவே அவர்களின் அணுகுமுறையாக இருப்பதால், அவர்களுக்கு வலுவான நம்பிக்கை மற்றும் விசுவாசத்தின் முழு உறுதி பெறுவார்கள். ஆனால் குறித்த காலத்தில் நம்முடைய ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் அவர்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்-2பேதுரு 1:10,11

**R3664 [col. 1 :4, 5]:**

அர்த்தசஷ்டாவின் பார்வையில் நெகேமியாவுக்கு இரக்கம் கிடைக்கும்படி, அவர் தேவனிடம் ஜெபித்தது, தெய்வீக வல்லமையின் மேல் அவர் கொண்டிருக்கும் விசுவாசத்தைக் காட்டுகிறது. இதற்கொத்த விசுவாசத்தின் குறைபாடே கர்த்தருடைய உண்மையாக அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களின் - இன்றைய ஆவிக்குரிய இஸ்ரயேலினுடைய உபத்திரவத்தின் ஒரு பகுதியாக இருக்கிறதோ இல்லையோ என நாம் அடிக்கடி யோசிக்கிறோம். சில சமயங்களில் அவர்களை வெறுப்பவர்களிடமிருந்தும், பகைப்பவர்களிடமிருந்தும், அநியாயமாக நடந்துகொள்பவர்களிடமிருந்தும் கடுமையான சோதனைகள் வருவதை நாம் அறிவோம். மேலும் நெகேமியாவை போல நாம் அவருடைய பணியில் ஈடுபட்டுக் கொண்டு, அந்த பணியை அவர் ஏற்றுகொள்வதற்கு அவர் விரும்புகையில், நாம் அவருடைய பார்வையில் இரக்கம் பெற்றால், நம்முடைய உதடுகள் மற்றும் இருதயத்தின் ஜெபங்கள் ஒரு நினைவுச்சின்னமாக, கிறிஸ்துவின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டால், நமக்கு முன் வழிகளையும், வாய்ப்புகளையும் திறப்பதற்கு தேவன் முழு வல்லமை பெற்றவர் என்று அவர்கள் எந்த அளவிற்கு நினைவில் வைத்திருக்கிறார்கள் என்று நாம் எண்ணுகிறோம்.

இது தொடர்பான ஒரு கதையை மாநாட்டில் ஒரு சகோதரி எங்களிடம் கூறினார். அவள் : "என் கணவர் மிக பெரிய செல்வந்தர், ஒரு பெரிய பண்ணை மற்றும் அதிகமான இருப்பு வைத்திருக்கிறார். நான் பல ஆண்டுகளாக விசுவாசத்தை முழுமையாகச் சேவித்திருந்தும், அவர் சத்தியத்தை மிகவும் எதிர்க்கிறார். எனவே மிக சிறிய விஷயங்களில் கூட, அதாவது எனக்கு தேவையான புத்தகங்களை வாங்குவதற்கோ அல்லது சந்தா செலுத்துவதற்கான சிறிய தொகையைக்கூட அவர் மறுத்துவிட்டார். இந்த மாநாட்டைப் பற்றி நான் கேள்விப்பட்டபோது, கர்த்தருடைய அன்பான ஜனங்களை சந்திக்க வேண்டும் என்று என் இருதயத்தில் ஒரு ஏக்கத்தை உணர்ந்தேன். ஆகையால், இது அவருடைய மனமகிழ்ச்சியாக இருந்தால், நான் மாநாட்டில் கலந்து கொள்ளும் அந்த பாக்கியத்தை பெரிதும் அனுபவிக்க வேண்டும் என்று தேவனிடம் ஜெபித்தேன். ஆனால் இந்த விஷயத்தை முழுமையாக அவரிடம் விட்டுவிட நான் தயாராக இருந்தேன். நான் செல்வதற்கான வழியை தேவன் எப்படியாவது சாத்தியமாக்குவார் என்று நான் உணர்ந்தேன். மாநாட்டில் கலந்து கொள்ள நான் மிகவும்

விரும்புகிறேன் என்று சரியான நேரத்தில் என் கனவரிடம் கூறினேன். அவர் மிகவும் கடுமையாக எதிர்த்தார், மேலும் ரயில் நிலையத்திற்கு செல்லும் தூரத்தை என்னால் நடக்க முடியாது என்றும், அதற்கு குதிரையைப் பயன்படுத்த அவர் என்னை அனுமதிக்க மாட்டார் என்றும் கூறினார். எனக்கு தெரியாது என்று நான் மிகவும் அமைதியாக பதிலளித்தேன். ஆனால் நான் செல்வதை தேவன் விரும்பி, எப்படியாவது எனக்கு வழியை ஆயத்தப்படுத்துவார் என்று நான் உணர்ந்தேன். நான் இந்த விஷயத்தை முழுவதுமாக தேவனிடம் ஒப்புக்கொடுத்தபடியால், அவருடைய எந்த ஆதரவையும் பெற்று கொள்ள நான் விருப்பமுள்ளவளாக இருந்தபடியால் நான் அமைதியாக பதிலளித்தேன். நான் இன்னும் மகிழ்ச்சியாக இருந்தேன். ஆகையால் என் கணவரின் வார்த்தைகளை நான் எதிர்க்கவில்லை. அவர் எனது உறுதியான எதிர்பார்ப்பைப் அறிந்ததாக தோன்றியதால், பல முறை இந்த விஷயத்தைக் குறித்து, நான் போகக்கூடாது என்றும், குதிரையை எடுத்துச் செல்ல கூடாது என்றும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். எனக்குத் தெரியாது என்று நான் வெறுமனே பதிலளித்தேன், ஆனால் நான் போக வேண்டும் என்பது தேவனுடைய விருப்பம் என்றால், அவர் வழியைத் திறக்க முடியும் என்றேன். மாநாட்டிற்கு சுமார் பத்து நாட்களுக்கு முன்பு எனது கணவரின் சிறந்த குதிரைகளில் ஒன்று நோய்வாய்ப்பட்டது. அவர் ஒரு கால்நடை மருத்துவரை அழைத்து வந்து சிறந்த மருத்துவத்தை மிகவும் வெற்றிகரமாக செய்த போதிலும், அந்த குதிரை இறந்துவிட்டது. அடுத்து ஒரு குதிரை நோய்வாய்ப்பட்டு, இறந்தது, அதற்கு பின் மூன்றாவது குதிரை நோய்வாய்ப்பட்டது. தனது விவகாரங்களில் இது தேவனுடைய கரமாக இருக்கலாம் என்பதை உணரத் தொடங்கினார். மேலும் மாநாட்டிற்குச் செல்ல நான் ஒரு குதிரையையும் பயன்படுத்தக் கூடாது என்ற அறிவுப்புடன் அவரது இழப்புகளை தொடர்புபடுத்தினார். மாநாட்டின் விஷயத்தைப் பற்றி தானே பேசினார், தனது முந்தைய முடிவைத் மாற்றுவதற்கான வாய்ப்பை மிக லேசான முறையில் தெரிவித்தார். ஒரு வேளை கர்த்தர் வழியைத் திறப்பார் என்பதே என்னுடைய அமைதியான ஒரே பதிலாக இருந்தது. மூன்றாவது குதிரையும் இறந்துவிட்டது, "நீங்கள் மாநாட்டிற்குச் செல்லலாம்"என்று என் கணவர் என்னிடம் கூறினார்."

**30.ஜெபத்திற்கும் நன்றி செலுத்துவதற்கும் உள்ள தொடர்பு என்ன?**

**R3128 [col. 2 :3, 4]:**

தங்களையும், தங்கள் சொந்த ஞானத்தையும், சொந்த பலத்தையும், சொந்த திறமையையும் சார்ந்திருப்பவர்களுக்கு கவலைகளும், சுமைகளும் தவிர்க்க முடியாதவைகள். ஆனால் கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்கள், அன்பானவர்களாக, தெய்வீக குடும்பத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாக, தேவனுடைய பிள்ளைகள், அவரில் விசுவாசத்தோடு நிலைத்திருந்தால், சகலமும் உச்சிதமான நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்று மேலும் மேலும் தேவனுடைய வார்த்தையில் உறுதியளிக்கப்படுகிறது. அவர்கள் ஏன் சுமை சுமக்க வேண்டும் ? அவர்கள் ஏன் கவலைப்படவேண்டும் ? அவர்களின் நலன்களைக் காத்துக்கொள்பவர் உறங்குவதும் இல்லை தூங்குவதும் இல்லை. கிறிஸ்தவர்கள் தங்களை கவலையுடனும், பயத்துடனும், சுமைகளுடனும் காணும்போது, அவர்கள் விசுவாசத்தில் குறைவுள்ளவர்கள் என்பதற்கான ஆதாரமாக உள்ளது. நிகழ்தகவு என்னவென்றால் ஒருவேளை அவர்கள் தேவன் மீது சரியான விசுவாசம் கொண்டிருக்கும் அளவுக்கு வளரவில்லை, அல்லது அவர்களது "புமிக்குரிய காரியங்கள்" மற்றும் ஜீவனத்திற்குரிய பராமரிப்புகள், அவர்களுக்கும் கர்த்தருக்கும் இடையில் வருவதற்கு அவர்கள் அனுமதித்திருக்கவேண்டும். இதனால் அவருடைய அன்பிலும், பராமரிப்பிலும் நிலைத்திருப்பதற்கான நம்பிக்கையை அவர்கள் இழந்துவிடுகிறார்கள். அத்தகைய நிலையில் உள்ள அனைவருமே உடனடியாக பரலோக கிருபாசனத்தண்டைக்குச் சென்று இரக்கத்தைப் பெற்று, தெய்வீக வாக்குத்தத்தங்களினால் போஷிக்கப்படவேண்டும். இவ்வாறாக, அவர்கள் கர்த்தருக்குள் உறுதியாக வளர்ச்சி அடைந்து, அவருக்குள் நம்பிக்கை கொண்டால், வெளிப்புற நிலைமைகள் எப்படியாக இருந்தாலும், அவர்கள் விசுவாசத்தோடும், நம்பிக்கையோடும் இருதயத்தில் சமாதானத்தோடும் இருப்பார்கள்.

இதுவே அப்போஸ்தலரின் அறிவுரையாகவும் இருக்கிறது -- பதட்டமான நிலையில் தெடர்வதற்குப் பதிலாக, நம்முடைய குறைவான ஞானத்தை ஒப்புக்கொண்டவர்களாக, அவருடைய வாக்குத்தத்தம் செய்யப்பட்ட எல்லா முன்னேற்பாடுகளையும் கோரி, நம்முடைய எல்லா விவகாரங்களையும் கர்த்தருடைய சந்நிதியில் வைக்கவேண்டும். அதற்குபின் அவருடைய ஞானத்தையும், அன்பின் ஏற்பாடுகளையும்

மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு, ஒவ்வொரு வேண்டுகோளையும் நன்றி செலுத்தும் ஆவியோடு ஏறெடுக்கவேண்டும். நன்றி செலுத்தும் இந்த ஆவி, நாம் இருக்கும் சூழ்நிலைகள் மற்றும் நிலைமைகள் அனைத்தும் தேவனால் கண்காணிக்கப்படுகிறது என்பதையும் எதிர்காலத்திற்காக அவருடைய பராமரிப்பை நாம் நம்பி பாராட்டுவதன் அங்கீகரிப்பை குறிக்கிறது. நாம் பெற்றிருப்பதற்காக நன்றி செலுத்துவது மற்றும் இதுவரை தேவனுடைய வழிநடத்துதல்களை முழுமையாகப் புரிந்துகொள்வது, எதிர்காலத்திற்கான எந்தவொரு கவலையையும் தடுக்கும். ஏனென்றால், நாம் பாவிகளாக இருந்தபோதே, அவர் நம்மை ஆதரித்து மீட்டுக்கொண்டவர், கிறிஸ்து இயேசுவின் மூலமாக நாம் அவருடையவர்களாக இருக்கும் இந்நாட்களில் நமக்கு எவ்வளவு கிருபை அளித்து உதவுவார்.

**R3306 [col. 1 :7]:**

அப்போஸ்தலரால் குறிப்பிடப்பட்ட ஜெபம், வேண்டுதல் ஆகியவற்றின் அவசியத்தை நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். தேவனோடு நெருங்கிய ஐக்கியத்தில் வாசம் செய்பவர்கள் ஏற்கனவே அனுபவித்த அருட்கொடைகளையும் ஆசீர்வாதங்களையும் நன்கு உணர்ந்திருப்பதால், அவர்கள் இன்னும் அதிகமான ஆசீர்வதங்களை கேட்பதற்கான உணர்வைப் பெறுவதில்லை என்பதை நாம் கவனிக்கிறோம். மாறாக முன்னதாகவே பெற்ற நன்மைகளுக்கு உணர்வோடு நன்றி செலுத்துபவர்கள், அவர்கள் இனி கேட்பதற்கும் அல்லது அவர்கள் நினைத்ததை விட அதிகமாகவும் தேவனிடம் இருந்து பெறுவதற்கு அதிக பாத்திரவான்களாக இருக்கிறார்கள். மேலும் நாம் முன்னதாகப் பெற்ற நன்மைகள், வாக்குத்தத்தம் செய்யப்பட்ட வரக்கூடிய ஆசீர்வாதங்களுக்கு, ஒரு முன்னோடியாக fore taste உள்ளது.

**R2866 [col. 1 :3]:**

தெய்வீக முன்னேற்பாட்டின் சிறப்பு வெளிப்பாடுகளை குறிக்கும் ஒரு முறையை யாக்கோபு பெற்றிருந்தார். அதாவது அடையாளமாக அவர் தேவனுடைய முகத்தை பார்த்து, அவருடைய வெளிச்சத்தை கண்டு, அவருடைய ஆசீர்வாதங்களை பெற்றுகொண்ட பாக்கியத்தை நினைவுக் கூரும்படியாக, தேவதூதரோடு போராடின அந்த இடத்திற்கு பெனியேல் என்று பெயரிட்டார். இதேபோல், தேவனுடைய சகல விதமான இரக்கங்களையும், முன்னேற்பாடுகளையும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய நாம் பெற்றுகொள்வதற்கு சில விசேஷித்த முறைகளை குறிப்பாக கையாளவேண்டும். பலர் தேவனுடைய தயவையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுகொண்டபோது, அவைகளை தங்களுடைய இருதயங்களில் சரியான பதிவுகளாக முத்திரிக்க தவறியதால், அவைகளை பொறுத்தவரையில் அவர்கள் மிகவும் எளியவர்களாக உணர்கிறார்கள். தெய்வீக இரக்கங்களை பெறும் நேரம், சிறப்பான குறிப்புகளாக அவைகளை நினைவில் கொள்வதற்கு, ஞாபகத்தில் பதிவுச் செய்தல் அல்லது ஏதேனும் விதத்தில் அந்த ஞாபகங்களை புதுப்பித்து கொள்ளாவிட்டால், நாம் பெற்ற தெய்வீக இரக்கங்கள் மண்பாண்டங்களாகிய நம்மிடமிருந்து கசிந்து, விரைவாக தொலைந்துவிடும். நாம் அனைவரும் அதிகமான பெத்தேல்களையும், அதிகமான பெனியேல்களையும் கொண்டிருப்போம் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் சில வகையான நினைவுச்சின்னங்களை அமைப்பதற்கான வேலைகளை செய்து, மேலும் ஆண்டவரிடம் நாம் பெற்ற கிருபைகளுக்கு ஈடாக சில சிறப்பான உடன்படிக்கை அல்லது பொருத்தனைகளை செய்திருக்கிறோமா ? இந்த சிந்தனைக்கு ஏற்ப, பொதுவாக கிறிஸ்தவர்கள் எதிர்பார்ப்பதை காட்டிலும் பல ஆசீர்வாதங்களையும் இரக்கங்களையும் பெற்றுள்ளார்கள், சில ஆண்டுகளாக அலெஹேனி சபையில் ஒவ்வொரு புதன்கிழமை மாலை, வீடுகளில் ஜெபக்கூட்டங்களை நடத்தியது. இதில் ஜெபங்கள், துதிகள் மற்றும் சாட்சிகள் கொடுக்கப்பட்டது. மேலும் கொடுக்கப்பட்ட சாட்சிகள் "ஆண்டுகளுக்கு முன்பு" நடந்தவைகளாக இராமல், அந்த வாரத்தின் புதிய அனுபவங்கள் பகிர்ந்துகொள்ளப்பட்டது. ஒவ்வொருவரும் அனுதினமும் தெய்வீக அன்பு மற்றும் கண்காணிப்புக்கான புத்தம் புதிய ஆதாரங்களை நாடுகையில், ஒவ்வொருவராலும் அத்தகைய கவனம் மற்றும் குறியீடு இல்லாமலேயே தாங்கள் அறிந்திருந்ததைக்காட்டிலும் மனமகிழ்ச்சியடைவும் நன்றி செலுத்தவும் ஊக்கங்கிடைக்கவும் அதிக காரணம் இருப்பதைக் காணமுடியும். நம்முடைய விசுவாசத்தையும் மனமகிழ்ச்சியையும் அன்பையும் நாம் அதிகரிக்கும் பட்சத்தில் அனுதினமும் வாராவாரமும் ஆண்டு தோறும் நம்முடைய எபினேசரான தேவனானவரிடம் வளருவோமாக.

## 31. உபவாசத்திற்கும் ஜெபத்திற்குமுள்ள தொடர்பு என்ன?

**R2022 [col. 1:4 to end]—** சுத்திகரிப்புடன் உபவாசம் மற்றும் ஜெபம்.

நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கையின் கீழ் இல்லாவிட்டாலும், முற்பிதாக்களுடன் தேவனுடைய பரிவர்த்தனைகள் மற்றும் கடந்த கால வழக்கமான எற்பாடுகளை நாம் தனியுரிமையுடன் திரும்பிப் பார்க்கையில், மதிப்புள்ள சில பாடங்களை நாம் பெறலாம். பஸ்காவை அனுசரிப்பவர்கள், (சுவிசேஷ யுகத்தில், நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்துவோடு பங்கெடுப்பவர்களை அடையாளப்படுத்தும் )பொதுவாக தங்களை சுத்திகரித்து கொள்வதற்கு சகல விதமான புளிப்புகளை (பாவத்தின் அடையாளம்) தங்களிலிருந்தும், தங்களுடைய வீடுகளிலிருந்தும் வெளியேற்ற வேண்டும் என்ற உண்மையில் ஒரு பாடம் உள்ளது. யாத்திராகமம் 12:19,20; 13:7, யோவான் 11:55 ஐ பார்க்கவும்.

இஸ்ரயேலுக்கு நியாயப்பிரமாண உடன்படிக்கையை கொடுத்த அந்த பெரும் சந்தர்ப்பத்தில், கழுவுதல், சுத்திகரிப்பு போன்றவை கண்டிப்பாக கடைப்பிடிக்கப்பட்டது.(யாத்திராகமம் 19:15காண்க) மகா பெரிய மத்தியஸ்தராகிய கிறிஸ்துவின் கைகளினால் கிருபையின் புது உடன்படிக்கையை ஏற்படுத்துவதே இதன் நிஜமாகும். புது உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளும் அனைவரும் இன்னும் அதிகமான அளவில் சுத்திகரிப்பின் தன்மை தெளிவாக இருக்கவேண்டும்.

தேவன் விசேஷவிதமாக பதில் அளிக்கும் படியாக, தானியேல் தீர்க்கதரிசி விசேஷித்த வேண்டுகோள்களை ஏறெடுத்தபோது, அவர் தன்னை தான் "வருத்திகொண்டு" அதாவது தேவன் பிரியப்படக்கூடிய விசேஷித்த இருதயம் மற்றும் மன நிலையை தனக்குள் கொண்டுவருவதற்கு, தனக்குள் சுயக்கட்டுபாட்டை பழக்கப்படுத்தினார். (தானியேல் 10:2,3) அவருடைய நடவடிக்கை அவருக்கு உதவியாகவும், தேவனுடைய பார்வையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் இருந்ததாக கர்த்தருடைய தூதர் சாட்சியளித்தார் -" அவன் என்னை நோக்கி: பிரியமான புருஷனாகிய தானியேலே, நான் இப்போது உன்னிடத்திற்கு அனுப்பப்பட்டு வந்தேன்; ஆதலால், நான் உனக்குச் சொல்லும் வார்த்தைகளின்பேரில் நீ கவனமாயிருந்து, கால் ஊன்றி நில் என்றான்; இந்த வார்த்தையை அவன் என்னிடத்தில் சொல்லுகையில் நடுக்கத்தோடே எழுந்து நினறேன். அப்பொழுது அவன் என்னை நோக்கி: தானியேலே, பயப்படாதே; நீ அறிவை அடைகிறதற்கும், உன்னை உன்னுடைய தேவனுக்கு முன்பாகச் சிறுமைப்படுத்துகிறதற்கும், உன் மனதைச் செலுத்தின முதல்நாள் துவக்கி உன் வார்த்தைகள் கேட்கப்பட்டது; உன் வார்த்தைகளினிமித்தம் நான் வந்தேன்." (வசனங்கள் 11,12. 9:3,4-18,20,21ஐயும் ஒப்பிட்டு பார்க்கவும்)

நியாயப்பிரமாண உடன்படிக்கையில், உபவாசம் கழுவுதல்கள் மற்றும் சுத்திகரிப்புகள் ஆகியவை உலகத்திற்கு மாரித்தவர்களாகவும், சுயக்கட்டுப்பாட்டையும் அடையாளப்படுத்துகையில், எல்லா நேரங்களிலும் உண்மையான விசுவாசிகள் எந்த மனநிலையில் இருக்கவேண்டும் என்பதை நாம் உணரவேண்டும். ஆயினும், புதிய ஏற்பாட்டில் உபவாசத்தை கடைப்பிடித்ததற்கான நல்ல முன்மாதிரிகளும் காணப்படுகிறது. பின் வருவதைக் கவனியுங்கள்-

நம்முடைய கர்த்தர் அவருடைய வேலைக்கான தெய்வீக வழிநடத்துதலுக்காகவும், கட்டளைகளுக்காகவும், அவருடைய ஊழியத்தின் துவக்கத்தில் நாற்பது நாட்கள் உபவாசம் இருந்தார். அவர் இரகசியமாக எத்தனை முறை உபவாசித்தார் என்று நமக்கு தெரியவில்லை- மத்தேயு 4:2.

" நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப் போல முகவாடலாய் இராதேயுங்கள்; அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும்பொருட்டாக, தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு. அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார். " -- மத்தேயு 6:16-18;

"அதற்கு இயேசு: மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர் துயரப்படுவார்களா? மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும், அப்பொழுது உபவாசிப்பார்கள்." மத்தேயு 9:15

அந்தியோகியாவில் உள்ள சபையில், ஊழியம் செய்த பல சகோதரர்கள், ஜெபம் செய்து கொண்டு, உபவாசித்து தேவனுக்கு பிரியமானதைச் செய்ய முயன்றார்கள். இப்படிப்பட்ட ஆர்வமுள்ளவர் களிடமிருந்து தான், தேவன் பவுலையும் பர்னபாவையும் விசேஷித்த வேலைக்காக தேர்ந்தெடுத்தார். நம்முடைய ஆண்டவரின் சேவையில்

பயன்படுத்தப்படுவதற்கும், பயனுள்ள ஊழியம் செய்வதற்கும் விரும்பக்கூடிய அனைவருக்கும் எப்படிப்பட்ட ஒரு ஆலோசனை. அந்தியோகியாவில் உள்ள சபையில் இந்த விஷயத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்ததாக தோன்றுகிறது. ஏனெனில், அவர்களின் செலவில் ஆண்டவரின் பிரதிநிதிகளாக, அவர்களை அனுப்பும் போது, அவர்கள் உபவாசித்து, ஜெபித்து, ஊழியர்கள் மீது கை வைத்து, அனுப்பினார்கள். - அப்போஸ்தலர் 13:2,3.

அவரும் அவரது கூட்டாளிகளும் தேவனுடைய ஜனங்களுக்கு எவ்வாறு ஒப்புதல் அளித்தார்கள் என்பதைக் குறித்து, அவர் வாங்கின அடிகள், சிறைவாசங்கள் மற்றும் உபவாசங்களைப் பற்றி அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். சில துறவிகள் மற்றும் கன்னியாஸ்திரீகள் தங்களை தாங்களே அடித்துகொண்டு, தனிமையாக இருப்பதை போல் அப்போஸ்தலர்களை நாம் எண்ணிவிடாமல் "இயேசு மற்றும் உயிர்த்தெழுதல்" பற்றிய நற்செய்தியை அறிவிப்பதினாலும், ஆண்டவர் மேல் விசுவாசம் வைத்த காரணத்தினாலும் அவிசுவாசிகளின் கைகளில் உபத்திரவப்பட்டார்கள் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். ஆகவே, அதேபோலவே, சத்தியத்திற்கு ஊழியம் செய்வதன் காரணமாக, அவருடைய சில உபவாசங்கள் கட்டாயத்தினால் இருக்கலாம். மற்றும் அவை அனைத்தும் தேவனுடைய பார்வையில் ஏற்றுக்கொள்ளத்தக்கவை என்பதில் சந்தேகமில்லை - 2கொரிந்தியர் 6:5; 11:27

புகையிலை பயன்பாட்டை கைவிட வேண்டும் என்ற விருப்பத்தைப் பற்றி எங்களுக்கு எழுதியவர்களுக்கு... அல்லது அவர்களுக்குள் இருக்கும் எந்தவொரு பலவீனத்தையும் வெளியேற்றுவதற்கு விரும்புபவர்களுக்கு, அவர்களின் இருதயங்களை தொடர்ந்து சத்தியத்தால் கழுவவும், இடைவிடாமல் விழித்திருந்து ஜெபிப்பதோடு, கூட தேவனிடம் உங்கள் இருதயத்தின் அக்கறையின் அடையாளமாக சொல்லர்த்தமான ஜலத்தினால் குளித்து, அவ்வப்போது உபவாசிக்கலாம். இது உங்கள் ஜெபங்கள் வெறுமனே ஒரு தற்காலிக ஆடம்பரம் அல்ல, அது ஆழ்ந்த ஆர்வமுள்ள இருதயத்தின் ஆசை என்பதற்கு உங்களுக்கும் தேவனுக்கும் ஒரு சான்றாக இருக்கும்.

**R3659 [col. 2:2-5]—** ஆவிக்குரிய இஸ்ரயேலரின் உபவாசங்கள்

ஜெபம் மற்றும் உபவாசத்தில் ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு இருக்கும் நன்மை கேள்விக்கு அப்பாற்பட்டது. நம்முடைய விஷயம் எஸ்ராவின் கீழ் இருந்த இஸ்ரயேலரைப் போல் அல்ல, ஆயினும் சில ஒற்றுமைகள் உள்ளன. பூமிக்குரிய விரோதிகளுக்கு எதிராக நமக்கு பூமிக்குரிய பாதுகாப்பிற்கோ அல்லது பூமிக்குரிய ஆசீர்வாதங்களுக்கோ நமக்கு உத்திரவாதம் கொடுக்கப்படுவதில்லை. எவ்வாறாயினும், ஆவிக்குரிய இஸ்ரயேலர்களைப் பொறுத்தவரை, நமக்கு இன்னும் உயர்வான உத்திரவாதம் உள்ளது. ஏனெனில், நம்முடைய மதிப்பீட்டில் புது சிருஷ்டிகளாக நம்முடைய விருப்பங்கள் ஒப்பிட முடியாத அளவுக்கு பூமிக்குரிய நலன்களை விட உயர்ந்தவைகளும் மகத்தானவைகள். நம்மை வீழ்த்தக்கூடிய காரியம் எதுவாக இருந்தாலும், நாம் அவரை நம்பினால் அவர் அதை நன்மைக்கு ஏதுவாக மேற்கொள்வதற்கு சாத்தியமுள்ளவர் என்பதற்கான உத்திரவாதம் நமக்கு உள்ளது. மாறாக நம்முடைய பாதுகாப்பிற்காக உலகைப் பார்க்கும் போது, ஆண்டவருடைய கிருபையுள்ள வாக்குத்தத்தங்களை நாம் புரிந்துகொள்ள தவறிவிடுவோம். ஆபத்தை உணர்ந்துகொள்வதும், பயத்தை உணரும் அனுபவம், உண்மையில் நமக்கு ஒரு உயர்ந்த ஆசீர்வாதத்தை இருப்பதை நிரூபிக்கக்கூடும். ஆனால் அவைகளை உபவாசம் மற்றும் ஜெபத்தினால் மட்டுமே நம்மை தேவனிடத்தில் கொண்டு சேர்க்கும்.

நாம் பார்த்தது போல், உபவாசம் சுய கட்டுபாட்டைக் குறிக்கிறது. உணவை முற்றிலுமாக தவிர்ப்பதன் மூலம் உடலை பலவீனப்படுத்துவது கருத்தல்ல, மாறாக மிகவும் சுவையான உணவுகள், மகிழ்ச்சி அளிக்கும் காரியங்கள் போன்றவற்றிலிருந்து விலகுவதன் மூலம் உடலை ஒழுங்குபடுத்துவதாகும். இதுபோன்ற உபவாசங்கள் ஒன்றைத் தவிர வேறு வழிகளில் நமக்கு லாபகரமானவை என்பதில் சந்தேகமில்லை. அவை அதிக அழுத்தத்திலிருந்து உடல் அமைப்பை விடுவிப்பது மட்டுமல்லாமல், பலருடைய மனதை தெளிவுபடுத்துவதோடு, அதை மேலும் ஆவிக்குரிய ரீதியில் தீவிரமாகவும் ஆக்குகின்றன. இதன் தத்துவத்தை நாம் விளக்க முடியுமா இல்லையா என்றாலும் நாம் அனைவரும் இதை ஒரு உண்மையாக அங்கீகரிக்கிறோம். அனைத்து விசுவாசிகளுக்கு குறிப்பாக தேவனுக்கும் அவருடைய சித்தத்திற்கும் தங்களை பயபக்தியோடு, அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையை தொடங்கும் அனைவருக்கும், இயற்கையான உணர்ச்சிகளின் மனநிறைவை கட்டுபடுத்தவும், பொதுவாக இந்த உலகத்தையும் அதன் வசதிகளையும்

ஆசீர்வாதங்களையும் துஷ்பிரயோகம் செய்யாமல் பயன்படுத்துவதற்கும், அதாவது கிறிஸ்துவுக்குள்ளான புது சிருஷ்டிகள் உயர்ந்த நலன்களைப் பெறுவதற்கேற்ப அவைகளை பயன்படுத்துவதற்கும், நியாயமாக மற்றும் சரியான வழிகளில் உபவாசிக்க நாம் பரிந்துரைக்கிறோம். அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு, இது ஒரு நாளின் சம்பவம் அல்ல, இதுவே வாழ்க்கையின் ஜீவியமாகும். அவர்களுடைய அன்றாட நாளே உபவாசத்தின் நாளாகும். பாவமாக மதிக்கப்படும் எந்த ஒரு விஷயத்திலும் தன் சுய கட்டுப்பாட்டை வெளிப்படுத்தவேண்டும். மேலும் தன்னுடைய அல்லது பிறருடைய ஆவிக்குரிய நன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு விஷயத்தையும் செய்யாதபடிக்கு தன்னை கட்டுப்படுத்தவேண்டும்.

நம்முடைய உபவாசம் நம்முடைய ஞானஸ்நானத்தைப் போன்றது - இதற்கு திட்டவட்டமான ஒரு துவக்கமும், முடிவும் உள்ளது. இது நம்முடைய ஞானஸ்நானத்தில் துவங்கி மரணபரியந்தம் தொடர்ந்து, மரணத்தில் முடிகிறது. இப்படியாக சுயத்தை கட்டுப்படுத்தினவர்களும், உபவாசித்தவர்களுமே, சுயத்தை பலியிட்டு, உலகை ஜெயித்தவர்கள். இவர்களுக்கே நம்முடைய தேவன் விசேஷித்த ஆவிக்குரிய உதவிகளையும், சமாதானத்தையும், மகிழ்ச்சியையும், மற்ற அனைத்து ஆவிக்குரிய கிருபைகளையும், கனிகளையும் தற்போது வாக்களித்துள்ளார். மேலும் கால போக்கில்,கனம், மகிமை அழியாமை ஆகிய அனைத்து சந்தோஷங்களிலும் பரிபூரணத்திலும், இராஜ்யத்தின் நிறைவான நிலையிலும், அவருடைய ஐக்கியத்தில் நித்தியமாக ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

ஆகவே, இதற்காக நாங்கள் உபவாசித்தோம், எங்கள் தேவனிடம் மன்றாடினோம்..." என்று எஸ்றா கூறுகிறார். நம்முடைய பணியின் தலைமையான மகா பிரதான ஆசாரியரின் வழி நடத்துதலில், புதிய எருசலேமுக்கு பயணிக்கும் ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கே இந்த வசனம் முழுமையாக பொருந்தும். பாதுகாப்பிற்காகவும், நெருக்கமான வழியில் செல்வதற்கும், பயணத்தின் முடிவில் வெற்றிக்காகவும், இவர்களின் உபவாசம் மற்றும் ஜெபங்கள், முன்னதாகவே கேட்கப்பட்டு, அனைத்தையும் முன்கூட்டியே கொடுத்துவிட்டதாக தேவ வசனம் நமக்கு உறுதியளிக்கிறது. கேட்பவர்களுக்கு பரிசுத்த ஆவியைக் கொடுத்து, சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக நடத்தி, மகா பெரிய மேய்ப்பரின் வழிநடத்துதலின் கீழ் கொண்டுவந்து, இறுதியில் இராஜ்யத்திற்குள் கொண்டுவருவதே நம்முடைய தேவனுடைய மனமகிழ்ச்சியாக இருக்கிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், "நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்." (1தெசலோனிக்கேயர் 5:24) - நாம் அவரிடம் கேட்டவைகளை விட அதிகமாகவும், எதிர்பார்த்திடாத அளவுக்கும், அவர் வாக்குத்தத்தம் செய்த அனைத்தையும் நிச்சயம் செய்வார். இந்த முழு விஷயமும் நம்மிடம் உள்ளது :நம்முடைய அர்ப்பணிப்பு நம்முடைய கர்த்தருடைய மீட்பின் மீதான நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்திருந்தால், அது ஒரு முழுமையான மற்றும் நிறைவான அர்ப்பணிப்பாக இருக்கும். மேலும் நாம் அதில் நித்தமும் வாழ்ந்தால், அதன் முடிவகள் நாம் எதிர்பார்த்ததைவிட அதகமாக இருக்கும்.

### 32. அந்தரங்க ஜெபத்தின் மதிப்பு என்ன?

**F686 [¶3] through F687 [¶1]:**

தேவனுடைய பிரசன்னத்தை அணுகுவதற்கும், விசுவாசத்தினாலே மகா பரிசுத்தமான ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கும், கிருபாசனத்தண்டை நெருங்குவதற்கும், கிருபை பெறுவதற்கும், தேவைப்படும் ஒவ்வொரு நேரத்திலும் உதவிப் பெறுவதற்கும் நாம் பெற்ற இந்த மாபெரும் பாக்கியம், நம்மை சுற்றியுள்ள எந்த வேறுப்பட்ட சூழ்நிலைகளுக்கு ஏற்றதாக இருக்கலாம்.

நாம் தேவனிடம் தனியாக நெருங்கி, அவரோடு தொடர்பு கொள்வதற்கும், அவருடைய இரக்கத்தால் ஐக்கியப்படுவதற்கும் -- இந்த பாக்கியம் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக நமக்கு கொடுக்கப்பட்டது. இது நம்முடைய கவனத்தை சிதறடிக்கும் விஷயங்களிலிருந்து பிரித்து, உண்மையில் மற்றவர்களின் கூடுகை பிரிவுகளிலிருந்து பெறப்படும் மகிழ்ச்சியை அனுபவிக்கும். இது சாத்தியமற்ற இடங்களில் மற்றும் முழங்கால்கள் வணங்குவதற்கும், அமைதியாக குரல் எழுப்புவதற்கும் சந்தர்ப்பம் இல்லாதபோது, மனதில் தந்தையோடு அணுகுவதே புது சிருஷ்டிகளின் பாக்கியம். குழப்பங்களும், கொந்தளிப்புகளும் சூழப்பட்டு, தெருவில் இருக்கும் போது, ஞானத்தையும் பலத்தையும் பெறும்படி இருதயம் கிருபாசனத்தண்டைக்கு எடுத்து செல்லப்படும். இது எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்ட பாக்கியம்! அவற்றை அதிகமாக பயன்படுத்துபவர்கள் அதிகமாக மகிழ்கிறார்கள். பூமிக்குரிய விஷயங்களைப் போலல்லாமல், அவை மிகவும் பழக்கமானவையாக

மாறும்போது அவை மிகவும் விலைமதிப்புள்ளதாக இருக்கும்.

### 33. குடும்ப ஜெபத்தின் சிறப்பு நன்மைகள் யாவை

**F687 [2]:**

குடும்ப வட்டத்தில் உள்ள ஜெபம், குடும்பத்தை உலகத்தைவிட்டு பிரித்து, தேவனுடைய பிரசன்னத்தில் "இரகசியமாக நெருங்க" செய்கிறது. இது எப்போதும் சத்தியமாகாது, ஆனால் வாய்ப்பு கிடைக்கும்போது, இது புறக்கணிக்கப்படக்கூடாது. எவ்வாறாயினும், சாதகமான சந்தர்ப்பத்தை உருவாக்க முடியா விட்டாலும், நம்முடைய இருதயத்தின் விருப்பத்தை தேவன் ஏற்றுகொண்டு, அதற்கேற்ப ஆசீர்வாதங்களை வழங்குவார் என்பதில் சந்தேகமில்லை. குடும்ப பலிபீடம் மற்றும் அங்கே இருந்து பரலோகத் தகப்பனிடம் ஏறெடுக்கப்படும் ஜெப தூபத்தின் தாக்கங்கள் மற்றும் அவருடைய கிருபை, இரக்கம், வல்லமை மற்றும் ஆசீர்வாதங்கள் ஆகியவற்றால் செய்யப்பட்ட ஒப்புதல், குடும்பத்திற்கு ஊழியம் செய்யும் இராஜரீகமான ஆசாரியர்களுக்கு மட்டும் அல்ல, அந்த குடும்பத்தின் ஒவ்வொரு நபர்களுக்கும் கூடுதலான ஆசீர்வாதங்களைக் கொண்டுவருது உறுதி. தேவன் மீதான பக்தி உணர்வு, பொறுப்பு, அவரது அன்பின் உணர்வுகள், பாதுகாப்பான பராமரிப்பு, அந்த நாள் முழுவதும் அந்த குடும்பத்தோடு செல்லும். மாலையில் மீண்டும் ஒரு குடும்பமாக கூடுவதற்கான வாய்ப்பு கிடைத்தால், தெய்வீக இரக்கங்களுக்காக நன்றி செலுத்தும்போது, விதவையின் பாத்திரத்தில் உள்ள எண்ணெய் கொண்டுவரப்பட்ட எல்லா பாத்திரங்களையும் நிரப்பினது போல, ஆசீர்வாதம் அதிகரிக்கும். 2இராஜாக்கள் 4:1-7

### 34.சபையில் ஜெபத்தின் மதிப்பு என்ன?

**F687 [3]:**

சபையில் ஜெபம் என்பது, தேவனுடைய குடும்பம் உலகத்திலிருந்து பிரிந்து, தெய்வீக பிரசன்னத்தில் "இரகசியமாக நெருங்குவதாகும்." சபையின் முன்னேற்றம், ஆரோக்கியம், ஆவிக்குரிய வளர்ச்சிக்கு இது மிகவும் அவசியம். ஜெபத்தை புறக்கணித்தால், வல்லமை, சிலாக்கியம் மற்றும் ஊழியத்தில் நிச்சயமாக இழப்பு நேரிடும் மேலும் அதற்கேற்ப மகிழ்ச்சியையும் இழக்கவேண்டும். நாம் முழுமையாக இரக்கத்தைவிட்டு வெளியேற்றப்படுவோம். எவ்வாறாயினும், பாஸ்டன் செய்தித்தாளில் Boston news paper, பொது ஜெபத்தின் விதத்தைக் குறித்து, ஒரு மதக் கூட்டத்தில் குறிப்பிடும் போது, " ரெவரெண்ட் டாக்டர் .......... பாஸ்டன் பார்வையாளர்களுக்கு மிக அழகான மற்றும் நலமிக்க சொற்பொழிவு ஜெபத்தை வழங்கினார்." தேவனிடம் ஜெபிப்பதற்குப் பதிலாக பார்வையாளர்களிடம் ஜெபிப்பதே அதிகமாக இருந்தது. இந்த வேதவாக்கியங்கள் கர்த்தருடைய ஜனங்களிடையே பொதுவான மற்றும் கேட்கக்கூடிய ஜெபங்களை ஊக்கவிப்பதோடு, ஜெபிப்பவர் தம்முடைய ஊழியத்துடன் தனது பார்வையாளர்களின் தொடர்பை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதையும், கேட்பவர்கள், "ஆமென்" என்று கேட்குபடியாகவோ, இருதயத்திலோ சொல்லக்கூடிய வகையில் அவர் ஜெபிக்கவேண்டும் என்று கேட்டுகொள்ளப்படுகிறது. 1கொரி14:13-17

### 35. வெளிப்படையான பொது ஜெபங்களுக்கு அங்கீகாரம் உள்ளதா?

**R2023** "பொது ஜெபங்கள் அங்கீகரிக்கப்படுமா?"

பாடத்தின் இறுதியில் பதிலை காணலாம்.

### 36.தேவனுடைய வார்த்தையைப் படிப்பதற்கும் துவங்கும்போதும், முடிக்கம் போதும், வெளியரங்கமாய் ஜெபிப்பதன் அவசியம் என்ன?

**F688 [1]:**

ஒரு புதிய நகரத்திற்குள் கூடியிருந்தவர்களுக்கு, சுவிசேஷத்தை அறிவிக்கும்படி சென்ற அப்போஸ்தலனாகிய பவுலை, பரத்திலிருந்து வந்த ஞானமாகிய, பரிசுத்த ஆவியே வழிநடத்தியது. (அப்போஸ்தலர் 16:13) மேலும், அவர்களின் சந்தோஷம் நிறைவாகும்படிக்கு, அவருடைய ஜனங்கள் மத்தியில், ஒருவருக்கொருவர் ஜெபிக்கும் ஜனங்களை அறிவும், தேவனுடைய அன்பும் அபரிமிதமாக சூழ்ந்து கொள்ளும் என்பதே உண்மை. எவ்வாறாயினும், தேவனுடைய ஜனங்கள், அவருடைய வார்த்தையைப் படிப்பதற்காகவும், ஒருவரையொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டியெழுப்புவதற்காகவும் பல கூடுகைகளை ஏற்பாடு செய்திருக்கலாம். எப்படிப்பட்ட ஊழியமும், தேவனுடைய ஆசீர்வதம் இன்றி தொடங்கப்படுவது முறையானது அல்ல என்றும் அதேபோல தேவன் அளித்த ஆசீர்வாதங்களுக்காகவும், சிலாக்கியங்களுக்காகவும் நன்றி தெரிவிக்கும் வரை எந்த கூடுகையும் சரியாக முடிக்கப்படுவதில்லை என்று நாம் பரிந்துரைக்கிறோம்.

### 37.ஜெபம் மற்றும் சாட்சி கூட்டங்களை பொறுத்தவரையில் சில நல்ல ஆலோசனைகள் என்னென்ன?

**F314 [¶5]:**

தேவனுடைய ஜனங்களின் கூடுகைகளில், பக்தியுள்ள ஆராதனைகள் மட்டுமே நடத்தப்படாமல், அதோடு கூட சகோதரர்கள் பேசுவதை கேட்டு, அவர்கள் வாயினால் அறிக்கையிட்டு, அதாவது தேவன் மேல் அவர் கொண்ட பக்தியை ஜெபத்திலோ அல்லது சாட்சி கொடுப்பதிலோ ஒவ்வொருவர் பெற்ற நன்மைகளுக் கான அனுபவங்கள் காண்பிக்கப்படவேண்டும்.

**F319 [¶1] through F322.** இதை பாடத்தின் முடிவில் காணலாம்.

### 38.பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப் படுவதற்கு பெறுவதற்கு ஜெபிப்பது சரியானதா?

**E211 [1] through E216** பாடத்தின் முடிவில் காணலாம்.

**F445 [1]:**

இயேசுவை பொருத்தவரை, யூதர்களிடம் யோவான் ஸ்நானகன் பேசின வார்த்தைகள் ஏற்கனவே நம்முடைய கவனத்தை கணிசமாக ஈர்த்துள்ளது. ".. அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்."(மத்தேயு3:11) இவ்வாறு விசுவாசமுள்ள இஸ்ரயேலர் மீது பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்தையும், தேவனுடைய கோபத்தின் அக்கினியையும் சுட்டிக்காட்டுகிறது. "அவர்கள் மேல் கோபாக்கினை பூரணமாய் வந்திருக்கிறது." (1தெசலோனிக்கேயர் 2:16) அந்த தேசத்தின் எஞ்சிய பகுதிகளுக்கு இது வந்தது. அக்கினியின் ஸ்நானம் ஒரு ஆசீர்வாதம் அல்ல, சில நேரங்களில் கிறிஸ்தவ ஜனங்கள் அதற்காக ஜெபிப்பதும் புத்திசாலித்தனம் அல்ல. யூத யுகத்தின் முடிவில் அந்த தேசத்தின் "பதர்கள்" மீது அத்தகைய ஞானஸ்நானம் வந்ததுபோலவே, இந்த யுகத்தின் முடிவிலும் கிறிஸ்தவமண்டலத்தின் "களை" வகுப்பாரை "அக்கினி" பட்சிக்கும் என்று நம்முடைய ஆண்டவர் குறிப்பிடுகிறார் - இது திகிலூட்டும் உபத்திரவத்தின் அக்கனி ஸ்நானம், "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்..." (தானியேல் 12:1)

### 39. அர்ப்பணித்தவர்கள் உடல் ரீதியான சிகிச்சைக்கு ஜெபிக்கலாமா?

**R2837 [col. 2 4] through R2838 [col. 1 3]:**

தேவனுடைய ஜனங்களை பொருத்தவரையில் ஜெபத்திற்கு பதில் அளிக்கும்படியாக அற்புதமான சுகத்தை எதிர்ப்பார்க்கக்கூடாது அல்லது அதற்காக ஜெபிக்கவும் கூடாது என்று நாம் எண்ணுகிறோம். தேவனுடைய ஜனங்கள் அனைவரும் நிச்சயமாக கிருபாசனத்தண்டைக்கு வரவேற்கப்படுகிறார்கள். மேலும் அவர்கள் தங்கள் அனைத்து சுமைகளையும் கவலைகளையும் அங்கு கொண்டு வரவும், தேவைப்படும் ஒவ்வொரு நேரத்திலும் தேவனுடைய கிருபையையும், இரக்கத்தையும் உதவியாகப்பெற அழைக்கப்படுகிறார்கள். ஆனால் பரிசுத்தவான்கள் ஒருபோதும் தங்கள் உடல் ரீதியான குணப்படுதலுக்காக ஜெபிக்க அழைக்கப்படுவதில்லை. எவ்வாறாயினும், தந்தையிடம் பரிசுத்த ஆவியை கேட்பவர்களுக்கு, அதை கொடுப்பதே அவருடைய மனமகிழ்ச்சி என்று உறுதியளிக்கப்படுகிறது. உடல் ரீதியான வியாதிகள், துக்கங்கள் மற்றும் வேதனைகள், தேவனுடைய ஜனங்களால் சரியாகப் பெறப்பட்டு நீடிய பொறுமையோடு சகித்துகொள்ளப்பட்டால், ஆவியின் கனிகளும், கிருபைகளும் அதன் விளைவாக பெறலாம் என்பது தெளிவாகத் தெரிகிறது. இப்படியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு, ஆண்டவர் பவுலிடம் கூறியச் செய்தி-" அன்றியும், எனக்கு வெளிப்படுத்தப் பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது. அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன். அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன். அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனா யிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன். "(2கொரி12: 7-10)

அப்போஸ்தலரின் இந்த ஒரு ஜெபம், மீண்டும், மீண்டுமாக மூன்று முறை ஏறெடுக்கப்பட்டதாக வேதபதிவு நமக்கு காண்பிக்கிறது. இந்த ஒரு அப்போஸ்தலரை தவிர வேறு எந்த அப்போஸ்தலரும் உடல் ரீதியான குணப்படுத்தலுக்கு ஜெபிக்கவில்லை. பரம அழைப்பு -உடல் நலம், செல்வம், பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் மற்றும் அவர்கள் அனுபவிக்கும் இன்பங்கள் அல்ல என்பதை அறிந்துகொள்வதற்கு முன்பு, அப்போஸ்தலரின் அனுபவத்தின் ஆரம்பத்தில் இது வழங்கப்பட்டது. ஆனால் இவை அனைத்தையும்

பலி செலுத்தி, கிறிஸ்துவின் பாடுகளுக்கு உடன் பங்காளியாகி, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் காலபோக்கில் பெற்றுகொள்ளலாம் என்று அறிந்துகொண்டார். இவ்வாறாக, நம்முடைய அன்பான இரட்சகர் கூட தனக்காக பூமிக்குரிய எந்த விதமான ஆசீர்வாதங்களுக்காக ஜெபிக்கவும் இல்லை, அவருடைய வல்லமைகளை சுயத்திற்காக பயன்படுத்தவும் இல்லை. அவர் கல்லுகளை அப்பமாக மாற கட்டளையிட்டிருக்கலாம், ஆனால் அவ்வாறு செய்யாமல், நாற்பது நாட்கள் உபவாசித்தார். அவரை துன்புறுத்தியவர்களிடமிருந்து, பாதுகாக்க, பன்னிரண்டு லேகியோன் தேவதூதர்களை அவர் வருவதற்கு கட்டளையிட்டிருக்கலாம், ஆனால் அவர் அவ்வாறு செய்யாமல், அதற்கு பதிலாக, பிதா தனது பாத்திரத்தில் ஊற்றின கசப்பான அனுபவத்தை சகித்துக் கொண்டு, இயல்பாக மனுக்குலத்திற்கு அனுமதிக்கப்பட்ட பொதுவான ஆசீர்வாதங்களை மட்டுமே ஏற்றுக்கொண்டார். களைப்படைந்தபோது அவர் ஓய்வெடுத்தார், தன்னுடைய சிலுவையைச் சுமக்க முடியாத அளவுக்கு பலவீனமடைந்து, அதன் கீழ் விழுந்தார். ஆனாலும் அவர் பலத்திற்காக ஜெபிக்கவில்லை. இது அவருடைய உடன்படிக்கையை அல்லது மரணத்திற்கு அவர் தன்னை தத்தம் செய்ததற்கு எதிராகவும், மரணத்தை தவிர்ப்பதற்கு அவர் தெய்வீக உதவியை நாடுவதாகவும் இருந்திருக்கும்.

ஆனால் சரீர ரீதியான பாதிப்புகளிலிருந்து நிவாரணம் பெறுவதற்கு அப்போஸ்தலர்கள் ஜெபித்ததற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றாலும் (மேலே குறிப்பிட்ட ஒரு நிகழ்வைத் தவிர) அவர்களின் வியாதிகள் மற்றும் அவர்கள் நேசித்த மற்றவர்களின் வியாதியைப் பற்றிய பதிவுகள் நம்மிடம் உள்ளது. "அவன் வியாதிப்பட்டு மரணத்திற்குச் சமீபமாயிருந்தது மெய்தான். ஆகிலும், தேவன் அவனுக்கு இரங்கினார். அவனுக்கு இரங்கினதுமல்லாமல், துக்கத்தின்மேல் துக்கம் எனக்கு உண்டாகாதபடிக்கு, எனக்கும் இரங்கினார்." (பிலிப்பியர் 2:27) என்று ஒரு சந்தர்ப்பத்தில் அப்போஸ்தலன் எப்பிபிராத்தாவைப் பற்றி கூறினார். அவர் குணமடைந்தது அற்புதமாக இருந்திருந்தால், அது தேவனுடைய மகிமைக்கு என்று அறிவிக்கப்பட்டிருப்பதை நாம் சந்தேகிக்க முடியுமா ? அப்படியானால், ஜெபத்தினால் அல்ல வசனம் கூறியது போல், தெய்வீக இரக்கத்தினாலே அவர் சொஸ்தமானார் என்பது தெளிவாக தெரிகிறது. அதுபோல இப்போது நமக்கும் நடக்கிறது -" உங்களுக்கு இன்னது தேவை என்பதை உங்கள் பரம பிதா அறிந்திருக்கிறார்." மேலும்,, அவருடைய நோக்கத்திற்காக அழைக்கப்பட்டவர்களும் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்படிக்கு, அன்பு மற்றும் இரக்கத்தின் வாக்குத்தத்தங்களை அவர் நிறைவேற்றும்படியாக சகல காரியங்களையும், நோய் போன்றவற்றையும் கூட தேவன் அனுமதிக்கிறார்.

யாக்கோபு 5:14-16 ம் வசனங்களில் சொல்லப்பட்டதை தவிர வேதாகமத்தில் விவரித்துள்ளபடி, பரிசுத்தவான்களுக்கு அல்ல, பொது ஜனங்களுக்கு மட்டுமே உடல் ரீதியான குணப்படுத்தல் ஜெபத்தின் மூலமாக கொடுக்கப்பட்டது. பரிசுத்தவான்கள் பாவத்தில் விழுந்ததினால், அதற்குரிய சிச்சையாக வியாதியில் அகப்பட்டு, தனக்காக ஜெபிப்பதற்கு தேவனிடம் அவர் செல்ல முடியாதபோது, அவர்கள் சபையின் மூப்பர்களை வரவழைத்து, அவருடைய பாவங்களுக்கு மன்னிப்பை வழங்கும்படி ஜெபிக்கவேண்டும். "அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும், கர்த்தர் அவனை எழுப்புவார் அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்."

நாம் காலவரிசைப்படி ஆயிரமாண்டின் விடியலில் இருந்தாலும், தெரிந்துக் கொள்ளப்பட்ட இராஜரீக ஆசாரியக்கூட்டமான சுவிசேஷ யுக சபையானது நிறைவடைந்து மகிமைப்படுத்தப்படும் வரை ஏதோவொரு விசேஷித்த திரும்பக் கொடுத்தலின் ஆசீர்வாதங்களானது உலகிற்கு வழங்கப்படும் என்றால் அது சந்தேகம் !ஏனெனில் இது சபையின் வேலையாகும்.

**F636 [1] through F637 [1]:**

இதை இயேசு எப்படி செய்தார் ? அவருடைய அப்போஸ்தலர்கள் அவருடைய அடிச்சுவட்டை பின்பற்றுவதற்கு என்ன வழியைப் பின்பற்றினார்கள் ? இயேசுவோ அல்லது அப்போஸ்தலர்களோ சபை வகுப்பாருக்கு எந்த ஒரு குணப்படுத்துதலை நிகழ்த்தியதாக பதிவுகள் இல்லை என்று நாம் பதில் அளிக்கிறோம். இந்த விஷயத்தில் நோயுற்றவர்களை தேவன் குணப்படுத்துவது, தெய்வீக சித்தத்தை குறிப்பிடுவதாக வலியுறுத்தப்படுகிறதா? குணமடைந்தவர்கள் அல்ல, ஆனால் குணப்படுத்துபவர் களின் முறையை நாம் பின்பற்றுகிறோம் என்று பதில் அளிக்கிறோம். நம்முடைய ஆண்டவர் அற்புதமாக திரளான ஜனங்களுக்கு உணவளித்தார், அதுபோல நாமும் அற்புதமாக போஷிக்கப்படவேண்டும் என்ற எதிர்ப்பார்க்கவேண்டுமா ? இல்லை -- இதற்கு மாறாக

புது சிருஷ்டியின் தலைவர் தனது தனிப்பட்ட வசதிக்காக தெய்வீக வல்லமையைப் பயன்படுத்த மறுத்ததைபோல நாமும் இருக்கவேண்டும். (மத்தேயு 4:2-4; 26:53) அவர் பசியோடு இருந்தபோது, அப்பம் வாங்கி வர தம்முடைய சீஷர்களை அனுப்பினார். அவர் களைப்படைந்தபோது அவர் கிணற்றண்டையிலோ வேறு இடத்திலோ ஓய்வெடுத்தார். அவரை "தொடும்போது" அவர் வல்லமையை இழக்கும்போதும், அதை பலிசெலுத்தும்போதும், இந்த இயற்கையான தொல்லைகளிலிருந்து விடுபட அவர் ஒருபோதும் ஜெபிக்கவில்லை. ஆனால் அவைகள் அவருடைய பலியின் ஒரு பகுதியாக, மகிழ்ச்சியோடு சகித்தார் - அதுபோல நாமும் இருக்கவேண்டும்.

இதை விட: இதுபோன்ற தற்காலிகமான தேவைகளுக்கும், நிவாரணத்திற்கும் பரிசுத்த ஆவியின் உதவியை பயன்படுத்துவது, அவருடைய வல்லமையை துஷ்பிரயோகம் செய்யக்கூடிய பாவமாகும். ஏனெனில் அந்த வல்லமை வேறு நோக்கத்திற்காக அவர் வசம் உள்ளது. தேவனுடைய ஜனங்கள் பலியினால் உடன்படிக்கையை செய்திருப்பதால், இறக்கும் செயல்முறைகளின் எந்தப் பகுதியிலிருந்தும், அவரது மீட்பு அல்லது பாதுகாப்பிற்காக தெய்வீக வல்லமையை கோருவது பாவமாக இருக்கும். மேலும் அதன் விளைவுகளுக்காக எந்தவொரு முறையீடும், நம்முடைய உடன்படிக்கையிலிருந்து பின்வாங்குவதாக இருக்கும். "பின்வாங்கி போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாக இராது." எபிரெயர் 10:38, மத்தேயு26:53

நாம் நம்முடைய அதிபதியை பின்பற்றுவதினால், இந்த காரியம் சபைக்கும் துல்லியமாக பொருந்தும். மரணத்திற்காக நாம் அர்ப்பணித்த நம்முடைய மரணத்திற்குரிய சரீரங்களுக்காக தெய்வீக உதவியை கோருவது, நம்முடைய உடன்படிக்கையை மீறுவதாக இருக்கும். ஏனெனில் "கனம், மகிமை மற்றும் அழியாமை" ஆகிய மாபெரும் பரிசை பெறக்கூடிய சிலாக்கியத்தை புது சிஷ்டிகளாக ஓடுவதற்கான வாய்ப்புக்கு பதிலாக மனுஷனுக்குரிய உரிமைகளையும்,(விலைமதிப்பற்ற இரத்தத்தால் வாங்கப்பட்டு மறுசீரமைப்பு சலுகைகளில்) நம்முடைய பூமிக்குரிய நன்மைகளையும் கொடுத்துவிட்டோம். நாம் தத்தம் செய்ததை மீண்டும் கேட்பது பலியை திரும்ப பெற்று, உடன்படிக்கையை ரத்து செய்து, புது சிருஷ்டிகளாக நம் சுதந்திரத்தை விட்டுக்கொடுக்கவும் விரும்புகிறதை இது அர்த்தப்படுத்துகிறது. பூமிக்குரிய விஷயங்களுக்கான ஜெபத்தைப் பற்றிய இந்த பார்வை சிலருக்குப் புதிதாக இருக்கும். மேலும் சிலர் இக்காரியத்தை அறியாமல் செய்தும், தேவன் அந்த ஜெபத்திற்கு பதில் அளித்தார் என்பதை பிரதிபலிக்கும்போது அவர்களுக்கு அதிர்ச்சியைக் கொடுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. பரிசைப் பெறுவதற்கான ஓட்டத்திலிருந்து அவர்கள் நிராகரிக்கப்பட்டார்கள் என்று இதற்கு அர்த்தமா ? நிச்சயமாக இல்லை. பூமிக்குரிய ஒரு பெற்றோர் தனது அறியாத சிறு பிள்ளையை நீண்டகாலமாக சகித்துகொள்வது போல, ஆண்டவரும் அவருடைய ஜனங்கள் தற்செயலாக செய்யும் பிழைகளை மன்னித்து, அவர்களின் வெறும் வார்த்தைகளை அல்ல, அவர்களின் உள்நோத்தையே கணக்கில் எடுத்துகொண்டு அவர்களை பொருத்துகொள்வார் என்று நாம் நம்புகிறோம். ஒரு பெற்றோர் தனது சிறிய குழந்தைகளின் முறையற்ற வேண்டுகோளை வழங்குவதைப் போல, ஆண்டவரும் தம்முடைய ஜனங்களின் முறையற்ற விண்ணப்பங்களை அடிக்கடி வழங்கி, அவர்களின் விசுவாசத்தை கனப்படுத்தினார் என்று நம்புகிறோம். ஆனால் நாம் அறிவிலும், கிருபையிலும் வளரும்போது இது வேறுப்படுகிறது, அதற்கு பின் அது பாவமாகிறது. மேலும் தெய்வீக கிருபையை விட்டு திரும்பி - உடன்படிக்கையை நிராகரிப்பது என்று பொருள்படும்.

**F644 [1] through F654.** பாடத்தின் முடிவில் விளக்கத்தை காணலாம்.

**R2006 [col. 2 :2] through R2007 [col. 1 :1]—** கிறிஸ்துவின் ஜெபங்கள் தன்னலமற்றவை. பாடத்தின் முடிவில் காணலாம்.

**R3588 [col. 2 :1-4]:**

தேவன் எசேக்கியாவிடம் இரக்கமுள்ளவராக இருந்தார், அவருடைய ஜெபத்தைக் கேட்டு பதிலளித்தார். தேவன் அவருடைய ஜெபத்தை கேட்டார் என்றும், அவருடைய கண்ணீரை கண்டார் என்றும் அவருக்கு பதினைந்து ஆண்டுகள் சேர்த்து தந்தார் என்பதையும், அவர் சொஸ்தமாவதற்கு, தீர்க்கதரிசியின் மூலம் அத்திப் பழ அடையினால் பத்து போடவேண்டும் என்றும் தேவனிடத்திலிருந்து செய்தி வரும்வரையில் ஏசாயா தீர்க்கதரிசி இராஜாவின் முற்றத்தைவிட்டு செல்லவில்லை. இங்கு ஒரு பாடம் உள்ளது. நம்முடைய கஷ்டங்கள் மற்றும் வியாதிகளுக்கு நாம் ஒருபோதும் தீர்வு காண்பதற்கான காரியங்களை பயன்படுத்தக் கூடாது என்பது அல்ல. மாறாக இந்த தீர்வுக்கு பின்னால்

தேவனுடைய சித்தம் இருக்கிறதா என்பதை அறிந்துகொள்ளவேண்டும். தெய்வீக வல்லமையின், தெய்வீக குறுக்கிடுதல் இல்லாமல், வெறும் அத்திபழ அடையின் பத்து அவருக்கு சுகம் அளித்திருக்காது, ஆனால் மறுபுறம் தெய்வீக வல்லமை, அத்திபழ அடைகளை பயன்படுத்துவத்துவதன் வழியாக செயல்பட விரும்பியது. நம்முடைய ஆசீர்வாதங்கள் எவ்வாறு வர வேண்டும் என்று தேவனிடம் ஆணையிடுவது நம்முடையது அல்ல. ஆனால் நம்மையும், நம்முடைய துன்பங்களை பொருத்தவரையில் தேவனுடைய சித்தம் என்ன என்பதை இவைகளிலிருந்தும், பிற எடுத்துக்காட்டுகளிலிருந்தும் நாம் கற்றுக்கொள்ள முற்படவேண்டும்.

எசேக்கியாவின் ஜெபத்தினால், தேவன் அவருடைய திட்டத்தையும், ஒழுங்கையும் மாற்றிவிட்டாரா என்றும், மேலும் ஒரு ஜெபத்திற்கு பதிலளிக்கும் போதெல்லாம் அவர் அவ்வாறு செய்கிறாரா என்றும் கேள்வி எழும்புகிறது. சில விஷயங்களில், தேவன் தனது பொதுத் திட்டங்களுக்கு எந்தவித குறுக்கீடும் இல்லாமல், அவற்றை வேறு வழியில் ஏற்பாடு செய்வது அவருக்கு எளிதானது என்று நாம் பதில் அளிக்கிறோம். எசேக்கியா ஜெபிக்காவிட்டால் அவர் இறந்திருப்பார் என்று நாம் புரிந்துகொள்கிறோம். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், எசேக்கியாவின் விஷயத்தில் இயல்பான விளைவு என்னவாக இருக்கும் என்பதை தேவன் அவருக்கு அறிவித்தார், மேலும் அவர் விசுவாசத்தோடு ஜெபித்து குணமடைவதற்கு ஒரு வாய்ப்பை கொடுப்பதற்கான நோக்கத்திற்காகவே தேவன் அவருக்கு இக்காரியத்தை தெரிவித்தார். இவ்வாறு தேவன் அவரிடம் இரக்கம் காண்பிக்க காத்திருந்தார்.

இதுபோன்ற சூழ்நிலையில் நம்முடைய அல்லது நம்முடைய அன்புக்குரியவர்கள் நோய்வாய்ப் பட்டிருக்கும்போது, அவர்களின் வாழ்க்கை நீடிப்பதற்கும், அவர்களின் நோயிலிருந்து மீளவும் நாம் விசேஷித்த விண்ணப்பங்களை ஏறெடுக்காதபடிக்கு எசேக்கியாவின் ஜெபம் மற்றும் அவருடைய நடத்தையின் எடுத்துக்காட்டு தேவனுடைய ஜனங்கள் அனைவருக்கும் ஒரு பாடமாக இருக்கவேண்டும் என்று நாம் விரும்பவில்லை. நம்முடைய நிலைக்கும் தேவனோடு நாம் கொண்டுள்ள தொடர்புக்கும், எசேக்கியாவின் நிலைக்கும் அவர் தேவனோடு கொண்டிருந்த தொடர்புக்கும் வித்தியாசம் உள்ளது. அந்த இராஜா ஒரு நல்ல மனிதராக இருந்தாலும் அவர் சுவிசேஷ யுக அழைப்பு தொடங்குவதற்கு முன்பு வாழ்ந்தவர். அவர் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதற்கு, பரிசுத்த ஆவி அப்போது கொடுக்கப்படவில்லை. ஏனெனில், அப்போது இயேசு உபத்திரவப்படவும் இல்லை, அவர் மகிமை அடையவும் இல்லை. (யோவான் 7:39, Iபேதுரு1:11) இப்போது கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களாகிய "பரிசுத்தவான்கள்", தேவனோடு ஒரு புதிய விசேஷித்த ஐக்கியத்திற்குள் பிரவேசித்ததை உணரவேண்டும். மற்ற மனிதர்களிடமிருந்து இவர்கள் வேறுப்பட்டவர்கள். இவர்கள் பூமிக்குரிய வாழ்க்கையையும், பூமிக்குரிய சகலவிதமான நலன்களையும் தத்தம் செய்வதற்கு பதிலாக விசேஷித்த ஆவிக்குரிய இரக்கங்களையும், சிலாக்கியங்களையும், பாதுகாப்பையும் அவர்கள் பெறுவார்கள் என்று தேவன் அவர்களிடம் ஒப்புக்கொண்டிருக்கிறார். இந்த நிலைப்பாட்டில் இருந்து, எந்த விதமான பூமிக்குரிய சலுகைகளையும் நன்மைகளையும் தேவனிடம் கேட்பது ஞானமற்ற காரியமாகும், ஏனென்றால் இது புது சிருஷ்டிகளுக்கு தீமைக்கு ஏதுவான வேலைகளை செய்யும். இதற்கு பதிலாக நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளை நினைவில் வைக்கவேண்டும். அதாவது முழு மனுக்குலமும் பூமிக்குரிய காரியங்களை நாடி தேடுகிறார்கள், ஆனால் நம்முடைய பிதாவை நோக்கி நாம் வேண்டிக் கொள்கிறதற்கு முன்னமே நமக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். ஆகவே,"ஓ என் தேவனே, என்னுடைய உயர் நலன்களுக்காவும், என்னுடைய ஆவிக்குரிய நலனுக்காகவும் என்ன செய்யவேண்டும் என்று என்னைவிட நீர் நன்கு அறிந்திருக்கிறீர். நான் உம்முடையவனாக இருப்பதாலும், உம்முடைய நோக்கத்திற்கேற்ப நான் அழைக்கப்பட்டதினாலும், சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்று நீர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறீர். வாழ்க்கையின் எல்லா விவகாரங்களிலும் மிகச் சிறந்ததை உங்களுக்குக் கொடுக்கும்படி நான் உங்களிடம் மன்றாடுகிறேன், உங்களுக்கு சிறந்ததாகத் தோன்றும் அனைத்தையும் எடுத்து கொள்ளுங்கள் -"உம்முடைய சித்தம் மட்டுமே நிறைவேறட்டும்." என்பதே தேவனிடத்தில் அர்ப்பணித்த ஜனங்களின் இருதயத்தின் குறிப்பிடத்தகுந்த நோக்கமாக இருக்கவேண்டும். தேவனிடத்தில்

அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் தங்கள் விவகாரங்களுக்காக யேகோவா தேவனின் கையை நகர்த்துவது, அவரது கைகளில் இருந்து சுக்கானை எடுப்பதற்கு ஒப்பாக இருக்கும் - அவருடைய சித்தம் நம்மில் செய்யப்படுவதற்காக மரிப்போம் என்று நாம் அளித்த உறுதிக்கு பதிலாக நம்முடைய சுய விருப்பத்தை நிறைவேற்றுவதாகும்.

**R3668 [col. 1 ¶5, 6]:**

கேள்வி - அறுவடை வேலையில் அதிக ஊழியஞ்செய்ய முடியும் என்று நாம் உறுதியாக உணரும்போது, நாம் ஏன் சரீர ரீதியான சொஸ்த மாக்குதலுக்காக ஜெபிக்கக்கூடாது?

பதில் - நாம் நம்முடைய எண்ணங்களை பகுத்தறிய வேண்டும், மேலும் எல்லாவற்றிற்கும் மேலாக அவை வஞ்சகமானவை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். சில சமயங்களில் அவைகளின் உண்மையான நோக்கங்களுக்காக நம்மை ஏமாற்ற முயற்சிக்கலாம். ஏதோ ஒரு அதிசயம் செய்யப்படுவதைக் காண வேண்டும் என்ற ஒரு விருப்பம் கணிசமாக இருப்பதினால், நாம் அனைவரும் உடல் ரீதியான சுகத்திற்காக ஏங்குகிறோம் - இது முழுமையாக விசுவாசத்தினால் அல்ல, கண்டு நடக்கவேண்டும் என்ற ஆசையாகும். மறுபுறம், சுவிசேஷ யுகத்தில் உள்ள நாம் கண்டு அல்ல, முழுமையாக விசுவாசத்தினால் நடக்கவேண்டும் என்று ஆண்டவர் விரும்புகிறார் என்பதை புரிந்துகொள்ளவேண்டும். ஆகவே யுகத்தின் ஆரம்பத்தில் சபை ஸ்தாபிப்பதற்கான அறிகுறிகள் அனுமதிக்கப்பட்டது, பின்னர் அந்த சபை கர்த்தருடைய வார்த்தையால் நிறுவப்பட வேண்டும் என்றும், முழுமையான விசுவாசத்தினால் நடக்கவேண்டும் என்றும் சொல்லப்பட்டது. அற்புதமாக குணப்படுத்துதலுக்காக ஏங்குவதற்கு உதவியாக இருக்கும் மற்றொரு சிந்தனை - வலியிருந்து நிவாரணம் அளிப்பதற்கு. ஆனால் இது இயல்பாகவே ஒரு சுயநல விருப்பமாகும். மேலும் தேவன் வலியிருந்து விடுதலை அளித்தால், அது நோயிலிருந்து நிவாரணம் பெறுவதற்கான ஒரு படியாக இருக்கும், மேலும் நோய் ஒழிக்கப்பட்டால், வீடு இல்லாதவர்களுக்காகவும், மோசமான மனநிலைகள் உள்ளவர்களுக்கும் ஏன் ஜெபிக்கக்கூடாது ? ஒரு வார்த்தையில், எங்களை மீண்டும் புதுப்பியும் என்று நாம் ஏன் தேவனிடம் கேட்கக்கூடாது ? இது ஒரு மறுசீரமைப்பாக இருப்பதினால், இது தெய்வீக ஒழுங்காக இருக்காது, ஏனெனில் இது அடுத்த யுகத்திற்கான தேவனுடைய ஏற்பாடாகும். நாம் பார்த்தபடி இந்த யுகத்தில் சபை அழைக்கப்பட்டதன் நோக்கம் பலிசெலுத்துவதாகும். மேலும் புது சிருஷ்டி அல்ல, பழைய சிருஷ்டியே பலிசெலுத்தப்படவேண்டும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும் - புது சிருஷ்டி நாளுக்கு நாள் புதுப்பிக்கப்பட வேண்டும். அதனுடைய எல்லா நோய்களையும் தேவன் குணப்படுத்துகிறார், அதாவது ஆவிக்குரிய குறைபாடுகளை குணப்படுத்த அவர் நம்மோடு ஒத்துழைக்கிறார். மேலும் ஆவிக்குரிய சரீரத்தின் உயிர்த்தெழுதலின் வேலையை முழுமையாக முடிப்பதாக உறுதியளிக்கிறார். மறுசீரமைப்பின் பூமிக்குரிய உரிமைகளை ஒப்புக்கொடுப்பதற்கு ஈடாக இதுவே நமக்கு கிடைக்கும் பலன். உண்மையில் நாம் ஆண்டவரிடத்திற்கு வந்து, விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டு, ஏற்கனவே மரித்து கொண்டிருக்கும் நம்முடைய பாவமான பழைய சரீரங்கள் மரணத்திற்குள் செல்ல அனுமதிக்கப்படும் என்பதிலும், நாம் செலுத்தும் பலி சிறிதாக இருந்தாலும், முழுமையாக செலுத்தப்பட்ட தாக எண்ணப்படுவதினாலும் நாம் மகிழ்ச்சிடைய வேண்டும். மாறாக நாம் உடல் ரீதியான பரிபூரணத்திற்கு மீட்டெடுக்கப்பட்டால், நம்முடைய மரணத்தை எதிர்பார்ப்பதற்கு முன் அதிகதிகமான பலிகளை செலுத்த வேண்டும் என்று பொருளாகும். ஆகவே, நம்முடைய சரீரங்களை பரிபூரணமாக கருதி, அதற்கு பின்னர் பலிசெலுத்தப்படுவது நமக்கும் மிகவும் சாதகமானதாகும். ஏனெனில் நாம் குறைவானதை செலுத்தினாலும், அவைகள் நிறைவாக அங்கீகரிக்கப்படுகிறது.

## 40.ஆவிக்குரிய நோயைக் குணப்படுத்துவதிலும் நம்முடைய சிலாக்கியம் என்ன?

சங்கீதம் 103:2-5 " என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயதுபோலாகிறது. "

**F145 through F149 [¶2].** பாடத்தின் முடிவில் காணலாம்.

**41.நவீன முறையில் விசுவாசத்தை குணப்படுத்தும் மற்றும் அற்புதங்கள் போன்றவற்றை நாம் எவ்வாறு கருத வேண்டும்.**

**F638 [2] through F641 [1]—** சாத்தான் சாத்தானை விரட்டினால் அவனுடைய இராஜ்யம் நிலைபெறாது. பாடத்தின் முடிவில் காணலாம்.

**42.யாக்கோபு 5:14-16 க்கு எவ்வாறு விளக்கம் அளிப்பது.**

"உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக் கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் 'பெலனுள்ளதா யிருக்கிறது. "

நீங்கள் குணமடையும்படி உங்கள் தவறுகளை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஜெபியுங்கள். நீதிமானின் ஊக்கமான ஜெபங்களுக்கு பலனளிக்கப்படும்.

**R2008 [col. 1:7] through R2009 [col.2 :1]** பாடத்தின் முடிவில் காணலாம்.

**F637 [2] through F638 [1]—** விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்.

புது சிருஷ்டியின் தெய்வீக நோக்கமானது, நோய்களை குணப்படுத்துவதற்கு தெய்வீக வல்லமையையே சார்ந்திருக்க வேண்டும் என்பதற்கான ஆதாரங்களை நாம் இந்த பத்தியிலும், மாற்கு 16: 17,18 யிலும் காணகிறோம்.

மாற்கில் உள்ள பத்தியை நாம் எளிதில் அப்புறப்படுத்தலாம் : இது பழமையான கிரேக்க பிரதிகளில் காணப்படுவதில்லை. எனவே இதை இடையில் சேர்த்திருக்கலாம் என்று கருதலாம். அதாவது ஐந்தாம் நூற்றாண்டில் ஏதோ ஒரு வருடத்தில் சேர்த்திருக்கலாம். யாக்கோபின் கூற்றைப் பொறுத்தவரை: பதினாறாவது வசனத்தில், குறிப்பிடப்படும் நோய் பாவங்களுக்கான தண்டனையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது -- இது ஒரு சிறிய நோய் அல்ல, மாறாக தீவிரமான ஒன்றாகும், சபையின் மூப்பர்கள் அனைவரையும் ஒன்றாக அழைக்கும் அளவுக்கு தீவிரமானதாக இருக்கிறது. நோய்வாய்ப்பட்ட பாவிக்கு தேவனோடிருக்கும் ஐக்கியம் துண்டிக்கப்பட்டதை உணரும் அளவுக்கு பாவம் வாசற்படியில் நெருங்கியிருப்பதை, குறிப்பிடுவதாக தோன்றுகிறது. அத்தகைய சூழ்நிலைகளில், பாவங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டு, மன்னிப்பை வேண்டி ஜெபிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் 15ம் வசனம் வாசிக்கிறபடி : "பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்." மாற்கு 16:15

**43.ஜெபத்தில் நம்முடைய கர்த்தருடைய முன்மாதிரியிலிருந்து நாம் என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்?**

**R2649 [col. 1 6 through col. 2 :4]:**

நம்முடைய ஆண்டவர், கூட்டம் கலைந்தபின், தனிமையில் ஜெபிப்பதற்கு மலைக்கு சென்றார். சில சமயங்களில் தம்முடைய சீஷர்கள் கேட்கும்படியாக அவர் ஜெபித்தார். அதனால் அவர்கள் அவருடைய ஜெபத்தின் வார்த்தைகளை பதிவு செய்திருக்கிறார்கள். அவர் இந்த வாய்ப்புகளில் திருப்தியடையவில்லை என்பது தெளிவாகிறது. ஆகவே அவர் அடிக்கடி தந்தையிடம் தனிமையில் ஜெபிக்க நாடினார். சீஷர்களுக்கும் இதை வலியுறுத்தினார். " நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். "(மத்தேயு6:6) அனுபவமுள்ள அனைத்து கிறிஸ்தவர்களும் பரலோகத் தகப்பனுடனான இத்தகைய தனிப்பட்ட ஐக்கியத்தின் மதிப்பை உணர்ந்திருக்கிறார்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசுவும் இதே போன்ற ஐக்கியத்தின் அவசியத்தை உணர்ந்ததில் ஆச்சரியமில்லை. பிதாவைப் பற்றியஅவரது அறிவும், உலகத் தோற்றத்திற்கு முன்பாக இவர் பெற்றிருந்த அவருடனான ஐக்கியமும், அவரைத் திருப்தியாக்கி மேலும் பிதாவிடம் ஜெபத்தை ஏறெடுத்தல் தேவையில்லாதது என்று நினைக்க வைக்காமல், மாறாக, அஃது கூடுதலான அந்நியோந்நியத் திற்கும் ஐக்கியத்திற்குமே அவரது வாஞ்சையைத் தூண்டியது, குறிப்பாக அவர் உலகத்தில் தனியாக இருந்ததால் - அவருடைய அன்பான சீஷர்கள்

கூட, இன்னும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாமல் இருந்ததால் (யோவான் *7:39*), ஆவிக்குரிய விஷயங்கள் தொடர்பாக அவருடன் ஐக்கியங்கொள்ளவோ, விழுந்துபோன மனுக்குலத்திற்கு எவ்வகையிலும் வராத, ஒரு பரிபூரண மனிதனாக இருந்த அவருக்கு மாத்திரம் வந்திட்ட சோதனைகளை பகுத்துணரவோ முடியாமல் போனது. தன்னுடைய சொந்த பக்திவைராக்கியத்தின் புத்துணர்வுக்காக, பரலோக தகப்பனின் அத்தகைய ஐக்கியம் அவருக்குத் தேவைப்பட்டது, இது அவரது சொந்த அன்பையும், பக்தியையும் அனலோடு வைத்திருப்பதற்காகவும், அவருடைய பிரதிஷ்டை மற்றும் மனிதனாக மரண பரியந்தம் பலி செலுத்துவதற்கு அடிப்படையாக இருந்தது. நம்முடைய கர்த்தர் காலை, மாலை வேளைகளில் ஜெபத்தில் அதிக நேரம் செலவிட்டார் என்பதற்கு எந்தவிதமான தகவலும் இல்லை, ஆனாலும் அவர் ஒரு போதும் தந்தையின் முகத்தைத் தேடுவதை ஒதுக்கியிருக்க மாட்டார் என்று நாம் கருதலாம். ஆனால் இந்த சுருக்கமான வழிபாடுகள் மற்றும் அனுதின ஜெபங்கள் இந்த பாடத்தில் குறிப்பிடப்பட்டதுபோல, பல சந்தர்ப்பங்களில் கூடுதலாக வழங்கப்படுகிறது. நம்முடைய கர்த்தர் இரவு முழுவதும் ஜெபத்திலும் பிதாவுடனான ஐக்கியத்திலும் கழித்தார். கர்த்தருடைய ஜனங்களுக்கு இதில் ஒரு பாடம் உள்ளது. வாழ்க்கையின் கடமைகள், தினமும் நம்மீது அழுத்தம் கொடுக்கும்போது, அவைகளை புறக்கணிக்கக் கூடாது, "நான் என் தந்தையின் வேலைக்காக வந்தேன்" என்று நம்முடைய ஆண்டவர் சொன்ன வார்த்தைகளை நாம் ஒவ்வொருவரும் உணரவேண்டும். மேலும் இது எளிமையான, சிறிய ஜெபங்களைப் பற்றி நம்முடைய ஆண்டவர் கூறினதை குறிப்பிடுகிறது. "அன்றியும் நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள். அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். " (மத்தேயு 6:7,8) மேலும் அவருடைய சீஷர்களுக்கு கொடுக்கப்பட்ட ஜெபத்தின் உதாரணம் சுருக்கமானது. ஆயினும்கூட, தேவனுடைய தயவால், அவருடன் உடன் பணியாளர்களாக இருப்பதற்கு நாம் பாக்கியம் பெற்ற வேலையின் முக்கியத்துவத்தை நாம் உணருவதற்கு ஏற்றவாறு, நம்முடைய இருதயங்கள் ஆவிக்குரிய ஐக்கியத்தில் ஈர்க்கப்படவேண்டும். ஆயினும்கூட, விகிதாச்சாரத்தில், கர்த்தரின் தயவால், அவருடன் உடன் ஊழியர்களாக இருப்பதற்கு நாம் சிலாக்கியம் பெற்றிருக்கும் மகத்தான வேலையின் முக்கியத்துவத்தை நாம் உணருகையில், நம்முடைய இருதயங்கள், ஆவிக்குரிய ஐக்கியத்தின் காலங்களுக்கு ஈர்க்கப்பட வேண்டும் மற்றும் ஈர்க்கப்படும். இது போன்ற காலங்களில் பெரும்பாலானவை ஏற்கனவே அனுபவித்த இரக்கங்கள் மற்றும் உதவிகளுக்காக நன்றி செலுத்துவதற்கும், எதிர்காலத்திற்கான நம்முடைய நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட கிருபையான வாக்குத்தத் தங்களுக்காகவும் கர்த்தருடனான ஐக்கியத்திற்கும் அர்ப்பணிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை, அதினால் ஜெபமானது பிதாவிடம் வேண்டுகோள்களை வைக்க வேண்டும் என்கிற அர்த்தத்திலல்லாமல் மாறாக, நம்மைக் குறித்ததான அவருடைய சித்தத்தைச் சிந்திக்கும் வகையிலும் ஏற்றுக்கொள்ளும் விதமாக நாம் எவ்வாறு அவருக்கு ஊழியஞ்செய்து, அவரைப் பிரியப்படுத்தலாம் என்கிற வகையில் குறிப்பிடப்படுகிறது.

**R3551 [col. 1 :2]:**

நம்முடைய ஆண்டவரின் முழு வாழ்க்கையின் ஒரு எடுத்துக்காட்டே, "இடைவிடாமல் ஜெபியுங்கள்" என்று எல்லா சபைக்கும் அப்போஸ்தலரின் அறிவுறுத்தல்களாக உள்ளது. வெளிப்படையாகவே, நம்முடைய கர்த்தர் எப்பொழுதும் ஜெபம் செய்யும் மனப்பான்மையில் இருந்தார். அவருடைய பாதுகாவலரின் பராமரிப்பை உணர்ந்தவராக, அவர் மேல் நம்பிக்கை வைத்து, ஒவ்வொரு துன்பகரமான சூழ்நிலைகளிலும், எல்லா அனுபவங்களையும் நன்மைக்கு ஏதுவாகச் செய்தவற்காக அவரை நோக்கி பார்ப்பதற்கும், மேலும் அவருடைய வாழ்க்கையின் சகல காரியங்களுக்கும் பிதாவுக்கு நன்றி செலுத்துவதில் அவர் மனம் நிறைந்திருந்தது. ஆனால் நிறுத்தப்படாத நம்முடைய ஆண்டவரின் தொடர்ச்சியான ஜெபம், பிதாவிடம் தனிமையில் பேசுவதற்காக வாழ்க்கையின் விவகாரங்களிலிருந்து விலகிச் சென்றபோது அவருடைய பக்திக்கு தடை வரவில்லை. சில நேரங்களில் சுருக்கமாகவும், சில நேரங்களில் மலைகளில் தனிமையில் ஒரு இரவு முழுவதும் ஜெபித்தார். அவர் தனது சீஷர்களை நேசித்த போதிலும், அவர்கள் இன்னும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாதினால்,

அவருடைய நிலைப்பாட்டில் இருந்து காரியங்களை முழுமையாக சீஷர்கள் புரிந்துகொள்ள முடியவில்லை. பிதாவினால் மட்டுமே முழு சூழ்நிலையையும் புரிந்துகொள்ள முடிந்தது. ஆகவே, எல்லா மனித உதவிகளிலிருந்தும் தனிமைப்படுத்தி, ஜெபத்தில் பிதாவிடம் நெருங்குவதற்கு அவரை ஈர்த்தது.

**44.யோவன் 17: 15-26ல் உள்ள நம்முடைய கர்த்தருடைய வேண்டுகோளின் தன்மை என்ன?**

யோவான் 17:15-26 "

**R3551 through R3553—** "அவர்களுக்காக நான் ஜெபிக்கிறேன்." (யோவான் **17:15-26**) நம்முடைய கர்த்தர்

**45. தம்முடைய சீஷர்களுக்கு கற்பித்த மாதிரி ஜெபத்தில் உள்ள பாடம் என்ன**

மத்தேயு - 6:9-13 " நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே."

**R2004 [col. 2:9] through R2005 [col. 1]—** மாதிரி ஜெபம்

பதிவு செய்யப்பட்ட நம்முடைய ஆண்டவரின் ஜெபங்கள் அனைத்தும் எளிமையாகவும், நம்பகத்தன்மை கொண்டதும், தன்னலமற்ற தன்மையோடு அழகாக காணப்படுகிறது. ஆனால் வழக்கமாக அழைக்கப்படும் "கர்த்தருடைய ஜெபம் ", ஒரு சரியான ஜெபத்திற்கு எடுத்துக்காட்டாகவும், நிச்சயமாக எல்லா வகையிலும் ஒரு மாதிரியாகவும், நம்முடைய எல்லா விண்ணப்பங்களிலும் பின்பற்றக் கூடியதாகவும் இருக்கிறது. லூக்கா11:2-4,மத்தேயு 6:9-13. (1) அதன் தொடக்க முகவரி முழு மரியாதையும் நம்பிக்கையுள்ளதாக காணப்படுகிறது -"பரலோகத்தில் இருக்கும் எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக". இதைவிட இனிமையாகவும் குழந்தையை போன்று என்ன இருக்கமுடியும் ! நேரடியாக பரலோக கிருபாசனத்தண்டைக்கு பக்தியோடு செல்ல இந்த தைரியமான அணுகுமுறையை விட வேறு எது இருக்கமுடியும் ! (2) இது ஒரு தனிப்பட்ட குணாதிசயத்தின் குறைவான விஷயங்களுக்கு பதறி உடனே கடந்துச் செல்லாமல், பூமியின் அனைத்து விவகாரங்களையும் தேவனானவர் அறிந்திருக்கிறார் என்பதை முதலில் அங்கீகரிக்கிறது. ஆனால் பூமியின் அனைத்து விவகாரங்களைப் பற்றிய அறிவை தேவன் பெற்றிருக்கிறார் என்பதையும் ஏற்கனவே வழங்கப்பட்ட ஒரு கிருபையான மற்றும் போதுமான தீர்வையும் கொண்டிருப்பதை உணர்ந்திருப்பதை இந்த மாதிரி ஜெபம் ஒப்புக்கொள்கிறது. இதனால், "உம்முடைய இராஜ்யம் வருக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூலோகத்திலும் செய்யப்படுவதாக" என்ற தேவனுடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்ட, அவருடைய திட்டத்தின் மேலுள்ள நம்பிக்கையும் ஆர்வத்தையும் காட்டுகிறது. ஆம், உண்மையில், ஜெபத்தில் தேவனை அணுகும் அனைவருமே அவருடைய சித்தத்தையும், திட்டத்தையும் பற்றி அவர் வெளிப்படுத்தியவைகளில் சிலவற்றை அறிய முன்னமே தேடியிருக்கவேண்டும் என்பதோடு, அதைக் குறித்து கற்றுக்கொண்ட பின், அவரது திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படும்போது, நம்முடைய அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்படும் என்று அவர்கள் தேவன் மீதுள்ள விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும். இது தேவன் தம்முடைய இராஜ்யத்தை நியமிக்கப்பட்ட காலத்திற்கு முன்பே கொண்டுவருவதற்கான ஒரு வேண்டுகோளும் அல்ல, அதற்காக பொறுமையற்ற ஏக்கத்தின் வெளிப்பாடும் அல்ல. ஆனால் நம்பிக்கை, விசுவாசம் மற்றும் தேவனுடைய வார்த்தையின் வாக்குத்தத்தங்கள் அனைத்தும் நிறைவேறவும், நம்முடைய சரியான எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வார் என்பதற்கான வெளிப்பாடாகும். இது இராஜ்யத்துடனான நம்முடைய விசுவாசத்தையும் அதன் சட்டங்கள் மற்றும் ஆவியையும் குறிக்கிறது. ஆகவே நம்மைப் பொருத்தவரை, நம்முடைய முழு வல்லமையினால், இப்போதும் கூட நம் வாழ்க்கையை அதன் கட்டளைகளுக்கு இணங்க செய்வோம். (3) பின்னர் தனிப்பட்ட ஆசைகளுக்கு வரும்போது - "அப்பம் மற்றும் தண்ணீர்" பற்றிய தேவைகளை மட்டுமே கோருகிறது. தேவனிடம் உண்மையாக இருக்கும் அனைவருக்கும் இது நிச்சயம் என்று உறுதியளிக்கப்படுகிறது. இது செல்வத்துக்காகவோ, ஆடம்பரங்களுக்காகவோ, மிதமிஞ்சியதற்காகவோ, ருசிகரமான உணவுக்காகவோ

அல்ல மாறாக,"எங்கள் அனுதின ஆகாரத்தை எங்களுக்கு தாரும்" என்று கேட்கிறது. இது நம்முடைய தேவன் மகா பெரிய வள்ளல் என்றும் நம்முடைய உயர்ந்த நன்மைக்காக எந்தஅளவையும் தரத்தையும் மற்றும் எல்லாவற்றையும் தெய்வீக ஞானத்திற்கும் அன்பிற்கும் விட்டுவிட்டு, அவர் மீதும் அவர் அளித்த வாக்குறுதிகள் மீதும் நாம் நம்பிக்கை வைத்திருப்பதை ஒப்புக்கொள்வதாகும். (4) நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டிருந்தாலும், "எங்கள் பிதாவே" என்று ஜெபிப்பதற்கான உரிமை கிடைப்பதற்கு முன் தேவனுடைய குடும்பத்தில் அவருடைய புத்திரர்களாக நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறோம். ஆனால் இது நம்முடைய சொந்த தகுதியினால் அல்ல, கிறிஸ்துவின் கிருபையினால், தேவனுடைய "புத்திரர்களாக" மிக தாழ்மையான உணர்வோடு நிற்கிறோம். ஆகவே நாம் தினமும் பாவம் செய்பவர்கள் என்பதை நாம் சரியான முறையில் ஒப்புக்கொள்கிறோம். நாம் தேவனுடைய சித்தத்தை பூரணமாக செய்ய முடியாதவர்களாக, "எங்களுடைய கடன்களை மன்னியும்," என்று ஜெபிக்கிறோம். (5)அடுத்து தேவனுடைய நீதியின் ஒரு கொள்கையை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். அதாவது தெய்வீக இரக்கத்தின் உணர்வை நாம் உணர்ந்துகொண்டு, அதேபோல மற்றவர்கள் நம்முடைய பழகும் விவகாரங்களில் குறைவுள்ளவர்களாக இருக்கும் போது அவர்களுக்கும் அதே இரக்கத்தைப் பயன்படுத்தத் தயாராக இருக்கிறோமென்றால், அந்த இரக்கம் கிறிஸ்துவின் மூலமாக சம விகிதத்தில் நமக்கும் நீட்டிக்கப்படும் எனவேதான், "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல" என்று நாம் சேர்க்கிறோம். இது தேவனோடு பேரம் பேசுவதற்கு சமம், அதாவது அவருடைய கிருபையின் விதிகளை நாம் ஏற்றுக்கொள்கிறோம். இதை தவிர நாம் வேறு எதையும் எதிர்பார்ப்பதில்லை. மற்றவர்களிடம் நாம் அதைப் பயன்படுத்தினால் மட்டுமே நாம் எதிர்பாரக்கமுடியும். என்ன ஒரு சிந்தனை! முழுமையாகப் புரிந்துக்கொள்ளப்பட்டால், தேவனுடைய ஜனங்கள் அனைவருமே ஒருவருக்கொருவர், மற்றும் எல்லா மனிதர்களிடமும் சிந்தனையிலும், வார்த்தையிலும் செயலிலும் அன்பாகவும், தாராளமாகவும் இருக்க ஏவும். - மத்தேயு5:24; 6:15 காண்க. (6) "மேலும் எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல்", அல்லது நம்முடைய ஒழுக்கத்திற்கும், இராஜ்யத்திற்கான தயாரிப்புக்கும் சிட்சைகள் மற்றும் சோதனைகள் அவசியம் என்பதால் (யாக்கோபு1:2-12)இதை நாம் சரியாக புரிந்துகொள்ளவேண்டும். நம்முடைய விசுவாசத்தின் சோதனை, பொறுமை, அனுபவம் மற்றும் நம்பிக்கையை செயல்படுத்துவதாலும் (1பேதுரு4:12, ரோமர் 5: 3-5) மேலும் பரிசுத்தத்தில் நாம் பூரணப்படுவது அவசியமானதாலும், (1பேதுரு1: 6,7) தேவன் எந்த மனிதனையும் சோதிக்காவிட்டாலும், நமக்கு வரும் சோதனைகளை அவர் தடுக்கவும் மாட்டார். (யாக்கோபு1:13) ஒரு மனிதன் தப்பான வழியில் நடந்து,தன்னுடைய சுயநலத்தினால், விழுந்து போன ஆசை இச்சைகளுக்கு இணங்கும்போது பாவம் செய்கிறார். (யாக்கோபு1:14) ஆனால் சோதனையின் நேரத்தில், "தேவைப்படும் எல்லா நேரங்களிலும் உம்முடைய கிருபை போதும்" என்ற வாக்குத்தத்தம் இன்றி எவ்வாறு ஜெயிக்கமுடியும், மேலும் இது நமக்கு உதவுவதோடு, நாம் தாங்கக்கூடியதை விட அதிகமாக சோதிக்கப்படுவதை அனுமதிக்காது, ஆனால் சோதனையுடன் தப்பிப்பதற்கான போக்கை அளிக்குமா ? - 1கொரி10:13. (7) "தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்" அல்லது சிலர் விரும்புவதைப் போல, "தீயவனிடமிருந்து எங்களை விடுவியும்." மகா பெரிய எதிராளி, மாம்சத்தின் பலவீனங்களால் நம்மைப் பிடிக்க எச்சரிப்புடன் இருந்தாலும், நம்முடைய ஆண்டவர் நம்மை விடுவித்து வெற்றியைக் கொடுக்கத் தயாராக இருக்கிறார். இருளின் வல்லமைகளுக்கு எதிரான அத்தகைய போட்டிக்கு நம்முடைய சொந்த பலன் போதுமானதாக இல்லை, ஆகவே, "எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது"(2கொரிந்தியர் 3:5) என்று அப்போஸ்தலர் கூறுகிறபடி, இதற்காக நாம் அடிக்கடி கிருபாசனத்தண்டைக்கு செல்லவேண்டும். **{**அடிக்குறிப்பு இந்த ஜெபத்தில் மீதமுள்ள வாக்கியம் பண்டைய கிரேக்க பதிப்புகளில் காணப்படுவதில்லை. சபையின் பூமிக்குரிய உயர்வில், போப்பாண்டவரின் மகிமையே, தேவனுடைய இராஜ்யத்தின் மகிமை என்று சிலர் நம்புவதற்கு வழிவகுத்த நேரத்தில் இது சேர்க்கப்பட்டதாகத் தேரிகிறது.**}**

**R3351 [col. 2 :4] through R3353 [col. 2 :3]:**

**R2252** "நீங்கள் ஜெபிக்கவேண்டிய விதமாவது" பாடத்தின் முடிவுல் காணலாம்.

### 46.ஜெபம்நம்முடைய விண்ணப்பங்களின் சிறப்பு தன்மை என்னவாக இருக்க வேண்டும்?

## R3306 [col. 1 :8, 9]:

அதிகதிகமான கிருபை, ஞானம், ஆவிக்குரிய கனிகள் மற்றும் ஆண்டவரையும், சகோதரர்களையும் சேவிக்கக்கூடிய வாய்ப்புகள் மற்றும் தேவனுடைய

நேசிக்கப்பட்ட குமாரனின் சாயலுக்கு மேலும் மேலும் வளர்ச்சி அடைவதற்கே நம்முடைய விண்ணப்பங்கள் இருக்கவேண்டும். இந்த சூழ்நிலையில்,"எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம்" உங்கள் இருதயங்களையும், சிந்தைகளையும் ஆளக்கடவது என்ற வாக்குத்தத்தத்தை யாரால் சந்தேகிக்க முடியும்? இந்த சமாதானம் பலரின் இருதயங்களை பாதிக்கும் பெரிய தீமைகளில் ஒன்றை அகற்றும். நன்றியுணர்வால் நிறைந்த இருதயத்தில் சுயநலமும், பேராசைகளும் குறைவான இடத்தைப் பிடிக்கும். அத்தகைய இருதயத்தை ஆட்சி செய்யும் தேவ சமாதானம், ஆசை இச்சைகளையும் ஆற்றல்களையும் கட்டுப்படுத்துகிறது. இந்த உலகின் கவலைகளையும், கொந்தளிப்புகளையும் தடுத்து நிறுத்தி, சுற்றியிருக்கும் இந்த சாதகமற்ற சூழ்நிலைகளையும், இன்னும் வஞ்சகமான முகவர்களின் வழியாக எதிராளி தாமே ஏற்படுத்தும் ஏற்பாடுகளிலிருந்தும், தெய்வீக சமாதானம் நம்முடைய இருதயங்களில் வாசம் செய்து அவைகளை ஆளும்.

**F685 [¶1] through F686 [¶1]:**

கிறிஸ்து இயேசுவுக்குள்ளிருக்கும் புது சிருஷ்டிகள் மேற்கண்ட உரையில் அறிவுறுத்தப்பட்டபடி, - என்னத்தை உண்போம், என்னத்தை குடிப்போம் என்னத்தை உடுப்போம் என்று உலகில் காரியங்களை தேடாமல், கவலைப்படாமல், அவைகளுக்காக ஜெபிக்காமல், எல்லா விஷயங்களையும் பிதாவின் ஞானம் மற்றும் அன்பின் மேலும் நம்பிக்கை கொள்ளவேண்டும். பிதா மிகவும் மகிழ்ச்சிடையும்படிக்கு ஒரு காரியத்தைக் குறித்து ஜெபிக்கும்படிக்கு கட்டளை உள்ளது, இதை குறித்து அவர்களின் விண்ணப்பங்களுக்கு பெருமளவில் பதிலளிப்பதில் அவர் மகிழ்ச்சியடைவார். நாம் விசேஷமாக தேடி, ஜெபிக்கக்கூடிய அந்த ஒரு விஷயம் பரிசுத்த ஆவியே - பரிசுத்தத்தின் ஆவி, தேவனுடைய ஆவி, கிறிஸ்துவின் ஆவி, சத்தியத்தின் ஆவி, நல்ல சிந்தையின் ஆவி, அன்பின் ஆவி. "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்." (லூக்கா11:13) என்று நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகள் கூறப்படுகிறது. அப்படியானால், நமக்கு பதில் அளிக்கப்படும்படியாக, நம்முடைய அனைத்து விண்ணப்பங்களின் அடிப்படையாக இருக்கவேண்டிய விஷயத்தைப் பற்றி தனித்துவமான தகவல்கள் நம்மிடம் உள்ளது. இவ்வாறு நாம் ஜெபிக்கும்போது தகாத விதமாக கேட்கக்கூடாது. நம்முடைய பாசங்கள் பூமிக்குரிய காரியத்தை நோக்கி அல்ல, கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரம் மற்றும் நம்முடைய வருங்கால மகிமையான வஸ்திரம், அப்போது நாம் அவரை காணும்போது, அவரை போல நாமும் இருப்போம் என்ற மேலுள்ள விஷயங்களை நோக்கியே அமைந்திருக்கவேண்டும். நம்முடைய வாஞ்சை ஆவிக்குரிய உணவாகிய, வானத்திலிருந்து இறங்கிய அப்பத்தின் மீதும், கிறிஸ்துவை மையமாகவும் பொருளாகவும் கொண்ட தேவனுடைய விலைமதிப்பற்ற வாக்குத்தத்தங்கள் அனைத்தின் மேலும் இருக்கவேண்டும். இவைகளை நாம் தேட வேண்டும், இவைகளே நம்முடைய ஜெபத்தின் பொருளாக இருப்பது, மிகவும் பொருத்தமானதாக இருக்கும். இவ்வாறு நம்முடைய கவனம், ஜெபம் மற்றும் அநுதின தேடல் இதற்கு இசைவாகவே இருக்கவேண்டும். மேலும், தெய்வீக ஏற்பாட்டின் நீளம், அகலம், உயரங்கள் மற்றும் ஆழங்களை நாம் கற்றுக்கொள்ளும் காலத்திலிருந்து, நன்றி செலுத்துதல் விண்ணப்பங்களில் பெரும்பாலும் இடம் பெற வேண்டும். புது சிருஷ்டிகளுக்கும், மாம்சத்தின்படி நம்முடைய நேசிக்கப்பட்டவர்கள் மற்றும் பூமியின் அனைத்து குடும்பங்களுக்கும் இது பொருந்தும். தேவன் ஏற்கனவே வாக்களித்ததை விட அதிகமாகவோ அல்லது சிறப்பாகவோ நாம் என்ன கேட்க முடியும் ? நிச்சயமாக, புது சிருஷ்டியின் எதிர்கால மகிமையை பொருத்தவரையில் வாக்குத்தத்தம் அளிக்கப்பட்டதைத் தவிர வேறு எதையும் நாம் கேட்க முடியாது, அதுவுமல்லாமல் அதே வகுப்பினர் தற்போதைய சந்தோஷங்களைக் குறித்தும் எதையும் கேட்க முடியாது. காரணத்தை கற்பனை செய்யக்கூடிய ஒவ்வொரு ஏற்பாடும், ஒவ்வொரு விருப்பமும், ஒவ்வொரு தேவையும், எதிர்பார்க்கப்பட்ட நமக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது -- எடுத்துகொள்வதற்காக வழங்கப்பட்டுள்ளது. இந்த தெய்வீக எற்பாடுகளை எவ்வாறு எடுத்துக்கொள்வது, எவ்வாறு அதன் விதிகளை பொருத்திப்பார்ப்பது என்பதில் குறையுள்ள ஞானத்தை பெற்றுள்ளோம். ஆகவே, நன்றி செலுத்துவதன் மூலம், ஞானத்திலும், கிருபையிலும் பங்கெடுப்பதினால், நம்முடைய சந்தோஷம் நிறைந்திருக்கும்படி அவைகளையே நாம் கேட்கிறோம். ஆகவே, நம்முடைய வேண்டுகோள்கள், பரத்திலிருந்து வரும் ஞானமாகிய பரிசுத்த ஆவியினால் அதிகதிகமாக நிரப்பப்படுவதற்காகவே இருக்கவேண்டும்.

**E222 [2] through E224 [1]—** பரிசுத்த ஆவிக்காக ஜெபித்தல்

"பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்." (லூக்கா11:13) "எல்லாமே குமாரனால்" செய்யப்பட்டாலும், பிதாவே எல்லா ஆசீர்வாதத்திற்கும் ஊற்றும் காரணருமாக இருக்கிறார் என்று ஒவ்வொரு இடத்திலும் பிதாவுக்கே மகிமையையும், கனத்தையும் செலுத்துகிறார். மீட்பின் மற்றும் மறுசீரமைப்பின் முழு வேலையும் தேவனுடைய வேலை - குமாரனின் மூலம். மேலும் தேவனுடைய பரிசுத்தத்தின் ஆவியை அதிகதிகமாக நாம் பெற்றிருப்பதே பிதாவுக்கு மகிழ்ச்சி என்று நம்முடைய ஆண்டவர் அறிவிக்கிறார். மிக உன்னதமான ஆசீர்வாதமாக இதை தேடவும், கேட்கவும் அவர் நமக்கு கட்டளையிடுகிறார். ஏனெனில், பூமிக்குரிய ஆசீர்வாதங்களைப் பொறுத்தவரை, நமக்குத் என்ன தேவை என்பதை பரலோக தந்தைஅறிந்திருக்கிறார் அதாவது நம்முடைய பூமிக்குரிய ஆசீர்வாதங்களில் எது உதவியாக இருக்கும் என்றும் எது தீங்கை விளைவிக்கும் என்றும் நாம் அறிவதை விட அவர் நன்கு அறிந்திருக்கிறார் என்று நம்முடைய இரட்சகர் கூறுகிறார். ஆகையால், அஞ்ஞானிகளும், புறஜாதியாரும் செய்வது போல, பூமிக்குரிய ஆசீர்வாதங்களைப் பற்றி சிந்தித்து அதற்காக ஜெபிக்க வேண்டிய அவசியமில்லை. மாறாக, புத்திரர்கள் என்ற உறவுக்குள் வந்தவர்களாக, தேவனுடைய முன்னேற்பாடுகளில் முழு நம்பிக்கை கொண்டவர்களாக, சிறந்தவைகளை நமக்கு கொடுப்பார் என்று எதிர்பார்த்து, அவர் தந்திருக்கும் வாக்குத்தத்தங்களிலும், விசுவாசத்திலும் நாம் இளைப்பாறலாம். நாம் அதிகதிகமாக பரிசுத்த ஆவிக்காக விரும்பி வேண்டுவதில் பரலோகபிதா மகிழ்ச்சியாக இருக்கிறார். அதாவது அவருடைய ஆவியுடன் அதிகதிகமாக இசைந்திருக்கும் மனநிலையை அவர் விரும்புகிறார். இவைகளை விரும்பி, கேட்டு, தேடும் அனைவரும் தங்கள் நல்விருப்பங்களைப் பெறுவார்கள். இந்த பரிசுத்த ஆவிக்கு தடையாக இருக்கும் விஷயங்கள், அதாவது அவர்களுக்குள் இருந்தாலும் சரி, அவர்களை சுற்றியிருந்தாலும் சரி, தேவனுடைய ஆவியினால் அவர்கள் நிரப்பப்படும்படிக்கு, அவருடைய அன்பான ஆவி அவர்களுக்குள் பெருகும்படி, தடைகளை அகற்றுவார். ஆனால் இதில் பரிசுத்த ஆவியின் புதிய ஞானஸ்நானம் பற்றி எதுவும் பரிந்துரைக்கப்படவில்லை. ஞானஸ்நானம் ஆரம்பத்தில் வந்தது. இப்போது செய்ய வேண்டியது எல்லாம், ஒவ்வொரு திசையிலுள்ள மதகுகளை திறக்கவேண்டும். அப்பொழுது அன்பு மற்றும் சத்தியத்தின் பரிசுத்த ஆவி நம்முடைய ஒவ்வொரு வார்த்தையிலும், செயலிலும், சிந்தனையிலும் ஊடுருவி, வெளிப்படவேண்டும். தடைகளை அகற்றுவதிலும், தேவையற்றவைகளை தடை செய்வதிலும், தேவனுடைய ஞானம் மற்றும் ஏற்பாடுகளின் செயல்பாட்டை உணர்வதற்கு நமக்கு தெய்வீக உதவி தேவை. பரிசுத்தத்தின் ஆவியை ஒருவர் ஆவலுடன் விரும்பி, ஜெபத்தினாலும், முயற்சியினாலும் தேடினால் மட்டுமே அதை அதிகதிகமாக பெற்றுகொள்ள முடியும். பரிசுத்த ஆவியினால் நம்முடைய சிந்தையும் அதன் தாக்கங்களும் நிரப்படுவதற்கு நம்முடைய இருதயங்களில் இருக்கும் உலகின் ஆவி அல்லது சிந்தை விரட்டப்படவேண்டும். சுய சித்தமும் இதற்கு இடம் கொடுக்கவேண்டும். அதாவது இவைகளை நாம் முழு விருப்பத்தோடு செய்யவேண்டும். தேவனுடைய பரிபூரணத்தை பெறுவதற்கு ஆயத்தமாக இருப்பதற்கு ஏற்றவாறு சகலத்தையும் நாம் அகற்றிவிட்டதினாலும், நாம் மற்ற எல்லா மாறுப்பட்ட செல்வாக்கையும் விருப்பத்தையும் அழிக்க ஆர்வமுள்ளவர்களாக இருப்பதினாலும் தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியினால் நிரப்புவதற்கு ஆவலுடன் இருக்கிறார். இதே கருத்தை எபேசு சபைக்காக அப்போஸ்தலர் செய்த ஜெபத்தில் காணலாம். "அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகலபரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்." (எபேசியர் 3:19) கிறிஸ்துவின் ஆவியால் நிரப்பப்பட்டு அவர் வெளிப்படுத்திய அன்பை முழுமையாக புரிந்துகொண்டவர், தந்தையின் ஆவியை முழுமையாக பெறுவார்.

### 47.நாம் ஏன் விழித்திருக்க வேண்டும்?

மாற்கு14:38 நீங்கள் சோதனைக்கு உட்படாதபடிக்கு, விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்.

ஆவியோ உற்சாகமுள்ளது, மாம்சமோ பலவீனமானது.

**R2692 [col. 1 :2, 3]:**

எவ்வாறாயினும், ஜெபிப்பதை விட அவசியமானது உண்டு என்று நம்முடைய பொன்னான வேதபகுதி

அறிவுறுத்துகிறது. இருதயத்தின் உணர்வுகளை முழுமையாக பிரதிபலிப்பது மட்டுமே ஜெபம் அல்ல. அது உடனடியாக சீர்குலைவதற்கு சொற்களின் வடிவமாக வெளிப்படுகிறது - உதடுகளினால் ஆண்டவரிடம் நெருங்கினாலும், இருதயம் வெகு தூரத்தில் உள்ளது - ஒருவேளை தொழிலில் அல்லது சிற்றின்பங்கள் அல்லது பாவத்தில் சிக்கியிருக்கலாம். ஆகையால், ஆவிக்குரிய வழியில் முன்னேறுகிற எவரும் ஆவியோடும், புரிந்துகொள்ளுதலோடும் ஜெபிப்பது மட்டும் அல்ல, தன்னுடைய சொந்த மாம்சத்தின் பாவ போக்குகளுக்கு எதிராகவும் விழித்திருந்து கவனிக்கவேண்டும். சுயதிருப்தி, சுயநலம், உலக இன்பங்கள், உலக அபிலாஷைகள், மனிதர்களிடையே மரியாதை, பணத்தின் மேல் பேராவல் போன்றவற்றைத் தடுப்பதற்கான உலகின் கவர்ச்சிகளுக்கு எதிராகவும், இன்னும் "ஒளியின் தூதனாக" வேஷம் தரித்து, தேவனுடைய ஜனங்கள் மீது வரும் வழக்கமாக தாக்கும், எதிராளியின் தந்திரங்களுக்கு எதிராகவும், "சுவிசேஷத்தில் நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் நம்பிக்கைக்கு" (கொலோசேயர் 1:23)பதிலாக மனித உணர்வுகள், முறைகள் மற்றும் வேலைகளையும், அர்ப்பணிக்கப்பட்ட நோக்கங்கள், சிந்தைக்கு பதிலாக [illegible]ண்டிகைகள், சடங்குகள் [illegible] ஏமாற்றுவதற்கு எதிராகவும் விழித்திருந்து கவனிக்கவேண்டும். மேலும், நம்முடைய இரட்சகரின் அடிச்சுவடுகளை பின்பற்றுவதற்கு, தேவனுடைய பல்வேறு மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங் களை காண்பதினால் அல்ல காணாமல் விசுவாசித்து இந்த ஓட்டத்தை ஓடுவதற்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார். நம்முடைய பாடம் குறிப்பாக கவனிப்பதைப் பற்றியது. ஆனால் பொன்னான வேத பகுதியோடு இணங்க - உண்மையாக கவனிக்கும் அனைவரும் ஜெபிக்கவும் வேண்டும், ஊக்கத்துடன் ஜெபிக்கக்கூடியவர்கள் கவனிப்பவர்களாகவும் இருக்கவேண்டும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஜெபம் விசுவாசத்தைக் குறிக்கிறது, "கிரியை இல்லாத விசுவாசம் செத்தது" என்று அப்போஸ்தலர் கூறுகிறபடி, ஜீவனுள்ள விசுவாசம் இருக்கும் வரை, கவனித்தலோடு இணைந்து செயல்படும் கிரியையைக் குறிக்கிறது. அது விரைவாக அதன் சத்தையும், அதன் மதிப்பையும், இருப்பையும் இழக்கிறது.

VIJAYABALA DESIGN
3.24K subscribers

**R3178**

"சோதனைக்கு உட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபியுங்கள்." - மாற்கு14:38

பாவத்தில் விழுவதற்கு ஒரு காலத்தை விட மற்றொரு காலத்தில் அதிக சாத்தியமாக இருப்பதைக் குறித்து விச்சித்திரமாக உள்ளது. ஆயினும் ஒவ்வொரு வசந்த காலத்திலும், பஸ்கா காலத்தில் வரும் சோதனையின் விசித்திரமான வல்லமையை பல ஆண்டுகளாக நாம் கவனித்து வருகிறோம். இதை முன்பு மற்றவர்களின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் இந்த காலத்தில் அநேகர் அல்லது அனைவரும் தடுமாறுவதை அல்லது காயப்படுவதை நாம் கவனித்து வருகிறோம். ஆகையால் நம்முடைய கர்த்தருடைய வார்த்தைகளை மிகுந்த எச்சரிப்புடன் கவனித்து, மற்றவர்களுக்காகவும், நமக்காகவும் ஊக்கத்துடன் விழித்திருந்து ஜெபிப்போம். மேலும் ஒவ்வொருவரும் தன் சகோதரனுக்கு முன்பாக தடுக்கலின் கல்லை போடாதபடிக்கு கவனமாக இருக்கவேண்டும். ரோமர் 14:13, எபிரெயர் 2:1.

" அப்பொழுது யூதருடைய பண்டிகையாகிய பஸ்கா சமீபமாயிருந்தது. 51.நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார். 60.அவருடைய சீஷரில் அநேகர் இவைகளைக் கேட்டபொழுது, இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள். 66.அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின் வாங்கிப்போனார்கள்.

அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார். " - யோவான் 6:4,51, 60,66,67 என்று பஸ்கா பண்டிகையின் போது நம்முடைய ஆண்டவர் கூறினார். இந்த பஸ்கா நேரத்தில் தான் யூதாஸ் நம்முடைய ஆண்டவரை காட்டி கொடுப்பதற்காக பேரம் பேசினான் - சிறிது நேரம் கழித்து அதை நிறைவேற்றினான். " அப்பொழுது, அவர்: என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள் என்று சொல்லி," (மத்தேயு26:38) என்று நம்முடைய ஆண்டவர் பஸ்கா காலத்தைப் பற்றி தான் சொன்னார். "ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்." - லூக்கா12:50

இந்த பஸ்கா காலத்தில் தான் நம்முடைய ஆண்டவர் சீஷர்களை அழைத்து, மனுஷகுமாரன் பிரதான ஆசாரியர்கள் மற்றும் வேதபாரகரின் கைகளில் ஒப்படைக்கப்பட்டு, கொல்லப்பட போகிறார் என்றும் அவர்களுக்கு விளக்கத் தொடங்கினார்.

(மத்தேயு16:21) பின்னர் பேதுரு தன்னை ஒரு சீஷன் என்பதை மறக்கும்படியாக சோதிக்கப்பட்டு, "ஆண்டவரை தனியே அழைத்துக் கொண்டுபோய் - ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்து கொள்ளத் தொடங்கினான்." இவ்வாறு அவர் நம்முடைய கர்த்தருடைய பலியை நிராகரிக்கும்படி சோதிக்கப்பட்டார். ஆகவே, "எனக்குப் பின்னாகப்போ சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் ..." என்று நம்முடைய ஆண்டவர் பேதுருவை கடிந்துகொண்டார். - 22,23 வசனங்கள்.

பஸ்காவை புசிப்பதற்கு அனைவரும் சந்தித்தபோது, பன்னிரண்டு பேரில் இராஜ்யத்தில் யார் பெரியவராக இருப்பார் என்ற சர்ச்சைஅவர்களுக்குள் உண்டாயிற்று. இவ்வாறு அவர்கள் நம்முடைய ஆண்டவரின் கடிந்துகொள்ளுதலைப் பெற்றார்கள். மேலும் நம்முடைய ஆண்டவர் அவர்களின் கால்களைக் கழுவுவதன் மூலம் மனத்தாழ்மையின் விளக்கத்தை ஒரு மாதிரியாக முன்வைத்தார்.

அதற்குபின் அவர்கள் ஒரு பாடலைப் பாடி, பஸ்காவிலிருந்து வெளியேறியபோதுதான், "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்ற இந்த கட்டுரையின் தலைப்பிலுள்ள வார்த்தைகளை நம்முடைய கர்த்தர் கூறினார். அவருடைய சித்தத்தை, தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து, அவருடைய வேர்வை இரத்தத்துளிகளாக வரும் அளவுக்கு அவர் ஒரு வேதனையான போரில் இருந்தார். அப்போது அவர் ஊக்கத்துடன் ஜெபித்தபோது, அவர் பலப்படுத்தப்பட்டார் - லூக்கா22:39-46.

சிறிது நேரத்திற்குப் பிறகு பிரதான ஆசாரியரின் சேனைகள் அவர்களிடம் வந்தபோது, மற்ற பதினோரு வரும் ஆண்டவரை தனித்து விட்டு விரைந் தோடினார்கள். (மாற்கு14:50) சோதனையின் போது வந்த பயத்தை அவர்களால் எதிர்க்கமுடியவில்லை.

மற்றவர்களை காட்டிலும் கொஞ்சம் தைரியமாக இருந்த யோவனும், பேதுருவும், சிறிது நேரத்திற்குப் பிறகு ஆண்டவருக்கு நேரிடும் காரியங்களை காண பிலாத்தின் நீதிமன்றத்திற்கு சென்றார்கள். அங்கு பேதுருவை கிறிஸ்துவின் சீஷர் என்று அடையாளம் கண்டுபிடிக்கப்பட்ட பின், அவர் இயேசுவை சபிப்பதன் மூலம் மறுதலித்து சோதனையில் விழுந்தார். - மாற்கு 14:68,70,71.

அதே சமயத்தில் நம்முடைய ஆண்டவரும் பிலாத்துவுக்கு முன்பாக சோதிக்கப்பட்டார், ஆனால் அவர் "அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணி" வெற்றி அடைந்தார். - 1 தீமோத்தேயு6:13.

அதற்குபின் நம்முடைய ஆண்டவருக்கு சோதனைகள் விரைவாக தொடர்ந்தது. அவருடைய எதிரிகள் அவர் மேல் துப்பி, முட்களால் முடிசூட்டி, "அவர் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட கிறிஸ்துவானால், அவன் தன்னை தான் இரட்சித்து கொள்ளட்டும்" என்று அவர்கள் அவதூறாக பேசியபோது, அவர்களை அவர் நோயால் அல்லது மரணத்தால் அடித்திருக்க முடியும், ஆனால் அவர் தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போல, அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். அவர் ஜெயித்தார், அவரை துன்புருத்தியவர்களுக்காக ஜெபித்தார். -ஏசாயா53:7, லூக்கா 23:33-37. அத்தகைய நன்றியற்ற மனிதர்களின் மீட்பராக நான் இருக்க மாட்டேன் என்றும் அவர் முடிவு செய்திருக்கலாம். அவருடைய எதிரிகளை முறியடிப்பதற்கு, அப்பொழுது அவர் பிதாவிடம் கேட்டிருந்தால் பன்னிரண்டு லேகியோன் தேவதூதர்களின் உதவியைப் பெற்றிருக்கலாம் என்று அவர் உணர்ந்திருந்தாலும், அப்படிப்பட்ட சோதனையை அவர் எதிர்த்தார். குறித்த காலத்தில் சாட்சியமளிக்கும்படி, அவர் அனைவருக்காகவும் மீட்பின் கிரயத்தைக் கொடுத்தார். நம்முடைய ஆண்டவரின் மரணம் அனைத்து சீஷர்களுக்கும் விசுவாசத்தின் ஒரு மிக பெரிய சோதனையாக இருந்தது, அவர்கள் அனைவரும் மனுஷரை பிடிப்பதை விட்டு விட்டு, நேராக தங்கள் பழைய மீன்பிடிக்கும் தொழிலுக்கு திரும்பி விட்டார்கள். - யோவான் 21:3-17. இந்த விசேஷித்த காலத்தில் பவுலும் பிற அப்போஸ்தலர்களும் கூட விசேஷித்த சோதனைகளை மேற்கொண்டனர். அப்போஸ்தலர் 20:16; 21:10,11,27-36 காண்க. கடந்த காலங்களில் இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, தற்போதைய அறுவடை 1874ல் தொடங்கியதிலிருந்து நம்முடைய சொந்த அனுபவத்தைப் பார்க்கும்போதும், ஒவ்வொரு வசந்த காலத்திலும் கர்த்தருடைய ஆடுகளுக்காக விசேஷித்த அக்கரையுள்ளவர்களாக இருக்கிறோம். இந்த வசந்த காலமும் இதற்கு விதிவிலக்கல்ல.

சோதனைகள் நம்மீது செயல்படும் வரை சோதனையின் தன்மை எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை தெளிவாக உணரமுடியாது. ஆனால் அவைகளைப் பற்றி நாம் முன்கூட்டியே அறிந்திருந்தால், அவைகள் சிறிய சோதனைகளாக இருக்கும். ஆகையால் உங்கள் எதிராளியான பிசாசானவர் யாரை விழுங்கலாம் என்று வகை தேடி சுற்றிகொண்டிருப்பதால், எப்பொழுதும் விழித்திருந்து ஜெபியுங்கள். இதுவே பாதுக்காப்பிற்கான ஒரே வழி. உங்கள் துல்லியமான பலவீனங்களை அவன் அறிந்திருக்கிறான். அவற்றை பயன்படுத்த அவன் ஆயத்தமாக இருக்கிறான். நாம் ஜெயிக்கவேண்டுமானால், நாம் ஒவ்வொருவருக்கும் நம்முடைய இருதயங்களில் ஆவியின் கனிகளும், "தேவைப்படும் நேரத்தில் உதவி பெற" தேவனுடைய கிருபாசனமும் தேவை."சோதனைக்கு உட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபியுங்கள்." "என் ஆத்துமாவே உன்னைக் காத்துக்கொள், பத்தாயிரம் எதிரிகள் எழுகிறார்கள், பரிசு பெறுவதில் இருந்து உன்னை ஈர்க்க பாவத்தின் புரவலன்கள் உன்னை கடுமையாக அழுத்துகின்றன."

**R2775 [col. 1:3 to end]—** சோதனைக்கு உட்படாதபடி விழித்திருந்து ஜெபம் பன்னுங்கள்.

நம்முடைய ஆண்டவர் மற்றும் அப்போஸ்தலர்களின் விஷயத்தில், கஷ்டமான இருண்ட நேரத்தில் விழித்திருந்து ஜெபிப்பதன் மதிப்பை காண்கிறோம். நம்முடைய ஆண்டவர் சீஷர்களுக்கு காண்பித்த வழியைப் பின்பற்றினார், அவர் கவனித்து, ஜெபித்து, ஒரு ஆசீர்வாதத்தை பெற்று, பெலப்பட்டார், வெற்றியும் அடைந்தார். அவருடைய சீஷர்களோ கவனிக்கவும் இல்லை, ஜெபிக்கவும் இல்லை, சந்தர்ப்பத்தின் தேவைகளை உணரத் தவறிவிட்டார்கள், இதன் விளைவாக அவர்கள் சிதறடிக்கப்பட்டு கலக்கமடைந்தனர். "உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன்" என்று அவர்களின் ஒருவர் அவர்கள் அனைவரையும் விட மிகவும் வலிமையானவர் என்று சிறிது நேரத்திற்கு முன்பு பெருமை பேசினார். அவரது சுற்றுப்புறங்களால் மிகவும் சக்திவாய்ந்தவராக இருந்தார், மேலும் அவர் விழித்திருந்து ஜெபத்தினால் பெற வேண்டிய அந்த பலத்தில் குறைவாக இருந்ததால் அவர் பலவீனப்பட்டு, ஆண்டவரை அவதூறாக மறுதலித்தார்.

கர்த்தருடைய ஜனங்கள் அர்ப்பணிக்கப்பட்ட மற்றும் பரிசுத்தமான வாழ்க்கையை வாழ முயற்சித்தாலும், "விழித்திருந்து ஜெபியுங்கள்" என்ற நம்முடைய ஆண்டவரின் கட்டளையை புறக்கணித்தால், அவர்கள் விவேகமற்றவர்கள் என்பதை நாம் அறிவோம். அவர்கள் கன்னிகைகளாக, தூய்மையானவர்களாக இருந்தாலும் கூட அவர்கள் புத்தி இல்லாதவர்கள். பாவம் மற்றும் எதிராளியை, தனித்து நின்று அவர்கள் வெற்றி பெறுவது நம்பிக்கையற்ற காரியமாகும். நம்முடைய ஆண்டவருக்கே பலம் தேவைப்பட்டால், நிச்சயமாக நமக்கும் தேவை, பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் அவர் வேண்டுதல்களுக்கு பதிலளிக்கும் விதமாக அவர் அதைப் பெற்றார். அவருடைய நாமத்திற்காகவும், ஊழியத்திற்காகவும், எல்லாவற்றையும், சகித்துக்கொள்ளும் நல்ல போர்வீரர்களாக நம்மை பலப்படுத்தக்கூடிய விசுவாசத்தின் முழு உத்திரவாதத்தை தேவன் கொடுப்பதில் மகிழ்ச்சி அடையும் விதத்தை நமக்கு அறிவிக்கிறது. கர்த்தராகிய இயேசுவைப் போலவே தேவனை ஆர்வத்தோடும், ஜெபித்து ஆசீர்வாதத்தை பெறும் உறுதியோடும் இருப்பவர்களை ஆறுதல்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் ஒரே மாதிரியான பரலோக தூதர் அவர்களிடம் வரமாட்டார், ஆயினும் வேறொரு வகையான பரலோக தூதர் நிச்சயமாக அனுப்பப்படுவார். அப்போஸ்தலர்கள் எவரும் நம் ஆண்டவருக்குஅனுதாபம் காட்டவோ அல்லது அவருக்கு உதவவோ முடியவில்லை. ஆனால் நம்முடைய சிரமமான சோதனைகளில், நம்முடைய சக சீஷர்கள் நம்மேல் அனுதாபப்பட்டு உதவலாம். அல்லது அனுப்பப்பட்ட தூதர் அப்போஸ்தலர்களில் ஒருவராக இருக்கலாம், பல கிருபையான ஊக்குவிக்கும் வார்த்தைகளின் வழியாக, தேவன் அவர்களின் வழியாக நம்மோடே தொடர்புகொண்டிருக்கிறார். ஆனால் வலிமை எவ்விதத்தில் வந்தாலும், அது மனிதர்களிடமிருந்தோ, தேவதூதர்களிடமிருந்தோ அல்ல, தேவனுக்கு நாம் மனமகிழ்ச்சியாகவும், அவரால் அங்கீகரிக்கப்படும் படியாகவும், அவரை நேசிப்பவர்களுக்கு அவர் முன்னேற்பாடு செய்துள்ள மிக உன்னதமான, விலைமதிப்பற்ற விஷயங்களை நாம் எதிர்ப்பார்த்து கேட்கும்படியாகவும், அந்த வலிமை தேவனிடம் இருந்து வரவேண்டும்.

சொல்லபோனால், இப்போது இந்த முழு

உலகத்தையும் பரீட்சிக்கவந்த சோதனையின் காலத்தில் நாமும் இருக்கிறோம். "சோதனையின் காலம்" அல்லது இந்த யுகத்தின் முடிவில் சோதனை என்று நிகழ்காலத்தைக் குறித்து வேதவசனங்கள் குறிப்பிடுகிறது. தங்களை முழுமையாக அர்ப்பணித்த, தேவனுடைய உண்மையான ஜனங்களுக்கு இதுவே கெத்செமனே மணிநேரம். இந்த நேரத்தில் நம்மை சுமக்க அவருடைய பலத்தின்மேல் நம்பிக்கையோடு சார்ந்திருக்கும்படிக்கு, நம்முடைய கர்த்தரைப் போலவே, இந்த காலத்தில், நாம் தேவனுடையவர்கள் என்றும், அவர் நம்முடைய தேவன் என்றும் முழு உறுதிப் பெறுவதற்கு பிதாவின் முகத்தை தேடவேண்டும். "எந்த பூமிக்குரிய மேகமும் உமது அடியேனின் கண்களிலிருந்து உம்மை மறைக்கக்கூடாது" என்று நாம் பாடுவது போல, நாம் உறுதி செய்ய வேண்டிய நேரம் இது. நிச்சயத்து கொள்ளுவோம். "சோதனைக்கு உட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபியுங்கள்" என்ற நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளை புறக்கணிப்பவர்கள், சோதனையில் விழுவது நிச்சயம். அவர்களின் வீழ்ச்சி கடுமையாக இருக்கும்-- ஆனாலும் கூட அவர்கள் பேதுருவைப் போல அதிலிருந்து மீட்கப்பட வேண்டும். அது பலத்த அழுகையுடன் இருக்கும்.

சிலர் ஜெபிப்பார்கள் ஆனால் விழித்திருக்க மாட்டார்கள், சிலர் விழித்திருப்பார்கள் ஜெபிக்கமாட்டார்கள். ஆனால் இரண்டையும் ஒன்றிணைக்க நமது ஆண்டவர் கூறிய முறையே பாதுகாப்பானதும், சரியானதுமாக இருக்கிறது. நாம் விழித்திருக்கவேண்டும், மற்றும் உலகம், மாம்சம் மற்றும் சாத்தானின் ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக நாம் பாதுகாப்புடன் இருக்கவேண்டும். கர்த்தருடைய சொற்களில் உள்ள அனைத்து ஊக்குவிக்கும் வார்த்தைகளையும், அவைகள் நிறைவேறியதற்கான சான்றுகளையும், அவருடைய பிரசன்னத்தைக் குறிக்கும் அறிகுறிகளையும் மற்றும் மிக அருகில் இருக்கும் யுகத்தின் பெரிய மாற்றத்தையும் நாம் கவனித்திருக்கவேண்டும். விசுவாசத்திலும், நம்பிக்கையிலும், அன்பிலும் நம்மை பலப்படுத்தும் எல்லாவற்றையும் நாம் கவனிக்கவேண்டும். இவைகளை நாம் கவனிக்கும்போது இடைவிடாமல் ஜெபிக்கவேண்டும். கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் ஒன்றுக்கூடி ஜெபிக்கவேண்டும், நம்முடைய வீடுகளில் குடும்பம் குடும்பமாக ஜெபிக்கவேண்டும், தனிமையில் ஜெபிக்கவேண்டும், மறைவாக ஜெபிக்கவேண்டும். நாம் சொல்லும் மற்றும் செய்கிற எல்லாவற்றிலும் ஜெபத்தின் ஆவி இருக்கவேண்டும் : அதாவது, வாழ்க்கையின் எல்லா விவகாரங்களிலும் வழிகாட்டுதலுக்காக நம் இருதயங்கள் தொடர்ந்து தேவனிடம் சென்று கொண்டிருக்கவேண்டும். மேலும் அவர் ஏற்றுக்கொள்ளும் வகையில், நம்முடைய கைகள் செய்யக்கூடிய யாவையும் நம்முடைய முழு பலத்தோடு செய்யவேண்டும். இவ்வாறு செய்வதினால் நம்முடைய சோதனைகளில் அவர் நம்மை பாதுகாப்பார். இறுதியாக தீயவனிடமிருந்து விடுவிக்கப்பட்டு, நம்முடைய தேவனுடைய இராஜ்யத்தில் ஒரு இடத்தைப் பெறுவோம். சகோதரர்களே, சகோதிரிகளே, "நீங்கள் சோதனைக்கு உட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபியுங்கள்" என்ற நம்முடைய ஆண்டவருடைய வார்த்தைகளை மேலும் மேலும் நினைவில் வைத்துக் கொண்டு, ஒவ்வொரு வீட்டிலும், நடைமுறைப்படுத்துவோம்.

**48. ஜெபத்தின் ஆவி என்றால் என்ன?**

**R2775 [col. 2 :2, next to last sen tence]:**

நாம் சொல்லும் மற்றும் செய்கிற எல்லாவற்றிலும் ஜெபத்தின் ஆவி இருக்கவேண்டும் : அதாவது, வாழ்க்கையின் எல்லா விவகாரங்களிலும் வழிகாட்டுதலுக்காக நம் இருதயங்கள் தொடர்ந்து தேவனிடம் சென்று கொண்டிருக்க வேண்டும். மேலும் அவர் ஏற்றுக்கொள்ளும் வகையில், நம்முடைய கைகள் செய்யக்கூடிய யாவையும் நம்முடைய முழு பலத்தோடு செய்யவேண்டும். இவ்வாறு செய்வதினால் நம்முடைய சோதனைகளில் அவர் நம்மை பாதுகாப்பார். இறுதியாக தீயவனிடமிருந்து விடுவிக்கப்பட்டு, நம்முடைய தேவனுடைய இராஜ்யத்தில் ஒரு இடத்தைப் பெறுவோம்.

**49. ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார் என்பதை நாம் எவ்வாறு புரிந்து கொள்கிறோம்?**

ரோமர் 8:26,27 - அதேபோல் ஆவியும் நம்முடைய பலவீனங்களில் உதவுகிறது. நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்கக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுல் செய்கிறார். மேலும் தேவனுடைய ஆவி தேவனுடைய சித்தத்தின்படி பரிசுத்தவான்களுக்காக பரிந்து பேசுகிறதினால், இருதயங்களை ஆராய்கிறவருக்கு, மனதின் ஆவி என்னவென்று அறிவார்.

**E287 through E290 [¶3]—** "வாக்கக்கடங்காத பெருமூச்சுகளோடு" பாடத்தின் முடிவில் காணலாம்.

## 50. ஆயிர வருட ஆட்சியில் ஜெபத்திற்கான ஒரு சிறப்பு சந்தர்ப்பாக என்ன பரிந்துரைக்கப் பட்டுள்ளது?

### D640 [2] through D641:

அநேகமாக, மனுஷர் சிந்திக்க நேரம் கிடைத்ததும், அவர்கள் மகா உபத்திரவ காலத்தின் அழிவுகளிலிருந்து மீட்கப்படும்போது, விசுவாசத்தின் ஜெபத்திற்கு விடைகிடைக்கும் வகையில், பழைய ஏற்பாட்டின் முற்பிதாக்களின் உயிர்த்தெழுதலோடு, நோயுற்றவர்களை ஆரோக்கியமாக சீரமைக்கும் காரியம் அடிக்கடி நடக்கும். மேலும் மற்றவர்களின் உயிர்த்தெழுதலும் சாத்தியமாகும்படிக்கு அவர்களுக்கு பரிந்துரைக்கப்படும். "பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்" என்று நம்முடைய ஆண்டவரின் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக - அவர்களுடைய நண்பர்களும் உறவினர்களும் -மரணத்திலிருந்தும் கல்லறையிலிருந்தும் வருவார்கள். மேலும் இந்த வேலை ஆரம்பித்து முன்னேறுவதற்காக, பிரிந்துபோன நண்பர்கள் மறுசீரமைப்பதற்கான விசுவாசமுள்ள ஜெபத்திற்கு விடையாக இருக்கலாம் என்பது நியாமான பரிந்துரையாகும். நாம் சிந்திக்கிறபடி, மற்றவர்களுக்கு மேலாக பரிந்துரைக்கும், அத்தகைய முறையில் நாம் ஒரு நியாயத்தை காண்கிறோம்.

உதாரணமாக, இது மரித்தவர்களை படிப்படியாக திரும்ப கொண்டுவரும், மேலும் அவர்கள் மரணத்திலிருந்து, தலைகீழான வரிசையில் உயிர்த்தெழுந்து வருவார்கள். இதனால் வீடுகளில் மனமார்ந்த வரவேற்புகளும், உயிர்த்தெழுந்து ஜீவனோடு வருபவர்களுக்கு வாழ்க்கைக்குத் தேவையாக ஆறுதல்கள் கிடைக்கும். இப்படியாக உயிர்த்தெழுந்தவர்கள் மொழி, பழக்கவழக்கம் பாரம்பரியம் ஆகியவற்றை தெரிந்திருக்கவேண்டும். அதேசமயம், ஒழுங்கு தலைகீழாக மாற்றப்பட்டால், புதிய நிபந்தனைகளுக்கு உயிர்த்தெழுபவர்கள் இவைகளுக்கு ஆயத்தமாக இருக்கமாட்டார்கள். மேலும் அவர்கள் முழுமையான அந்நியர்களும், தலைமுறைக்கு ஒத்துப்போகாதவர்களுமாக இருப்பார்கள். எவ்வாறாயினும் இக்காரியம் தீர்க்கதரிசிகள் மற்றும் பிற முற்பிதாக்களுக்கு பொருந்தாது. இவர்கள் தங்கள் தகுதியை நிருப்பிக்கும் பணியை செய்ததினால், பூரண மனுஷராக உயிர்த்தெழுவார்கள். மேலும் இவர்கள் அறிவுசார்ந்த, தார்மீக மற்றும் அனைத்து மனுஷரை காட்டிலும் உடல் ரீதியாகவும் பூரணர்களாக இருப்பார்கள்.

அவர்களின் மறுசீரமைப்புக்காக தேவன் சில திட்டங்களை வைத்திருப்பதினாலும், சில விண்ணப்பங்கள் அதற்கு இணக்கமாக இராததினாலும், பிரிந்துபோன நண்பர்கள் மீட்கப்படுவதற்கான அனைத்து ஜெபங்களும் உடனடியாக பதிலளிக்கப்படுவதற்கு சாத்தியமில்லை. அவருடைய ஒழுங்கு அநேகமாக சபை மற்றும் முற்பிதாக்களின் உயிர்த்தெழுதல் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள வரிசையின் ஒழுங்கின்படி இருக்கலாம். திருச்சபை மற்றும் முற்பிதாக்கள் உயிர்த்தெழுதலில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளபடி அவரது வரிசையானது அநேகமாகத் தகுதி அடிப்படையிலான வரிசையாக இருக்கும் - உயிர்த்தெழும் நபர்கள் மற்றும் நண்பர்கள், மற்றும் அவர்களின் புதிய ஜீவனைத் துவங்கும் நிலைமைகள் போன்ற இரண்டு தகுதி அடிப்படையிலான வரிசையாக இருக்கும். இது போன்ற கோரிக்கைகளை முன்வைப்பவர்களின் தரப்பில் இது ஒரு அளவிலான தயாரிப்பு அவசியமாகும் -இருதயம் மற்றும் வாழ்க்கைக்கான ஆயத்தம் மற்றும் பரிசுத்தமான பெரும் பாதையில் முன்னேறுவதற்கான நிலைமையை சாதகமாக்கும். இவ்வாறாக இப்படிப்பட்ட மறுசீரமைப்புகள் உயிருள்ளவர்களுக்கு, விசுவாசத்தின் முழுமையான வெகுமதிகளாக மாறும், மேலும் விழித்திருப்பவர்களுக்கு சாதகமான நிலைமைகளையும் பாதுகாக்கும்.

### F701 [2]:

கல்லறையாகிய சிறைச்சாலைக்குள் சென்றவர்கள் மனுஷகுமாரனின் குரலைக் கேட்கும்படியாக எவ்வாறு வெளியே கொண்டுவரப்படுவார்கள் என்றும் கீழ்ப்படிதலின் மூலம் அவர்கள் எவ்வாறு ஜீவிப்பார்கள் என்ற விவரங்களை கர்த்தர் சொல்லவில்லை. (யோவான் 5:25) நடைமுறையின் தன்மை என்னவாக இருக்கும் என்பதை நாம் தன்னிச்சையாக தீர்மானிக்க முடியாது. இந்த விஷயத்தின் குறிப்புகளை நாம் புரிந்துகொள்வது அவசியமும் இல்லை. ஆயினும்கூட, அதைப் பற்றி சிந்திப்பது நமக்கு சுவாரஸ்யமாக இருக்கும். மேலும் இந்த நடைமுறையை பொருத்தவரை நாம் கற்பனை செய்து பார்ப்பது தேவனை புண்படுத்தாது என்று நாம் அனுமானிக்கலாம். நம்முடைய கருத்து ஏற்கனவே சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இரக்கம் பெற்ற ஒவ்வொருவரும் அறிவிலும், அன்பிலும் வளர்ச்சி அடையும்போது, மற்றவர்கள் ஆசீர்வதிக்கப்படுவதற்கு குறிப்பாக அவர்களுக்கு அருகிலுள்ள உறவினர்கள் ஆசீர்வதிக்கப்படும்படிக்கு முடிந்த வரை ஒத்துழைக்க

விரும்புவார்கள். மற்றும் இந்த விஷயத்தில் தேவனை அணுகுவதற்கான பொதுவான வழி ஜெபம் மட்டும் ஆயத்தமாக இருக்கும். அதற்கு பதிலளிக்கும் விதமாக மற்றவர்கள் உயிர்த்தெழுதல் நடக்கும். நிழலில், யூதர்கள் மோசேயின் ஆசாரியத்துவத்தை அணுகியது போல, இந்த உலகம் நோயிலிருந்த உதவிப் பெற "இராஜரீகமாக ஆசாரியத்துவத்தை" அணுகும். எனவே ஜெபமே ஆசீர்வாதங்களுக்கான வழக்கமான வழியாக இருக்கும். சில கேள்விகளுக்கான நீண்ட ஆவணங்கள் பின்வருமாறு.

**R1865 [col. 1:3 through col. 2:7]** (**#13**கேள்வியை காண்க)

நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கு தன்னுடனான இந்த ஒற்றுமை எவ்வளவு அவசியம் என்பதை ஆண்டவர் அறிந்திருந்தார். சூறாவளி தூக்கி எறிந்தது, நம்முடைய தந்தையின் பிரசன்னத்தில் அவருடைய பராமரிப்பும், ஆறுதலும், தேற்றுதலும் நமக்கு அளிக்கப்பட்டது. சாந்த குணமுள்ளவர்களும், இருதயத்தில் குற்றவுணர்வு பெற்ற அனைவரும், அவ்வப்போது கவனத்துடன் வாக்குத்தத்தங்களை கேட்பதோடு, நம்முடைய பிதாவாகிய தேவனும் மற்றும் அவருடைய குமாரனாகிய நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின் பிரசன்னத்தில் நிலைத்திருக்கிறார்கள் அல்லவா ? " என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார். ஸ்காரியோத்தல்லாத யூதா என்பவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தப்போகிற காரணமென்ன என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்." (யோவான் John 14:21-23) என்று இயேசு கூறினார்.

பிதா மற்றும் குமாரனின் சிந்தனை பராமரிப்பு ஆர்வமும் தொடர்ந்து நம்மீது இருக்கும் என்பதையும், எந்த நேரத்திலும் அவர்கள் இருவரின் சிறப்பு கவனத்தை நாம் பெறலாம் என்ற சிந்தனையை, பிதாவிலும், குமாரனிலும் நிலைத்திருப்பதைப் பற்றிய இந்த வாக்குறுதி நமக்கு தெரிவிக்கிறது. இதே கருத்தை அப்போஸ்தலன் பேதுருவின் வார்த்தைகளிலும் தெரிவிக்கப்படுகிறது. (1பேதுரு3:12) - " கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள்வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது." மேலும், "ஜெபத்திலே உறுதியாய்த்தரித்திருங்கள்.", "சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணுங்கள்", "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்", "தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார், நாம் மண்ணென்று நினைவுகூருகிறார்." "பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள் மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும், கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்." "கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள்மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள்மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது. அவருடைய உடன்படிக்கையைக் கைக்கொண்டு, அவருடைய கட்டளைகளின்படி செய்ய நினைக்கிறவர்கள் மேலேயே உள்ளது." - ரோமர் 12:12, லூக்கா18:1, 1தெசலோ 5:17, சங்கீதம் 103:13, 14,11,12,17,18

பிதா மற்றும் குமாரனின் பிரசன்னத்தை கோர முடியாதவர்கள், பரலோக கிருபாசனத்தண்டைக்கு அடிக்கடி வரமுடியாது, அவரை நேசிப்பவர்களாகவும், அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பவர்களாகவும், இருப்பவர்கள் கர்த்தராகிய இயேசுவே பிதாவை அணுகுவதற்கான ஒரே வழி என்று அங்கீகரிப்பார்கள். மேலும் "ஒருவன் பாவஞ்செய்வானானால், அவர் கர்த்தரை நேசிக்கவில்லை என்று அவருடைய வெளிப்புற நடத்தையிலிருந்து நியாயந்தீர்க்கப்படுவார். ஆயினும், அவர் மனம் வருந்தினால், "நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்." என்றும் "நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்திற கிருபாதாரபலி அவரே" என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும். அதற்கு பின் "தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார் ? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர், அவரே எழுந்துமிருக்கிறவர், அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர், நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே." - 1யோவான் 2:1,2, ரோமர் 8:33,34.

ஆகையால்," வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம். நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிரக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், எற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்". என்று அப்போஸ்தலர் வலியுருத்துகிறார். --எபிரெயர் 4:14-16.

இத்தகைய அவசர மற்றும் அன்பான அழைப்பிதழ்களால், தேவனுடைய எந்த பிள்ளையும், அடிக்கடி அவரிடம் வரவோ அல்லது அவருடன் ஐக்கியப்படவோ அல்லது நீண்ட நேரம் தொடர்பு கொள்ளவோ, தங்கவோ தயங்க வேண்டாம். அறைவீட்டிற்குள் பிரவேசித்து, கதவுகளை பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற பிதாவை நோக்கி ஜெபம்பண்ணும்போது, அந்தரங்கத்தில் பார்க்கிற பிதா வெளியரங்மாய் பலனளிப்பார் என்ற மாபெரும் சிலாக்கியத்தை நாம் பெற்றுள்ளோம். (மத்தேயு6:6) அது மட்டுமல்ல, அந்த நாளின் எல்லா வியாபாரங்களிலும், அவசரங்களிலும், குழப்பங்களிலும் அவர் நம்மோடிருப்பார். மேலும் கவலைகள் மற்றும் குழப்பங்களுக்கு மத்தியில் எந்த நேரத்திலும் நம்முடைய ஜெப சிந்தைகளை, ஞானத்திற்காகவும், பலத்திற்காகவும், கிறிஸ்தவ வலிமைக்காகவும், அல்லது ஆறுதலுக்காகவும், அல்லது நமக்காகவோ, மற்றவர்களுக்காகவோ தேறுதலுக்காகவும் தேவனிடம் திருப்பலாம். எந்தவொரு பதிலளிக்கும் குரலையும் நாம் கேட்காவிட்டாலும், அவருடைய முன்னேற்பாட்டின் போக்கை நாம் கவனத்திருந்தால், இதுபோன்ற ஜெபங்களுக்கு விடையளிக்கும் விதமாக நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் நம்முடைய நன்மைக்காகவும், மற்றவர்களின் நன்மைக்காகவும் தேவன் வடிவமைப்பதைக் காணலாம். பிரியமானவர்களே, இந்த உண்மை பல முறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது அல்லவா ? -- குழப்பங்களிலும், உபத்திரவங்களிலும், இன்னல்களிலும், துன்பங்களிலும், துன்புறுத்தல்களிலும், சோதனைகளிலும், வேதனைகளிலும்?

தேவனிடத்தில் வருவதில், எந்த தயக்கமும் வேண்டாம். அவர் அதிக முக்கியத்துவம் வாய்ந்த பிற விஷயங்களில் மிகவும் மும்முரமாக இருக்கிறாரோ, அல்லது சிறிய முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களுடன் மீண்டும் மீண்டும் அவரிடம் வருவதில் அவர் சோர்வடைவாரோ என்பதில் நமக்கு எந்த பயமும் வேண்டாம். இந்த காரியத்தை நமக்கு உறுதியளிப்பதற்காகவே, ஓயாமல் தொந்தரவு செய்த ஒரு விதவைக்கு, அவளுடைய குறைகள் கேட்கப்பட்டு, உடனடியாக பதில் அளிக்கப்பட்ட ஒரு உவமையைப் பற்றி நம்முடைய ஆண்டவர் கூறினார். அவ்வாறு செய்யும் போது, நம்முடைய உற்சாகமான விருப்பங்கள் மற்றும் நம்முடைய ஜெபங்கள் பதில் அளிக்கப்படும். விசுவாசம் மற்றும் பக்திவைராக்கியத்தின் குறைவினால் நாம் சோர்ந்துபோனால் ஜெபங்களுக்கான பதில் தாமதிக்கப்படும். ஏனெனில், தேவனுடைய வேலைகளில், நேரம் ஒரு முக்கிய காரணமாக தேவைப்படுகிறது.

"என்னை ஆசீர்வதிக்காவிட்டால் நான் உம்மை விடமாட்டேன்" என்ற சொல்லி இரவு முழுவதும், விடியும் வரை யாக்கோபு ஜெபத்தில் போராடிக்கொண்டிருந்தார். "என் கிருபை உனக்கு" போதும் என்று ஆண்டவர் சொல்லும் வரை பவுல் மூன்று முறை அவரிடம் வேண்டினார். கர்த்தர் தாமே பல நேரங்களில் இரா முழுவதும் ஜெபித்தார். அவர் பலத்த கண்ணீரோடும் சத்தத்தோடும் ஜெபித்தார். (லூக்கா6:12, மத்தேயு14:23, மாற்கு6:46; 1:35, லூக்கா5:16, எபிரெயர் 5:7) "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்" என்று அப்போஸ்தலர் கூறுகிறார். - பிலிப்பியர் 4:6.

அப்போஸ்தலனாகிய பவுல் ஆவிக்குரிய வழிநடத்துதலின் கீழ் ஒரு குறிப்பிட்ட வேலையை பாதுக்காப்போடு செய்வதற்காக, ரோமர்களுக்கு எழுதிய கடிதத்தில், "நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில், நான் போராடுவதுபோல நீங்களும் என்னோடுகூடப் போராடவேண்டுமென்று..." அவர் தாமே இந்த கொள்கையில் செயல்பட்டார். - ரோமர் 15:28-32.

"எல்லாவற்றிலும்." - நம்முடைய பரலோகத் தகப்பன் நம்முடைய மற்றும் நம்முடையவர்களுக்கும் சம்பந்தப்பட்ட எல்லாவற்றிலும் ஆழ்ந்த அக்கறை கொண்டவர் என்பதை இது குறிக்கிறது. நம்முடைய தலைகளின் முடிகளையும் கூட எண்ணி வைத்திருக்கும் அவருக்கு, இதைவிட மிக சிறிய விஷயம் ஏதாகிலும்

இருக்குமா ? இன்றைய வீட்டின் காரியங்கள் அல்லது தொழில் சார்ந்த காரியங்களில், அவருடைய அன்பான அனுதாபமும் உதவியும் நமக்கு இருக்கலாம். கட்டுக்கு அடங்காத மற்றும் அளவுக்குமீறிய தன்நம்பிக்கை கொண்ட ஒரு வாலிபனின் போக்கை சரியாக வழிநடத்தி, கட்டுப்படுத்துவதற்கு ஒரு தாயின் ஆலோசனையும், ஒரு தந்தையின் ஞானமும் போதாதா ? அவர்கள் தங்கள் பயங்களையும் அச்சங்களையும் தேவனிடம் கொண்டுவரக்கூடும். மேலும் உலகின் சோதனையைச் சந்திக்க குழந்தைகள் வாசலைக் கடக்கும்போது, இறுதியில் அவர்கள் உறுதியான பாதுகாப்பான வழியையும் மற்றும் யாரையும் பின்தொடர்வதற்கான முட்டாள்தனம் ஆகியவற்றைக் காண்பிக்கும்படிக்கு அவருடைய ஞானம் மற்றும் முன்னேற்பாடும், சூழ்நிலைகளையும், சுற்றுப்புறங்களையும் வடிவமைக்கும்.

தொழில் சார்ந்த காரியங்களில் குழப்பம் உண்டா ? அல்லது தொந்தரவு செய்கிறதா ? "உங்கள் இருதயங்கள்....லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கு...எச்சரிக்கையாயிருங்கள்" (லூக்கா21 34)என்ற கர்த்தருடைய எச்சரிக்கையை நினைவில் வையுங்கள். மேலும் "ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், இன்னும் பல முட்டாள் தனமான புண்படுத்தும் காமங்களில் .... விழுகிறார்கள். இவைகள் மனுஷரை கேட்டிலும், முற்றிலுமான அழிவிலும் முழ்கடிக்கும்." என்று அப்போஸ்தலர் எச்சரிக்கிறார். மேலும் பண ஆசை எல்லா தீமைக்கும் வேராக இருப்பதால், சிலர் அதை இச்சித்து பின்செல்லும்போது, அவர்கள் விசுவாசத்தைவிட்டு விலகி, பல வேதனைகளால் தங்களை உருவ குத்திக்கொள்கிறார்கள். ஆனால், "நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு. விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள்." மேலும், இந்த விஷயங்களை நினைவில் வைத்துக்கொண்டு, நம்முடைய தற்காலிகமான காரியங்களுக்காக அதிகமாக கவலைப்படாதபடிக்கும், அவைகளை எவ்வாறு சரி செய்யலாம் என்பதை அறிந்தவர்களாக ஞானத்தைப் பெறவும், வழிடத்துதலுக்காகவும் பரலோக கிருபாசனத் தண்டைக்கு செல்லவேண்டும். (ரோமர் 12:11) மேலும் கர்த்தருடைய ஊழியத்தில் இத்தகைய உலக கவலைகளை நடைமுறைபடுத்தும்போது, ஆனால் அது தேவனுடைய ஐக்கியத்தையும், மனதின் சமாதானத்தையும் குறுக்கிடும் மிதமிஞ்சிய, அழிவுக்குரிய பராமரிப்பாக இருக்கும். அதை நாம் தவிர்க்கவேண்டும்.

வறுமையின் கொடுமை கவலையான சிந்தனையை ஏற்படுத்துகிறதா ? அதையும் கர்த்தரிடம் ஜெபத்தில் எடுத்துச் செல்லுங்கள். அதற்குபின், கையில் உள்ள வழிமுறைகளை விடாமுயற்சியுடன் பயன்படுத்தி, ஒழுக்கமான மற்றும் நேர்மையான விஷயங்களை வழங்க, பொறுமையாகவும் நம்பிக்கையுடனும் காத்திருங்கள். மேலும் தேவனுடைய முன்னேற்பாடுகளின் குறிப்புகளை கவனியுங்கள். விதைக்காமலும், அறுக்காமலும், களஞ்சியங்களில் சேர்த்துவைக்காமலும் இருக்கிற ஆகாயத்துப் பட்சிகளை போஷிக்கிறவரும், இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லை உடுத்துவிப்பவர், உங்களையும், உங்களுடையவர்களையும் உடுத்துவிப்பதும், போஷிப்பதும் எவ்வளவு சாத்தியமான காரியம்.

எனவே, பூமியின் சோதனைகள் மற்றும் கவலைகள், அதன் விருப்பங்கள் மற்றும் துயரங்கள், அதன் இறப்புகள், ஏமாற்றங்கள், பேரழிவுகள், துயரங்கள், அதன் தோல்விகள் மற்றும் குறைபாடுகள் மற்றும் பாவங்கள் மற்றும் தவறுகள் ஆகியவற்றை நாம் தேவனிடம் ஜெபத்தில் எடுத்துச் சென்று, நம்முடைய தேவைக்கு ஏற்றபடி உதவியையும், ஆறுதலையும், அனுதாபத்தையும் பெறலாம். நம்முடன் இருப்பதாக வாக்குறுதியளித்த பிதா மற்றும் குமாரனுடைய பிரசன்னத்தில் நாம் வாழ்வோம். இது நம் நாட்களை இனிமையாக்கி நம்முடைய இரவுகளை ஆறுதல்படுத்துவதோடு, நம்முடைய சுமைகளை இலகுவாக்கும். அதோடு நம்முடைய கவலைகளை எளிதாக்கி, நம்முடைய நம்பிக்கையை பிரகாசமாக்கும். மேலும் ஒரே வார்த்தையில் சொல்லபோனால், அது உலகத்திற்கும் மேலாக, ஒரு துூய்மையான சூழ்நிலைக்கு நம்மை உயர்த்தும். நம்மைப் பற்றிய பரலோகத்தின் சித்தம் இதுதான், இந்த ஒரு பாக்கியத்தை நாம் புரிந்துக்கொண்டு, பயன்படுத்திக்கொள்வோம்.

**E222 through E225—** பரிசுத்த ஆவிக்காக ஜெபித்தல்(**#18**கேள்வி காண்க)

"எல்லாமே குமாரனால்" செய்யப்பட்டாலும், பிதாவே எல்லா ஆசீர்வாதத்திற்கும் ஊற்றும் காரணருமாக இருக்கிறார் என்று ஒவ்வொரு இடத்திலும் பிதாவுக்கே மகிமையையும், கனத்தையும்

செலுத்துகிறார். மீட்பின் மற்றும் மறுசீரமைப்பின் முழு வேலையும் தேவனுடைய வேலை - குமாரனின் மூலம். மேலும் தேவனுடைய பரிசுத்தத்தின் ஆவியை அதிகதிகமாக நாம் பெற்றிருப்பதே பிதாவுக்கு மகிழ்ச்சி என்று நம்முடைய ஆண்டவர் அறிவிக்கிறார். மிக உன்னதமான ஆசீர்வாதமாக இதை தேடவும், கேட்கவும் அவர் நமக்கு கட்டளையிடுகிறார். ஏனெனில், பூமிக்குரிய ஆசீர்வாதங்களைப் பொறுத்தவரை, நமக்குத் என்ன தேவை என்பதை பரலோக தந்தைஅறிந்திருக்கிறார் அதாவது நம்முடைய பூமிக்குரிய ஆசீர்வாதங்களில் எது உதவியாக இருக்கும் என்றும் எது தீங்கை விளைவிக்கும் என்றும் நாம் அறிவதை விட அவர் நன்கு அறிந்திருக்கிறார் என்று நம்முடைய இரட்சகர் கூறுகிறார். ஆகையால், அபூரணரும், புறஜாதியாரும் செய்வது போல, பூமிக்குரிய ஆசீர்வாதங்களைப் பற்றி சிந்தித்து அதற்காக ஜெபிக்க வேண்டிய அவசியமில்லை. மாறாக, புத்திரர்கள் என்ற உறவுக்குள் வந்தவர்களாக, தேவனுடைய முன்னேற்பாடுகளில் முழு நம்பிக்கை கொண்டவர்களாக, சிறந்தவைகளை நமக்கு கொடுப்பார் என்று எதிர்பார்த்து, அவர் தந்திருக்கும் வாக்குத்தத்தங்களிலும், விசுவாசத்திலும் நாம் இளைப்பாறலாம்.

நாம் அதிகதிகமான பரிசுத்த ஆவிக்காக விரும்பி வேண்டுவதில் பரலோகபிதா மகிழ்ச்சியாக இருக்கிறார். அதாவது அவருடைய ஆவியுடன் அதிகதிகமாக இசைந்திருக்கும் மனநிலையை அவர் விரும்புகிறார். இவைகளை விரும்பி, கேட்டு, தேடும் அனைவரும் தங்கள் நல்விருப்பங்களைப் பெறுவார்கள். இந்த பரிசுத்த ஆவிக்கு தடையாக இருக்கும் விஷயங்கள், அதாவது அவர்களுக்குள் இருந்தாலும் சரி, அவர்களை சுற்றியிருந்தாலும் சரி, தேவனுடைய ஆவியினால் அவர்கள் நிரப்பப்படும்படிக்கு.அவருடைய அன்பான ஆவி அவர்களுக்குள் பெருகும்படி, தடைகளை அகற்றுவார். ஆனால் இதில் பரிசுத்த ஆவியின் புதிய ஞானஸ்நானம் பற்றி எதுவும் பரிந்துரைக்கப்படவில்லை. ஞானஸ்நானம் ஆரம்பத்தில் வந்தது, இப்போது செய்ய வேண்டியது எல்லாம், ஒவ்வொரு திசையிலுள்ள மதகுகளை திறக்கவேண்டும். அப்பொழுது அன்பு மற்றும் சத்தியத்தின் பரிசுத்த ஆவி நம்முடைய ஒவ்வொரு வார்த்தையிலும், செயலிலும், சிந்தனையிலும் ஊடுருவி, வெளிப்படவேண்டும். தடைகளை அகற்றுவதிலும், தேவையற்றவைகளை தடை செய்வதிலும், தேவனுடைய ஞானம் மற்றும் ஏற்பாடுகளின் செயல்பாட்டை உணர்வதற்கு நமக்கு தெய்வீக உதவி தேவை. பரிசுத்தத்தின் ஆவியை ஒருவர் ஆவலுடன் விரும்பி, ஜெபத்தினாலும், முயற்சியினாலும் தேடினால் மட்டுமே அதை அதிகதிகமாக பெற்றுகொள்ள முடியும். பரிசுத்த ஆவியினால் நம்முடைய சிந்தையும் அதன் தாக்கங்களும் நிரப்படுவதற்கு நம்முடைய இருதயங்களில் இருக்கும் உலகின் ஆவி அல்லது சிந்தை விரட்டவேண்டும். சுய சித்தமும் இதற்கு இடம் கொடுக்கவேண்டும். அதாவது இவைகளை நாம் முழு விருப்பத்தோடு செய்யவேண்டும். தேவனுடைய பரிபூரணத்தை பெறுவதற்கு ஆயத்தமாக இருப்பதற்கு ஏற்றவாறு சகலத்தையும் நாம் அகற்றிவிட்டதினாலும், நாம் மற்ற எல்லா மாறுப்பட்ட செல்வாக்கையும் விருப்பத்தையும் அழிக்க ஆர்வமுள்ளவர்களாக இருப்பதினாலும் தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியினால் நிரப்புவதற்கு ஆவலுடன் இருக்கிறார். இதே கருத்தை எபேசு சபைக்காக அப்போஸ்தலர் செய்த ஜெபத்தில் காணலாம். " அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகலபரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்." (எபேசியர் 3:19) கிறிஸ்துவின் ஆவியால் நிரப்பட்டு அவர் வெளிப்படுத்திய அன்பை முழுமையாக புரிந்துகொண்டவர், தந்தையின் ஆவியை முழுமையாக பெறுவார்.

வேத வசனங்களை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது, எந்த வகையிலும் பரலோகத் தகப்பன் தனது பிள்ளைகள் வேறொரு தேவனைக் கேட்பதில் மகிழ்ச்சி அடையமாட்டார் என்பது தெரிகிறது -- சமத்துவ தேவனின் திரித்துவத்தில் மூன்றாவது நபராக இருக்கும் ஒரு தேவன். அத்தகைய சிந்தனை இந்த பகுதிக்கும் அதன் இணைப்புகளுக்கும் ஒவ்வாததாக உள்ளது. அத்தகைய தவறான பார்வையை உற்சாகப்படுத்துபவர்கள், இந்த வாக்குறுதியின் உண்மையான அழகு மற்றும் வல்லமையை காணாதபடிக்கும் நிச்சயமாக பார்வையற்றவர்களாக இருப்பார்கள். பூமிக்குரிய பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு அப்பம், மீன் மற்றும் முட்டைகள் கொடுப்பது போல, திரித்துவ தேவர்களின் மூன்றாவது நபரை இன்னொருவருக்கு கொடுப்பது உண்மையில் விசித்திரமாக இருக்குமே. (முந்தைய வசனங்களை காண்க) தேவனுடைய பிள்ளைகளின் ஆறுதலுக்கும், ஆவிக்குரிய மேம்பாட்டிற்கும் பலவிதமாக வழங்கப்படும் தெய்வீக சிந்தை அல்லது தெய்வீக உந்துதலே

பரிசுத்த ஆவி என்று சரியாக புரிந்துகொண்டால் மட்டுமே இந்த பகுதி முரணற்றதாக இருக்கும்.

அன்பான பூமிக்குரிய பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு இயற்கையான உணவைக் கொடுப்பதற்கும், நம்முடைய அன்பான பரலோக பெற்றோர் அவரிடம் கேட்கிறவர்களுக்கு அவருடைய பரிசுத்த ஆவியை கொடுப்பதற்கும் இடையிலான ஒரு ஒப்பீட்டை நம்முடைய உரை காண்கிறது. பூமிக்குரிய பெற்றோர் தனது குடும்பத்திற்கான உணவை தயாரித்து வைத்தாலும், அதை அவர்கள் மீது கட்டாயப்படுத்தாது போலவே, நம்முடைய பரலோக பெற்றோரும் அவருடைய ஆவிக்குரிய குடும்பத்தினருக்காக அவருடைய கிருபையான நல்ல ஏற்பாடுகளை ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறார், அவரும் நம் மீது கட்டாயப்படுத்துவதில்லை. அதற்காக நாம் பசி தாகமுள்ளவர்களாக இருக்கவேண்டும். அவைகளை நாம் தேட வேண்டும், சந்தேகத்திற்கு இடமின்றி, விசுவாசத்தின் அடிப்படையில், அவருடைய சித்தத்தின் படி நமக்கு நல்ல ஈவுகளை வழங்குகிறார். ஆகையால், பரிசுத்த ஆவிக்காக நாம் ஜெபித்து, நாம் கர்த்தருடைய ஆவியினால் நிரப்பப்படும் போது, நாம் நம்மை பார்த்து, அவர் இவ்வாறு ஊக்குவித்து வழிநடத்தியுள்ளபடி, இந்த ஜெபங்களுக்கான பதிலுக்காக அவர் அளித்த ஏற்பாட்டைக் கண்டுபிடிக்க வேண்டும்.

இந்த முன்னேற்பாட்டை நாம் சத்திய வார்த்தையின் படி காண்கிறோம். ஆனால் அது இருக்கும் இடத்தை கண்டுபிடிப்பது போதாது : நாம் நிரப்பப்பட விரும்பினால் நாம் உண்ணவேண்டும், நிச்சயமாக விருந்தில் பங்கேற்கவேண்டும் அல்லது நமக்கு வடிவமைத்து கொடுக்கப்பட்ட உணவை சாப்பிடுவதன் திருப்தியை நாம் அனுபவிக்க முடியாது. மேஜையிலிருப்பதை முழுமையாக சாப்பிடாதவர் உண்மையில் உணவு இல்லாதவரைப் போல, பட்டினியாகவும், வயிறு காலியாகவும் இருப்பார். உணவின் மீதான ஆசீர்வாதங்களை கேட்பது, நம்மை நிரப்பாததினால், நாம் அதில் பங்கெடுக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையை நாம் வைத்துகொண்டு, ஆவியினால் நிரப்பப்பட வேண்டும் என்ற நம்முடைய வேண்டுகோள் போதாது.

எனவே நாம் தேவனுடைய வார்த்தைகளை உண்டு, அதிலிருந்து அவருடைய ஆவியை பெறவேண்டும். " ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. " (யோவான் 6:63) என்று நம்முடைய ஆண்டவர் அறிவித்தார். மேலும் ஆவியினால் நிரப்பப்பட்ட அனைவரும், "உம்முடைய வார்த்தைகளை கண்டு, அவைகளை நான் உட்கொண்டேன்" (எரேமியா15:16,வெளி10:9) என்று சொல்லும் தீர்க்கதரிசியின் வார்த்தைகள் உண்மையாக உள்ளது. நாம் ஆவியினால் நிரப்பப்படுவதற்கு வழங்கப்பட்ட சத்தியத்தின் வார்த்தைகளை நாம் புறக்கணித்து, ஆண்டவரே, ஆண்டவரே எங்களுக்கு ஆவியை தாரும் என்று ஜெபிப்பது முற்றிலும் பயனற்றது. நாம் பரிசுத்த ஆவிக்காக வெறுமனே ஜெபித்து, அந்த சத்திய ஆவியைப் பெறுவதற்கான சரியான வழிகளைப் நாம் பயன்படுத்தாவிட்டால், நாம் தொடர்ந்து "கிறிஸ்துவில் குழந்தைகளாக", தேவனோடுள்ள உறவுக்கு சான்றாக, அவர் கொடுத்திருக்கும் சத்திய வார்த்தைகளை விட்டு விட்டு, அதற்கு பதிலாக வெளிப்புறமான அடையாளங்களை தேடுகிறவர்களாக இருப்போம்.

**R1998 [col. 2:6 sub head through next page]—** " நீங்கள் கேட்டுகொள்வது எதுவோ" (**#25**கேள்வி காண்க)

ஆனால் மாற்கு 16: 17,18 ன் இந்த சேர்க்கப்பட்ட வாக்கியத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, மற்றொன்று அறிவுறுத்தப்படுகிறது. மேலும் ஆரம்பகால சபை "வரங்களை" பெற்றதாக அனைவரும் கூறுகின்றனர், நம்முடைய ஜெபங்களுக்கு பதிலளிப்பது தொடர்பான நம்முடைய ஆண்டவரின் வாக்குறுதிகள் முழுமையாக எல்லா காரியங்களையும் உள்ளடக்கியிருக்கிறது அல்லவா மேலும் இந்த முழு யுகத்தில், நோயுற்றவர்களை குணப்படுத்துவதையும், மலைகளை நகர்த்துவதையும் கூட சாத்தியமாக்குகிறது அல்லவா? மேலும் கடந்த காலங்களில் இவை அதிகம் காணப்படவில்லை என்பது நம்பிக்கையின்மை காரணமாகிறதா?

மற்றும் விசுவாசம் அதிகரிப்பினால் அல்ல, மாறாக ஆயிரவருட ஆட்சி தொடங்குவதால், நோயுற்றவர்களின் குணப்படுத்துதல் இப்போது அடிக்கடி ஏற்படுகிறதா?

இந்த இரண்டு கேள்விகளுக்கும் நாம் இல்லை என்று பதில் அளிக்கிறோம். ஜெபத்தில் நம்முடைய சிறப்புரிமைகளைப் பற்றி மிக பெரிய தவறான புரிதல் நிலவுகிறது. எனவே தினசரி வழங்கப்படும் பல ஆயிரக்கணக்கான ஜெபங்களுக்கு பதில் அளிக்கப்படுவதில்லை.

நாம் எதைக் கேட்கலாம் மற்றும் யார் கேட்கலாம் என்பதை குறித்த இந்த தவறான புரிதலே காரணம். மாறாக நம்முடைய ஆண்டவருடைய பங்கில் அவர் அளித்த வாக்குறுதியின் எந்தவொரு விசுவாச

குறைவினாலோ அல்ல. "நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்ற வாக்கியம் சில நிபந்தனைகள் மற்றும் வரம்புகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. இது முந்தைய வாக்கியத்தில் காணப்படுகிறது : "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால்.." இந்த நிபந்தனைகள் பிரமாதமாக விரிவாக்கம் பண்ணப்பட்டுள்ளது: எவருடைய விருப்பங்கள், கிறிஸ்து இயேசுவின் விருப்பத்திற்குள் புதைக்கப்படுகிறதோ அல்லது மூழ்கடிக்கப்படுகிறதோ இப்படியாக எனக்குள் இருக்கும் விசுவாசிகளே விண்ணப்பிக்கலாம் என்று காட்டுகின்றன, அது மட்டும் அல்ல "என்னில் நிலைத்திருக்கும் வரை" கேட்கக்கூடிய சிறப்புரிமையை பெற்றிருக்கிறீர்கள். ஏனெனில் ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான். (யோவான் 15:6) மேலும் அவருடைய விண்ணப்பங்களுக்கு பதில் அளிக்கப்படும் என்ற வாக்குத்தத்தத்திற்கு இனி அவருக்கு பங்கில்லை. இந்த வரம்புகள் இந்த வாக்குத்தத்தங்களில் உள்ள அனைத்து பங்குகளிலிருந்தும் துண்டித்து விடுகிறது. நாம் தொடர்ந்து ஆராய்ந்து பார்க்கும்போது, கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கும் வகுப்பார் ஏறெடுக்கும் பல ஜெபங்கள் கூட துண்டிக்கப்படுவதற்கான, மேலும் சில வரம்புகளை நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளில் காண்கிறோம். நம்முடைய ஆண்டவர் சொன்ன இரண்டாவது நிபந்தனையை நாம் குறிப்பிடுகிறோம்.

அவர்கள் என்ன விரும்புவார்கள், யார் கேட்பது என்பதை விவரிக்கிறது அதாவது "என் வார்த்தைகள் உங்களுக்குள் நிலைத்திருந்தால்" - நாம் அதை எழுதவேண்டும். தேவனுடைய பிள்ளைகள் என்று கூறப்படுகிறவர்கள் மத்தியில், வெகு சிலரே முழுமையாக அர்ப்பணிக்கப்பட்டு, அவருக்குள் நிலைத்திருக்கிறோம் என்று கூறுகிறார்கள். இவர்களிடம் தேவனுடைய வார்த்தை மிகுதியாக நிலைத்திருக்கிறது.

இந்த கடைசி விவரக்குறிப்பு அல்லது வரம்பின் முக்கியத்துவம் இதுதான்: எதையும் தேவனிடம் கேட்பதற்கு முன், அவருடைய சர்வ ஞானத்தை உணர வேண்டும். மேலும் ஒரு பூரணமான மற்றும் ஒழுங்கான திட்டத்தின்படி வரிசைப்படுத்தி, பொது விவகாரங்களை இயக்குகிறார் என்பதையும் நாம் உணரவேண்டும். மேலும் சிருஷ்டிப்பை ஆளும்படிக்கு, தேவன் நமக்கு அதன் மீது கட்டுபாட்டை கொடுத்தால்அவருடைய யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாட்டில், நம்முடைய சொந்த அற்பமான நிலையையும், அத்தகைய ஞானத்தின் பற்றாக்குறையையும், சுற்றுப்புறங்களைப் பற்றிய புரிதலையும் ....நாம் உணரவேண்டும். வெறும் "குழந்தைகளாக" இல்லாத தேவனுடைய உண்மையான பிள்ளைகள் அனைவருமே இதை உணர்ந்துகொள்கிறார்கள். "நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்பதை தேவன் எந்தவிதமான வரம்பின்றி சொன்னாலும், இந்த கடுமையான பொறுப்பிலிருந்து விவேகமானவர்கள் தங்களை சுருக்கிக்கொண்டு, "ஓ, ஆண்டவரே அப்படி அல்ல",

"இப்படிப்பட்ட விஷயங்களுக்கு நான் துணியமாட்டேன்" என்பார்கள். ஆண்டவருடைய வாக்குத்தத்தத்தைப் பொறுத்தவரை, நமக்கு விசுவாசம் இருந்தால், ஒரு மலையைப் பார்த்து பெயர்ந்து போகும்படி கட்டளையிட்டால் அது நமக்கு கீழ்ப்படியும். இதற்கான காரணம் பின்வருமாறு : மற்ற வாக்குத்தத்தங்களைப் போலவே, அவரிடத்தில் நிலைத்திருத்திருப்பவர்கள் மற்றும் அவருடைய வார்த்தைகளில் நிலைத்திருப்பவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது. மேலும் இது ஒரு எடுத்துக்காட்டாக வழங்கப்பட்டது: ஒரு மலையை அகற்றுவதற்கான அவசியமான அளவுக்கு அவசரநிலை ஏற்பட்டால், அது சொல்லர்த்தமாகவோ அல்லது உருவகமாகவோ இருந்தால், அது தேவனுடைய சித்தம் என்று நாம் உறுதியாக நம்பினால், நாம் கேட்டுகொள்வதைப் பெறலாம்.

ஆனால் மலைகள், ஏரிகள், கடல்கள் மற்றும் மேகங்கள், மற்றும் மழை மற்றும் சூரிய ஒளி ஆகியவைகளைப் பற்றி கிறிஸ்துவின் நாமத்தினால் பரலோகத்தை நோக்கி ஏறெடுக்கப்படும் அனைத்து விண்ணப்பங்களுக்கும் பதில் அளிக்கப்பட்டால், அவைகள் எவ்வாறு ஒன்றொடு ஒன்று தலையிடாமல் செயல்படும் என்று நாம் ஆழமாக ஆலோசிக்கவேண்டாம். அத்தகைய ஜெபங்களுக்கு பதில் அளிப்பதற்கு தேவன் தன்னை ஒப்புக்கொடுக்காமல், அவற்றைப் புறக்கணித்து, உலகத்தோற்றத்திற்கு முன்னே தீர்மாணிக்கப்பட்ட தனது சொந்த திட்டத்தை அவர் படிப்படியாக உருவாக்கி வருகிறார். மேலும் அவருடைய திட்டம் என்னவென்று தெரிந்துகொள்ள, அவருடைய வார்த்தையைத் தேடாதவர்களின் ஜெபங்களுக்கு அவர் செவிகொடுப்பதில்லை என்று அவர் நமக்கு உறுதியளிக்கிறார். ஆயினும்கூட "அவருடைய

நோக்கங்கள் அனைத்தும் நிறைவேறும்." ஆனால் அவருடைய பிள்ளைகளில் வெகு சிலரே மனுஷனுடைய திட்டங்கள், ஒப்புதல் வாக்குமூலங்களில் குறிப்பிடப்பட்டுள்ள, ஆலோசனைகள் மற்றும் மனித தரநிலைகளுக்கு பதிலாக, அவருடைய வார்த்தைகளுக்கு மதிப்புக்கொடுத்து, அவைகளிலிருந்து அவருடைய திட்டத்தை கற்றுக்கொள்ள தேடுகிறவர்கள், அவருடைய திட்டங்களையும், யோசனைகளையும் நிறைவேறும்படி அவரிடம் ஜெபிப்பார்கள். ஆயினும்கூட இறுதியில், தேவனுடைய வார்த்தை வெறுமையாக அவரிடம் திரும்பி வராது. அவர் நினைத்தை நிறைவேற்றி, அனுப்பப்பட்ட காரியத்தை செழிப்பாக முடித்து திரும்பும் - ஏசாயா55:11.

இல்லை, தேவனானவருக்கே நன்றி செலுத்துவோமாக. அவர் தனது திட்டத்தை, ஆவிக்குரிய காரியங்களிலும் கூட, தங்களது தப்பெண்ணத்தினால் - பார்வையிழந்துப்போன மற்றும் வகுப்புவாதப் பிள்ளைகளின் ஜெபங்களுக்கு உட்படுத்தவில்லை, இல்லையென்றால் ஒவ்வொருவரும் உலகம் முழுவதையும் தனது சொந்த இலட்சிய கொள்கைக்காக மாற்றியமைக்க விரும்பியிருப்பார்கள், அது மெத்தடிசம், லூத்தரனிசம், ப்ரீபிஸ்டீரியனிசம் பிராமணியம் போன்று எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம், மேலும் பல்வேறு தப்பறைகள் செழித்து வளர்ந்திருக்கும், அதே நேரத்தில் சீயோனின் காவற்கோபுரம் மற்றும் ஆயிரமாண்டின் விடியல் *(Zion's Watch tower and Millennial Dawn)* ஆகியன நீண்ட காலத்திற்கு முன்பே நிதி ரீதியாக சிதைந்திருக்கும். ஆமாம், எல்லா ஜெபங்களுக்கும் அவர் பதிலளிக்காமல் இருப்பதற்கு நாம் தேவானவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோமாக.

தேவன் நம்முடைய விண்ணப்பங்களுக்கு பதில் அளிப்பார் என்ற அவருடைய வாக்குத்தத்தத்தைப் பற்றி நம்முடைய மீட்பர் முன்வைத்த நெருங்கிய மற்றும் தேடக்கூடிய வரம்புகளுக்கான குறிப்பான ஒரு விசேஷித்த காரணத்தை நாம் காணலாம். அவருடைய சொற்களை நாம் படித்து, அவற்றின் பொருளைப் புரிந்துகொள்ள முயற்சிக்கும்போது நமக்கு தோன்றுவது இதுவே-

நீங்கள் என்னில் நிலைத்திருந்தால், நான் பிதாவின் அன்பில் நிலைத்திருப்பது போல, என் விருப்பத்திற்கும் திட்டத்திற்கும் முற்றிலும் உட்பட்டு, தன் சொந்த விருப்பத்தை செய்ய முற்படாமல், என்னை அனுப்பினவருடைய விருப்பத்தையே நாடுவேன் - இவ்வாறு என் விருப்பம் உங்கள் தேர்வாக இருந்தால், உங்கள் சொந்த சித்தங்கள் புதைக்கப்பட்டு, புறக்கணிக்கப்படும்போது, பிதாவின் சித்தம் என்ன என்பதை ஆவலுடன் தேடுவீர்கள். இவைகளை நிறைவேற்றும்படி நான் தேடுகிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே உங்கள் நேரம், திறமைகள், ஜெபங்கள் மற்றும் அனைத்தையும் ஒரே திசையில் ஒரே இலக்கை நோக்கி பயன்படுத்தவேண்டும்.

மேலும், தேவனுடைய சித்தத்தை அறிந்துக்கொள்ள வேண்டும் என்ற இருதயப்பூர்வமான விருப்பம் இருந்தால், நியாயப்பிரமாணம், சங்கீதம் மற்றும் தீர்க்கரிசிகள் வழியாக வெளிப்படுத்தப்பட்டது போல,நான் அவருடைய திட்டத்தை எவ்வாறு படித்தேன் என்பதையும், என்னுடைய சொந்த திட்டத்தையோ, தேர்வையோ அல்ல தேவனுடைய அந்த திட்டத்தை நிறைவேற்ற நாம் எப்படி முயற்சித்தேன் என்றும் நீங்கள் நினைவில் கொள்வீர்கள்."எழுதப்பட்டபடி, அனைத்தையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாக இருக்கும்." என்பதை நான் எப்படி உங்களுக்கு சுட்டிக்காட்டினேன் என்றும் மேலும் தேவவசனங்களைத் தேட நான் உங்களுக்கு எவ்வாறு கற்பித்தேன் என்றும் நீங்கள் நினைவில் கொள்வீர்கள். இந்த போக்கைப் பின்பற்றுவதன் மூலம், குறித்த காலத்தில் தெய்வீக திட்டத்தை அதிகதிகமாக புரிந்துகொள்வதற்கு பரிசுத்த ஆவி எனக்கு வழிகாட்டியதைப் போல, உங்களையும் வழிநடத்தும். இதுவே உங்கள் உள்நோக்கமாக இருந்து, உங்கள் இருதயங்களும், உங்கள் ஆற்றலும் இவ்வாறு தேவனுடைய திட்டத்தில் உள்வாங்கப்பட்டால், உங்கள் இருதயங்களின் அனைத்து விருப்பங்களையும் நீங்கள் கேட்கலாம். -- "நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்." பிதா தனது திட்டங்களை உங்களுக்காக மாற்றுவார் என்பதற்காகவோ, அல்லது உங்கள் சித்தம் செய்வதற்காகவோ அல்ல மாறாக, நான் குறிப்பிட்ட வழியில் பிதாவோடும் அவர் நிறைவேற்றிக்கொண்டிருக்கும் அவருடைய யுகங்களைப் பற்றிய திட்டத்தோடும் முழுமையாக இணங்கி செயல்பட இந்த தாராளமான வாக்குத்தத்தத்தை நான் உங்களுக்கு அளிக்கிறேன். மேலும் நீங்கள் ஒருபோதும் அதிருப்தி அடையாமல், உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதை எப்போதும் காணமுடியும். ஏனென்றால் உங்கள் விருப்பமும், சித்தமும், உங்கள் மகிழ்ச்சியும், திருப்தியும், தேவனுடைய சித்தம் மற்றும் அவருடைய திட்டமும் அவருடைய சொந்த வழியிலும், காலத்திலும்

முன்னேறுவதை காண்பதாக இருக்கும். இவ்வாறாக உங்கள் ஒவ்வொரு ஜெபமும், விருப்பமும் நிறைவேற்றப்படும். இந்த அனுபவத்திற்கு தலைகீழாக, தங்கள் சொந்த விருப்பங்களைச் செய்யவும், மனிதத் திட்டங்களை நிறைவேற்றவும், தங்கள் சொந்த ஆசைகளுக்காக ஜெபிக்கவும் விரும்புபவர்கள் எப்போதும் ஏமாற்றங்களை சந்திப்பார்கள்.

ஆகையால் அதை உங்கள் இருதங்களில் பதியவையுங்கள், முடிவுகளுக்கு பயப்படவேண்டாம். புயல் எவ்வளவு இருட்டாக இருந்தாலும் சரி, அல்லது துன்புறுத்தல் எவ்வளவு கூர்மையாக இருந்தாலும் சரி, தேவனுடைய மகத்தான, கிருபையுள்ள திட்டம் தவறாகபோகாது. இவ்வாறு உங்கள் விருப்பமும் திட்டங்களும் (தேவனுடையவை) தோல்வி அடைய முடியாது. மேலும் நீங்கள் பிதாவோடு முழுமையான இணக்கத்தில் இருந்து, அதையே விரும்பும் போது இப்படிப்பட்ட நோக்கம் சரியானதாகவும், தந்தையின் திட்டத்துடன் முரண்படாததாக இருக்கும் வரை உங்கள் ஜெபம் எப்போதும் கேட்கப்படும். மேலும் எந்த விஷயத்திலும், உலகின் ஆவியினால் அல்ல, என்னுடைய ஆவி அல்லது விருப்பத்தை கேள்விக்குட்படுத்து வதற்கு சிறிதளவு இடமிருந்தாலும், "ஆயினும்கூட, என் சித்தம் அல்ல, பிதாவே உம்முடைய சித்தமே நிறைவேறட்டும்" என்று நீங்கள் கேட்க நான் ஜெபித்தபடி, நீங்களும் ஜெபியுங்கள். அத்தகைய எல்லா ஜெபங்களுக்கும் பதில் நிச்சயம். மேலும், தந்தையின் திட்டத்துடன் நீங்கள் நெருக்கமாக அருகில் வருவதோடு, அதை புரிந்துகொளும் போது, அவர் நமக்கு கொடுக்கும் நல்ல ஈவுகளுக்கு எதிராக எதையும் கேட்கூடிய அல்லது விரும்பக்கூடியவைகள் நம்மிடத்தில் குறைவாகவே காணப்படும்.

உங்கள் பூமிக்குரிய நலன்களை தேவன் தொடும்போது, அவருடைய ஏராளமான முன்னேற்பாடுகளையும், அவர் செலுத்துகிற கவனிப்பையும், ஞானத்தையும் நீங்கள் காணும்போது, காட்டுப் புஷ்பங்களை அழகாக உடுத்துபவர் மற்றும் ஆகாயத்து பறவைகளை போஷிப்பவர், அவைகளை விட உங்களை அதிமாக நேசித்து பராமரித்து, உங்களுக்கு என்ன தேவை என்பதை அதாவது கிறிஸ்துவின் மூலம் அவர் அளித்த மிகப் பெரிய பரிசுக்கான ஓட்டப்பந்தயத்தில் ஓடுபவர்களாக உங்களுக்கு எது பலமளிக்கும், பயனளிக்கும், எது உங்களை காயப்படுத்தக்கூடும் என்பதை உங்களை விட அவருக்கு நன்றாக தெரியும் என்பதை உணரவேண்டும். இந்த விஷயங்களை நீங்கள் உணரும்போது, தற்காலிக விஷயங்களுக்கான உங்கள் ஜெபங்கள் மிகவும் அடக்கமாகவும், மிதமாகவும் மாற வேண்டும். உண்மையில், அவருடைய ஞானத்தையும், பராமரிப்பையும் நீங்கள் படிப்படியாக உணரும்போது, ஜெபத்தை ஆவிக்குரிய ஒற்றுமைக்கான வழியாக பயன்படுத்துங்கள். வாழ்க்கையின் சுமைகளையும், கவலைகளையும் ஆண்டவரின் காலடியில் வைப்பதன் மூலம் உங்களை திருப்திப்படுத்தி கொண்டு, "என்னுடைய கவலைகளுக்கு பதிலாக உம்முடைய சித்தமே செய்வேன்" என்று சொல்லி, அவருடைய அன்பு மற்றும் ஞானத்தின் மேலுள்ள உங்கள் நம்பிக்கையை அவரிடம் வெளிப்படுத்துங்கள்.

"என் தேவன் என்னை வழிநடத்துவதால் நான் எதைப்பார்த்தாலும் உள்ளடக்கமாயிருக்கிறேன்"

என்ற பாடலை உங்கள் இருதயத்தில் பாடிக்கொண்டு, முன் எப்போதையும் விட உங்கள் ஜெபங்கள் ஆவிக்குரிய வரங்கள், கிருபைகள், கனிகள் மற்றும் ஆசீர்வாதங்ளுக்காக இருக்கவேண்டும். ஆகவே, ஒழுங்காக அறிவுறுத்தப்பட்டால், கிறிஸ்துவில் நிலைத்திருக்கும் மற்றும் அவருடைய வார்த்தையில் நிலைத்திருக்கும் அனைவருமே, சுமையாக இருக்கும் பூமிக்குரிய விஷயங்களைப் பற்றிய அனைத்து கவலைகளுக்காக ஏறெடுக்கும் பல ஜெபங்களிலிருந்து விடுபடலாம். இவைகளை எல்லாம் நம்முடைய பிதாவின் ஞானத்துக்கும், அன்பிற்கும் விட்டுவிட்டு, நம்முடைய ஜெபங்கள் அதிகமாக நன்றி செலுத்துதலிலும், புறஜாதிகள் நாடி தேடும் காரியங்களை விட,(மத்தேயு6:32) நாம் ஏற்கனவே அனுபவித்த ஆசீர்வாதங்களையும், உதவிகளையும் திரும்ப நினைவில் கொண்டுவந்து, அவரை துதிப்பதற்கும், ஆராதிப்பதற்கும் நம்முடைய இருதயங்கள் தேவனை நோக்கி செல்லவேண்டும்.

உண்மையில் பூமிக்குரிய விவகாரங்கள் சில நேரங்களில் குழப்பாக இருக்கும். மேலும் அவை எவ்வாறு முடியும் என்பதில் ஆச்சரியப்பட்டு, ஆழமான ஆர்வம் காட்டுவதை தவிர்க்க இயலாமல் போய்விடும். ஆனால் கிறிஸ்துவில் நிலைத்திருக்கும் ஆத்மா, அவருடைய வார்த்தைகளில் நிலைத்திருப்பவர், அவரால் முடியும் என்பதை அவர் அறிந்திருந்தாலும், தனது சொந்த வழியில் நடக்க துணிய மாட்டார். எல்லாவற்றையும் பிதாவின் கைகளில் ஒப்புக்கொடுத்துவிட்டு, கடுமையாக உழைத்து, தன்னால் முடிந்தவரை தேவனுடைய போக்கில் சென்று, எந்த அளவிலும் காரியங்கள் சிறிதளவாகிலும் மாற்றப்படவேண்டும் என்பதை கேட்கவும் மாட்டார்.

ஆனால் நம்முடைய எல்லா சோதனைகளிலும் குழப்பங்களிலும் நாம் தேவனிடத்தில் ஜெபிக்கிறோம் அல்லவா? ஆம், உண்மையில் நாம் செய்கிறோம். எந்த விதமான குழப்பத்திலும், துக்கத்திலும், எல்லாவற்றையும் தேவனிடம் சொல்லும் பாக்கியத்தை விட வேறு எந்த ஆறுதலும் பெரிதாக இருக்காது. அவருடைய "சிறு குழந்தைகளின்" அழுகைக்கு அவர் காதுகள் எப்போதும் திறந்திருக்கும். அவற்றை அவரிடம் சொல்வது மற்றும் நம்முடைய எல்லா காரியங்களிலும் அவர் காட்டக்கூடிய ஆர்வத்தை உணர்ந்து கொள்ளும் போது நம்மைப் புதுப்பித்து உற்சாகப்படுத்தும்."அவர் ஒருபோதும் நம்மை கைவிட மாட்டார்" என்ற வாக்குத்தத்தம் நம் நினைவுக்கு கொண்டு வரப்படும். மேலும் அவருடைய ஞானமும், அன்பும் நமக்கு நன்மைக்கு ஏதுவானவைகளையே நடப்பிக்கும் அதாவது, சாதகமானதும், சாதகமற்றதுமான சகல காரியங்களையும் உண்டாக்கும் திறனை நம்முடைய நன்மைக்காகவே செயலாற்றுகிறார். நம்முடைய எல்லா கவலைகளையும் அவர் மீது வைத்துவிட்டு, அவருடைய வாக்குத்தத்தங்களின்படி, தற்போதைய உபத்திரவங்கள் மற்றும் பிற விஷயங்கள் அனைத்தும் நன்மைக்கு ஏதுவாக அவர் நடத்துவதால், அவரை நாம் மகிழ்ச்சியோடும், அதிக நம்பிக்கையுடனும், முழங்கால்களில் எழும்பி, அவரை புகழலாம். அத்துடன் நம்முடைய சொந்த காரியங்களுக்காக கட்டளையிடுவதற்கு முயற்சிப்பதை விட, ஆண்டவரோடு நெருங்கிய ஐக்கியத்தையும், தொடர்பையும் கொண்டிருக்கவேண்டும். மேலும் மகத்துவமான தேவனை நம்முடைய திட்டங்களை நிறைவேற்றும் ஊழியராக ஆக்குவது, சந்தேகத்திற்கு இடமின்றி அவருடைய பார்வையில் நிச்சயமாக இது ஒரு முட்டாள்தனமானது மற்றும் இது அனுமதிக்கப்பட்டால் நமக்கு அல்லது மற்றவர்களுக்கு இது தீங்கை விளைவிக்கும்.

**R2023—**பொது ஜெபங்களுக்கு அங்கீகாரம் உள்ளதா? (**#35**கேள்வி காண்க)

"சமீபத்திய வாட்ச் டவர் பத்திரிகையை நான் படித்து மகிழ்ந்தேன்" என்று ஒரு சகோதரர் எழுதினார். அதன் விவரம் தொடரும் என்று நான் காண்கிறேன். பொது ஜெபம் தொடர்பாக ஏதாவது சொல்லுங்கள். இந்த விஷயத்தில் இங்குள்ள சகோதரர்கள் ஒரே விதமாக இருக்கவில்லை, கிறிஸ்தவர்கள் ஒருபோதும் பகிரங்கமாக ஜெபிக்கக்கூடாது என்று சிலர் கூறுகின்றனர்.

நம்முடைய ஆண்டவரே, பரிசேயர்களின் வழக்கத்தை கண்டித்தபின், மனுஷர் காணும்படியாகவும், பக்தியுள்ளதாக கருதப்படவேண்டும் என்பதற்காகவும், தெரு மூலைகளில் நின்று "நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்." (மத்தேயு6:6) என்று ஜெபித்தார். இதிலிருந்தும், மற்றும் உண்மையில் நம்முடைய ஆண்டவர் தாமே தனிமையில் ஜெபிக்க அடிக்கடி மலைக்கு சென்றதினாலும், தனி ஜெபங்களை தவிர மற்றவைகள் பாவமில்லாதிருந்தால் மறுக்கப்படுவதாக சில ஊக்கமான ஆத்துமாக்கள் முடிவு செய்துள்ளனர் : இதனால் அவர்கள் தங்களை தாங்களே காயப்படுத்தி கொள்கிறார்கள் என நாம் நம்புகிறோம்.

பொதுவில் ஜெபிக்க நம்முடைய கர்த்தரே நமக்கு முன்மாதிரியாக இருக்கிறார். அடிக்கடி அவரது சீஷர்களின் முன்னிலையில் மட்டுமல்ல, ஒரு முறை லாசருவின் கல்லறையில் அவிசுவாசிகளின் முன்னிலையிலும் அவர் ஜெபித்தார். (யோவான் 11:41,42, லூக்கா10:21) பொதுவாக "கர்த்தருடைய ஜெபம்" என்று அழைக்கப்படுவது சீஷர்களின் முன்னிலையில் உச்சரிக்கப்படுவது மட்டும் அல்ல, ஒரு கூடுகையில் ஜெபிக்கக்கூடிய ஒரு மாதிரி ஜெபமாகும். இது "என் பிதாவே" என்று துவங்காமல், "எங்கள் பிதாவே" என்று துவங்குகிறது. அது "என்னுடைய பாவங்களுக்காக மன்னிப்பை வேண்டாமல்", "எங்களுடைய பாவங்களை மன்னியும்" என்றும், மற்றவர்களின் பாவங்களை நான் மன்னிப்பதை போல" என்று சொல்லாமல் "மற்றவர்களின் பாவங்களை நாங்கள் மன்னிப்பதை போல" என்று கூறுகிறது. ஆகவே விசேஷமாக இது கூட்டு ஜெபத்திற்கான ஒரு மாதிரியாகும்.

யோவான் 17ம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்ட ஜெபம், ஒரு பொது ஜெபமாக இருந்தது, சீஷர்களுக்கு முன்பாக ஜெபிக்கவில்லையெனில், யோவான் 18:1ல் குறிப்பிட்டுள்ளபடி, அவர்களில் ஒருவர் இதைப் பதிவு செய்திருக்க முடியாது.

அதே பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்ட அப்போஸ்தலர்கள், பிதாவிடம் இரகசியமாக ஜெபிப்பதோடு, சபைக்கு முன்பாக பகிரங்கமாககூட ஜெபித்து, இதுபோன்ற பொது ஜெபங்கள், சபை ஜெபங்களை பொருத்த வரை கட்டளைகளையும், அறிவுறுத்தல்களையும் கொடுத்தார்கள்.

சபைக்கூடுதல்களின் ஜெபங்களைப் பற்றி அடிக்கடி குறிப்பிடப்படுகிறது. மற்றவர்கள் கேட்கும் படி அவர்கள் ஜெபிக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டால் மேலும் அந்த உண்மையான விண்ணப்பத்தின் விவரிப்பு நிருபிக்கப்படவில்லை என்றால், அவர்கள் தனியாக, இரகசியமாக ஒவ்வொருவரும் ஜெபித்தால், அவர்கள் ஜெபத்திற்காக கூடிவந்தார்கள் என்ற காரியம் நியாயமற்றதாக இருக்கும். இதை தவிர, சில சந்தர்ப்பங்களில் ஏறெடுக்கப்பட்ட ஜெபங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது - அப்போஸ்தலர் 1:14,24; 12:5,12; 16:13; 20:36; 21:5.

சபையில் ஏறெடுக்கப்படும் ஜெபம் மற்றும் நன்றி செலுத்துவதும் கேட்கக்கூடிய குரலிலும் பொதுவான மொழியிலும் செய்யப்பட வேண்டும் என்பதை அப்போஸ்தலனாகிய பவுல், கொரிந்து சபைக்கு எழுதும்போது தெளிவாக கற்பிக்கிறார் -- 1 கொரி 14:14-17 காண்க.

இருப்பினும், சபையில் உண்மையாக உரையாற்றும் போது, தேவனிடம் ஜெபிப்பது போல சிலருடைய வழக்கத்தைக் குறித்து நமக்கு எந்த அக்கரையும் இல்லை. பெரும்பான்மையினர், வெளிப்படுத்தக்கூடியதை விட முழுமையாகவும், மிக சரளமாகவும் அனுதாபத்துடன் இணைந்து, ஜெபிக்கையில், கேட்போர்கள் முழு லாபம் அடையும்படிக்கு, நம்முடைய ஜெபங்கள் பார்வையாளர்களுக்கு தனித்துவமானதாகவும், புத்திசாலித்தனமாகவும் இருந்தாலும், அது மனிதர்களிடம் அல்ல, தேவனிடமே உரையாற்றப்படுகிறது என்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. அரசியல் மாநாடுகள், மற்றும் சட்டமன்ற கூட்டங்கள் மற்றும் பள்ளிகள் மற்றும் விடுதிகளை திறக்கும் போது ஜெபிக்கக்கூடிய வழக்கத்தை நாம் ஒருபோதும் அக்கரைகாட்டுவதில்லை. இவைகள் சபைக்கூட்டங்கள் அல்ல என்பதால், தேவனுடைய அங்கீகாரத்தை பெறுவதில்லை.

ஒரு மாநாடு அல்லது சட்டமன்றம் அல்லது அரசியல் அல்லது கல்லூரி அல்லது பள்ளியில் பணிபுரிபவர்கள் எப்போதும் தேவனை ஜெபத்தின் மூலம் அணுகக்கூடிய கிறிஸ்தவர்களாக இருந்தாலும், தேவனுடைய ஆசீர்வாதங்களை எதிர்பார்க்கவும், கேட்கவும் முடியாத இப்படிப்பட்ட இடங்களில் அவர்கள் காணப்படக்கூடாது. ஒரு ஆசிரியர் கிறிஸ்தவராக இருந்தால், கிறிஸ்தவர்களாக இருக்கும் மாணவர்கள், ஆமென் என்று சொல்லத்தக்கதாக, சரியாக கற்பிப்பதற்கான ஞானம் மற்றும் கிருபைக்காக, அனைவரும் கேட்கும் படியாக ஜெபம் செய்யலாம். இதில் விசேஷமாக முறையற்ற தன்மை காணப்படக்கூடாது. ஆனால் "கர்த்தருடைய ஜெபத்தை" மீண்டும் மீண்டும் செய்யவதற்கு பள்ளி குழந்தைகளுக்கு கற்பிக்கக்கூடாது. இது அத்தகைய நோக்கத்திற்காக வழங்கப்படவில்லை. பலர் கிறிஸ்தவர்கள் அல்லாததினால், ஆசிரியர்களும் பிரார்த்தனை செய்ய தேவையில்லை. அப்போது குழந்தைகள் ? தேவனோடு உடன்படிக்கை செய்த அவருடைய பிள்ளைகளை தவிர, தனிப்பட்ட குற்றங்களுக்கு அறியாதவர்களாக, இன்னும் ஆதாமின் கண்டனத்தின் கீழ் உள்ளவர்கள், விசுவாசத்தின் வழியாகவும், புது உடன்படிக்கையின் விதிமுறைகளின் வழியாகவும் மட்டுமே தேவனை அணுக அனுமதிக்கப்படுகிறார்கள். - 1கொரி 7:14 காண்க. வெளிப்படையான பொதுஜெபத்தின் தீய விளைவுகள் ஒவ்வொரு இடத்திலும் அதிகரித்து வருகிறது. ஒழுங்கற்ற பொதுவெறி ஜெபத்தினுடைய தீய விளைவானது அனைத்து இடங்களிலும் அதிகரித்து வெளிப்பட்டு வருகிறது. ஒரு பெருந்தயவாக செல்வாக்குமிக்க நண்பர்கள் மற்றும் மாபெரும் பகட்டான ஆடை மூலமாக மாத்திரமே தாங்கள் பூமியின் வீரியமிக்கவர்களுடன் ஐக்கியங்கொள்ள முடியும் என்பதைஅறிந்த நபர்களே, பின்னர், எவர் வேண்டுமானாலும் எந்த நேரத்திலும், எவ்விதமான தனது சுயநீதியின் இழிவான கந்தையுடனும், இராஜாதி இராஜாவின் நீதியான பிரசன்னத்தில் விரைந்து சென்று அவருடன் ஐக்கியங்கொள்ள முடியும் என்கிற எண்ணத்தையும் கொண்டிருக்கின்றனர். மேலும் கிறிஸ்தவர்களும், அமைச்சர்களும், கல்வியாளர்களும் இந்த புண்படுத்தும் முட்டாள்தனத்தை அனுமதித்துள்ளனர். இதன் விளைவாக, ஆயிரக்கணக்கானோர் உண்மையிலேயே தேவனிடம் வருவதில்லை, ஆனால் அவர்கள் அனைவரும் சரியான மற்றும் சராசரி கிறிஸ்தவரைப் போலவே நல்லவர்கள் என்று தங்களையே ஏமாற்றிக்கொள்கிறார்கள். உண்மையில் தேவன் நியமித்த வழியில் அவர்கள் வராததினால், சபையிலும், அதற்கு அவர் கொடுத்த விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களிலும் அவர்களுக்கு எந்த பாத்தியமும் இல்லை.

"தேவன் பாவிகளுக்கு செவிகொடார்." (யோவான் 9:31, யோபு 27:9, நீதி1:28,29,28:9, சங்கீதம் 66:18, ஏசாயா1:15) "அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்;

என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்." (யோவான் 14:6) தந்தை ஆதாம் தேவனுடைய குமாரனாகப் படைக்கப்பட்டு, பின்னர் அவருடைய பிதாவோடு தொடர்பு கொண்டிருந்தாலும், அவர் கலகம் செய்தபோது, இந்த உறவும், அதன் சிலாக்கியங்களும் துண்டிக்கப்பட்டு மரணதண்டனைக்கு உட்படுத்தப் பட்டது. அனைத்து உறவும் துண்டிக்கப்பட்டது, அனைத்து உரிமைகளும் சலுகைகளும் பறிமுதல் செய்யப்பட்டன. உண்மை, தேவன் இரக்கத்துடன் பாவத்திற்கான ஒரு மாபெரும் பலியையும், இரட்சகரின் விலைமதிப்பற்ற இரத்தத்தினால் நல்லிணக்கத்தையும் வழங்கியுள்ளார். மேலும் அவர் மூலமாக ஆதாமில் இழந்த அனைத்து சலுகைகள், ஐக்கியம் மற்றும் இரக்கங்களை திரும்பப்பெறலாம். ஆனால் இந்த ஏற்பாடு தடைசெய்யப்பட்டுள்ளது. இது எல்லோருக்கும் இல்லை. பாவத்திலிருந்து தப்பி ஓட விரும்புவோருக்கும், இரட்சகரைப் பற்றிய அறிவை பெறுபவர்களுக்கும், புது உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பேரில் தேவனுடைய தயவை ஏற்றுக்கொள்பவர்களுக்கு மட்டுமே இந்த வாய்ப்பு திறந்திருக்கும்.

அவர்கள் தங்கள் சொந்த கந்தலான நீதியை களைந்து போட்டு, விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவின் நீதியை அணிந்துகொண்டவர்களாக, மீட்கப்பட்ட மற்றும் சீரமைக்கப்பட்ட புத்திரர்களாக பிதாவினிடத்தில் அறிமுகப்படுத்தப்படுவதற்கு ஆயத்தப்படுத்தும்படியாக இவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது - தேவனுடைய குமாரனும், நம்முடைய ஆண்டவருமாகிய கிறிஸ்து இயேசுவின் மரணத்தினால் தேவனோடு சமரசம் செய்யப்பட்டோம். பின்னர், அதுவரைக்கும், அவர்களுடைய ஜெபங்கள் தேவனுக்கு முன்பாக அருவருப்பாக இருப்பதை தவிர வேறொன்றுமில்லை என்று நாம் எதிர்பார்க்க வேண்டும் அல்லவா? புது உடன்படிக்கையையும், இரட்சிக்கப்படுவதற்கு வானத்தின் கீழ் அல்லது மனுஷர்களிடையே கொடுக்கப்பட்ட ஒரே நாமத்தையும் நிராகரிக்கும் எவரும் பிதாவினால் கேட்கப்படவும் மாட்டார்கள், ஏற்றுக்கொள்ளப்படவும் மாட்டார்கள்.

ஆனால் தங்கள் பாவங்களை உணர்ந்து, அவைகளிலிருந்து மனந்திரும்பி, மீண்டும் புத்திரர்களாகவும், பிதாவோடு ஐக்கியப்படுவதற்கும் - மீட்பரையும், புது உடன்படிக்கையையும், ஏற்றுக்கொள்வதே ஒரே வழி என்பவர்களுக்கு அப்போஸ்தலர் பின்வருமாறு கூறுகிறார் -

" அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர்மூலமாய்ப் பெற்றிருக்கிறோம். ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து," (எபேசியர் 2:18,19.)

"ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு பண்ணினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்," (எபிரெயர்10:19-22) " ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்." (எபிரெயர் 4:16)

அப்படியானால், இந்த முக்கியமான பாடத்தில், தேவப்பூர்வமாக கூறுபவைகள் பின்வருமாறு. (1) ஜெபம் என்பது தேவனுடைய பிள்ளைகளாக ஒப்புரவான, "விசுவாசிகளுக்கு" மட்டுமே உள்ள சிலாக்கியமாகும். (2) அத்தகைய தேவனுடைய பிள்ளைகள் கூட்டமாகவும் தனித்தனியாகவும், தனிப்பட்ட முறையிலும் ஜெபிப்பது பொருத்தமானது. (3) தேவனுடைய பிள்ளைகளின் கூட்டத்தில், அவிசுவாசிகள் இருந்தாலும், ஜெபத்தை முறையற்றதாக்காது. ஏனெனில் இது சபையின் கூட்டம் மற்றும் not a meeting of the unregenerate இது அவர்களின் கட்டுப்பாட்டில் இல்லை. (4)கிறிஸ்துவின் சபையின் கூட்டங்கள் அல்லாத அரசியல், சட்டமன்றம், சமூக, கல்வி மற்றும் பிற கூட்டங்களில் ஜெபம் முற்றிலும் முறையற்றது. தேவனுடைய சில regenerated புத்திரர்கள் இருந்தாலும், அந்த கூட்டங்கள் உலகக் கூட்டங்கள். இவைகள் தேவனுடைய வார்த்தை மற்றும் ஆவிக்கு நேரடியான தொடர்புடையது அல்ல. கிறிஸ்தவர்கள் அத்தகைய கூட்டங்களில் கலந்துகொள்வது பயனுள்ளது என்று கண்டால், அவர்கள் பரிசுத்தவான்களாக அல்ல, சராசரி குடிமகன்களாக அதில் கலந்துகொள்ளட்டும். அவர்களுடைய ஜெபங்கள் இரகசியமாக வழங்கப்படட்டும்.

" தேவன் துன்மார்க்கனை நோக்கி: நீ என் பிரமாணங்களை எடுத்துரைக்கவும், என் உடன்படிக்கையை உன் வாயினால் சொல்லவும், உனக்கு என்ன நியாயமுண்டு. சிட்சையை நீ பகைத்து, என் வார்த்தைகளை உனக்குப் பின்னாக எறிந்துபோடுகிறாய். "(சங்கீதம் 50:16,17)

**F319 [¶1] through F322** (**#37** கேள்வி காண்க)

அறிவின் வளர்ச்சி பக்தியிலிருந்து விலக செய்வதற்கு மிகவும் ஏதுவானதாக இருக்கிறது. இது விசித்திரமாக தோன்றலாம். நம்முடைய திறன் மிகச் சிறயதாகவும், மத சம்மந்தமான விஷயங்களுக்கான நமது நேரம் மிகவும் குறைவாகவும் இருப்பதைக் காண்கிறோம். ஒரு வழியில் கவனத்தை உற்சாகமாக செலுத்தினால், அது மற்ற திசைகளில் குன்றிபோக வழிவகுக்கும். கிறிஸ்தவர் முற்றும் அறிந்தவராய் இருதய அன்பில்லாமலும், முழு இருதய அன்போடிருப்பவராய் அறிவில்லாமலும் இருக்கக்கூடாது. "ஒரு நல்ல மனிதனின் ஆவி" சகலவிதமான நற்கனிகளையும், கிருபைகளையும் வளர்த்துக்கொண்டு, பரிபூரணமான குணத்தை பெறும்படிக்கு வழிநடத்தும். நாம் இதில் சிறப்பாக வளர்வதற்கு நம்முடைய நாட்களின் இயல்புகள் எல்லா விஷயங்களிலும் நம்முடைய நாட்களின் இயல்புகள் எதிர் திசையில் உள்ளது. ஒரு தொழிலாளி இந்த பகுதியை செய்கிறார், மற்றவர் அந்த பகுதியை செய்கிறார், எனவே இப்போது மிகச் சில தொழிலாளர்கள் முந்தைய காலங்களைப் போலவே ஒரு வர்த்தகத்தை முழுமையாக புரிந்துகொள்கிறார்கள். புது சிருஷ்டிகள் இந்த இயல்பை எதிர்க்கவேண்டும். மேலும் அதற்கேற்ப, "அவருடைய கால்களுக்கு நேரான பாதைகளை உருவாக்க வேண்டும்", ஆவியின் கனிகள் ஒன்றை வளர்த்துக் கொள்ளும்போது, தேவன் கொடுத்த மற்றொரு சிலாக்கித்தை சரியாக பயிற்சி செய்யாததினால் அவர் ஆபத்தில் சிக்கிவிடும் அபாயம் உள்ளது. எல்லா மனிதர்களிடமும் பக்தியின் தரங்கள் அதிகமான அல்லது குறைவான அளவில் வளர்ச்சி காணப்படுகின்றன. இந்த மனதின் குணங்கள் ஆவிக்குரியவைகள் என்று அழைக்கப்படுகிறது. மேலும் அவை மனசாட்சி, நம்பிக்கை, இசை போன்ற உறுப்புகளை அவற்றின் உதவிக்கு அழைக்கின்றன. இவை புறக்கணிக்கப்பட்டால், இதன் விளைவாக சத்தியத்தின் மீதான ஆர்வமும் அன்பும் சிதைந்துவிடும், ஆகவே, நம்முடைய இருதயங்கள் கர்த்தருடைய அன்பைப் அதிகமாக புரிந்துகொள்வதோடு, அவரை சேவிக்கவும், கனம் பண்ணவும், பிரியமாக நடந்துகொள்வதற்கு பதிலாக, சிறிய உறுப்பினர்கள் உயர்ந்தவற்றின் இடங்களை எடுத்துக்கொண்டு, சர்ச்சையில் அதிக அளவில் சேருவதை காணலாம். மேலும் விசாரணைகள் மன தத்துவங்களின் வெளிச்சத்தில் அதிகமாக நடைபெறும், அதில் பகை, அழிவு, லட்சியம், சண்டை மற்றும் வீண் பெருமை அதிகமாக இடம் பெறும். எனவே, புது சிருஷ்டிகள், ஒவ்வொரு சபை கூடுதலிலும், பக்தி ஆராதனை, ஜெபம், துதி செலுத்துதலை ஒரு பகுதியாக கொண்டு, ஐக்கியப்படுவதோடு, வாரத்திற்கு ஒரு முறை ஒரு வகையான பக்தியுள்ள சிறப்பு கூட்டம் தேவை என்று நாம் நம்புகிறோம். அதில் கிறிஸ்தவ அனுபவங்களின் சாட்சியங்களுக்கான வாய்ப்புகள் கொடுக்கப்படவேண்டும். - அதாவது வழக்கமாக முதல் சம்பாஷணைகளையோ அல்லது இருபது ஆண்டுகளுக்கு முன் நடந்ததையோ அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு முன் நடந்ததையோ அல்ல மாறாக, கடந்த வாரத்தில் நடந்தவைகளில், ஒரு புதுப்பித்த சாட்சியம், இந்த நேரத்தில் இருதயத்தின் நிலையை குறிப்பாக குறிக்கக்கூடிய சாட்சிகளாக இருக்கவேண்டும். இதுபோன்ற புதிதான சாட்சியங்கள், கேட்பவர்களுக்கு உதவியாக இருக்கும், சில நேரங்களில் சாதகமான அனுபவங்களை கேட்பதினால், அவர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள். சில நேரங்களில் சோதனைகள், சிரமங்கள், குழப்பங்கள் போன்றவற்றின் கதைகளால் அவர்கள் ஆறுதல்படுத்தப்படுகிறார்கள்.

ஏனெனில், அவர்கள் இப்படிப்பட்ட அனுபவங்களை அனுபவிப்பதில் தனியாக இல்லை என்பதையும், சில நேரங்களில் தோல்விகள் இருப்பதையும் அவர்கள் புரிந்துகொள்வார்கள்." பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், " (Iபேதுரு4:12) என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகளின் இன்னும் முழுமையான அர்த்தத்தை கற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய ஜனங்கள் அனைவருக்கும் சோதனைகள் மற்றும் சிரமங்கள் இருப்பதை அவர்கள் காண்கிறார்கள். ஒவ்வொருவரும் மற்றவர்களிடம் அனுதாபம் கொள்ள கற்றுக்கொள்கிறார்கள். இந்த அனுதாபத்தின் பிணைப்பு வளரும்போது உதவி செய்யக்கூடிய ஆவியும், அன்பின் ஆவியும் வளர்கிறது -- பரிசுத்த ஆவி. அனுகூலமாக இருப்பதற்கு, இதுபோன்ற வார கூட்டங்களுக்கான ஒரு தலைப்பை அதற்கு முந்தய ஞாயிற்றுக்கிழமையில் பரிந்துரைக்கப்படலாம். மேலும் இந்த தலைப்பு முதன்மையாக இருப்பதால், வாழ்க்கையில் நடக்கும் அனுபவங்களைக் குறிக்க ஒவ்வொருவருக்கும் ஊக்கமளிக்கும். மற்றும் வாரத்தின் குறிப்பிட்ட தலைப்புக்கு ஏற்ற வரிசையில் அவற்றை குறிப்பிடவேண்டும். சந்தேகத்திற்கு இடமின்றி ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் ஒவ்வொரு வாரமும் பலவேறு பாடங்களும், வாழ்க்கையின் படிப்பினைகளையும் அனுபவங்களையும்

குறிப்பிடுவதற்கான ஏராளமான வாய்ப்புகள் உள்ளது. ஆனால் பெரும்பான்மையானவர்கள், சிந்திக்காமல், கவனிக்காமல், இந்த மதிப்புமிக்க படிப்பினைகளை அடையாளம் காண முடியாமல் கடந்து செல்ல அனுமதிக்கின்றனர். மேலும் கர்த்தருடைய அன்றாட பரிவர்த்தனைகளை அவருடைய ஏற்பாடுகளை கவனிப்பதன் மூலம் அவர்கள் சிறப்பாகக் கற்றுக்கொள்ளக்கூடியவைகளை காட்டிலும், முக்கியமாக வாழ்க்கையின் பெரிதும், கசப்புமான அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்கிறார்கள். எடுத்துக்காட்டாக: "எல்லா புத்திக்கும் மேலான சமாதானம் உங்கள் இருதயங்களை ஆளக்கடவது" என்ற வேத பகுதியிலிருந்து "தேவ சமாதானம்" என்பது வாரத்திற்கான தலைப்பு என்று வைத்துக்கொள்வோம். (பிலிப்பியர் 4:7) ஒவ்வொரு சகோதரர்களும் இந்த வாரத்தில் இந்த வசனம் தனது சொந்த வாழ்க்கையில் எந்த அளவிற்கு நிறைவேறியது என்பதையும், மேலும் இந்த ஆளும் சமாதானத்தைத் தடுத்து நிறுத்தி அமைதியின்மையையும், அதிருப்தியையும் கொண்டுவரக்கூடிய விஷயங்கள் என்னவென்றும் நாம் கவனிக்கவேண்டும். இந்த அனுபவங்களும், அவைகளிடம் இருந்து பெறப்பட்ட பாடங்களும், குழுவில் உள்ள வல்லுநர்களால் கூறப்பட்டவை, மேலும் குறைந்த அனுபவங்கள் உள்ளவர்கள் தங்கள் சொந்த அனுபவங்களை மட்டும் முன் கவனத்திற்கு கொண்டுவருவதோடு, பின்னர் தங்கள் சொந்த அனுபவங்களோடு, மற்றவர்களின் அனுபவங்களையும், படிப்பினைகளையும் சேர்த்து, அவர்களின் அனுதாபங்களை விரிவுபடுத்துவதோடு, மோதல்களுக்கு பதிலாக சமாதானத்தின் அழகுகளை அறிந்துகொள்ள அவர்களை மேலும் மேலும் வழிநடத்துவார்கள். - நமக்கு எந்த விதத்திலும் கட்டுப்படாத கொந்தளிப்பு மற்றும் குழப்பம் அல்லது துன்பகரமான நிலைமைகளால் சூழப்பட்டிருந்தாலும் கூட இருதயத்தில் தேவனுடைய சமாதானத்தின் ஆசீர்வாதத்தை பெறுவது எவ்வாறு சாத்தியமாகும் என்பதை உணரவேண்டும்.

இந்த கூட்டங்களின் பக்தி அம்சம் அவர்களின் நலன்களை அதிகரிக்கும். தன்னுடைய குறைபாடுகளை மிகுந்த ஆர்வத்துடன் உணர்ந்தவர், ஆவியின் கிருபையில் வளர மிகவும் ஆர்வத்துடன் பாடுபடுவர், தேவனுடனான பக்தியிலும், அவரைப் பிரியப்படுத்துவதிலும், மற்றும் அதிகதிகமாக பரிசுத்த ஆவியை பயன்படுத்துவர், தேவனிடம் பக்தியாக இருப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டக்கூடியவராக இருப்பார். இந்த கூட்டங்களில், மற்ற அனைவரையும் போலவே, ஒழுங்கைப் பாதுகாப்பதன் மூலமே மிகப் பெரிய நன்மையைச் செய்ய முடியும் என்பது தெளிவாகத் தெரிகிறது. கூட்டத்தின் ஜீவனையும், சுதந்திரத்தையும் அழிக்கும் அளவிற்கு இல்லை, ஆனால் எந்த அராஜகம் அல்லது ஒழுங்கின்மை இன்றி, ஞானமாகவும், அன்பாகவும், மேன்மையான கட்டுப்பாட்டின் கீழ், சரியான அளவிற்கும் அதன் சுதந்திரத்தை சிறப்பாக பாதுகாக்கவேண்டும். உதாரணமாக: கூட்டத்தின் தன்மையை முன்கூட்டியே புரிந்துகொள்ள வேண்டும், மேலும் நியாயமாகவும், அன்புடனும், குறிப்பிடப்பட்ட மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட நோக்கத்திற்காக அந்த கூட்டத்தை கட்டுபாடுடன் நடத்தும் தலைவரே பொறுப்புள்ளவர். இவை பொதுவான கேள்வி - கூட்டங்கள், அல்லது கலந்துரையாடலுக்கான கூட்டங்கள் அல்ல என்பதை புரிந்து கொள்ளவேண்டும். மேலும் இக்கூட்டம் மற்ற கூட்டங்களை போல பிரசங்கிப்பதற்கும் அல்ல, விரும்புவோர் அவற்றில் கலந்து கொள்ள வரவேற்கப்படுகிறார்கள். ஆனால் இந்த கூட்டங்களுக்கு வரையறுக்கப்பட்ட நோக்கம் உண்டு. கூட்டத்தை ஒழுங்காக நடத்துவதற்கும், தனிப்பட்ட விவாதங்களை தவிர்ப்பதற்கும், அல்லது ஒரு நபர் மற்ற தனிநபருடன் விவாதம் அல்லது பதில் அளிப்பதை தவிர்ப்பதற்கும், அனைவருக்கும் பிரதிநிதியாக தேர்வு செய்யப்பட்ட தலைவர் ஒருவர் மட்டுமே, மற்றவர்களுக்கு பதில் அளிக்கவோ அல்லது விமர்சிக்கவோ வேண்டும் -- அதுவும் அவசியப்பட்டால். சில சாட்சியங்கள் நீண்டதாகவும், கடினமானதாக இருந்தால், அவைகள் மற்றவர்களுடைய வாய்ப்பை தடைச் செய்யாமல் பார்த்து கொள்வதும் அவருடைய கடமையாகும். மேலும் நியாயமான ஒப்புக்கொள்ளப்பட்ட நேரத்திற்கு அப்பால் கூட்டம் நீடிக்கப்படக்கூடாது. இந்த விஷயங்கள் அனைத்தும் தலைவரின் பொறுப்பில் உள்ளதால், அவர் சபையின் மூப்பராக இருக்கவேண்டும் என்பதைக் குறிக்கிறது. போதிய அனுபவம் இல்லாத ஒரு புதியவர் பொருத்தமாக இருக்க முடியாது. சிறந்த நோக்கங்கள் இருந்தாலும், கூட, அத்தகைய சந்தர்ப்பத்திற்கு கொள்கைகளைப் பயன்படுத்துவதில் மிகவும் தளர்வானவராகவோ அல்லது மிகவும் கடினமானவராகவோ இருக்கலாம், அவர் மிகுந்த மென்மையுடன் கூட்டங்களை நடத்தி அதை சீர்குலைக்கலாம் அல்லது புத்தி இல்லாத விதமாக திருத்தங்களை வெளிப்படுத்தியும், சரியான விதிகளைப் பயன்படுத்தாமலும், சில சகோதரர் அல்லது சகோதரியை புண்படுத்தலாம். மேலும் அவர்

தேவனுடைய வார்த்தையைப் பற்றி போதுமான அறிவைப் பெற்றவரும், பல்வேறு சாட்சியங்களுக்கு பதிலளிக்கும் விதமாக ஊக்கமான வார்த்தை அல்லது ஆலோசனை அல்லது பயனுள்ள அறிவுரை வழங்கக்கூடிய கருணை மற்றும் கற்பிக்கும் திறன் ஆகியவற்றில் அனுபவம் பெற்றவராக இருக்கவேண்டும் என்பதால், அத்தகைய கூட்டத்தின் தலைவர் ஒரு மூப்பராக இருக்கவேண்டும் அல்லது சபையில் ஒரு மூப்பரின் பதவியை வகிக்க தகுதியானவராக இருக்கவேண்டும். ஏனென்றால், " மனுஷனுக்குத் தன் வாய்மொழியினால் மகிழ்ச்சியுண்டாகும்; ஏற்றகாலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது!" - மற்ற நிலைமைகளின் கீழ் ஒரு முழு சொற்பொழிவை விட, இது எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும். நீதிமொழிகள் 15:23

**E211 [1] through E216 (#38கேள்வி காண்க)**

"அவர் தேவனுடைய வலதுகரத்தினாலே உயாத்தப்பட்டு. பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப்பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்." (அப்போஸ்தலர் 2:33) என்று பரிசுத்த ஆவியின் உற்சாகமான தாக்கத்தில், பேசிய அப்போஸ்தலனாகிய பேதுரு, காரியத்தை விவரித்தார். அது சபையில் ஏற்றுகொள்ளுதலைக் குறிப்பிடுவதாலும், மேலும் பரிசுத்த ஆவி இல்லாமல் நம்முடைய ஆண்டவரின் பலி மற்றும் நம்முடைய நீதிமானாக்கப்படுதலுக்கு எந்த விதமான ஆதாரம் இல்லாததினாலும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கு நாம் அதிகமான அழுத்தம் கொடுக்க முடியாது.

எவ்வாறாயினும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை அடிக்கடி எதிர்பார்க்கப்பட வேண்டும் என்றும் அது தேடப்படவேண்டும் என்று மிகவும் ஆர்வமுள்ள பல கிறிஸ்தவர்களிடையே நிலவும் பொதுவான ஆனால் தவறான மற்றும் முற்றிலும் வேதப்பூர்வமற்ற கருத்தை நாம் மிகவும் உறுதியாக எதிர்க்கவேண்டும். அத்தகைய எதிர்பார்ப்பு தேவனுடைய வார்த்தையில் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள எந்தவொரு வாக்குறுதியும் உத்திரவாதம் இல்லாதது மட்டுமல்லாமல், தெய்வீக ஏற்பாட்டுடன் முற்றிலும் மாறுபடுகிறது. பரிசுத்த ஆவியின் மூன்று அபிஷேகங்களை மட்டுமே வேதம் குறிப்பிடுகிறது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். இவை ஒவ்வொன்றின் அவசியமும், மூன்று பகுதிகள் பிரிவுகளாக ஒரே ஞானஸ்நானத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (1) நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் ஞானஸ்நானம். (2) பெந்தெகோஸ்தே நாளில் ஞானஸ்நானம். (3) முதல் புறஜாதி "குமாரனாக" ஏற்றுக்கொள்ளப்பட்ட கொர்நேலியுவின் ஞானஸ்நானம். இந்த வரிசையில் ஆவியின் அபிஷேகங்களை ஆராய்வோம்.

(1)நம்முடைய ஆண்டவர் தெய்வீக சுபாவத்திற்கு ஜெநிப்பிக்கப்படுவதற்கும், உரிமை சொத்தாகப் பெறுவதற்கும், தெய்வீக முகவராகவும், தெய்வீக வல்லமையில் பங்குகாளியாகவும் இருப்பதற்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் அவருக்கு தேவைப்படுவதோடு, தேவனால் அபிஷேகம் செய்யப்பட்டவர் என்று மற்றவர்கள் தெரிந்துகொள்ள அனுமதிக்கும் வகையில் இதுபோன்ற வெளிப்புற வெளிப்பாடு அல்லது அங்கீகாரம் இருக்க வேண்டும் என்பது சரியானதாகவும் இருந்தது. ஒரு புறா இறங்கி அவர் மீது வந்ததே அந்த வெளிப்பாடு. இந்த தெய்வீக இரக்கத்தின் வெளிப்பாட்டை, அந்த நேரத்தில் இஸ்ரயேலில் சீர்திருத்த வேலையைச் செய்துகொண்டிருந்தவரும், ஒரு தீர்க்கதரிசி என்றும் தேவனுடைய ஊழியக்காரர் என்று அங்கீகரிக்கப்பட்ட யோவான் ஸ்நானகன் மட்டுமே நம்முடைய ஆண்டவர் மீது வந்த பரிசுத்த ஆவியை கண்டு, அந்த உண்மைக்கு சாட்சி கொடுத்தார். இவரை தவிர பொது ஜனங்களுக்கு இந்த புரிந்துகொள்ளுதல் கொடுக்கப்படவில்லை. அவருடைய அறிக்கை - " நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்: ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார். "(யோவான் 1:33)

(2) "அவர் பரிசுத்த ஆவியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" என்று யோவான் இங்கே விளக்குவது போல, பெந்தெகொஸ்தே நாளில் சபையின் அபிஷேகம் கிறிஸ்துவால் செய்யப்பட்டது. நாம் பார்த்தபடி, கிறிஸ்து தம்முடைய பரிசுத்த ஆவியை பொழிந்தருளினார் என்பதை பேதுரு உறுதிப்படுத்துகிறார். அவரே இந்த உலகை மீட்டு, அனைத்தையும் தனது விலைமதிப்பற்ற இரத்தத்தால் விலைக்கு வாங்கியதால் அவர் மட்டுமே இந்த அபிஷேகத்தை கொடுக்கமுடியும். எனவே எந்த மனுஷனும் இவரை இன்றி பிதாவிடம் செல்லமுடியாது. ஏனெனில் பிதா தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்பு செய்யாமல், நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரத்தை குமாரனுக்கு தந்தருளினார். மேலும் குமாரன் உயர்த்தப்பட்டதினால், தன் வழியாக பிதாவிடம் வருபவர்களை பிதாவோடு முழுமையாக

ஒப்புரவாக்குவதற்கு அவர் பிதாவின் பிரதிநிதியாக செயல்படுகிறார். நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின் மீது பரிசுத்த ஆவியின் அபிஷேகம் சாட்சி கொடுத்தது மிக அவசியமாக இருந்தது போலவே, சபைக்கும் இந்த அபிஷேகம் மிக அவசியம் என்பதை நாம் எற்கனவே கண்டிருக்கிறோம்.

அந்த இடத்தை நிரப்பின "விரைவான காற்றும், "அவர்கள் ஒவ்வொருவர் மேலும் அமர்ந்த "அக்கினி நாவுகளும்" (அநேகமாக பதினோரு அப்போஸ்தலர்கள் - அவர்கள் கர்த்தருடைய விசேஷத்த பிரதிநிதகளாகவும், பரிசுத்த ஆவியின் வாயாகவும் நியமிக்கப்பட்டவர்கள். - வசனம் 14 காண்க )பரிசுத்த ஆவி அல்ல மாறாக, அவர்களின் புலன்களுக்கு மட்டுமே உணரக்கூடிய கண்ணுக்குத் தெரியாத வெளிப்பாடாகும். இதேபோல் யோவான் கண்ட புறா பரிசுத்த ஆவி அல்ல, அதுவும் அவருடைய புலன்களுக்கான வெளிப்பாடாகும். பரிசுத்த ஆவியின் தூண்டுதலினால், சாட்சி கொடுப்பதற்கு நியமிக்கப்பட்ட அப்போஸ்தலர்களின் வேலையை அக்கினி நாவுகள் துல்லியமாக அடையாளப்படுத்துகிறது போல சமாதானத்திற்கும், பரிசுத்தத்திற்கும் அடையாளமாக இருக்கும் புறா, இயேசுவில் நிரப்பட்டிருக்கும் யேகோவா தேவனுடைய முழுமையான அன்பின் ஆவியை துல்லியமாக அடையாளப்படுத்துகிறது. அப்போஸ்தலர் 2:32; 3:15; 5:32; 10:39,41; 3:31.

(3) முதல் புறஜாதியாராக மனந்திரும்பிய கொர்நேலியுவை ஏற்றுக்கொள்வது தொடர்பான தெய்வீக வல்லமையின் சிறப்பான வெளிப்பாடு அவசியமாக இருந்தது. ஏனெனில், இதுவரை புறஜாதியார் புறக்கணிக்கப்பட்டவர்களும், ஊழியர்களாக இருந்தபோதும் தேவனால் ஏற்றுக்கொள்ள முடியாதவர்களாக இருந்தார்கள். இதன் விளைவாக, சில குறிப்பான தெய்வீக கிருபையின் வெளிப்பாட்டை வழங்கப்படாவிட்டால், யூத விசுவாசிகளுக்கு, புறஜாதியாரை தேவனுடைய ஜனங்களாக உயர் பதவியில் ஏற்றுக்கொள்வது இயலாத காரியமாக இருந்தது.

ஏற்கனவே பார்த்தபடி, பெந்தெகொஸ்தேவுக்கு மூன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு, யூதர்களின் சிறப்பு இரக்கத்தின் "எழுபது வாரங்கள்" முடியும் வரை எந்த புறஜாதியாரும் ஏற்றுக்கொள்ளப்படுவது தெய்வீக திட்டத்தில் இல்லை. ஆகவே, புறஜாதியினரிடமிருந்து மனந்திருப்பியவர்கள், யூதர்களிடமிருந்து மனந்திரும்பியவர்களோடு உடன் பங்காளிகளாக இருக்க வேண்டும் என்ற உண்மையை பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தில் சுட்டிக்காட்டப்பட முடியவில்லை. மேலும் அப்போஸ்தலர்கள் மற்றும் பிற யூதர்களின் ஆழமான வேரூன்றிய தப்பெண்ணங்களின் பார்வையில், பெந்தெகொஸ்தே நாளில் கொடுக்கப்பட்ட அதே ஆதாரங்களால் கொர்நெலியுவை ஏற்றுக்கொள்வதையும் அப்போஸ்தலரின் உணர்வுகளுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பது மிகவும் பொருத்தமானதாக இருந்தது. அதற்காக கொர்நெலியுவின் மேல் அக்கினி நாவுகள் அமர வேண்டும் என்று நினைத்து கொள்வது அவசியம் இல்லை. யூத மதத்திலிருந்து மனந்திரும்பியவர்கள் பொதுவாக, பெந்தெகொஸ்தே நாளின் சில "வரங்களை" அவர்கள் பெற்றிருக்கலாம்.

புறஜாதியார் கர்த்தரிடம் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள் என்பதை நாம் வேறு எப்படி அறிந்துகொள்ள முடியும் ? ஆவியின் அபிஷேகம் மற்றும் பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதங்கள் ஆபிரகாமின் மாம்ச சந்ததியினராக இருந்த விசுவாசிகள் மீது மட்டுமே வந்திருந்தால், புறஜாதியாராக இருந்த கர்த்தருடைய ஜனங்களின் நிலைப்பாட்டை பொறுத்தவரை, சுவிசேஷ யுகம் முழுவதும் நம்மை சந்தேகத்தில் ஆழ்த்தியிருக்கலாம். ஆனால் கொர்நேலியுவின் மீது வந்த பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால், கிறிஸ்துவின் வழியாக தேவன் ஏற்று கொள்வதை பொறுத்தவரையில், யூதர்களுக்கும் புறஜாதியினருக்கும், அடிமைக்கும் சுயாதீனனுக்கும், ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் எந்த வித்தியாசமும் இல்லை என்ற உண்மையை தேவன் முழுமையாக வெளிப்படுத்தினார். ஒருவரும் தங்கள் சொந்த அநீதியினால், ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள் -- ஆகவே, தேவனால் நேசிக்கப்பட்டவர் மூலமாக பிதாவினிடத்தில் வருபவர்கள் மட்டுமே ஏற்றுகொள்ளப்படுவர். 1 கொரிந்தியர் 12:13

பரிசுத்த ஆவியின் இந்த முன்று அபிஷேகங்களைத் தவிர, வேத வசனங்களில் இந்த விஷயத்தைப் பற்றி வேறு எந்த குறிப்பும் இல்லை. இதன் விளைவாக, பரிசுத்த ஆவியின் மற்றொரு அபிஷேகத்திற்காக மீண்டும் மீண்டும் ஜெபிக்க வேண்டும் என்றும் அதை எதிர்பார்க்கவேண்டும் என்றும் தேவனுடைய ஜனங்களில் பலரின் சிந்தனை, முற்றிலும் தேவையற்றது. இத்தகைய அபிஷேகம் முற்றிலும் தேவையற்றது. ஏனென்றால் பெந்தெகொஸ்தே நாளின் ஒரு அபிஷேகம், கூடுதலாக கொர்நேலியு பெற்ற அபிஷேகமும் எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்தது.

அந்த அபிஷேகம் வெறுமனே ஆசீர்வாதத்தை அனுபவித்த தனிநபர்கள் மீது மட்டுமல்ல, முழுமையாக கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் மீது வரும் அபிஷேகத்தை அடையாளப்படுத்தியது. சபைக்கான இந்த பிரதிநிதித்துவப் பணி இரண்டு பகுதிகளாக செய்யப்பட்டது -- பெந்தெகொஸ்தே நாளில் முதல் யூத விசுவாசகள் மீதும், கொர்நேலியுவின் வீட்டில் இருந்த முதல் புறஜாதியார் விசுவாசிகள் மீதும். இது ஆண்டவர் சிலுவையில் அறையப்படுவதற்கு முன், "பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார். " (மத்தேயு16:19) என்று ஆண்டவர் பேதுருவிடம் கூறியதுடன் இணக்கமாக உள்ளது. திறவுகோல் ஒரு கதவை திறப்பதையும், பன்மையில் சொல்லப்பட்ட திறவுகோல்கள், ஒன்றுக்கு மேற்பட்ட கதவுகள் திறக்கப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது. உண்மையில் இரண்டு கதவுகளும், இரண்டு திறவுகோல்களும் இருந்தன, கர்த்தர் முன்னறிவித்தபடி, அப்போஸ்தலனாகிய பேதுரு இரண்டு திறவுகோல்களையும் பயன்படுத்தி, முன்பு யூதர்களுக்கும், பின்பு புறஜாதியினருக்கும் வாய்ப்பை திறந்தார். முதல் திறவுகோலை பெந்தெகொஸ்தே நாளில் பயன்படுத்தினார், அங்கு அவரே முதல், தலைமை பேச்சாளராக, ஆவியின் புதிய யுகத்தை மூவாயிரம் பேருக்கு அறிமுகப்படுத்தினார், ஒரே நேரத்தில் அனைவரும் அதை நம்பி அந்த வாசலுக்குள் பிரவேசித்தார்கள். (அப்போஸ்தலர் 2:37-41) மறுபடியும், புறஜாதியாருக்கு நற்செய்தி பிரசங்கிக்க வேண்டிய நேரம் வந்தபோது, கர்த்தர், அவருடைய விருப்பத்திற்கு ஏற்ப, பேதுருவை இந்த வேலைக்காக அனுப்பினார். கொர்நேலியுவிடம் பேதுருவை அழைக்கும்படி சொன்னார். பேதுருவிடம் கொர்நேலியுவின் வீட்டாருக்கு நற்செய்தியின் வார்த்தைகளை பேசும்படி கூறினார். இந்த சந்தர்ப்பத்தில், பேதுரு இரண்டாவது திறவுகோலை பயன்படுத்தி, புறஜாதியாருக்கு முன்பாக சுவிசேஷத்தின் கதவைத் திறந்தார். கொர்நேலியுவின் மீதும், புறஜாதியினரிடையே அங்கு இருந்த மற்ற அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகள் மீதும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் அற்புதமான வெளிப்பாட்டால், தேவன் சாட்சியளித்தார்.

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பொறுத்தவரை, சரியான சிந்தனை என்னவென்றால், பொழிதல், அபிஷேகம் .. எதுவாக இருந்தாலும், ஒரு முழுமையானதான "ஸ்நானம்" அல்லது முழுகுதல் சரியாக நியமிக்கப்படுதலாகும். (சரீர அங்கத்தினர் ஒவ்வொருவரையும் உள்ளடக்கியது) மேலும் இதே அபிஷேகம் அல்லது ஸ்நானம் சபையின் மீது முழு யுகத்திலும் தொடர்கிறது அன்றிலிருந்து இப்போது வரை, அபிஷேகம் செய்யப்பட்ட "சரீரத்திற்குள்" வரும் ஒவ்வொருவரையும் -- மறைத்து, ஊடுருவி, பரிசுத்தப்படுத்தி, ஆசீர்வதித்து, அபிஷேகிக்கிறது. கடைசி உறுப்பினர் முழுமையாக அபிஷேகிக்கப்படும் வரை இது தொடரும். அப்போஸ்தலர் யோவான் இந்த ஸ்நானத்தை அபிஷேகம் என்று கூறுகிறார். "நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது....அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது..." (Iயோவான் 2:27, சங்கீதம் 133:2) நீங்கள் பெற்ற அநேக அபிஷேகங்கள் என்று அவர் சொல்லாமல், பெற்ற அபிஷேகம், அதாவது தெய்வீக ஏற்பாட்டுடன் மிகவும் இணக்கமாக இருக்கும் ஒரே அபிஷேகம் என்கிறார்.

"... சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம், ...அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்.... நீங்கள் கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்." (Iகொரிந்தியர் 12:12,27) இவ்வாறு தெய்வீக நிலைப்பாட்டில் பார்க்கும்போது, முழு சபையும் ஒன்றாக -- ஒட்டுமொத்தமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த சிந்தனைக்கு இணக்கமாக, கர்த்தர் நம்மை தனித்தனியாக எண்ணினாலும் மற்றும் பல விஷயங்களில் தனியாக நம்மைக் கையாண்டாலும், பிதாவுக்கு முன் நம்முடைய நிலைப்பாடு, தனியான அங்கங்களாக இல்லாமல், கிறிஸ்துவாகிய தலை மற்றும் சரீரமாக ஒரே சரீரத்தின் அவயவங்களாக உள்ளது என்று தேவப்பூர்வமாக விளக்கம் அளிக்கப்படுகிறது. ஆகவே நாம் விசுவாசிகளான பின், கிறிஸ்துவின் சரீரத்தில் இணைவதே, அதாவது சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பெறுவதே, நம்முடைய அடுத்த கட்ட நடவடிக்கை என்று நமக்கு அறிவிக்கப்படுகிறது. பொதுவாக ஞானஸ்நானம் என்ற விஷயத்தைப் பற்றி நாம் இங்கு விவாதிக்க வேண்டாம்.

எதிர்காலத்தில் அதை குறித்து பார்க்கலாம். ஆனால், உண்மையில் பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்படுவதற்காகவே, விசுவாசிகள் கிறிஸ்துவுக்கு ஞானஸ்நானம் பெற அழைக்கப்படுகிறார்கள் என்பதை நாம் கவனிக்கவேண்டும். பரிசுத்த ஆவி ஒரு நபர் அல்ல,

ஆனால் சபைப் பெற்றிருக்கும் ஒரு வல்லமை அல்லது சக்தி. இந்த ஆசீர்வாதத்தை பெற்ற அனைவரும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் இணையவேண்டும். இந்த ஆவி இன்றி ஒருவரும் சரீரத்தோடு ஐக்கியப்பட முடியாது. பூமிக்குரிய சபையின் அங்கத்தினர்களை அதாவது ஒரு மெத்தடிஸ்ட் சரீரம், ஒரு பிரஸ்பைடிரியன் சரீரம், லூத்தரன் சரீரம், ஒரு ரோமன் கத்தோலிக்க சரீரம் அல்லது மனித அமைப்பில் அல்லது வேறு எந்த அமைப்பிலும் உறுப்பினராக இருப்பதை நாம் இங்கு அர்த்தப்படுத்தவில்லை. அன்பின் பரிசுத்த ஆவியை பெற்றிருப்பதினால் மட்டுமே அங்கீகரிக்கக்கூடிய சபையின் அங்கத்தினர்களையே நாம் அர்த்தப்படுத்துகிறோம். மேலும் அவர்கள் பல்வேறு கனிகளால் சான்றளித்து, நாம் மேலே

பார்த்ததபடி அங்கீகரிக்கப்படுகிறார்கள். யார் ஒருவர் உண்மையில் கிறிஸ்துவோடு ஐக்கியப்படுகிறதினால், கிறிஸ்துவின் சரீர அங்கத்தினரோடு உண்மையாக ஐக்கியப்படுகிறாரோ, அவர் தற்போதைய அல்லது எதிர்கால பெந்தெகொஸ்தே ஆசீர்வாதங்களுக்காக ஜெபிக்க வேண்டியதில்லை. ஆனால் கிறிஸ்துவின் மூலமாக, சபையை ஒட்டுமொத்தமாக ஏற்றுக்கொண்டதற்கு பிதா அளித்த சான்றுகள் மற்றும் தெய்வீக ஏற்பாட்டுடன் அனைவரும் முழுமையாக திருப்தியடைய வேண்டும் என்பதற்கான ஆதாரமாக, ஆதியில் பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்தையும், கொர்நேலியுவின் ஆசீர்வாதத்தையும் மகிழ்ச்சியோடும், நம்பிக்கையோடும் திரும்பிப் பார்க்கலாம். ஏராளமான பெந்தெகொஸ்தியர்கள், தவறான எண்ணங்களுடன் தேவ சித்தத்திற்கு மாறாக, கேட்பவர்களிடம் நம்முடைய தேவன் கோபப்படுவதில்லை என்று நாம் கூறுகிறோம். அதற்கு மாறாக, அவர்களின் அறியமை மற்றும் தவறாக வழிநடத்தப்பட்ட பிரார்த்தனைகளுக்கு அவர் இரக்கம் காட்டுவார் என்று நாம் கருதுகிறோம். மேலும் அவரது சொந்த திட்டங்களையும் ஏற்பாடுகளையும் மாற்றாமல் அவர்களுக்கு ஆசீர்வாதம் கொடுக்கப்படும். ஆவியின் அபிஷேகத்திற்காக தொடர்ந்து ஜெபிக்கும் இந்த அன்பான நண்பர்கள், அப்போஸ்தலர்கள் எதிர்கால பெந்தெகொஸ்தேக்காக ஜெபிக்கவில்லை என்பதையும், ஜெபிக்கும்படி சபைக்கு அறிவுறுத்தவில்லை என்பதையும் அவர்கள் ஒருபோதும் கவனிக்கவில்லை என்ற காரியம் விந்தையாக உள்ளது. அத்தகைய நண்பர்கள் தங்களை அப்போஸ்தலர்களை விட புத்திசாலிகள் என்றும், அவர்களை விட பரிசுத்தமானவர்கள் என்றும், அல்லது அவர்களை விட ஆவியினால் நிரப்பட்டவர்கள் என்றும் எண்ணுகிறார்களா? அவர்களிடம் இதுபோன்ற அகங்காரமான மற்றும் மட்டுமீறிய தன்னம்பிக்கை உடைய கற்பனைகள் இல்லை என்றும், அவர்களின் உணர்வுகள் வெறுமனே அறியாப் பிள்ளைகளின் உணர்வுகள் போலுள்ளது என்றும் நாம் நம்புவோமாக, ஏனென்றால் அப்பிள்ளைகள் சிந்தனையின்றி மற்றும் சில சமயங்களில், அவர்களுக்கு வழங்க முடியாத தேவையற்ற மற்றும் வாக்குத்தத்தம் செய்யப்படாத ஆசீர்வாதங்கள் மற்றும் இரக்கங்களுக்காக தயையுள்ள பெற்றோரை முன்கோபத்துடன் எரிச்சலடைய செய்கிறார்கள். அவர்களுக்கு வழங்க இயலாத, தேவையற்ற மற்றும் வாக்களிக்கப்படாத ஆசீர்வாதங்கள் மற்றும் இரக்கங்களுக்காக மகிழ்ச்சியற்ற பெற்றோரை குறைவாகவும் சில சமயங்களில் கேலி செய்தாகவும் நினைப்பவர்களாக இருப்பவர்கள், அகங்காரமான மற்றும் அகந்தையுள்ள கற்பனைகள் ஏதும் இல்லை என்றும், அவர்களின் உணர்வுகள் வெறுமனே அறியாத குழந்தைகளின் உணர்வுகள் என்பதையும் நாம் நம்புகிறோம்.

**F644 [1] through F654** (**#39** கேள்வி காண்க)

உலகில் உள்ள அனைத்து நோய்களும் மரணங்களும் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ, நேரடியான நிலையில் மிக பெரிய எதிராளியால் ஏற்படுகிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. மனிதனை கெடுக்கவும், அவனை செயலிழக்க செய்யவும், இவன் வழியாகவே பாவம் மனுஷனுடைய மனதுக்குள் புகுத்தப்பட்டது. ஆயினும் கூட, உலகம் மற்றும் புது சிருஷ்டியின் காரியத்திலும் கூட, மனிதனுடைய படிப்பினைக்கும் கற்பித்தலுக்கும் தேவனானவர், பாவத்தின் காரணமாக மனுக்குலத்தின் மீது வந்துள்ள சாபத்தின் பல்வேறு கூறுகளை நீக்கிவிடுகிறார். உலகைப் பொறுத்தவரை, ஒரு போதுவான அர்த்தத்தில், முழுமையாக வேதனையில் இருக்கும் சிருஷ்டிப்பு, அதிகளவிலான பாவம் மற்றும் அதன் விரும்பத்தகாத தன்மையைப் பற்றியும் ஏதோ கற்றுகொண்டிருக்கிறது. சபையைப் பொறுத்தவரை, புது சிருஷ்டி கிறிஸ்துவின் துன்பங்களில் பங்கெடுப்பதற்கான அவரது அனுமதி, மனித குலத்தின் எஞ்சியவர்களுக்கு பொதுவானதாக இருக்கும் அந்த துன்பங்களில் ஒரு பங்கை உள்ளடக்கி உள்ளது. நம்முடைய ஆண்டவரின் விஷயத்தில், அவர் மனுக்குலத்திற்கான சிறந்த பிரதான ஆசாரியராக இருக்கிறார் என்றும் நம்முடைய பலவீனங்களை உணரக்கூடியவராக இருக்கிறார் என்றும் நமக்கு குறிப்பாக அறிவிக்கப்படுகிறது. மேலும் ஆசாரியரின் சீரா

அங்கமாக இருக்கும் ஒவ்வொரும், தலையாகிய நம்முடைய ஆண்டவரை போலவே மற்றவர்களுடைய பலவீனங்களை உணரக்கூடியவர்களாக இருக்கவேண்டும். கிறிஸ்துவின் முழு சரீரத்திலும் இரக்கமற்ற உறுப்பினர் ஒருவரும் இருக்க மாட்டார்கள். அனைவரும் இப்படிப்பட்ட அனுபவங்களைப் பெற்று, வருங்கால யுகத்தின் இந்த பரிதாபமான உலகத்தை மறுசீரமைப்பதற்கான நேரம் வரும்போது, அவர்களை எவ்வாறு முழுமையான இரக்கத்தோடு திருத்தி, கீழ்ப்படிதலின் கீழ் அவர்களை சோதித்து, பரிட்சித்து நியாயந்தீர்ப்பது என்று அவர்கள் முழுமையாக அறிந்திருப்பார்கள். மாம்சத்தில் பரிபூரணமாக இருந்த நம்முடைய ஆண்டவர், நோய்ப்பட்டவர்களால் தொடப்பட்டதால், அவர்களைக் குணப்படுத்துவதில் தனது வல்லமையை (உயிர்ச்சக்தி) செலவழிக்க முடிந்தது. இதனால் அவர் தாமே அவருடைய வல்லமைக்கு பதிலாக குணமாக்கப்பட்டவர்களின் பலவீனங்கள் மற்றும் உபத்திரவங்களை அனுபவங்களாகப் பெற்றார். ஆகையால்," அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. " (மத்தேயு8:17) என்று அவர் அறிவித்தார். கிறிஸ்துவின் சரீரத்திற்கு அங்கத்தினர்களாக அழைக்கப்படுபவர்களுக்கு பொதுவாக ஒரு அதிசயமான முறையில் விட்டுக்கொடுப்பதற்கு எந்த வல்லமையும் இல்லை. ஆனால் உலகின் பொதுவான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதிலும், அவர்களின் பொதுவான துயரத்தில் முழுமையாக அனுதாபம் கொள்ள அவர்களுக்கு உதவியாக, அவர்களின் சொந்த அபூரணமான நிலையில் மனித இனத்தின் உணர்வுகளை உணர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

கிறிஸ்துவின் சரீரம் உலகின் சோதனைகள், சரீரம், சமுதாயம் மற்றும் பொருளாதார கஷ்டங்களுக்கு விலக்கு அளிக்கப்படும் என்று சிலர் எதிர்ப்பார்க்கும் சிந்தனைக்கு நாம் எந்தவிதத்திலும் ஏற்றுகொள்ள இயலாது. உண்மையில், மாம்ச இஸ்ரயேலர்களின் நிலை இவ்வாறாக இருந்தது. தேவனுக்கும் அவருடைய நியாயப்பிரமாணத்திற்கும் உண்மையுள்ளவர்களாக இருப்பதற்கு அவர்கள் துன்பத்திலிருந்தும், சோதனைகளிலிருந்தும், நோய்களிலிருந்தும் விடுதலையை வெகுமதியாகப் பெற்றார்கள். ஆனால் புது சிருஷ்டிகளின் விஷயத்தில் இது முற்றிலும் தலைகீழானது. ஏனென்றால் அவர்கள் மாம்சத்தின் படி அல்ல, ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தாகிய ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள். நிழலான மாம்ச இஸ்ரயேலர்களின் ஆசீர்வாதங்கள், புது சிருஷ்டியின் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கு அடையாளமாக உள்ளது. சகலமும் அவர்களின் ஆவிக்குரிய நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது. கிறிஸ்துவுக்குள் விசுவாசத்திலும், கீழ்ப்படிதலிலும் நிலைத்திருக்கும் வரை தேவனுடைய ஆசீர்வாதத்திற்கு உத்திரவாதம் அளிக்கப்படுகிறது. அதனால் அவர்கள் வாசம் செய்யும் இடத்திற்கு எந்த தீமையும் அனுகாது. அவர்களுக்கு எந்த சேதமும் ஏற்படாதபடிக்கு எல்லாவற்றிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கு அவர்கள் மறைவில் வைக்கப்படுகிறார்கள். பூமிக்குரிய பலிகள் முழுமையாக நிறைவடைவதன் விளைவாக அவர்கள் புது சிருஷ்டிகளாக பூரணப்பட்டு, அதிக அளவிலான ஆவிக்குரிய நன்மைகளை அனுபவிக்கவும், மாம்சத்திற்குரிய ஆசீர்வாதங்களுக்கு மேலாக ஆவிக்குரியவைகளைப் பற்றி அவர்கள் புரிந்திருக்கிறார்களா என்பதையும், அவர்கள் இந்த ஆவிக்குரிய ஐக்கியத்திற்கு பாத்திரவான்களாக இருக்கிறார்களா என்பதை நிரூபிக்கும்படி, தொடர்ந்து சோதிக்கப்படுகிறார்கள்.

ஆகையால் கிறிஸ்து இயேசுவில் உள்ள புது சிருஷ்டிகள் தங்களுக்கு ஏராளமான அவமானங்களும், சோதனைகளும் இருப்பதைக் கண்டறிந்தாலும், இவைகள் எவ்வழிகளில் வந்தாலும் சரி, அவைகள் தங்கள் விசுவாசத்தின் சான்றுகளாக அவைகளை அங்கீகரிக்க வேண்டும். தேவன் அவருடைய புத்திரர்களாக கருதுவதற்கான சான்றுகளாகவும், தொடர்ந்து வரக்கூடிய மகிமையில் பூரணப்படுவதற்கு பொருத்தமாக ஆயத்தமாகும்படி, அவர்கள் தேவனோடு செய்த உடன்படிக்கையின் படியும் சோதிக்கப்படுகிறார். ஆகையால் இப்படிப்பட்டவர்கள் மேல் பேரழிவுகள் வரும்படி தேவன் அனுமதித்தால், அவை உலகிற்கு நேர்ந்தது போன்றவை என்று நாம் கருதப்படக்கூடாது. இந்த உலகம் மரண தண்டனையின் கீழ், பல்வேறு விபத்துக்கள் மற்றும் பிறழ்வுகளுக்கு உட்பட்டது. பதினெட்டு பேரின் மேல் சிலோவாம் கோபுரம் விழுந்ததைப் பற்றியும், பிலாத்து சில கலிலேயருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளோடே கலந்திருந்ததைப் பற்றியும் நம்முடைய ஆண்டவர் விளக்கியபோது, இவர்கள் தெய்வீக புறக்கணிப்பினால் குற்றவாளிகள் என்ற காரணத்தினால் இவர்கள் அழிக்கப்படவில்லை என்று நம்முடைய கர்த்தர் அறிவித்தது போல இதற்கு ஆண்டவர் எதுவும்

செய்யவதில்லை. (லூக்கா13:1-5) இந்த உலக மனுக்குலத்திற்கு தொடர்பாக, மனிதர்கள் மற்றும் சாத்தானின் கோபத்தை, சில வரம்புகளுக்குள் தேவன் அனுமதிக்கிறார். ஆனால் அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட சபையைப் பொறுத்தவரை இது வேறுப்படுகிறது. அவர்களுக்கு நேரிடும் எதுவும் தற்செயலானது அல்ல. "கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது." பிதாவின் சித்தமில்லாமல், அவர்களின் தலையில் உள்ள முடிக்கூட கீழே விழாது.(சங்கீதம் 116:15, மத்தேயு10:30) "எனக்கு எல்லா அதிகாரமும் உண்டென்றும் உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்று உனக்குத் தெரியாதா" என்று பிலாத்து இயேசுவிடம் சொன்னபோது,"பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது.." என்று நம்முடைய ஆண்டவர் பதில் அளித்தார். (யோவான் 19:10,11) மேலும் கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும், புது சிருஷ்டிகளாக ஜெநிப்பிக்கப்பட்ட அந்நேரத்திலிருந்து இது உண்மையாக பொருந்தும். ஆம், இதை நம்புவதற்கு நமக்கு அனைத்து காரணங்களும் உண்டு. ஒரு விதத்தில் தெய்வீக உறுதிப்பாடு புது சிருஷ்டிகளுக்கும் அப்பால் செயல்படுகிறது. Yea, we have every reason to believe that in some measure divine providence extends even beyond the New Creation to those whose lives and interests are closely linked to theirs. புது சிருஷ்டிகள் கடுமையான சோதனைகளை அனுபவிக்கும்போது, அவைகள் விசித்திரமானவை என்று நினைக்காமலம், கிறிஸ்துவின் சரீரத்தின் தலை தொடங்கி அனைத்து உறுப்பினர்களும் அதாவது பாத வகுப்பாரில் கடைசி அங்கத்தினர் வரைக்கும் சோதிக்கப்பட்டு, மெருகூட்டப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, மகிமைப்படுத்தப்படும் வரை இதுபோன்ற சோதனைகள் நடக்கும் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். அப்படியானால், இவை வீட்டிலுள்ள எதிர்ப்புகள் மற்றும் துன்புறுத்தல்கள் அல்லது முன்னாள் நண்பர்கள் அல்லது அயலவர்களிடமிருந்தோ, அல்லது பெயர் சபை ஜனங்களிடமிருந்தோ அல்லது நிதி பேரழிவு மற்றும் வறுமையிலோ அல்லது அவை இயற்கையாக வரும் நோய், வலி, விபத்துகள், போன்றவை...எப்படி இருந்தாலும் சரி தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய ஒவ்வொரு காரியங்களை பொறுத்தவரை, தந்தையின் அன்பு மற்றும் தெய்வீக பராமரிப்பில் திருப்தியடைய வேண்டும். இதில் முழு நம்பிக்கை வைத்திருப்பது விசுவாசத்தின் சோதனையின் ஒரு பகுதியாகும். நாம் தேவனுடைய பிள்ளைகளும், சுதந்தரவாளிகளும் என்று உறுதியளிக்கப்பட்டதில் முழு நம்பிக்கை பெற்றிருக்கவேண்டும். தேவனுடைய மேற்பார்வையைப் பற்றியும், அதே நேரத்தில் காண்பதினால் அல்ல, காணாமல் விசுவாசிப்பவர்களுக்கு தேவைப்படும் விசுவாசத்தின் கடுமையான சோதனைகள் மற்றும் இன்னல்களை அனுபவிக்க அனுமதிக்கப்படுவதையும் பற்றி அறிவிக்கப்படவேண்டும்.

அப்படியானால், என்ன நன்மையையோ அல்லது எந்த விதமான தொல்லைகளோ எதுவானாலும், தேவனுடைய தெய்வீக ஏற்பாட்டை, நாம் எப்போதும் நம்பிக்கையோடும், அன்போடும் பெற்றுகொண்டு, அதனால் பாடங்களை கற்றுகொண்டு, நன்மை அடைவோம். வாழ்க்கையின் அனைத்து நலன்களிலும், பூமிக்குரிய மற்றும் பரலோகத்திற்குரிய தெய்வீக கவனிப்பை உணர்ந்துகொள்தல், நமது தற்காலிக விவகாரங்களில் அலட்சியத்திற்கு இட்டுச் செல்லக்கூடாது. மாறாக, நாம் பெற்ற சலுகைகள், வாய்ப்புகள், பொறுப்புகள், சமூகம், நிதி மற்றும் ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை நாம் காரியதரிசிகள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஆகையால், ஏற்படக்கூடிய எந்தவொரு சமூக மீறல்களையும் சரிச் செய்வதற்கு நம்மால் முடிந்ததைச் செய்வது நமது கடமையாகிறது. நம்முடைய நோக்கங்கள் மற்றும் செயல்களை தவறாக புரிந்துகொள்வதைத் தடுக்க, நம்முடைய வல்லமையில் நியாயமான முறையில் அனைத்திற்கும் நாம் விளக்கங்கள் சொல்வதில் தயவுள்ளவர்களாகவும், அக்கறையுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். மூடநம்பிக்கை மற்றும் வெறித்தனமாகத் தோன்றும் எல்லாவற்றையும் தவிர்ப்பதற்கு நாம் புத்திசாலித்தனமாக முயல வேண்டும், இதனால் நம் தேவனையும், அவருடைய குணத்தையும், அவருடைய புத்தகத்தையும் அவருடைய சபையையும், மற்றவர்களையும் குறித்து பாராட்டவேண்டும். இவ்வழியில் நாம் நமது ஒளியை பிரகாசிக்கவேண்டும். நிதி விஷயங்களில் நாம் விவேகமாகவும், சிக்கனமாகவும் இருக்கவேண்டும். தொழிலில் சோம்பலாக இருக்கக்கூடாது. நாம் தேவன் இல்லாதவர்களைப் போலவும், ஒவ்வொன்றும் நம்முடைய சொந்த உழைப்பைச் சார்ந்திருப்பது போலவும், இருந்தபோதிலும், நம்முடைய நலன்கள் அனைத்தும் தேவனுடைய பாதுகாப்பின் கீழ் இருப்பதால், நம்முடைய

இருதயங்களிலும், விசுவாச வீட்டிலுள்ள விஷயங்களைப் பற்றிய விவாதங்களிலும் நாம் தேவன் மேல் உள்ள நம்பிக்கையை வெளிப்படுத்தவேண்டும். அப்படியானால், நம்முடைய சிறந்த ஞானம், விவேகம் போன்றவற்றை செயலாற்றினாலும், வறுமை அல்லது நிதி இழப்பு ஏற்பட்டால், இது போன்ற அனுபவங்கள் நமக்கு செழிப்பைக் காட்டிலும் புது சிருஷ்டிகளாக நமக்கு சிறந்ததாக இருக்கும் என்பதை நம்முடைய பரலோகத் தந்தை கண்டிக்கிறார் என்பதற்கு நாம் மதிப்பளிக்க வேண்டும். தேவனுடைய வழிநடத்துதல்கள் மற்றும் நம்முடைய அனுபவங்கள் எப்படிப்பட்டதாக இருந்தாலும், நம்முடைய எல்லா காரியங்களிலும் அவருடைய ஆசீர்வதிக்கப்பட்ட மேற்பார்வையை அங்கீகரிக்க வேண்டும். இதேபோல் உடல் நல விஷயத்திலும்: -நம்மீது நோய் வந்தால், இந்த மரண சரீரத்திற்கு நம்முடைய சரியான உக்கிராணத்துவம், நம்முடைய அறிவு மற்றும் நியாயத்தைப் பொருத்தவரையில், அதற்கான தீர்வை காண்பதற்கு சரியான ஆற்றலை பயன்படுத்தவேண்டும் என்று கோருகிறது. முயற்சிகள் வெற்றிகரமாக இருந்தால், நம்முடைய இருதயம் வெறும் மருந்தை அல்ல, தேவனே காரணம் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். அவை தோல்வியுற்றால், தேவனுடைய வல்லமையை நாம் சந்தேகிக்காமல், அதற்கு பதிலாக, மேற்கொள்ளப்படுகிற சோதனைகளை வருங்காலத்தில் இன்னும் அதிகமாக வரும் ஆசீர்வாதங்களுக்கு தொடர்புள்ளதாக காணவேண்டும். உண்மையில், புது சிருஷ்டிகளின் ஒவ்வொரு துயரங்கள் அல்லது பேரழிவுகளை, விடாமுயற்சியோடு சரி செய்வதற்கு முயற்சிக்கும் போது, இந்த அனுபவங்களிலிருந்து என்ன பாடம் கற்றுக்கொள்ளலாம் என்ற முழு விருப்பத்துடனும், நம்பிக்கையுடனும், விசுவாசத்துடனும் நம்முடைய இருதயங்களை தேவனிடம் உயர்த்த வேண்டும். மேலும் இந்த படிப்பினைகள், தவறான செயல்களுக்கு தண்டனையாக உள்ளதா என்றும் அல்லது மேய்ப்பரின் அடிச்சுவடுகளிலிருந்து விலகி, தவறான திசையில் வழிநடந்த ஆடுகளை மீண்டும் கொண்ட வர வடிவமைக்கப்பட்ட கோலும், தடியுமா என்பதை கண்டறிய வேண்டும். "உமது கோலும் தடியும் என்னை தேற்றும்". தேவனுடைய ஜனங்கள் தாங்கள் பெற்றிருக்கும் சராசரி உடல் நலம், நிதி மற்றும் சமூக செழிப்பு ஆகியவற்றைக் கொண்டிருப்பதன் மூலம் பெறும் மகிழ்ச்சி, சமாதானம் மற்றும் ஆறுதலை சார்ந்திருப்பதில்லை. ஆனால் எல்லா சூழ்நிலைகளிலும் நிலைமைகளிலும் தேவனுடைய சமாதானத்தில் சந்தோஷப்படும். மேலும் மேய்ப்பனின் கோலும் தடியும் அவர்கள் மனதார மகிழ்ச்சி அடைய அவர்களை இயக்கும். "நான் துன்பப்படுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன்" என்று பூர்வகாலத்துத் தீர்க்கதரிசியோடு பல புது சிருஷ்டிகளும் சேர்ந்துச் சொல்லாம். துன்பங்களுடன் தொடர்புடைய பெரிய ஆசீர்வாதங்கள் உள்ளன என்று அவர்களில் பலர் அறிந்திருக்கிறார்கள்.

"உன் நோய்களை எல்லாம் குணமாக்குவார்." (சங்கீதம் 103:3) என்று சபையைப் பற்றியும், அதன் மேலுள்ள தேவனுடைய கவனிப்பைப் பற்றியும் தீர்க்கதரிசனமாக எழுதப்பட்டுள்ளது. சரீர நிலைமைகளைப் பொறுத்தவரையில் சுவிசேஷ திருச்சபைக்கு இதனைப் பயன்படுத்த யாதொரு முயற்சியும் எடுத்திருந்தால், அது அவசியமாக முடமாகவும் பலவீனமாகவுமே இருந்திருக்க முடியும். சபையின் தலை முதல் கடைசி "பாத" அங்கத்தினர் வரை அவர்களின் உடல் நோய்கள் அனைத்தையும் குணப்படுத்துவதில் தேவன் மகிழ்ச்சி அடைவார் என்று யாருக்கு தெரியாதிருக்கும்? பரிசுத்தவான்களில் பலர் தங்களது சரீரப் பிணியினால் மரித்து போனார்கள் என்பது யாருக்குத் தெரியாது? மருத்துவ அறிவியலின் படி, நம்முடைய நேசமீட்பர், சரீர ரீதியாக பரிபூரணமானவர் என்றாலும், கெத்செமனேவில் இரத்தத்தின் பெருந்துளியாய் வியர்வைதனைச் சொட்டிய போது, விஞ்ஞானிகளுக்குத் தெரிந்த ஒரு நோயால் தாக்கப்பட்டார். அதே விஞ்ஞானத்தின்படி மற்றும் உண்மைகளுக்கு இணங்க, மாம்சத்தில் பூரணமாக இருந்தவர், அவர் சிலுவையில் அறையப்பட்டதினால் வந்த நோயின் காரணமாக அவரது இருதயம் வெடித்தது. இந்த இரண்டு முக்கிய காரணங்களினால் மிக விரைவாக மரித்தார். அப்போஸ்தலராகிய பவுல் மரிக்கும் நாள் வரைக்கும் "மாம்சத்தில் உள்ள முள்" ஒன்றை எடுத்துச் சென்றார் என்பதையும், அதை அகற்ற தேவன் மறுத்துவிட்டார் என்பதையும், அதை தாங்கி கொள்வதினால், அதற்கு ஈடாக அதிகமான கிருபையின் ஆசீர்வாதத்தை பெறுவார் என்பதையும் அவருக்கு உறுதியளிக்கப்பட்டதை யார் அறியாதிருப்பார் ? இந்த யுகம் முழுவதும், தேவனுடைய மிக உன்னதமான பரிசுத்தவான்கள் பலர் நோய்களினால் துன்பப்பட்டுள்ளனர் என்பதையும், அவர்களின் நோய்கள் அனைத்தும் குணமடையாமலே மரித்துவிட்டார்கள் என்று யாருக்கு தெரியாமல் இருக்கிறது ? உடல் சார்ந்த நோய்களுக்கு இந்த வேதத்தைப் பயன்படுத்துவது பொருந்தாத ஒரு காரியமாகும். ஆனால் புது சிருஷ்டியின்

ஆவிக்குரிய நிலைக்கு, வசனங்களின் தீர்க்கதரிசனமான பயன்பாடு உண்மையில் மிகவும் பொருத்தமானது. புது சிருஷ்டி ஆவிக்குரிய குறைபாடுகளுடனும், நோய்களுடனும் போராடுகிறது. மேலும் தேவ வசனங்களில் உள்ள அவருடைய வார்த்தையில் பிணைக்கப்பட்டுள்ள, மிக உயர்ந்ததும் விலைமதிபற்ற வாக்குத்தத்தங்கள் இந்த ஒவ்வொரு நோயும் கிலேயாத்தின் பிசின் தைலத்தால் குணமடைவதற்கு உத்தரவாதம் அளிக்கிறது. ஆகவே, மனிதனால் கொடுக்கவோ, பறிக்கவோ முடியாத அமைதி மற்றும் மகிழ்ச்சியால் ஈடுசெய்யவும், அந்த இருதய நோய், அமைதியின்மை இனி உருவாகாமல், அதற்கு பதிலாக பரிசுத்த ஆவியின் அன்பும், மகிழ்ச்சியும், சமாதானமும் நிலைத்திருந்து ஆட்சி செய்யும்.

மாற்கு16:9-20 இடையில் சேர்க்கப்பட்ட வசனங்கள்.

இந்த வசனங்கள் அனைத்தும் இடையில் சேர்க்கப்பட்டவைகள் என்று அறிஞர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆரம்பகால கிரேக்க பிரதிகளில் காணப்படவில்லை மற்றும் இவைகள் நிச்சயமாக உண்மையானவைகளும் அல்ல. ஆண்டவராகிய இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் அனைவரும் விஷத்தை குடிக்கலாம் என்றும் விஷ பாம்புகள்,தொற்று நோய்கள் போன்றவற்றுடன் தொடர்பு கொண்டாலும் அது அவைகளை சேதப்படுத்தாது என்பது உண்மை அல்ல. மேலும் நோய்களைக் குணப்படுத்துவதற்கும் பிசாசுகளை விரட்டுவதற்கும் அனைவருக்கும் வல்லமையும் இல்லை. திருத்தப்பட்ட வேத பதிப்புகளிலும், அனைத்து புதிய பதிப்புகளிலும் இந்த பத்தி விடுப்பட்டுள்ளதை நாம் கவனிக்கவேண்டும்.

எனவே, அதைப் பெறுவது அல்லது வேதவசனமாக மேற்கோள் காட்டுவது, தேவனுடைய வார்த்தையில் சேர்ப்பதும், மற்றும் ஒரு முக்கியமான பாடத்தில குழப்பத்தை அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் மற்றும் பிற உயிரின வசதிகளைப் பொறுத்தவரை (உலகத்தை விட) தேவனுடைய ஜனங்கள் விசேஷமாக இரக்கம் பெறக்கூடும் என்ற எண்ணம் மாயையானதும், ஒரு கண்ணியாகவும் இருக்கும். மற்றும் புது சிருஷ்டியின் அனைத்து சரியான எதிர்பார்ப்புகளுக்கு மேலே காட்டப்பட்டவைகளுக்கு எதிரானது. கூக்குரலிடும் சிருஷ்டிகளைத் தாக்கும் பொதுவான உபத்திரவங்களிலிருந்து விடுபடுவதை எதிர்பார்ப்பதற்கு பதிலாக, அவர்களின் துன்பங்களில் பங்கெடுத்து, மனித பலவீனங்களின் உணர்வை பெறுவதற்கே நம்முடைய ஆண்டவரும் அப்போஸ்தலர்களும் தங்களை அர்ப்பணித்து, நமக்கு ஒரு நல்ல மாதிரியை முன்வைத்தார்கள். நம்முடைய ஆண்டவர் வனாந்தரத்தில் நாற்பது நாட்கள் புசியாமல் இருந்தபோது தனது பசிக்காக தெய்வீக வல்லமையைப் பயன்படுத்தும்படிக்கு எதிராளியினால் சோதனையாக கொடுக்கப்பட்ட ஒரு ஆலோசனையை அவர் நிராகரித்தார். (மத்தேயு 4:3,4) சோர்வுற்றபோது அவர் சமாரியாவின் கிணற்று அண்டையில் ஓய்வெடுத்தார், அதே நேரத்தில் அவருடைய சீஷர்கள் உணவு வாங்கச் சென்றபோது, அவருடைய வல்லமையை மீட்டெடுக்க தெய்வீக சக்தியை அவர் பயன்படுத்தியிருக்கலாம். (யோவான் 4:6) இந்த நிகழ்வுகளில், பசியின் வேதனைகளுக்கு உணவும், சோர்வுக்கு ஓய்வெடுப்பதுமே சரியான மருந்தாக இருந்தது. நம்முடைய ஆண்டவர் இவைகளைப் பயன்படுத்தினார். அவருக்கு ஏதேனும் நாள்பட்ட குறைபாடுகள் இருந்ததாக நமக்கு தெரிவிக்கப்படவில்லை. ஆனால் அவர் தேவையான நேரங்களில் உணவும், ஓய்வும் பயன்படுத்தியதைப் போல எந்தவொரு வேர்கள் அல்லது மூலிகைகள் அல்லது பிற வைத்தியங்களை சுதந்திரமாகப் பயன்படுத்திருப்பார் என்பதில் நமக்கு சந்தேகம் இல்லை. இரத்தமான வியர்வையை ஏற்படுத்தும் நரம்புகளில் உள்ள குறைபாடு, மற்றும் இருதய சிதைவு அவரது ஊழியத்தின் முடிவில் வந்தது. தனது நேரம் வந்துவிட்டது என்று அவர் அறிந்திருந்தார். பாதுகாப்பிற்காக பரலோகத்தின் வல்லமையான தேவதூதர்களை அழைக்கவும் மறுத்துவிட்டார். (மத்தேயு 26:53) மற்றும் அவரது பசியைப் பூர்த்தி செய்யவும் அவரது சோர்வு நீக்கவும் அதே வல்லமையை அழைக்க மறுத்தார். ஆனால் இந்த வல்லமையை அவரது சீஷர்களின் நலன்களுக்காக அழைப்பதற்கு பூரண சுயாதீனம் பெற்றிருந்தார். உதாரணமாக, ஏராளமான ஜனங்களுக்கு உணவளிப்பதில், மற்றும் சூறாவளியை அமைதிப்படுத்துவதில் மற்றும் வரிகளை கொடுப்பதிலும் அவர் அதிகமாக ஆர்வம் காட்டினார். மத்தேயு 14:15-21, மாற்கு4:36-41, மத்தேயு17:24-27

.

இதேபோல், அப்போஸ்தலர்களின் தற்காலிக நோய்கள் மற்றும் தேவைகளின் நிவாரணத்திற்காக அவர்கள் தங்களுக்கு இருந்த சிறப்பு சலுகைகளையும், ஆசீர்வாதங்களையும் பயன்படுத்தவில்லை என்பதைக் காண்கிறோம். பலவீனமான கண்களையுடைய பவுலைத் தவிர பன்னிரண்டு பேரில் மற்றவர்களின்

நோய்களைப் பற்றி நமக்கு எதுவும் கொடுக்கப்படவில்லை. பவுல் இதற்காக வேண்டினபோதும், விடுதலை அளிப்பதற்கு தேவன் விரும்பாமல், பொறுமை, மனத்தாழ்மை போன்றவற்றை வளர்ச்சி அடையச் செய்யும் இது, சாத்தானின் தூதன் என்பதை அவர் உறுதியளித்தார். இதற்கு "என் கிருபை உனக்கு போதும்" என்றார். (2கொரி12:7-9) அப்போஸ்தலரின் நம்பிக்கையும், தேவன் மீதான நம்பிக்கையும் அந்த காலத்திலிருந்து இன்றுவரை குறுகிய பாதையில் நடக்கும் அனைவருக்கும் ஆறுதலளிக்கிறது. ஆனால் அவர் இவற்றில் சிலவற்றைப் போல, தற்காலிக நல்ல விஷயங்கள், பணம், வீடுகள், நிலங்கள், உணவு, வஸ்திரம் போன்றவைகளுக்காக ஆண்டவரிடம் கோரிக்கைகள் வைக்கவில்லை. சில சமயங்களில் அவருடைய தேவைகளுக்காக தன்னுடைய சொந்த கைகளில் வேலைச் செய்தார். அவர் படகோட்டினார் மற்றும் கூடாரம் தயாரிக்கும் தொழில் செய்தார் என்பதை அவருடைய சொந்த வார்த்தைகளில் சொல்லியிருக்கிறார். பரிசுத்தத்திலும், ஆண்டவரோடு நெருங்கி இருப்பதிலும், அவரைவிட மிகக் குறைவானவர்கள், மிகவும் இழிவான (வெறுக்கத்தக்கதான) தொழிலை செய்திருக்கமாட்டார்கள். ஆனால் வேலை இல்லாமல் வாழ்வது "விசுவாசத்தினால் வாழ்வது" அதாவது வேலை இல்லாமல் வாழ்வதற்கு சிலர் முற்படுகிறார்கள். இதை குறித்து அப்போஸ்தலன் மிகவும் தீர்மானமாக கண்டிக்கிறார். எபேசியர் 4:28, "திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலைசெய்து, பிரயாசப்படக்கடவன். 2தெசலோனிக்கேயர் 3:10 ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே." (எபேசியர் 4:28, 2தெசலோனிக்கேயர் 3:10) விசுவாசத்தினால் வாழ வேண்டும் என்பது தெய்வீக சித்தம் என்றும் அதேநேரத்தில் வேறு சிலர் வேலை செய்து வாழக்கூடியவர்கள் அவர்களை ஆதரிக்கவேண்டும் என்று தவறாக நினைக்கும் பலர், பெரும்பாலும் பணம், உணவு, உடை போன்றவற்றிற்காக வேலை செய்யாமல், ஜெபிக்க தைரியம் கொண்டிருக்கிறார்கள். அத்தகையவர்கள் அனைவரும் பொல்லாதவர்கள் என்று நாம் சொல்லவில்லை. தவறான போதனைகள் மற்றும் தெய்வீக பரிவர்த்தனைகளில் உள்ள தவறான புரிதல் மற்றும் அவர்கள் அழைப்பின் தன்மை ஆகியவற்றின் காரணமாக தேவனுடைய ஜனங்களில் சிலர் இந்த தவறான மனப்பான்மையில் உள்ளனர் என்று நாம் நம்புகிறோம். அந்த ஜெபங்கள் தெய்வீக சித்தத்துடன் முழுமையான இசைவில்லாதபோதும் கூட தேவன் சில சமயங்களில் ஜெபங்களைக் கேட்டு பதிலளிப்பார் என்பதில் நமக்கு எந்த வாதமும் இல்லை. நம்முடைய ஆண்டவர் மற்றும் அப்போஸ்தலர்களின் அறிவுறுத்தல்களையும் நடைமுறைகளையும் பின்பற்றுகிறதே புது சிருஷ்டிகளுக்கான சரியான வழியும், தேவனுக்கு மிகவும் பிரியமானதென்றும் நாம் நம்புகிறோம். புது சிருஷ்டிகளாக எண்ணப்படுவதினால், பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் சிருஷ்டிகருடன் இணக்கமாக உள்ள இயல்பான மனுஷனுக்கே உரியது என்ற உண்மையை அவர்கள் அங்கீகரிப்பார்கள் என்பதை பொருள்படுத்துகிறது. ஆகவே, கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தின் வழியாக தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்பட்ட அனைவரும் அவருக்கு சொந்தமானவர்கள். மேலும் இந்த சுவிசேஷ யுகத்தில், அழைக்கப்படும் இந்த விசுவாசிகள், புது சிருஷ்டிகளுக்குரிய பரலோக ஆவிக்குரிய மேலான ஆசீர்வாதங்கள் மற்றும் சலுகைகளுக்கு பதிலாக தங்களுடைய மனித உரிமைகளை பலிபீடத்தின் மேல் அர்ப்பணித்து தங்களையே தத்தம் செய்கிறார்கள். ஆவிகுரிய சலுகைகள், நம்பிக்கைகள் போன்றவைகளுக்கு, பதிலாக இந்த பூமிக்குரிய உரிமைகள் இவ்வாறாக தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்தால், ஏற்கெனவே அர்ப்பணிக்கப்பட்ட பூமிக்குரிய இந்த ஆசீர்வாதங்களை புது சிருஷ்டிகள் எந்த அடிப்படையின் கீழ் கோரமுடியும்? தேவனுடைய ஞானத்தில் நமக்கு தேவைப்படும் தற்காலிகமான ஆசீர்வாதங்களில் சிறந்தவைகளை கேட்பது முற்றிலும் மற்றொரு விஷயமாகும். அதேபோல், ஆவியின் படி அல்ல, மாம்சத்தின்படி நம்முடைய அன்பானவர்கள் உட்பட மற்றவர்களுக்கான ஆசீர்வாதங்களை கேட்பது மற்றொரு காரியமாகும். ஆயினும்கூட, நம்முடைய எல்லா வேண்டுதல்களிலும், தேவனுடைய அன்பும், ஞானமும், நம்முடையவைகளை காட்டிலும் உயர்ந்ததாக அங்கீகரிக்கப்பட வேண்டும். மேலும் ஒவ்வொரு விஷயத்திலும் நம்முடைய சித்தம் அவருடைய சித்தத்தில் சமர்ப்பிக்கப்படுவதை முழுமையாக உணரப்படுவதோடு, ஒவ்வொரு விண்ணப்பங்களிலும் அவைகளை வெளிப்படுத்தவேண்டும். புது சிருஷ்டிகள், தேவனுடைய வார்த்தையினால் சரியாக அறிவுறுத்தப்பட்டு, அதன்

உபதேசத்தை புரிந்து பாராட்டுவதோடு, எந்தவொரு தற்காலிக நலனுக்கும் அப்பாற்பட்ட அதன் ஆவிக்குரிய நலன்களின் மதிப்பை உணரவேண்டும். இராஜ்யத்திற்கான ஆயத்தம் மற்றும் புதிய இயற்கையின் வளர்ச்சிக்கு மிகவும் இலாபகரமாக இருக்கும், மாம்சத்தின் அனுபவங்களை மட்டும், நிச்சயமாக விரும்பவேண்டும்.

புதிய ஏற்பாடானது ஒன்றிணைந்த மற்றனைத்து அப்போஸ்தலர்களைவிடவும் யூதாஸ் இழந்து போன இடத்தைப் பெற்றுக்கொள்வதற்காகக் கர்த்தரால் தெரிந்துக்கொள்ளப்பட்டு, தமஸ்குவிற்குச் செல்லும் வழியில் கிறிஸ்துவை தான் ஏற்றுக்கொண்ட நேரந்துவக்கி, அப்போஸ்தலரின் அனுபவங்களைப் பற்றியே அதிகளவில் பேசுகின்றது.

அதிகபட்சமாக, நமது கர்த்தருடைய மாதிரி ஜெபமானது, அன்றாட ஆகார மார்க்கத்தில் கர்த்தர் தாமே தங்களுக்கு எது சிறந்தது என்று அறிந்திருப்பதால் அவரிடமே கேட்பதற்கு உத்திரவாதம் அளிக்கின்றது. மேலும் தமஸ்குவுக்கு செல்லும் வழியில் கிறிஸ்துவை அவர் ஏற்றுக்கொண்ட நேரத்திலிருந்து தொடங்கியது. அவரது பலவிதமான அனுபவங்களைப் பார்க்கும்போது, சபையில், பின்னர் சத்தியத்திற்குள் வருபவர்களின் மீது பல சந்தர்ப்பங்களில் அற்புதங்களின் வரத்தை அவர் பயன்படுத்தினார் என்பதை நாம் உணரலாம். ஆனால் இதுவரை பதிவுகள் காண்பிக்கிறபடி, இந்த குணப்படுத்தும் வல்லமை ஒருபோதும் அவரது சொந்த நிவாரணத்திற்காகவோ, அல்லது பரிசுத்தவான்களாக தங்களை முழுமையாக அர்ப்பணிதவர்களாக நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள எவருடைய நிவாரணத்திற்காகவோ பயன்படுத்தப்படவில்லை. ஏனெனில் அக்கால பரிசுத்தவான்கள் நோயிலிருந்து விடுப்பட்டிருந்தார்கள் என்பதாக இல்லை. மாறாக, தீமோத்தேயுவுக்கு தீராத வயிற்று வலி இருந்ததை நாம் அறிவோம், மேலும் எப்பாப்பிரோதீத்து, வியாதிப்பட்டு மரணத்திற்குச் சமீபமாயிருந்ததையும் நாம் அறிவோம். ஆனால், அவர் பாவத்தின் நிமித்தம் அல்ல, கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தமே மரணத்திற்குச் சமீபமாயிருந்தார் என்று பவுல் விளக்கம் அளிக்கிறார். (பிலிப்பியர் 2:25-30) இக்காரியத்தில் எப்படிப்பட்ட சிறப்பு உணவுகள் அல்லது மருந்துகளை கொடுத்து தேவன் இரக்கம் காண்பித்தர் என்று நமக்கு தெரியாது. ஆனால் தீமோத்தேயுவின் விஷயத்தில், அவருடைய நோயை குணப்படுத்த அப்போஸ்தலர் ஜெபிக்கவும் இல்லை அல்லது ஒரு கைக்குட்டை அல்லது துணியையோ அனுப்பவும் இல்லை. அதற்கு பதிலாக, " நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல், உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள். "(I தீமோத்தேயு5:23) என்று எழுதினார். அவர் பரிந்துரைத்த திராட்சை ரசம் மது பானமாகவோ அல்லது போதைப்பொருளாகவோ அல்ல, முற்றிலும் ஒரு மருந்தாக பயன்படுத்தும்படி கூறினார். குறிப்பாக கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், இதுவரை நமக்கு அறிவித்திருக்கிறபடி, இந்த இரண்டு அர்ப்பணிக்கப்பட்ட சகோதரர்களின் சார்பாகவும் தெய்வீக வல்லமை செயல்படுத்தப்படவில்லை என்பது தெளிவாகிறது. அவர்கள் தங்கள் குறைபாடுகளையும் துன்பங்களையும் தாங்கி, அவர்கள் பெற்ற அறிவினால் மிகவும் பொருத்தமான உணவுகளையும் தீர்வுகளையும் பயன்படுத்தி, அவைகளிலிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றார்கள். அர்ப்பணிக்கப்பட்ட அனைத்து புது சிருஷ்டிகளும் பின்பற்ற வேண்டிய போக்கின் சரியான எடுத்துக்காட்டு என்று நாம் நம்புகிறோம். அவர்கள் உடல் ரீதியான சுகத்திற்கும், ஆடம்பரமான வாழ்க்கைக்கும்.... போன்றவற்றைக் கேட்கக்கூடாது. அதிகபட்சமாக, நம்முடைய ஆண்டவர் கற்பித்த மாதிரி விண்ணப்பத்தில், அன்றாட உணவிற்குரிய வழியில் ஆண்டவர் மிகச் சிறந்ததை கொடுப்பதற்கு உத்திரவாதம் அளிக்கிறது. அன்றாட உணவுக்காக ஜெபிக்கும்போது கூட, அவர்கள் தங்கள் கைகளின் உழைப்பை முன்வைத்து, அனுபவங்களின் வழியாக நற்குணங்களின் வளர்ச்சி அடைவதற்கு தேவனுடைய ஞானத்திற்கு ஏற்ப ஆசீர்வாதங்களை எதிர்பார்க்கவேண்டும். உணவு மற்றும் ஆடைகளின் மிக அவசியமானவைகளை மட்டுமே வழங்குவதற்கு அவர்கள் தகுதிப்பெற்றவர்கள் என்று தேவன் கண்டால், அது அவர்களுடைய அன்பு, பொறுமை மற்றும் அவர் மீதான நம்பிக்கைக்கு ஒரு சோதனையாக இருக்கும். அவர்களுக்கு ஏராளமாக வழங்கினால், எதிர் திசையில், அது அவர்களுக்கு அதே நம்பிக்கை மற்றும் அன்பு மற்றும் பக்திக்கான சோதனையாக இருக்கும். அதாவது அவர்கள் தேவனுக்கென்றும், அவருடைய சகோதரர்களுக்கு செய்யும் ஊழியத்திற்கும், மனப்பூர்வமாக தாங்கள் பெற்ற நல்ல ஈவுகளை எந்த விகிதத்தில் பலி செலுத்துகிறார்கள் என்று சோதனைக்கு உட்படுவார்கள். அதேபோல், வலுவான ஆரோக்கியத்தையும், வீரியத்தையும் தெய்வீக ஞானம் கொடுத்தால், தேவனுக்காக இவைகளை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு அன்பும், பக்தியும்

பலிசெலுத்தப்படுமா அல்லது சுயநல நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுமா என்ற விசுவாசத்தின் சோதனை முன் வைக்கப்படும். அல்லது, மறுபுறம், தேவன் தனது ஏற்பாட்டில் ஒரு குறிப்பிட்ட அளவு ஆரோக்கியத்தையும், வீரியத்தையும் வழங்கினால், அன்பு, கீழ்ப்படிதல், அர்ப்பணிப்பு மற்றும் பொறுமையை நிரூபிக்கவும், மற்றும் சிறிய வாய்ப்புகள் தேடப்பட்டு தொடர்ந்து பயன்படுத்தப்படும் வைராக்கியத்தையும் நிரூபிக்கவும் விசுவாசம் மற்றும் பக்தியின் பரீட்சை எதிர் நிலைப்பாட்டில் இருக்கும்.

**R2006 [col. 2:2] through R2007 [col.1 :1]—**கிறிஸ்துவின் ஜெபங்கள் தன்னலமற்றவை (**#39**கேள்வி காண்க)

நம்முடைய ஆண்டவரின் ஜெபங்கள், அவருடைய எல்லா செயல்கள் மற்றும் போதனைகள் தன்னலமற்றவைகளுக்கு நல்ல மாதிரிகளாக உள்ளது. ஆகையால் நாம் பிதாவிடம் எதையும் கேட்பதற்கு முன், "நான் இதை ஏன் விரும்புகிறேன்?" என்ற கேள்வியை கவனமாக பரிசீலிக்க வேண்டும். அர்ப்பணிக்கப்பட்ட ஒருவர், நோய்வாய்ப்பட்ட எவரையும் குணப்படுத்த விரும்பி தேவனிடம் வேண்டுதல் செய்தால், அது அவருடைய சொந்த மகிமைக்காகவோ, அல்லது அவருடைய சொந்த சௌகரியத்திற்காகவோ, அல்லது தனக்காக எந்த வகையிலும் இருக்கக்கூடாது. அத்தகைய வேண்டுகோள்கள் சுயநலமானவைகளும், மரண பரியந்தம் செய்திருக்கும் உடன்படிக்கைக்கு இசைவில்லாததாக இருக்கும். நம்முடைய ஆண்டவர் மற்றும் அப்போஸ்தலர்களின் போக்கை நினைவில் வைக்கவேண்டும். நம்முடைய ஆண்டவர் தெய்வீக வல்லமையைப் பயன்படுத்தி, தேவைகளின் காரணமாக திரளானோருக்கும் உணவளித்து, பிதாவை மகிமைப்படுத்தினார். ஆனால் அவர் தாமே நாற்பது நாட்கள் உணவு இல்லாமல் இருந்தபோது, அதே வல்லமையை பயன்படுத்தி, கற்களை அப்பமாக மாற்றி தம்முடைய பசியை போக்கவில்லை. இது அவருடைய பணிக்கு முரணாக இருந்தது. ஏனென்றால் அவர் தனக்குத்தானே ஊழியம் செய்ய வராமல், மற்றவர்களுக்கு ஊழியம் செய்யவந்தார். அவருடைய ஜீவனை காத்துக்கொள்ள அல்ல, மாறாக அதை மற்றவர்களின் ஊழியத்திற்காக பலி செலுத்த வந்தார். அவர் தனக்காகவோ அல்லது சீஷர்களுக்காகவோ அல்ல திரளான ஜனங்களுக்காக உணவை உருவாக்கி, எப்போது தேவைப்பட்டாலும் அதே வல்லமையை பயன்படுத்தி அவர்களுக்கு உணவளிக்கமுடியும் என்பதற்கு சான்றாக இந்த அற்புதத்தைக் குறிப்பிட்டாலும், தமது ஜனங்களுக்கு இயற்கையான வழிமுறைகளை வழங்குவதே தந்தையின் திட்டமாக தெரிகிறது. ஏனென்றால் அவர்கள் சார்பாக இதுபோன்ற ஒரு அற்புதம் தேவை என்ற பதிவு எதுவும் இல்லை. அப்பம் மற்றும் மீன் தயாரிக்கப்பட்ட பின்னர் மீதமுள்ள துண்டுகளில் ஆண்டவரும் அவருடைய சீஷர்களும் பங்கெடுத்தார்கள் என்பதில் சந்தேகமில்லை ஆனால் தங்களுடைய சொந்த பசிக்காக அல்ல, திரளான ஜனங்களின் பசிக்காக அந்த அற்புதம் நடத்தப் பட்டதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். (மத்தேயு15:32;16:5-12) தேவனை மகிமைப்படுத்தும் படியாக அவர் முடவரையும், பக்கவாதக்காரரையும் அற்புதமாக குணப்படுத்தினார், ஆனால் அவர் களைப்படைந்திருக்கும்போது, அவர் ஓய்வெடுப்பதற்கு "கிணற்றின் அருகில் அமர்ந்தார்." அதாவது இயற்கையான வழியை பயன்படுத்தினார். அவர் அடிக்கடி பிதாவிடம் ஜெபம் செய்தபோதும், அவர் எப்பொழுதும் கேட்கப்படுவதை அறிந்திருந்தும், சில சமயங்களில் கெத்செமனேவில் நடந்ததுபோல, கடும் துக்கமும் வேதனைகள் இருந்தபோதும் கூட தந்தையின் சித்தத்தைச் செய்வதற்கும், அவர் செய்ய வந்த வேலையை முடிப்பதற்கு, கிருபையும் பலமும் கேட்டு ஜெபித்தார். அவர் கேட்பதன் மூலம், அவரை பாதுகாக்க "பன்னிரெண்டு லேகியோன் தேவதூதர்கள்" அனுப்பப்படுவார்கள் என்றாலும், அவர் அதை கேட்காமல், தன்னையே "மீட்கும் பொருளாக" அனைவருக்கும் கொடுக்கவேண்டும் என்ற பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதையே அவர் விரும்பினார். அவருடைய இந்த சிறப்பியல்பை அவருடைய எதிரிகள் கூட கவனித்திருந்தார்கள். "மற்றவர்களை இரட்சித்த(நோய் போன்றவற்றிலிருந்து) இவன் தன்னை தான் இரட்சிக்க முடியவில்லை" என்று கூறினார்கள். அவர் தன்னை ஜீவ பலியாக செலுத்துவதை அவர்களால் புரிந்து பாராட்ட முடியவில்லை. ஆகவே, "தொலைந்ததை" மீட்டெடுக்கும் வேலை மற்றும் வரக்கூடிய ஆசீர்வாதத்தின் புகழ்பெற்ற வேலையிலும் பங்கு பெறுவதற்கு, கிறிஸ்துவுடன் பாடுகளிலும், பலியிலும் பங்கு பெற விரும்புவோரின் நோக்கங்களையும், நடத்தைகளையும் இன்று பெயரளவிலான பல கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்ள மாட்டார்கள் என்பதை நாம் நியாயமாக எதிர்பார்க்கலாம்.

தன்னலமற்ற முறையில் அப்போஸ்தலரின் வரங்கள் பயன்படுத்தப்பட்டது.

இதில் அப்போஸ்தலர்களையும் கவனிக்கவேண்டும். அவர்களுக்கு குணப்படுத்தும்

வரங்களும், ஜெபத்தின் சிலாக்கியமும் இருந்தது. ஆனால் அவர்கள் அதை சுயநலமாக பயன்படுத்தவில்லை. எந்த அப்போஸ்தலர்கள் அல்லது சபை வகுப்பினரின் சார்பாக குணப்படுத்தும் வரம் பயன்படுத்தப்பட்டதாக எந்த உதாரணத்தையும், எந்த பதிவுகளிலும் நாம் காண்பதில்லை. மேலும் ஒரு சந்தர்ப்பத்தில் பவுலை தவிர, அவர்களில் யாராவது அவர்களுக்காகவோ, அல்லது ஒருவருக்கொருவர் உடல் நலம், அல்லது பிற பூமிக்குரிய ஆடம்பரங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டதாக எந்தவொரு பதிவும் நம்மிடம் இல்லை. (2கொரிந்தியர் 12:7-9) அவருடைய கோரிக்கை வழங்கப்படவில்லை, ஆனால் அதற்கு பதிலாக அவருக்கு ஈடுசெய்ய அந்த உபத்திரவத்தை பொறுமையாக தாங்கி கொள்வதற்கு தேவையான கிருபை கொடுக்கப்படும் என்று அவரிடம் கூறப்பட்டது. இது அனைவரின் கவனத்திலும் தலைமையாக இருக்கவேண்டும்.

பவுல் தனக்காக செய்த வேண்டுகோள் மறுக்கப்பட்ட போதிலும், பலவீனமான கண்களினால் அவருடைய துன்பம், தெய்வீக மகிமைக்காவும், அவருடைய சொந்த நன்மைக்காகவும் செயல்படும் என்பதை தேவன் கண்டார். ஆனாலும் மற்றவர்களைக் குணப்படுத்த அவர் பெற்ற வரம் அற்புதமானது -" அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டு வந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப் புறப்பட்டன. "(அப்போஸ்தலர் 19:12 ) ஆரம்பகால சீஷர்களிடையே நோய்வாய்ப்பட்டவர்களைக் குணப்படுத்தியதாக எந்த பதிவுகளும் இல்லை என்ற உண்மையை நாம் கவனிக்க வேண்டும். அவர்கள் ஒருபோதும் நோய்வாய்ப்படவில்லை என்பதற்காக அல்ல, ஏனெனில் அவர்களின் பல நோய்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளது. "..துரோப்பீமுவை மிலேத்துவில் வியாதிப்பட்டவனாக விட்டு வந்தேன்.." (2தீமோத்தேயு4-20) என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதினார். மீண்டுமாக அவர் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது, "நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல், உன் வயிற்றிற்காகவும் உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்" (1தீமோத்தேயு5:23)என்று அவர் பரிந்துரைத்த திரட்சை ரசம் மது பானமாகவோ, அல்லது போதைப் பொருளாகவோ அல்ல, முற்றிலும் ஒரு மருந்தாக பயன்படுத்தும்படி கூறினார். இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் பவுல் தன்னிடமிருந்து கைக்குட்டைகளையோ அல்லது உருமால்களையோ அனுப்பவில்லை அல்லது அவர்கள் குணமடைய ஜெபிப்பதாக குறிப்பிடவும் இல்லை அல்லது அவர்கள் ஜெபிக்கும்படி கட்டளையிடவும் இல்லை. குணப்படுத்துவற்கான வரங்கள், நோயுற்றவர்களை மீட்பதற்கான ஜெபங்கள், பரிசுத்தவான்களுக்காக அல்ல, மாறாக அவர்கள் மூலமாக மற்றவர்களுக்கு பயன்படுத்தப்பட்டதன் நோக்கம் என்னவெனில், அப்போஸ்தலர்களிடமும், அவர்களின் சுவிசேஷம் தேவனால் அங்கீகரிப்பை பெற்றுள்ளதை அனைவரும் கவனிக்க வேண்டும் என்ற நோக்கத்தையே இந்த ஒவ்வொரு நிகழ்வுகளில் இருந்தும் வெளிப்படையாக நாம் கற்றுகொடுக்கவேண்டும்.

நாம் முன்னதாகவே அறிவித்தபடி பரிசுத்தவான்கள் தங்கள் ஆரோக்கியத்திற்காகவோ, பூமிக்குரிய ஆடம்பரத்திற்காகவோ சரியாக ஜெபிக்க முடியாததற்கான காரணங்கள் உண்டு. அவர்கள் தங்களுடைய ஆண்டவரை போலவே, தங்களை அர்ப்பணித்து, இனிவரக்கூடிய பரலோக இரக்கங்கள் மற்றும் மகிமைக்கு பதிலாக அனைத்து பூமிக்குரிய சலுகைகளையும் இன்று தேவனுக்கு தத்தம் செய்வதாக உறுதியளித்துவிட்டார்கள். பூமிக்குரிய ஆசீர்வாதங்களை விட உற்சாகமானதும், புத்துணர்வோடும், ஆறுதலோடும், ஆசீர்வதிக்கும் மிக உயர்ந்த மற்றும் விலையேற பெற்ற பரலோக வாக்குத்தத்தங்களை, ஒரு முன் ருசியாக இப்போது அனுபவிக்கிறார்கள். இந்த விஷயத்தைப் புரிந்துகொண்டு, தற்போதைய நம்பிக்கைகள் மற்றும் ஆவிக்குரிய சந்தோஷங்களுடன் வருங்காலப் பரலோக மகிமைகளிலுள்ள தனது சுதந்திரத்தை யார்தான் கைவிடுவார்கள், அல்லது, தன்னால் முடிந்தால் எதிர்கால பூமிக்குரிய திரும்பக்கொடுத்தல் மற்றும் அதனுடைய தற்போதைய முன் நுகர்தல்களுக்காக அம்மகிமையை மீண்டும் கொடுத்து யார்தான் பரிமாறிக்கொள்வார்கள்?

**F145 through F149 [2]** (**#40**கேள்வி காண்க)

புது சிருஷ்டிகளுக்கு வரக்கூடிய குறிப்பிட்ட நோய்களை தேவனால் அனுமதிக்கப்படும் போது, அவர்கள் இருதயத்தின் சரியான நோக்கத்துடன் அவரிடம் வரும்போது தேவன் அவர்களை குணப்படுத்த ஆயத்தமாக இருக்கிறார். இப்படிப்பட்ட ஆவிக்குரிய நோய்களுக்காக நாம் பரலோக கிருபாசனத்தண்டைக்கு செல்லவேண்டும். இதனால் புது சிருஷ்டியின் மெலிந்த தன்மை நீக்கப்பட்ட, ஆரோக்கியமான ஆவிக்குரிய வாழ்க்கையும் உயிர்ச்

சக்தியும் தெய்வீக தயவின் வெளிச்சத்தினால் மீண்டும் பெறப்படும். " ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்." (எபிரெயர் 4:16) என்று அப்போஸ்தலர் அறிவுரை கூறுகிறார். அனைத்து புது சிருஷ்டிகளுக்கும் இக்காரியத்தில் அனுபவங்கள் உள்ளன, இவைகளை சரியாக பயன்படுத்துபவர்கள், ஆண்டவரிலும், அவருடைய வலுவான வல்லமையிலும், மேலும் மேலும் உறுதியாக வளருவார்கள். எப்படி என்றால், அவர்களின் தடுமாற்றங்கள் மற்றும் பலவீனங்களிலும் கூட தேவனுடைய கரத்தை விசுவாசத்தோடு பிடித்து கொண்டு, உதவி வேண்டி அழைக்கக்கூடிய தேவை அவர்களுக்கு ஏற்படுகிறது. இவைகள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கான வழிமுறையாகும், இதனால் அவர்கள் சோதனைகளிலிருந்தும், சிரமங்களிலிருந்தும் விடுவிக்கப்பட முயற்சிக்காமலும் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ச்சி அடைகிறார்கள். அவர்கள் குளிர்ச்சியாகவோ அல்லது அவர்களின் ஆவிக்குரிய சிலாக்கியத்தை புறக்கணிக்கும் போதோ, அவர்களின் இருதயத்திலிருந்து, தேவன் அவருடைய பிரகாசமான முகத்தை திருப்பாவிட்டால். ஒவ்வொரு நேரத்திலும் தேவனுடைய தயவையும் உதவியையும் நாடுவது மிக அவசியம் என்று புது சிருஷ்டி காண்கிறது. மீட்பரின் ஒப்புரவாக்குதலின் வேலையின் அவசியத்தைப் பற்றிய புது சிருஷ்டிக்கு புத்துணர்வோடு நினைவூட்டப்படுகிறது. அதாவது கிறிஸ்துவின் பலி கடந்த கால பாவங்களுக்காக மட்டுமல்ல, ஆதாமின் பாவத்திற்காகவும், குமாரனுடைய புண்ணியத்தினால் பிதாவிடம் வந்த காலத்திலிருந்து இன்று வரை நமது தனிப்பட்ட பாவங்களுக்காகவும் போதுமானது என்று நமக்கு நினைவூட்டப்படுகிறது. ஆனால் கூடுதலாக, அனைவருக்கும் அவர் கொடுத்திட்ட ஒரு நீதியான பலியின் மூலம், விருப்பம் உள்ள அனைவரின் பாவங்கள், மனரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும், உடல் ரீதியாகவும் மூடப்படுகிறது. ஆனால், கூடுதலாக, எல்லாருக்குமாக அவர் கொடுத்திட்ட ஒரு பலியின் மூலம் கிடைத்திட்ட அவரது நீதியானது, விருப்பத்துடன், நாம் வேண்டுமென்றே செய்திடாத மனரீதியான, தார்மீக மற்றும் சரீர ரீதியான நம்முடைய கறைகளை மூடுகின்றது. இவ்வாறாக புது சிருஷ்டி தனது குறுகிய பாதையில் பயணிக்கும் போது, தொடர்ச்சியான நினைவூட்டலை பெறுகிறது. கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தம் மற்றும் அவருடைய அனுபவங்களும், கடந்த காலத்தில் ஒரு இரட்சகராகவும், நிகழ் காலத்தில் மீட்பராகவும், உதவியாளராகவும் புது சிருஷ்டி புரிந்து பாராட்டும் போது, அது தோல்வி அடைந்தாலும் அவர்கள் தொடர்ந்து தேவனிடமாக நெருங்கி வர செய்கிறது.

எவ்வாறாயினும், பல புது சிருஷ்டிகள் இந்த ஆவிக்குரிய நோய்களை கையாள கற்றுக் கொள்ளாமல், "நான் மீண்டும் தோல்வி அடைந்தேன். வெற்றிப் பெறுவதன் மூலம் என் நல்ல நோக்கங்களை நான் கர்த்தருக்கு நிரூபிக்கும் வரை நான் பரலோக கிருபாசனத்திற்கு நான் செல்ல முடியாது" என்று தங்களுக்கு தாங்களே சொல்லிக் கொள்ள முனைகின்றன. இவ்வாறாக, அவர்கள் முதன்மையாக எடுக்கவேண்டிய நடவடிக்கையை ஒத்திவைக்கிறார்கள். வெற்றிப் பெற தங்கள் சொந்த பலத்தினால் முயல்கிறார்கள். அவர்களின் முந்தைய பலவீனத்தால் அவர்களின் மனது துன்புறுத்தப்படுவதால், தங்கள் சொந்த மாம்சத்தோடும், எதிராளியோடும் "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை" போராடுவதற்கான சரியான மனநிலை அவர்களிடம் காணப்படுவதில்லை. இதனால் தோல்வி நிச்சயம். அதனுடன் தேவனிடம் முறையிடுவது படிப்படியாக நிறுத்தப்படும். மேலும் தெய்வீக தயவின் சூரிய வெளிச்சத்தை, மறைக்கக்கூடிய, இடைப்பட்ட மேகங்களுக்கு கொடுக்கக்கூடிய அர்ப்பணிப்பு வளர்ச்சி அடையும். இந்த மேகங்கள் தவிர்க்க முடியாதது போல படிப்படியாக மதிக்கப்படுகின்றன.

மிகவும் நேர்மாறான போக்கை உடனே பின்பற்ற வேண்டும் : சொல்லிலோ, செயலிலோ உள்ள பிழை அடையாளம் கண்டு கொள்ளப்பட்டு, மற்றொருவருக்கு ஏற்பட்ட காயம் முடிந்தவரை சரி செய்யப்பட்ட உடனே, கிருபாசனத்தை தேடவேண்டும். அதாவது எந்த சந்தேகமும் இல்லாமல் விசுவாசத்தோடே வரவேண்டும். நமக்கு கடுமையாக தீர்ப்பளிக்க விரும்பி, நமக்கு எதிரான சந்தர்ப்பத்தை தேவன் விரும்புவதாக நாம் எண்ணிவிடக்கூடாது. ஆனால், மறுபுறம், நாம் பாவிகளாக இருந்தபோதே, மீட்பை வழங்கின அவருடைய நன்மையையும், தயவையும் நினைவில் கொள்ளவேண்டும். நிச்சயமாக நாம் அவருடைய பிள்ளைகளாகி ஆவியினால் பிறந்து பின், அவரை தேடி - மாம்சத்தின் படி அல்ல, ஆவியின்படி அவருடைய பாதையில் நடப்பதற்கு நம்முடைய சிறந்த முயற்சிகள் கூட தடுமாறும் போதும், இத்தகைய சூழ்நிலைகளில், நாம் "மற்றவர்களைப் போலவே கோபத்தின் பிள்ளைகளாக" இருந்த போது அவர் நம்மீது வைத்த அன்பை விட ஏராளமாக அன்பினால் சூழப்படுவோம். ஒரு

சரியான பூமிக்குரிய தந்தை தன் பிள்ளைகளுக்கு இறங்குவது போல, தேவன் தம்மிடம் பக்தி வைராக்கியம் கொண்டவர்களுக்கு இறங்குவார் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். நம்முடைய சிறந்த பூமிக்குரிய நண்பர்களையும், அவர்களின் அனுதாபத்தையும், அன்பையும் இரக்கத்தையும் நாம் கருத்தில் கொண்டு ஒரு ஒப்புமையை வரைய வேண்டும். மேலும் தேவன் தனது சிருஷ்டிப்புகளில் மிகச் சிறந்தவர்களை விட அவருடைய பிள்ளைகள் மேல் கனிவானவரும் உண்மையுள்ளவருமாக இருப்பார் என்று நாம் கருத்தில் கொள்ளவேண்டும். அத்தகைய நம்பிக்கையையும், அத்தகைய விசுவாசத்தையும் அவர் அழைத்து, அதற்கு பரிசளிக்கிறார். முதலில் தேவனிடம் வருவதற்கு போதுமான விசுவாசம் இருந்த அனைவரும், அவர்கள் விரும்பினால், தங்கள் சோதனைகள், கஷ்டங்கள் மற்றும் குறைபாடுகளுடன் நாளுக்கு நாள் அவரிடம் வருவதற்கு போதுமான நம்பிக்கை பெற்றிருக்கவேண்டும். இடையில் வரும் மேகங்களினால் அவர்கள் உபத்திரவப்பட்டு, சமாதானத்திற்காகவும், நல்லிணக்கத்திற்காகவும் அருளப்பட்ட கிருபாசனத்திற்கு வரக்கூடிய அழைப்பை அவர்கள் நிராகரித்தால், கர்த்தர் தேர்ந்தெடுக்கும் சிறப்பு வகுப்பினரிடையே அவர்கள் தகுதியற்றவர்களாக காணப்படுவார்கள். " உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்.", "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்.", "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்." (யோவான் 4:23, எபிரெயர் 11:6, 1யோவான் 5:4)

நிச்சயமாக, வழியில் சிரமங்கள் உள்ளன, ஆனால் ஆண்டவர் தமது வார்த்தையிலும், இதே நோக்கத்திற்காக வந்த அவருடைய சரீர அங்கத்தினராக இருக்கும் சகோதரர்களின் வழியாகவும் தேவையான உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்குகின்றார். (1கொரிந்தியர் 12:18) உதாரணமாக, பாடத்தில் பிழை ஏதோ இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை பார்ப்பதற்கு உதிவியாக - நம்மை நியாயப்படுத்தும் எதையாவது நம் கையில் கொண்டு வர முடியும் வரை தேவ தயவைப் பெறுவதற்காக கிருபாசனத்தண்டைக்கு வருவதை தள்ளி வைப்பது. ஆனால் நாம் அனைவரும் அபூரணர்கள், நாம் விரும்பும் காரியங்களை நம்மால் செய்ய முடியாது, ஆகவே நம்மை உயர்த்துவதற்காகவே மீட்பர் வரவேண்டும் என்று பல நூற்றாண்டுகளாக தேவனால் கற்பிக்கப்படும் இந்த சிறந்த பாடத்தை முழுமையாக புரிந்து கொள்ளாததே இதற்கான காரணமாகும். தன்னை நியாயப்படுத்த விரும்புகிறவன் சாத்தியமற்றதை முயற்சிக்கிறான், விரைவில் அதை கற்றுக்கொண்டால் நலமாக இருக்கும். கர்த்தருடனான நம்முடைய கணக்கீடுகள் நாளுக்கு நாம் அதிகமாக இருக்கவேண்டும். மேலும் சிரமங்கள் கணிசமானதாகவோ அல்லது லேசானதாகவோ இருந்தால், அர்ப்பணிக்கப்பட்டவரின் இருதயம் மிகவும் மென்மையாகவும், கர்த்தருடனான ஐக்கியத்தில் தொடர்ச்சியான நெருக்கமாக இருப்பது பழக்கமாக இருந்தால், எந்தவொரு சிரமமும் ஏற்பட்டவுடன், அந்த நாளின் முடிவு வரையிலும் கூட காத்திருக்காமல், உடனடியாக கிருபாசனத்தண்டையில் ஓய்வு பெறுவதில் அவர் ஒரு ஆசீர்வாதத்தைக் காண்பார். கிருபாசனம் நமக்கு எப்போதும் திறந்திருக்கும் போது நிச்சயமாக இரவு வரையில் எதையும் தள்ளிவைக்கக்கூடாது. இதை புறக்கணிப்பது, தூண்டப்படும் தேவனுடைய வார்த்தைக்கு மாறாக ஒரு மனநிலையைக் காண்பிப்பதாகும்.

சில அனுபவங்களில் உள்ள சிரமம் என்னவென்றால், கிருபாசனத்திற்கு வரும் சிலர், அவர்கள் தேட வேண்டிய ஆசீர்வாதத்தை உணராதிருக்கிறார்கள் - பாவங்களுக்கான மன்னிப்பு மற்றும் பிதாவோடு ஒப்புரவாகுதல். அவர்களின் சிரமம் கீழ்காணும் மூன்றில் ஒன்றாக இருக்கலாம். (1) அவர்களுக்கு நம்பிக்கை இல்லாதிருக்கலாம், தற்போதைய நேரத்தில் தேவன் விசுவாசத்தின்படி கையாண்டு கொண்டிருப்பதால், விசுவாசம் இன்றி எதையும் பெற முடியாது. "உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது" (2) அவர்களது சிரமம்/ கடினம் யாதெனில், தாங்கள் செய்த தவறுகளை அவர்கள் திருத்திக்கொள்ளாமல், அறிக்கையிடுவதே, மற்றொருவருக்கு ஏற்படுத்தின காயத்திற்காக அவர்கள் எந்தவித ஈடும் செய்யாதிருப்பதே அல்லது கர்த்தருக்கு விரோதமாக அவர்கள் மீறினால், அதற்காக அவர்கள் மனம் வருந்தாமல், மன்னிப்பை வேண்டாமல், சமாதானத்தை தேடுகிறார்கள். (3) சிலர் சரியாக

தங்களை தேவனிடம் அர்ப்பணிக்காமல், தெய்வீக சமாதானத்தையும் மகிழ்ச்சியையும், வெளிச்சத்தையும் தேடுகிறார்கள். இதுவே நாம் பார்த்தபடி சிலருடைய பிரச்சனையாக உள்ளது. உண்மையில் அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்திற்கு வெளியே அமர்ந்தவர்களாக அதாவது அர்ப்பணிப்புக்கு வெளியே அமர்ந்தவர்களாக பொன் குத்துவிளக்கின் வெளிச்சத்தையும், ஆசரிப்புக் கூடாரத்தின் சமுகத்தப்பங்களையும் அடையாளப்படுத்தும் ஆசீர்வாதங்களை தேடுகிறார்கள். ஆகையால், இராஜரீக ஆசாரியத்துவத்தின் - வெறும் லேவியர்கள், தற்போதைய காலத்தின் சிறப்பு கிருபை அல்லது சிலாக்கியத்தை இது வரையிலும் வீணாக பெற்றிருக்கிறார்கள். தேவனுடைய வார்த்தைகளை படிப்பதன் மூலம், கடந்த காலத்திலும், நிகழ்காலத்திலும் அவர் செய்த நன்மைகளை நினைத்து, நாம் கேட்டதற்கும் நினைத்ததற்கும் "ஏராளமான" அவருடைய கிருபைகளை உணர முயற்சிப்பதே, விசுவாசமின்மைக்கு சரியான தீர்வாகும். அடுத்து உடனடியாக, முழு மனதோடு மன்னிப்பு மற்றும் முடிந்தவரை தவறுகளை செய்வதை தவிர்த்து அல்லது சேதங்களுக்கு இழப்பீடு செய்து, விசுவாசத்தின் முழு உறுதியோடு கிருபாசனத்திற்கு செல்வதே இரண்டாவது பிரச்சனைக்கான தீர்வாகும். அடுத்து, இந்த சுவிசேஷ யுகத்தின் சிறப்பு சலுகைகளையும், ஏற்பாடுகளையும் அனுபவிக்கும் அனைவரின் மீதும் தேவன் எதிர்பார்க்கும், முழுமையான அர்ப்பணிப்பே மூன்றாவது பிரச்சனைக்கான தீர்வாகும்.

அர்ப்பணிக்கப்பட்ட மற்றொரு வகுப்பார், ஆவிக்குரிய ரீதியில் நோயுற்றவர்களாக இருக்கிறார்கள், இவர்கள் பரிசீலிக்கப்பட வேண்டும். இவர்கள் வெளிப்படையாக விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டு, உண்மையோடு தங்களை அர்ப்பணித்து, மாம்சத்தை கட்டுப்படுத்துவதில் சிறிதளவு அல்லது எந்த முன்னேற்றத்தையும் காட்டுவதில்லை. உண்மையில் சில சந்தர்ப்பங்களில், தேவனுடைய நன்மைகள் மற்றும் கிருபைகளின் மேலுள்ள தங்கள் விசுவாசம், பயங்களுக்கான வேக தடைகளை அகற்றி, அவர்கள் முதலில் இருந்ததை விட அதாவது அவர்கள் கர்த்தரைப் பற்றி குறைந்த அறிவைக் கொண்டிருந்த போது இருந்தது போல மாம்சத்தின் பலவீனங்கள் மூலம் தங்களை அதிகமாக சோதனைக்கு உட்படுத்திகொள்கிறார்கள். இவர்கள் தங்களுக்கு மட்டுமல்ல, அவர்களை தொடர்பு கொள்ளும் முழு விசுவாச வீட்டாருக்கும் இந்த கடுமையான அனுபவங்களை கொண்டு செல்லுகிறார்கள். அவர்களின் வாழ்க்கை தோல்விகளும், மனந்திரும்புதல்களும் தொடர்ந்ததாக தோன்றுகிறது. சிலருடைய வாழ்க்கை நிதி முரண்டாடுகளின் வழிகளிலும், மற்றவை தார்மீக மற்றும் சமூக குற்றங்களின் வழிகளிலும் உள்ளது.

இந்த நிலைமைகளுக்கான தீர்வு என்ன ? புது சிருஷ்டிகள், வெறுமனே பூமிக்குரிய விஷயங்களில், சுய கட்டுபாடுகளையும், பலிகள் செலுத்துவதற்கு மட்டுமே உடன்படிக்கை செய்யாமலும், அவர்கள் மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின் படி நடக்கவேண்டும் என்பதை தெளிவாக அறிவிப்பதே நம்முடைய பதிலாக உள்ளது. ஆனால் இந்த உடன்படிக்கையை கடைப்பிடிக்க விரும்பும் முயற்சியில் உண்மையுள்ளவர்களாக இருப்பவர்களின் இருதயத்தை வாசிப்பவரால் ஜெயிப்பவர்களாக எண்ணப்படுவார்கள். குமாரனால் விடுவிக்கப்பட்டதால், அவர்கள் தானாக முன்வந்து அடிமையான ஊழியக்காரனாக, அவர்களின் சொற்கள், நடத்தை, எண்ணங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரை சில கட்டுப்பாடுகள், வரம்புகள், அடிமைத்தனம் ஆகியவற்றின் கீழ் தங்ளைத் தாங்களே ஈடுபடுத்திக் கொண்டு, தெய்வீக தயவின் அனைத்து ஆசீர்வாதங்களை அடைவதற்கு அவர்கள் மிகுந்த ஆர்வமாக இருக்கவேண்டும் என்பதே அர்ப்பணிக்கப்பட்ட அனைவருக்கும் முறையான நடைமுறை என்று அவர்களுக்கு அறிவுறுத்தப்பட வேண்டும். மேலும், "என் கிருபை உனக்கு போதும், பலவீனத்தில் என் பலன் பூரணமாக விளங்கும்" என்று அப்போஸ்தலரின் வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டது போல, கர்த்தர் அவர்களுக்கு வாக்களித்த உதவியை ஜெபத்தில் ஆவலுடன் விரும்ப வேண்டும். ஒவ்வொரு முறையும் அவர்கள் மீறிவிட்டதைக் கண்டறிந்தால், அவர்கள் மூலம் காயமடைந்தவர்களுக்குத் திருத்தங்களைச் செய்வது மட்டுமல்லாமல், தேவனிடம் அறிக்கையிட்டு, விசுவாசத்தின் மூலம் அவருடைய மன்னிப்பைப் பெற வேண்டும். அவர்கள் எதிர்காலத்திற்காக அதிக விடாமுயற்சியுடன் வாக்குறுதி அளிக்க வேண்டும். மேலும் அவர்களின் சமீபத்திய தோல்வியால் கண்டறியப்பட்ட பலவீனத்தின் வழிகளில் தங்கள் சொந்த சுதந்திரங்களின் வரம்புகளை அவர்கள் குறுக்கிக்கொள்ளவேண்டும்.

இவ்வாறு விழித்திருந்து, ஜெபித்து, வாழ்க்கையின் செயல்களுக்கும், சொற்களுக்கும் காவலர்களை அமைத்து, "எந்த எண்ணத்தையும்

கிறிஸ்துவுக்குள் தேவனுடைய சித்தத்திற்கு சிறைப்படுத்த வேண்டும். (2கொரிந்தியர் 10:5) நிச்சயமாக, அவர்கள் தங்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் வரையிலும், சகோதரர்கள் தங்கள் இருதயங்களின் நேர்மையை வளர்த்து கொள்ளும் வரையிலும், அந்த காலம் நீடித்திருக்கும். மேலும், அவர்கள் இயேசுவோடு இருந்தார்கள் என்பது மட்டுமல்லாமல், அவர்கள் அவரைப் பற்றி அறிந்து கொண்டார்கள் என்பதோடு, அவர்களின் பலவீனங்களை வென்றெடுப்பதில் அவருடைய உதவியை நாடினார்கள் என்பதை அனைவரும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் வாழ்க்கையில் நடந்து கொள்ளவேண்டும். அத்தகைய சகோதரர்கள் அல்லது சகோதரிகளின் விஷயங்கள், "ஒழுங்கற்ற முறையில் நடந்துகொள்வது" என்ற அப்போஸ்தலரின் வார்த்தையின் தலைப்பின் கீழ் வரும். இது ஆண்டவர் மற்றும் அப்போஸ்தலரின் முன்மாதிரி அல்ல. மற்றொரு அத்தியாயத்தில், மாம்சத்தில் பலவீனமானவர்கள் மற்றும் ஆண்டவருடைய நோக்கத்தை அவமதித்து, இழிவுபடுத்துபவர்களை சகோதரர்கள் நடத்த வேண்டிய விதத்தைப் பற்றி தேவனுடைய வழிநடத்துதலைக் காண்போம்.

**F638 [2] through F641 [1]—** சாத்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத் தாமே பிரிவினை செய்கிறதாயிருக்குமே (மத்தேயு**12:26**) (**#41**கேள்வி காண்க)

முதல் வருகையில் நம்முடைய ஆண்டவர் சாத்தானின் வல்லமையினால் பிசாசுகளை துரத்தினார் என்று பரிசேயர்களால் குற்றம் சாட்டப்பட்ட போது, சாத்தானின் பங்கில் இதுபோன்ற நடவடிக்கை சாத்தியம் என்பதை அவரது பதில் தெளிவாகக் குறிப்பிட்டது. அவ்வாறு அது நிகழ்ந்து இருந்தால், அவனுடைய வல்லமையானது படிப்படியாகக் குறைந்து கொண்டிருந்தது என்பதற்கும், அவன் இக்கட்டிற்குள்ளாக்கப்பட்டிருப்பான் என்பதற்கும், மேலும் அவன் தனது வஞ்சகர்களின் மீதான பிடியை இழப்பதை விடவும், இதனை ஒரு கடைசி முயற்சியாக நாடியிருக்கிறான் என்பதற்குமான ஒரு சான்றாக இது இருந்திருக்கும். குணப்படுத்துதல்களையும் அற்புதங்களையும் சாத்தானுக்கேற்றவைகள் என்று பொதுவாக நிராகரிக்க வேண்டாம் என்பதையும், ஆனால் அற்புதங்களால் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள விரும்பும் ஒவ்வொரு நபரின் அல்லது அமைப்பின் மீதும் ஒரு கவனமான ஆய்வு தேவை என்பதையும் நாங்கள் ஆலோசனையாக கூறுகிறோம். "நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" (1யோவான் 4:1) என்ற ஆண்டவருடைய வழியை புது சிருஷ்டிகள் நினைவில் கொள்ளவேண்டும்.

ஆகவே அவற்றை சோதித்து அதற்கேற்ப கையாளவேண்டும். இந்த விஷயங்களுக்கு பொருத்தமாக, இந்த யுகத்தின் ஆரம்பத்தில் சபையை ஸ்தாபிப்பதற்கு அற்புதங்கள் பயன்படுத்தப்பட்டன என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். ஆனால் ஏறக்குறைய பத்தொன்பது நூற்றாண்டுகளாக சபை நிறுவப்பட்டு முடிக்கப்பட்ட பின்னர், அத்தகைய எந்தவொரு பொருளையும் இப்போது வலியுறுத்த முடியாது. யுகத்தின் முடிவில் பொய்யான எல்லாவிதமான வஞ்சகத்தோடும், சாத்தான் ஒளியின் தூதனின் வேஷத்தை தரித்துக் கொள்வான். சமாதானம் மற்றும் சுகாதாரம் மற்றும் அறிவியலின் தூதன், பொய்யாக அழைக்கப்படுகின்றனர் என்று அப்போஸ்தலர் சுட்டிக்காட்டியதை நாம் மனதில் கொள்ளவேண்டும். ஆட்டுக் குட்டியானவரின் ஜீவ புத்தகத்தில் பெயர் எழுதப்படாத பூமியின் குடிகள் அனைவரையும் வஞ்சிக்கும்படியாக, சாத்தான் வெற்றிப் பெற தேவன் அவருடைய சித்தத்தில் அனுமதிப்பார் என்றும் அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். "அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள், அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும், ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்." என்று அவர் கூறுகிறார். "அந்நாளில் அநேகர் என்னை நோக்கி, கர்த்தாவே, கர்த்தாவே உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா ? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா ? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை, அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்" (மத்தேயு7:22,23)என்று சொன்ன நம்முடைய

ஆண்டவருடைய வார்த்தைகளையும் நாம் மறக்கவேண்டாம்.

நிச்சயமாக இந்நேரத்தில், அதாவது இந்த கணிப்புகள் அனைத்தும் நிறைவேறும் என்று எதிர்பார்க்கப்பட வேண்டிய யுகத்தின் முடிவில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை உணர யாருடைய புரிதலின் கண்கள் திறக்கப்பட்டுள்ளதோ, அவர்களை தேட வேண்டும். கிறிஸ்தவ மண்டலம் முழுவதும், நிலவும் கவர்ச்சியான போதனைகள் மற்றும் அற்புதமான செயல்களால் அவற்றை அடையாளம் காண முடியும்.

ஆனால் இவை அனைத்தும் சாத்தானின் மாயைத் தோற்றம் என்றும், அவர்களில் யாரும் தேவனுடையவர்கள் அல்ல என்றும் நாம் எவ்வாறு உறுதியாக நம்பலாம் ? " வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை." (ஏசாயா8:20) என்று ஈர்க்கப்பட்ட மொழியில் நாம் பதில் அளிக்கிறோம். அவர்கள் வார்த்தையிலிருந்து விலகிச் செல்வது பலவகைப்படும் - சிலர் ஒரு திசையிலும் வேறு சிலர் மற்றொரு திசையிலும். சுவிசேஷ யுகத்தின் அடிப்படையான கோட்பாட்டுக்கு அதாவது ஈடுபலி.... இணங்கவில்லை என்பதைக் குறிப்பிடுவதன் மூலம் அவர்களின் பெரும் மக்கள் விரைவாக போலித்தனமாகக் காணப்படலாம். அவர்கள் மீட்கும் பொருளை மறுப்பதாக கூறமாட்டார்கள். அனைவருக்கும் மீட்கும்பொருளாகவும், பாவங்களை மன்னிபதற்கும், பிதாவுடனான நல்லிணக்கத்திற்கும் அடிப்படையான, கல்வாரியில் முடித்த மகா பாவ நிவாரண பலியின் அவசியத்தையும் செயல்திறனையும் அவர்கள் நம்புவதாகவும் கூறலாம். எவ்வாறாயினும், கிரேக்க வார்த்தை ஆண்டி - லுட்ரானுக்கு மீட்கும் பொருள் என்றும் அதற்கு "சம நிகர் சமமான விலை" என்பதையும் நினைவில் கொள்ளும் வரை ஏமாற்றும் முயற்சி நீண்ட காலம் நீடிக்காது. இந்த தெய்வீக சத்தியத்தின் தொடுகல், பரிணாம சத்தியத்திற்கு நேர்மாறானது என்பதை விரைவில் காண்பிக்கும், ஏனென்றால் பரிணாமம் வீழ்ச்சியை மறுக்கிறது மற்றும் அதிலிருந்து மீட்பதற்கான அனைத்து தேவைகளையும் மறுக்கிறது. இது கிறிஸ்துவ விஞ்ஞானத்தை முற்றிலும் கிறிஸ்தவமற்றது என்று கண்டிக்கிறது. அதில், பாவத்தையும் மரணத்தையும் அனைத்து தீமைகளையும் மன மாயைகள் என்று கூறி மறுக்கிறது. தேவன் எப்போதுமே பாவத்தை எதிர்த்தார் என்பதையும், அதன் அடிமைத்தனத்திலிருந்து மனுஷனை விடுவிப்பதற்கான ஒரு திட்டத்தையும் "மறுசீரமைப்பின் காலத்தில்" படிப்படியாக அதன் பலனையும் பெறுவதற்கு, செயல்படுத்துகிறார் என்றும் காண்பிப்பதன் மூலமாகவும் தேவன் பாவம் மற்றும் துன்மார்க்கத்தின் ஆசிரியர் என்ற தத்துவத்தை கண்டிக்கிறது.

ஆனால் பிசாசுகளின் கோட்பாடுகளை கற்பிப்பதன் மூலம் தேவனுடைய பரிசுத்த நாமத்தை நிந்திக்கிறவர்களைப் பற்றி நாம் என்ன சொல்லலாம் -- திரளான ஜனங்களுக்கு ஒரு நித்திய வேதனை காத்திருக்கிறது என்றும், 50 பில்லியன்களில் பெரும்பான்மையினரின் ஏற்கனவே கட்டுப்பாட்டில் உள்ளார்கள் என்றும் கூறுகிறது. ஆனால் இதற்கு எதிராக, வசனங்களின்படி பூமியின் முழு குடும்பங்களும் வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதத்தை பெறுவதற்கு "தங்கள் பிரேத குழிகளில்" காத்திருக்கிறார்கள் என்று அறிவித்திருக்கிறதே! அத்தகையவர்கள் "என் நாமத்தினாலே" குணப்படுத்தப்பட்டால், தேவன் இப்போதே அவர்களின் தவறான கோட்பாடுகளை உட்படுத்துகிறார் என்று நாம் கருதலாமா ? இப்போது ஆயிர வருட ஆட்சியின் விடியல் தோன்றுகிறது, அதனுடன் இதுபோன்ற அனைத்து இருட்டான காரணங்களும் மறைந்து வருவதால், நாம் இவ்வாறு கருதவேண்டாம். "சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே"(1தெச5:4 ) என்று அப்போஸ்தலர் எழுதியபடி, நாம் இது போன்றவர்களின் மத்தியில் அவர்களை கணக்கிட முடியாது. அவர்களுடைய "அற்புதமான செயல்களால்" அவர்கள் கிறிஸ்துவ விசுவாசத்தில் சமீபமாக, வரவிருக்கும் இராஜாவாக இயேசுவை அவர்கள் அறிவிக்கிறார்கள் என்பது முக்கியமல்ல. பிசாசுகளின் இத்தகைய கோட்பாடுகளை அவர்களின் வாயிலும் இருதயத்திலும் வைத்து அவர்களின் நம்பிக்கை, குணப்படுத்துதலும் அற்புதமான செயல்களும் பிசாசின் படைப்புகள் போலவே ஆவி, கிறிஸ்தவ அறிவியல் மோர்மோனிசம் போன்றவற்றால் குணப்படுத்தப்படுகின்றன என்பதை நாம் தீர்மானிக்கவேண்டும்.

எவ்வாறாயினும், மிஷனரிகளை புறஜாதியினருக்குள் அனுப்புவதில் அவர்கள் மிகுந்த வைராக்கியத்தைக் காட்டுகிறார்கள் என்று ஒருவர் கூறுகிறார் என்று வைத்துக்கொள்வோம். இது ஒட்டுமொத்த இயக்கத்தைப் பற்றிய நமது பொதுவான பார்வையை மாற்றக்கூடாது என்று நாம் பதில்

அளிக்கிறோம். (இந்த இயக்கத்தால் "பிடிப்பட்ட, சிக்கியுள்ள சிலர்" தேவனுடைய பிள்ளைகள் என்று நாம் மகிழ்ச்சியோடு ஒப்புக்கொள்கிறோம். இவர்கள் இந்த நிழலான பாபிலோனிலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்றும் நாம் நம்புகிறோம்.) அவருடைய நாளின் வைராக்கியமான மிஷனரிகளின் முயற்சிகளைப் பற்றி நமது தேவனுடைய மதிப்பீட்டை நினைவில் கொள்வோம். " மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள், அவன் உங்கள் மார்க்கத்தானான போது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள். " (மத்தேயு 23:15) என்று நம்முடைய ஆண்டவர் பரிசேயர்களிடம் கூறினார். புறஜாதியினரின் தவறான கோட்பாடுகளை அவர்களுக்குக் கொடுப்பதினால் என்ன நன்மை கிடைக்கும் ? அப்படிப்பட்ட சிலர் மறுசீரமைப்பின் காலம் தொடங்கும் போது கற்றுக்கொள்ளக்கூடிய காரியங்கள் குறையும். "அவருடைய ஊழியக்காரர்கள் அவருக்கு ஊழியம் செய்வார்கள்" என்று முதலாம் வருகையில் நடந்தது போலவே இன்றும் அது உண்மையாக இருக்கிறது. கிறிஸ்தவமண்டலத்தின் பெயரளவிலான சபைகளிலும், குறிப்பாக அவர்களின் பிரசங்கங்களிலும் சாத்தான் பெரிய வேலைகளை செய்துக்கொண்டிருப்பது நிச்சயம். இன்றுள்ள பிரதான ஆசாரியர்கள், வேத பாரகர்கள், வேத வல்லுனர்கள், சத்தியத்தை வெறுக்கிறார்கள் - வெளிச்சத்தை வெறுத்து, முடிந்தவரை அதை எதிர்த்துப் போராடுகிறார்கள். " பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள். " (வெளிப்படுத்தல் 18:4)

சாத்தானுடைய வரம்பு மிஞ்சிய தீவிரத்தை நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகள், சுட்டிக்காட்டுகிறது. (மத்தேயு12:26) அறியாமையின் முக்காட்டை அகற்றி - ஒவ்வொரு விஷயத்திலும் பொதுவான அறிவு அதிகரிக்கப்படும் போது, பழைய மூடநம்பிக்கைகளை முன்பு போல் பயன்படுத்த இயலாது. புதிய மாயைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும், இல்லையென்றால் ஜனங்கள் சத்தியத்தைப் பெற்று அவனிடமிருந்து தப்பித்துவிடுவார்கள். ஜனங்களின் வலிகளையும் வேதனைகளையும் மறுக்க செய்ய வற்புறுத்துவதோடு, உடல் ரீதியான நோயைக் குணப்படுத்துவதன் மூலம் அவர்களின் பொய்களுக்கு வெகுமதிகளை அளிக்கும்போது, (சத்தியத்தின் காரியங்கள்) பொய்யிலிருந்து உண்மையை அறிய முடியாமல் அவர்களை அங்கேயே வைக்கும்படியாக அவன் "ஒளியின் தூதனாக" மிகவும் சுறுசுறுப்பாக வேலைச் செய்து கொண்டிருக்கிறான். சிலரை பரிணாம வளர்ச்சி, நித்திய வேதனை, துர்செய்தியின் போதகர்களாகவும், புறஜாதியினருக்கு ஒரு மிஷனரியாகவும், ஒரு விஞ்ஞானியாக மனுக்குலத்தை மீட்டெடுக்கும் ஒரு எலியாவாக தன்னை வெளிப்படுத்துகிறான். சாத்தான் வெற்றி பெறுவதாக நம்பலாம், ஆனால் அவனுடைய வீடு விரைவில் வீழ்ச்சி அடையும் என்ற நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகள் உள்ளது. மேலும் சீர்திருத்தங்களுக்கான மற்றும் நல்ல மருத்துவருக்கான இந்த தேவைகள், அவனுடைய வீழ்ச்சி நெருங்கிவிட்டதற்கு ஒரு சான்றாகும். இனி அவன் ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு... அவனை தள்ளி அடைத்து வைக்கப்படுவது வெகு தொலைவில் இல்லாததால், தேவனே உமக்கு நன்றி. வெளி20:2

**R2008 [col. 1:7] through R2009 [col. 2:1]**
(**#42**கேள்வி காண்க)

"உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன்," என்று அப்போஸ்தலர் கூறுகிறார். (யாக்கோபு5:13

இந்த ஆலோசனை தேவனுடைய ஜனங்களின் மனம் மற்றும் உடல் ரீதியான, குறிப்பாக முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு போன்ற அனைத்து சோதனைகளுக்கும், துன்பங்களுக்கும் பொருந்தும். இது போன்று துன்பப்படுபவர்கள் எந்தவிதமான கஷ்டங்களையும் தேவனிடம் நேரடியாக எடுத்துச் செல்லக்கூடும். மேலும் உதவியாக அவருடைய தயவும், இரக்கமும் கிருபையும் பெற்று கொள்ளும் உறுதியையும் பெற்றிருக்கலாம். பின்வரும் வசனங்களில் (14,15) உள்ளதைப் போல, இவர்களின் பாவங்களுக்காக மூப்பர்கள் ஜெபிக்க வேண்டிய அவசியமில்லை, அங்கு முன்றாம் வகுப்பினருடைய துன்பங்கள் குறிப்பிடப்படுகின்றது. பாவங்களுக்காக தேவனிடமிருந்து வரும் கண்டித்தலின் விளைவாக நோய்கள் ஏற்படுகின்றன ஆனால் நாம் மகிழ்ச்சியடைவதற்கு முன்பு விவரிக்கப்பட்ட வகுப்பின் வியாதிகளல்ல. "உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக, அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள்" என்று யாக்கோபு கூறுகிறார்.

"அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும், கர்த்தர் அவனை எழுப்புவார், அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள்." நாம் புரிந்து கொண்டபடி, தகுந்த தண்டனையிலிருந்து விடுவிப்பதை காட்டிலும், பாவத்தின் தண்டனையாக கொடுக்கப்பட்ட வியாதியிலிருந்து விடுவிப்பதற்கு பாவங்களுக்கான மன்னிப்பை வேண்டக்கூடியதே ஜெபமாகும். ஆனால் வியாதி, பாவத்திற்கான ஒரு தீர்ப்பாகவோ அல்லது ஒழுங்காகவோ இருந்தால், பாவத்தை அறிக்கையிட்டு, உண்மையில் மனந்திரும்பும் போது தேவன் தண்டனையை நீக்கிவிட்டு மன்றாடின மகனை துன்பத்திலிருந்து ஓரளவு அல்லது முழுமையாக குணப்படுத்துவார் என்று நாம் எதிர்பார்க்கவேண்டும். - மத்தேயு9:2-6, யோவான் 5:14, 1யோவான் 5:16 ஒப்பிட்டு பார்க்கவும். ஆனால் இந்த காரியம் பல்வேறு சிறிய வலிகள் மற்றும் எரிச்சல்களைக் குறிக்கவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இது பொதுவாக மற்றவர்களிடம் தேவையான பொறுமை மற்றும் அனுதாபத்தை வளர்ப்பதன் நல்ல நோக்கத்திற்காகவே உள்ளது. வியாதிப்பட்டவர்கள் மேல் எண்ணை பூசி, ஜெபிப்பதற்கு முதலில் சபையின் மூப்பர்களை அழைக்கும் போதே நமக்கு இது தெரியும். ஏனெனில், சிறிய பிரச்சனைகளுக்கு நாம் இப்படிப்பட்ட தீவிர நடவடிக்கைகள் எடுப்பது முற்றிலும் தகாததாக இருக்கும். மேலும் 14ம் வசனத்தில் வியாதி என்ற வார்த்தைக்கு பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தையின் பொருள், "உதவியற்ற அல்லது பலவீனமான" என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

நம்முடைய தற்போதைய நிலைப்பாட்டில் இந்த சுவிசேஷ யுகத்தில் ஆரோக்கியத்திற்காக வேண்டுமென்றே ஜெபம் செய்வது முறையற்றதாக இருக்கும் என்பதை நாம் அறிவோம். மேலும் யுகத்தின் ஆரம்ப காலம், குணப்படுத்தும் வரத்தின் மூலமே, நிகழ்த்தப்பட்டது என்று நாம் கண்டுள்ளோம். அதன் பொருளை அதாவது வேலையை நிறைவேற்றியபின், அப்போஸ்தலர்களின் மரணத்தோடு அந்த வரம் நின்றுவிட்டது. பரிசுத்தவான்களின் தரப்பில், வியாதிகள் தொடர்புடைய ஜெபங்கள், பாவ மன்னிப்புக்காக வழங்கப்பட்டவை - இதன் விளைவாக சொஸ்தமடைந்தார்கள். ஆனால் ஆயிர வருட ஆட்சி விடிந்து கொண்டிருக்கும்போதே, சுவிசேஷ யுகம் முடிந்து கொண்டே இருக்கிறது. ஆகவே நாம் பார்க்கிறபடி, குணப்படுத்துதல் மற்றும் பொதுவான மறுசீரமைப்பு ஆகியவை வெளிப்படும் என்று நாம் எதிர்ப்பார்க்க வேண்டும். வெளிச்சத்தில் பரிசோதிக்கப்படும் வேதாகம போதனைகள் மற்றும் ஆயிர வருட விடியலில் நம்முடைய தற்போதைய இடத்தைப் பற்றி நாம் விசாரிக்க வழிவகுக்கும்.

**இப்போது நாம் யாருக்காக ஜெபிக்கலாம்**

தங்கள் எஜமானனை விட பெரியவர்கள் அல்லாத பரிசுத்தவான்கள் தங்கள் சொந்த ஆரோக்கியத்திற்காக இப்போது ஜெபிக்க முடியாது என்று நாம் பதில் அளிக்கிறோம். அவர்கள் அர்ப்பணித்த மறுசீரமைப்பு சலுகைகளை, திரும்ப கேட்க முடியாது. அல்லது சோர்வுகள், வியாதிகள், கலைப்புகள் அல்லது அடிகள் அற்புதமாக அகற்றப்பட வேண்டும் என்றால், அவர்களின் பலிகள் ரத்து செய்யும்படி அவர்கள் கேட்டு கொள்ள வேண்டியதாக இருக்கும். ஆனால் அவர்கள் செய்த பாவங்களுக்கான தண்டனைகளாக அவர்களுடைய துன்பங்களை அவர்கள் உணரும்போது, தங்கள் பாவங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, மன்னிப்புக்காக தேவனிடம் ஜெபிப்பதற்கு இன்னும் சுதந்திரமாக உணர முடியும், இதன் விளைவாக அவர்கள் குணமடையக்கூடும்.

கிறிஸ்துவுக்குள்ளும் அவருடைய வார்த்தைகளுக்குள்ளும் நிலைத்திருக்கும் பரிசுத்தவான்கள், தங்களை விட மற்றவர்களுக்காக ஜெபிக்கலாம். குறிப்பாக நாம் இப்போது மறுசீரமைப்பின் காலம் தொடக்கத்தில் இருக்கிறோம் என்ற உண்மையைப் பார்க்கும்போது, அதாவது சுய - உயர்வு தங்களுடைய நோக்கம் அல்ல என்று அவர்கள் உறுதியாக நம்புகிற சந்தர்ப்பங்களில், நோயுற்றவர்களை விடுவிப்பதற்கான அவர்களின் விருப்பம் சுயநலமற்றது என்றும் விடுவிக்கப்பட்ட ஆரோக்கியம் நல்ல கிரியைகளுக்கும், தேவனுடைய மகிமைக்கும் அர்ப்பணிக்கப்படுவதற்கே என்று நம்புவதற்கு காரணமாக இருக்கிறது. இது போன்ற சந்தர்ப்பங்களிலும் கூட இராஜரீகமான ஆசாரியத்துவதிற்கு அர்ப்பணிக்கப்பட்ட சிறு மந்தை பாதிக்கப்படுதலில் இருந்து விடுவிக்கப்பட விண்ணப்பங்களை ஏறெடுப்பது பொருத்தமாகாது. ஆயினும், இதுபோன்ற சந்தர்ப்பங்களில் கூட, நம்முடைய விசுவாசம் அவசியம் உறுதியாக இருக்கவேண்டும். ஏனென்றால் சரியான நோக்கங்களுடன் கேட்கிறோம் என்ற நம்பிக்கை இருக்கவேண்டும். மேலும் தேவன் மகிழ்ச்சியாக

மறுசீரமைப்பின் ஆசீர்வாதங்களைத் தொடங்கும் சமயத்திலும், நம்முடைய ஆண்டவரைப் போல, நாமும் "தேவனே என்னுடைய சித்தத்தின் படி அல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது" என்று ஜெபிக்கவேண்டும்.

இருப்பினும், பொதுவான குணப்படுத்துதல் மற்றும் முழுமையான மறுசீரமைப்பின் வேலைகளை எதிர்பார்க்கும் நேரம் இன்னும் வரவில்லை. முழு ஆசாரியத்துவமும் பலி செலுத்தி முடித்துவிட்டபின், தங்களுடைய தலையாகிய பிரதான ஆசாரியராகிய இயேசுவோடு இணைந்து, ஆலயம் மற்றும் ஆசரிப்புக் கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு அடையாளமாக இருக்கும் பரலோக பரிபூரணத்திற்கும் மகிமைக்குள்ளும் பிரவேசிக்கும் வரையில் இவைகள் நடைப்பெறாது.

**நான் சிறுகவும், நீர் பெருகவும் வேண்டும்**

மேலோட்டமாக பார்க்கையில், யுகத்தின் ஆரம்பத்தில் பரிசுத்தவான்கள் வரங்களை பயன்படுத்தியது போல, ஆயிர வருட ஆட்சியிலும் சுகம் பெறுதல், பரிசுத்தவான்களின் ஜெபங்களுக்கான பதில்கள் வெளிப்படுதல் போன்றவைகள் எதிர்ப்பார்க்கப்படலாம். ஆனால் அவ்வாறு இல்லை, ஏனெனில், அவ்வாறு நடந்தால் பரிசுத்தவான்களை மிகப் பெரிய முக்கியத்துவத்திற்குக் கொண்டுவரும் என்று நாம் நம்புகிறோம். அதேசமயம், முதல் வருகையின் போது யோவான் ஸ்நானகன் போலவே, நாம் இங்கு குறைய வேண்டும், அதே நேரத்தில் சபையாக வெற்றி அடைந்தோர் திரைக்கு அப்பால் பெருகவேண்டும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. மகிமை அடைந்த சபையுடனான நமது தற்போதைய உறவு - மகிமையின் ஆட்சியின் நெருங்கிய தன்மையை சுட்டிக்காட்டுகிறது. மேலும் முதல் வருகையின் போது யோவான் ஸ்நானகன் பணிக்கு நெருக்காக நம்முடைய பணி உள்ளது. "பரலோக இராஜ்யம் சமீமாய் இருக்கிறது, நீங்கள் அறியாத ஒருவர் உங்கள் நடுவில் இருக்கிறார்." என்று யோவான் அறிவித்தார். "அவர் பெருகவும், நான் சிறுகவும் வேண்டும்". நம்முடைய செய்தியும் இதுவே. பூமியில் உள்ள சபை குறையும் போது, பரலோகத்தில் மகிமை அடைந்த சபை, வரக்கூடிய உபத்திரவ காலத்தில் அதனுடைய வல்லமையிலும் தாக்கத்திலும் பெருகும். அதே நேரத்தில் ஏரோது யோவானை சிறையில் அடைத்தது போலவே யோவான் வகுப்பினர் கட்டுப்பாடுகளுக்குள் உட்படுத்தப்படுவார்கள் என்பதில் சந்தேம் இல்லை.

இவ்வாறு நாம் எதிர்ப்பார்க்க வேண்டியவற்றுக்கு இணங்க, குணப்படுத்தும் பல்வேறு முறைகள் சில வெற்றிகளைச் சந்திக்கின்ற. உண்மையில் நோய்வாய்ப்பட்டவர்கள் அல்லது நண்பர்கள் எந்தவொரு சிகிச்சையும் முயற்சிக்கப்படாமல், அல்லது சிந்திக்கப்படாமல் குணப்படுத்துதல்களைக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஒரு சிறுமி நோய்வாய்ப்பட்டிருந்தாள், அவள் மரிப்பதை எதிர்பார்த்திருந்த அவளுடைய நண்பர்கள் அவளுடைய படுக்கையை சுற்றி கூடினார்கள். ஆனால் அவள் உடனே குணமடைந்து, எழுந்து எப்போதும் போல எழுந்தாள். அவள் தரக்கூடிய ஒரே விளக்கம் என்னவென்றால், அவளுக்கு ஒரு கனவு வந்ததாகவும், அதில் ஒரு மனுஷன் தன் தலையில் கை வைத்தவுடன் மின்சாரம் அவளது முதுகு தண்டுவடத்தை கடந்த செல்வது போன்ற ஒரு அதிர்ச்சியை அவள் உணர்ந்தாள் என்பதே. இந்த இளம் பெண் ஒரு கிறிஸ்தவர் என்று கூட சொல்லவில்லை.

பல்வேறு வழிகளில் ஆண்டவர் படிப்படியாக உலகை மறுசீரமைப்பிற்குத் தயார் செய்வார். இதனால் புதிய விஷயங்கள் வரும்போது தேவன் மேல் விசுவாசம் வைக்க இடமளிக்கும். பெருமையுள்ளவர்கள் மற்றும் விஞ்ஞானிகள் இயற்கையான காரணங்களை விளக்கம் அளிப்பார்கள், மற்றவர்கள் இதன் மூலம் மறுசீரமைப்பின் ஆரம்பம் காரியங்களை அங்கீகரிப்பதற்கு வழிவகுக்கும். ஜெயிக்கக்கூடியவர்கள், தவறுகளை எதிர்த்து, உண்மையைத் தூண்டக்கூடிய மாபெரும் வேலையை செய்யவேண்டியதால், அவர்கள் நோயுற்றவர்களுக்காக ஜெபிப்பதில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தால், அது ஆன்மீக வியாதிப்பட்டிருக்கும் குருடர்களையும், முடவர்களையும் குணமாக்கும் அவர்களின் உண்மையான மற்றும் முக்கியமான பணியிலிருந்து அவர்களை விலக்கிவிடும். பரிசுத்தவான்களை காட்டிலும் மற்றவர்களிடமிருந்தும் அவர்கள் வழியாகவும் இந்த மறுசீரமைப்பின் வெளிப்பாடுகளை நாம் எதிர்பார்க்க வேண்டிய சிறந்த காரணங்களை நாம் காண்கிறோம்.

அர்ப்பணித்தவர்கள் மருந்துகளை பயன்படுத்த வேண்டுமா?

இந்த கேள்வி இயல்பாகவே ஆலோசிக்கிறது, நாம் மருந்துகளை பயன்படுத்த கட்டளையிடப்படவும் இல்லை, தடை விதிக்கப்படவும் இல்லை. நம்முடைய அர்ப்பணிப்பில் கிறிஸ்துவின் மூலமாக எல்லா விசுவாசிகளும், வழங்கப்பட்ட ஆவிக்குரிய நன்மைகளுக்கு பதிலாக மாம்சத்திற்குரிய நன்மைகளை கைவிட்டோம். எனவே அனைத்து

மறுசீரமைப்பின் ஆசீர்வாதங்களும், சலுகைகளும் கேட்பதற்கு தடைசெய்யப்பட்டுள்ளது. தேவன் தமது சொந்த ஞானத்தில், சில சமயங்களில் அவருடைய "புது சிருஷ்டிகளுக்கு" விசேஷித்த இரக்கம் மற்றும் தேவைப்படும் போது பூமிக்குரிய சில நன்மைகளை அவர்கள் கேட்காமலே வழங்குகிறார். (மத்தேயு26:53,54 அப்போஸ்தலர் 12:6-11; 14:19,20; பிலிப்பியர் 2:27 காண்க)

ஆயினும், (கிறிஸ்துவின் மீட்பு மற்றும் மறுசீரமைப்பு வேலையைத் தவிர்த்து) தண்டிக்கப்பட்ட மனுஷர், உணவு மற்றும் மருந்துகளினால் தங்கள் வியாதிகளுக்கு நிவாரணத்தையும் வாழ்வாதாரத்திற்காக இயற்கையான வழிகளை தங்களால் முடிந்தவரை, அவர்களின் கண்டனம் செய்யப்பட்ட சரீரத்திற்கு மரிக்கும் வரை பயன்படுத்தக்கூடிய சிலாக்கியத்தை பெற்றிருக்கிறார்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். பரிசுத்தவான்கள் பெற்ற இந்த அனைத்து சலுகைகளையும் கிறிஸ்துவின் மூலம் பரலோக நன்மைகளுக்காக பரிமாறிக்கொண்ட பிறகும் இந்த பூமிக்குரிய நன்மைகளை தக்க வைத்துக் கொள்கிறார்கள்.

அப்படியானால், முழுமையாக அர்ப்பணிக்கப்பட்ட தங்களுடைய உடன்படிக்கை, அவிசுவாசிகளை விட பரிசுத்தவான்கள் தங்கள் நிவாரணத்திற்காக இயற்கையான வழிகளைப் பயன்படுத்துவதைத் தடுக்கிறது. நம்முடைய தீர்ப்பு சமயோஜித சூழ்நிலைக்கு ஏற்ப அவ்வாறு செய்ய நமக்கு சுதந்திரம் அளிக்கிறது. நம்முடைய கர்த்தர் மருந்துகளைப் பயன்படுத்தினார் என்று நமக்கு தெரியவில்லை என்றாலும், அவர் பரிபூரணர் என்பதையும் அவர் மற்றவர்களிடமிருந்தே வேதனைகளையும் வலிகளையும் எடுத்து கொண்டார் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இருப்பினும், தெய்வீக வல்லமையைக் கேட்காமல், இயற்கையான வழிகளைப் பயன்படுத்துவதற்கான கொள்கையை அவர் நிச்சயமாக விளக்கினார். அற்புதமான புத்துணர்வுக்காக ஜெபிப்பதற்கு பதிலாக சோர்வடையும் போது ஓய்வெடுத்தார், பசியும் தாகமும் இருக்கும்போது, பலத்திற்காகவும், உற்சாகத்திற்காகவும் ஜெபிக்காமல், புசித்து குடித்தார். ஆகவே, அப்போஸ்தலர்களிடமும் அவர்களுடைய தனிப்பட்ட விவகாரங்களின் வரலாற்றின் மிகச் சிறிய துணிக்கைகளில் இருந்தும், நமக்கு தெரிந்தவரை வேதத்தில் எங்கும் இப்படிப்பட்ட காரியங்கள் வழங்கப்படவில்லை. பவுல் தனது சோர்வுகள், வேதனைகள் மற்றும் பசி தாகங்கள், குளிர் மற்றும் நிர்வாணம் ஆகியவற்றைப் பற்றி நமக்கு கூறுகிறார். (2கொரிந்தியர் 11:27,30) மேலும், அவர் தனது விசுவாசத்தின் அடையாளங்களினால் தேவனை மகிமைப்படுத்தினார் என்று கூறுகிறார். ஆனால் அவைகளை தெய்வீக வல்லமையினால் நீக்குவதற்காக ஜெபிப்பதைப் பற்றி ஒரு வார்த்தை கூட குறிப்பிடவில்லை. அல்லது அத்தகைய ஜெபத்திற்கு தேவனுடைய இரக்கத்தின் அடையாளமான ஒரு பதிலை அவர் பதிவு செய்யவும் இல்லை. இதற்கு மாறாக, உடல் ரீதியான மறுசீரமைப்பிற்காக (அவரது பார்வையை மீட்டெடுப்பதற்காக) ஜெபம் செய்ததை அவர் குறிப்பிடுகிறார். ஆனால் இயற்கையான மனிதர்களின் பூமிக்குரிய இரக்கங்களை அல்ல, அதற்கு மேலான ஆவிக்குரிய கிருபை போதுமானது என்றும், இந்த பலவீனம் அவருக்கு சிறந்தது என்று கூறி, தேவன் அவர் கோரிக்கையை மறுத்துவிட்டார் என்று அவர் கூறுகிறார். - 2கொரிந்தியர் 12:9.

சில நேரங்களில் பவுலுக்கு தேவைப்படும் நேரங்களில் என்ன செய்தார் ? உணவளிக்கவும், ஆடை அணியவும் அவர் ஜெபித்தாரா ? இல்லை, அவர் தம்முடைய ஊழியராக இருக்கும் வரை, நன்மையான, அவசியமான எதுவும் அவருக்கு குறையாது என்று தேவன் வாக்களித்ததை அவர் நன்கு அறிந்திருந்தார். அவர் தனது பைகளில் பணத்தை உருவாக்கும்படியோ அல்லது அன்பான இருதயம் உள்ள ஒருவரை அனுப்பவோ தேவனிடம் கேட்கவில்லை. அவர் படிக்கும்போதோ அல்லது ஜெபிக்கும்போதோ, அவர் சாப்பிடுவதற்காக கூடை நிறைய உணவுகளை கேட்கும் அளவுக்கு அவர் வேலை செய்வதற்கு சோம்பேறியாகவும் இருக்கவில்லை! அது பவுலின் தன்மை அல்ல, இல்லையென்றால் அவர் தேவனுடைய சத்தியத்தை சுமப்பதற்கு "தெரிந்தெடுக்கப்பட்ட பாத்திரமாக" இருந்திருக்க முடியாது. பவுல் பசியாக இருந்தபோது, அவர் வெளியே சென்று பிச்சை எடுக்கவில்லை அல்லது தேவையானவற்றிற்காக வீட்டுக்குள்ளேயே ஜெபிக்காமல், அவர் கைகளினால் வேலை செய்தார் - கூடாரம் தயாரித்தல், வாய்ப்புகள் வழங்கப்பட்டபடி பொதுவிலும், தனிப்பட்ட முறையிலும் கற்பித்தல். அவர் ஊழியம் செய்த விசுவாசிகள் அவருக்கு கொடுக்கும் ஆதரவு மற்றும் சத்தியத்தை பரப்புதலுக்கான சிலாக்கியத்தையும் கவனக்குறைவாக இழக்கிறார்கள் என்பதையும் மேலும் இம்மைக்குரிய உழைப்புக்கு அர்ப்பணித்த அந்த மணிநேரங்களில் அவர் வழங்கியிருக்கக்கூடிய மதிப்புமிக்க அறிவுறுத்தலையும் இழந்து போகிறார்கள் என்பதை அவர் அறிந்திருந்தும், அந்த விசுவாசிகளிடம் கூட அவர் உதவி கேட்க விரும்பவில்லை.

வயிற்று பிரச்சனைக்கும், அடிக்கடி வரும் பலவீனங்களுக்கும், கொஞ்சம் திராட்சை ரசத்தை

(மதுபானமாக அல்ல, ஒரு மருந்தாக )எடுத்து கொள்ளும்படிக்கு பவுல் தீமோத்தேயுவுக்கு கொடுத்த அறிவுறுத்தலை நாம் நினைவில் கொள்கிறோம். பவுலின் சொந்த நடவடிக்கையும், நம்முடைய ஆண்டவருக்கும் இது சரியான இணக்கத்துடன் காணப்படுகிறது. ஆகவே நிச்சயமாக நம்முடைய பிதாவின் சித்தத்தைப் பொருத்தவரையில் இதுவே பாதுகாப்பான வழிகாட்டியாகும்.

**R2252**-- "நீங்கள் ஜெபிக்கவேண்டிய விதமாவது" (**#45**கேள்வி காண்க)

"பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக." நாம் பார்த்தபடி, தேவனுடைய முகவரியை நம்முடைய பிதாவாக நாம் அழைத்தாலும், முழு மனுக்குலத்திற்கும் அவர் பிதா என்று குறிக்கவில்லை. இதற்கு மாறாக, நம்முடைய மாபெரும் ஆசிரியர், சிலரை நோக்கி -"நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசினால் உண்டானவர்கள்" என்று அறிவித்ததை நினைவில் கொள்கிறோம். மேலும், நாம் அனைவரும் "கோபாக்கினையின் பிள்ளைகள்" என்று அப்போஸ்தலர் அறிவுறுத்துகிறார். நாம் இந்த உலகின் மேலுள்ள தண்டனைக்கு தப்பித்திருக்கிறோம். மேலும் இருளின் இராஜ்யத்திலிருந்து தேவனுடைய நேசிக்கப்பட்ட குமாரர்களாக வெளியேறியுள்ளோம். அதாவது கோபாக்கினையின் பிள்ளைகளிடமிருந்து தேவனுடைய குடும்பமாக வந்திருக்கிறோம். ஆகவே, இப்போது தேவனுடைய பிள்ளைகளாக, இயேசுவின் மேல் நம்பிக்கை கொண்ட அனைவரும், "பரலோகத்தில் இருக்கும் எங்கள் பிதாவே.." என்று ஜெபிக்கலாம். விண்ணப்பத்தின் இந்த பகுதி, தேவனுடைய மகத்துவத்தையும் அவருக்குரிய பயபக்தியையும், நம்முடைய பணிவையும் சிறிய தன்மையையும் முகவரியாக கொண்டுள்ளது. வழிபடுபவர் ஒரு லேசான அல்லது பயபக்தியற்றவர்களாக அல்ல, தேவனை பயபக்தியோடு தொழுது கொள்வார் என்பதை இது குறிக்கிறது. உண்மையாக வழிபடுபவர்கள் அவருடைய நாமத்தை கூட பரிசுத்தப்படுத்துவார்கள்.

"உம்முடைய இராஜ்யம் வருக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படுவதாக." இந்த விண்ணப்பம் ஒரு கோரிக்கையின் தன்மையிலோ, பொறுமையின் வெளிப்பாடாகவோ அல்லை. மாறாக இந்த பூமியில் தேவன் குறித்த காலத்தில் பரலோக இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்ற தெய்வீக வாக்குத்தத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களின் ஒப்புதலாகும். வழிபடுபவர் தேவனுடைய வாக்குத்தத்தை நம்புவதோடு, அவர் அதற்கு ஏற்றபடி வாழ்ந்து, விரும்பக் கூடிய தேவனுடைய இராஜ்யத்தை வாஞ்சிப்பதை ஒப்புக்கொள்கிறார். அவர் பாவத்தோடு இசைந்து இல்லை என்பதையும், அதோடு இந்த உலகின் இராஜ்யங்கள் மற்றும் தற்போதைய ஒழுங்கு மற்றும் அதன் அபூரணமான சமூகம், நிதி, அரசியல் மற்றும் பெயர் சபைகளின் ஏற்பாடுகள் இவ்வனைத்திலும் எந்த விதமான இணக்கம் இல்லாதவர் என்று குறிப்பிடுகிறது. தேவனை தொழுது கொள்பவர் மேலும் பாவம் சாத்தியமில்லாத நிலைக்காக ஏங்குகிறார் என்பதற்காக ஒப்புதலாகவும் இருக்கிறது. அதில் தேவனுடைய சித்தமே இந்த பூமியின் மேலும், பரலோகத்திலும் மேலோங்கும். அவர் பாவத்துடன் இணக்கமற்றவராகவும், நீதியுடனும், உண்மையுடனும் நன்மையுடனும் இணக்கமாக இருக்கிறார் என்பதை இது குறிக்கிறது. தேவனுடைய சித்தம் பூமியில் செய்யப்படவில்லை, அவருடைய இராஜ்யம் இதுவரை பூமிக்கு வரவில்லை. ஆயினும், அவருடைய இராஜ்யம் வரும்போது, நியமிக்கப்பட்ட இராஜாவாக கிறிஸ்து தம்முடைய மாபெரும் வல்லமையையும், ஆட்சியையும் பொறுப்பெடுக்கும் போது, வசனங்களில் காண்பிக்கப்பட்டபடி அதன் விளைவுகள் விரைவாக இருக்கும். சாத்தான் கட்டப்பட்டு, தீமை குறைக்கப்படும், அப்போது அதற்கு எதிராக அறிவும், சமாதானமும் ஆசீர்வாதமும் இந்த பூமி முழுவதையும் நிரப்பும். (வெளிப்படுத்தல் 20:1-3; 21:1-5; 22:1-6) என்ன செய்யவேண்டும் என்றும், இராஜ்யம் எவ்வாறு, எப்போது ஸ்தாபிக்கப்படவேண்டும் என்றும், ஆண்டவரிடம் சொல்வதற்கான முயற்சிகள் தேவை இல்லை. எல்லாவற்றையும் உருவாக்கியவர் ஆளுவதற்கும் நிர்வகிக்கவும், வழிநடத்தவும், சகலத்தை மேற்கொள்ளவும் முற்றிலும் திறமையானவர் என்றும் மேலும் அவர் தன் சித்தபடியான ஆலோசனைக்கு ஏற்ப எல்லாவற்றையும் செய்கிறார் என்றும் எல்லாவற்றிலும் சரியாக அறிவுத்தப்பட்ட வழிபாடுசெய்கிறவர், (தேவனை உண்மையோடு தொழுது கொள்பவர்)அறிந்திருக்கவேண்டும். தேவனை வழிபடுபவர், தெய்வீக வார்த்தையில் இருக்கும் அறிவுறுத்தல்களை பெறுவார், மேலும் தெய்வீக நோக்கங்களை பொருத்தவரையில் தொடர்ந்து அவருடைய அறிவுறுத்தல்களை பெறுவார். இந்த விண்ணப்பத்தில் அவர் தெய்வீக ஏற்பாட்டிற்கு தனது முழு ஒப்புதலையும் வெளிப்படுத்தி அதில் மகிழ்ச்சியடைகிறார்.

"எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். " இங்கு மத்தேயுவின்

வார்த்தைகள் லூக்காவின் வார்த்தைகளிலிருந்து சற்று வேறுபடுகின்றன. லூக்காவின் கூற்று சொல்லர்த்தமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அன்றன்றும் எங்களுக்குத் தாரும்." என்று லூக்கா கூறுகிறார். "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என்று மத்தேயு கூறுகிறார். இருப்பினும், நடைமுறையில் சிந்தனை ஒன்றே. எனினும், இது மிகுதியாகவும், பல நாட்களுக்காக ஏராளமான பொருட்களுக்காக தேவனிடம் வேண்டி கொள்வது அல்ல. அல்லது ஆடம்பரங்களுக்கான வேண்டுகோளும் அல்ல. மாறாக தினமும் எங்களுக்கு தேவையானவற்றை எங்களுக்கு தாரும் என்று வேண்டுவதாகும். மனநிறைவே இந்த விண்ணப்பத்தின் ஆவி. இந்த முறையில், இருதயத்திலிருந்து தேவனிடம் ஜெபிப்பவர், நிச்சயமாக மிகவும் நன்றியுணர்வையும், மனநிறைவையும் உடையவராக இருப்பார். இந்த விண்ணப்பமானது உத்தரவாதமளிக்கும் பூமிக்குரிய விஷயங்களைக் குறித்தான தெய்வீக வாக்குத்தத்ததைப் போலவே விஸ்தாரமாக உள்ளது. உங்களுடைய அப்பமும் உங்களுடைய தண்ணீரும் நிச்சயமாக கொடுக்கப்படும், இதில் சொகுசான கோரிக்கைகளுக்கு இடமில்லை. மேலும், இந்த ஒரு கோரிக்கை மட்டுமே பூமிக்குரிய காரியங்களுக்கும் நலன்களுக்கும் கேட்கப்படுகிறது. இது ஆவிக்குரிய விஷயங்களுடனும் தொடர்புடைது என்றும் புரிந்துகொள்ளப் படலாம். உண்மையில், இரக்கம், அறிவு மற்றும் ஆவிக்குரிய காரியங்களில் அதற்கு ஏற்றவாறு வளர்ச்சி அடைவதில், அனைத்து தேவனுடைய பிள்ளைகளுக்கும் இது பொருந்தும் என்று நாம் நம்புகிறோம். ஆவிக்குரிய சிந்தனை உள்ளவர்கள் ஆவிக்குரிய உணவையும், ஆவிக்குரிய தேவைகளையும், நாளுக்கு நாள் கேட்டுக்கொண்டே இருப்பார்கள். மேலும் காட்டு புஷ்பங்களை உடுத்துவித்து, ஆகாயத்து பறவைகளை போஷிக்கும் பரலோக தந்தை, தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுபவர்களுக்கு தற்காலிகமான நலன்களையும் கொடுப்பார் என்பதை அதிகதிகமாக உணர்ந்து கொள்வார்கள்.

"எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்." இது நடைமுறைப்படுத்தும் நீதி. என்ன ஒரு சிந்தனை! கோபம், பொறாமை, வெறுப்பு, சச்சரவு, மன்னிக்கா தன்மை, நன்றியறியாத, மனக்கசப்புள்ள, அவதூறு செய்து, புறம் கூறி ஆகிய குணங்கள் நிரம்பிய தீய ஆவியின் கட்டுபாட்டில் இருப்பவர் "இந்த விதத்தில்" எப்படி ஜெபிக்க முடியும்? மாம்சத்தின் இந்த அனைத்து கிரியைகளை, பிசாசு தீய நிலைகளிலிருந்து தொடர்கிறது. இவைகளில் ஒன்றும் உண்மையான அன்பினால் தூண்டப்பட்டது அல்ல. கிறிஸ்தவ கொள்கையின் சாராம்சம் - அன்பு, அனுதாபம், நாமும் தவறு செய்கிறோம் என்பதை உணர்ந்தவர்களாக, அவைகளை தேவன் கிருபையாக கிறிஸ்துவினால் நமக்கு மன்னித்தது போல மற்றவர்களின் தவறுகளை மன்னிப்பதாகும். " ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும். " (மத்தேயு7:2) என்று கூறி, பரலோகத்தில் இருக்கும் நம்முடைய பிதாவின் பிள்ளைகளாக இருப்பதற்கு முன் கொடுக்கக்கூடிய ஆவியின் முக்கியத்துவத்தைக் குறித்து நம்முடைய ஆண்டவர் வலியுறுத்துகிறார். மேலும் இந்த விஷயத்தை விளக்கும் ஒரு உவமையை கொடுத்தார் என்பதையும் நாம் நினைவில் வைத்திருக்கிறோம். அதில், பத்தாயிரம் தாலந்துகள் கடன்பட்ட ஒரு வேலைக்காரனை கட்டாயப்படுத்தாமல், இலவசமாக மன்னித்தார். ஆனால் மன்னிப்பை பெற்றவர், தன்னிடம் வெறும் சில நாணயங்களை கடன் வாங்கினவரை கண்டவுடன், அவரை இரக்கமின்றி நடத்தி, மிகவும் வித்தியாசமான ஆவியை வெளிப்படுத்தினார். ஆகையால் இரக்கமும், தாராள மனப்பான்மையும் அவரிடமிருந்திருந்து தேவன் திரும்ப எடுத்துவிட்டார். - மத்தேயு18:23-35காண்க.

பரலோக கிருபாசனத்திற்கு செல்லும் ஒவ்வொரு கிறிஸ்தவர்களும், கிறிஸ்துவின் நிமித்தம் தேவன் அவரை மன்னிக்க வேண்டும் என்று அவர் விரும்புவது போல, அவருக்கு கடன்பட்டுள்ளவர்களை அவர் மன்னித்தாரா இல்லை என்று தினமும் தனது சொந்த இருதயத்தை விசாரிக்கட்டும். இது நிதிக் கடனை மன்னிப்பதைப் பற்றியோ அல்லது நம்முடைய கணக்கு புத்தகங்களை அழிப்பதையோ அர்த்தப்படுத்துவதில்லை. கடனாளி கடனை திருப்பி கொடுக்க விரும்பினாலும், அதை கொடுக்க இயலாதபோது, நாம் ஆண்டவரிடம் தயவை எதிர்பார்ப்பது போல, நாமும் தயவையும், பொறுமையையும் காண்பிக்கவேண்டும். இது தார்மீக கடமைகள், மீறல்கள் மற்றும் கடன்படுதலின் சிறப்பு பயன்பாடாகும். நமக்கு எதிராக மற்றவர்களின் அத்துமீறல்களுக்கு நாம் கவனம் செலுத்தக்கூடாது என்பதையும் இது குறிக்கவில்லை - குற்றங்களை நாம் அங்கீகரிக்கக்கூடாது. உண்மையில், குற்றம் செய்வதற்கு நாம் விரைவாக இருக்கக்கூடாது.

கோபத்திற்கு பொறுமையாக இருக்கவேண்டும், குற்றத்தின் நோக்கம் மிகவும் வெளிப்படையாக இல்லாவிட்டால் நாம் ஒருபோதும் குற்றம் சாட்டக்கூடாது. பின்னர், இந்த விஷயத்தில் தெய்வீக வடிவமைப்பின்படி, நம்மிடம் மன்னிப்பு கேட்கப்படும் வரை நாம் முழுமையான அர்த்தத்தில் மன்னிக்க முடியாது என்றாலும், நாம் எப்போதும் மன்னிக்கும் மனப்பான்மையில் இருக்கவேண்டும். அதாவது நாம் எந்தவிதமான பழிவாங்கும் அல்லது தீங்கிழைக்கும் உணர்வைக் கொண்டிருக்கக்கூடாது. அன்பு, மற்றும் அனுதாபத்தைத் தவிர வேறு எந்த உணர்வுகளும் நமக்கு இருக்கக்கூடாது. நமக்குச் செய்யப்பட்ட தவறுகளை விரைவாக மன்னிக்கும் விருப்பம் உள்ளவர்களாக இருக்கவேண்டும். முடிந்தவரை தவறு செய்தவர்களை நல்வழிப்படுத்துவதற்கு சீக்கிரமாக மென்மையும், எளிதான வழியை அமைத்து கொடுக்க அக்கறை உள்ளவர்களாக இருக்க வேண்டும். நம்முடைய பங்கில் ஏதேனும் தவறான செயல்கள் அல்லது தவறான நடைகளை சரிசெய்வதில் நாம் விழிப்புடன் இருக்கவேண்டும். மேலும்

"எங்களை சோதனையினின்று இரட்சித்து, தீமையிலிருந்து எங்களை விடுவியும்." இதில் உள்ள சிந்தனை சற்று தெளிவற்றதாக உள்ளது. "தேவன் எந்த மனிதனையும் சோதிப்பதில்லை என்பதை நாம் அறிந்திருக்கிறோம். வாக்கியத்தின் நேரடியான மொழிபெயர்ப்பை நாம் நம்பும்படியாகவும், நம்முடைய ஆண்டவரின் முழு சிந்தனையைப் பற்றிய நமது கருத்தை இங்கே தெளிவுபடுத்துவதற்கும் இந்த வாக்கியத்தை பெரிதாக்கி, சில அறிவுறுத்தும் சொற்களை அடைப்புகளில் சேர்த்து, அவரைக் கேட்டவர்கள் புரிந்துகொண்டது போல, இந்த பகுதியை இவ்வாறாக வாசிக்கப்படுகிறது. "எங்களை சோதனையில் விட வேண்டாமல் (வெறுமனே), ஆனால் தீயவரிடமிருந்து எங்களை விடுவியும்." சோதனைகள் அல்லது சோதனை நிலைகளில் நம்மை கொண்டவரும் அல்லது அனுமதிப்பது தெய்வீக ஏற்பாட்டின் ஒரு பகுதியாகும். இந்த விஷயத்தில் நாம் தெய்வீக ஞானத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்யக்கூடாது. மாறாக சோதனைகளை ஏற்றுக்கொள்வது, நம்முடைய வளர்ச்சிக்கு அவசியம் என்பதை உணர வேண்டும். ஆகவே, சோதனைகளுக்குள் உட்படுத்தவேண்டாம் என்று ஜெபிப்பதற்கு பதிலாக, தேவனுடைய முன்னேற்பாட்டின் படி சோதனைக்குரிய இடங்களுக்கு நம்மை அவர் கொண்டுவரும்போது, அந்நேரம் அவரும் நம்மோடு இருந்து, அவருடைய கிருபையும், இரக்கமும் நமக்கு போதுமானதாக இருப்பதற்கும், நாம் தாங்கக்கூடிய அளவுக்கு மேல் சோதிக்கப்படாதபடிக்கு, சோதனையிலிருந்து தப்பித்துகொள்ளும் போக்கையும் அவர் உண்டுபண்ணி, சாத்தானிடமிருந்து நம்மை இரட்சிக்கவேண்டும் என்று நாம் ஜெபிக்கவேண்டும்.

"இராஜ்யமும், வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே." இந்த சொற்கள், பொதுவான பதிப்பிலும் சில கிரேக்க கையெழுத்துப் பிரதிகளிலும் காணப்பட்டாலும், பழமையான கிரேக்க எம். எஸ்.எஸ், சைனிடிக் மற்றும் வத்திக்கன் ஆகியவற்றில் காணப்படவில்லை. ஆகவே இவை நம்முடைய தேவனுடைய வார்த்தைகளோடு சேர்க்கப்பட்ட மனித சொற்கள் என்று தோன்றுகிறது. இந்த பூமியைப் பொருத்தவரை, இந்த வார்த்தைகள் சுவிசேஷ யுகத்தில் உண்மையானதல்ல. பூமியின் ஆதிக்கம் மற்றும் அதன் வல்லமை மற்றும் அதன் மகிமை தேவனுடையது அல்ல. மாறாக, சாத்தானே இந்த உலகத்திற்கு அதிபதியாக இருந்து, கீழ்ப்படியாமையின் பிள்ளைகளின் இருதயங்களில் செயல் புரிந்து, அவர்கள் சுவிசேஷத்தை விசுவாசிக்காதபடிக்கு அவர்களின் மனதை குருடாக்கினான். இந்த உலக இராஜ்யங்களும், வல்லமைகளும் சாத்தானுடையதாக இருந்தது. தேவனுடைய பிள்ளைகள் தேவனுடைய இராஜ்யம் வருவதற்காக காத்திருக்கிறார்கள். பத்தாம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இந்த உலக இராஜ்யங்களை தூக்கி எறிந்து, நீதியின் இராஜாவை நிலைநிறுத்தி, சாத்தானை கட்டி, மாம்சத்தின் கிரியைகளையும் சாத்தானையும் அழித்து போடும்.

**E287 through E290 [¶3]—**(**#49**கேள்வி காண்க)

"அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்." ரோமர் 8:26,27

தேவனுடைய ஜனங்கள் பரலோக தகப்பனின் அன்பையும் அக்கறையையும் பற்றிய புரிதலை உணர்த்தும் நோக்கில் இது வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும், பலரால் தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. அவர்கள் பரிசுத்த ஆவி தந்தையிடம் கூக்கூரலிடுவதாக சொல்கிறார்கள். மேலும் சிலர் இந்த கூக்குரல்களுக்கு கேட்கக்கூடிய சொற்களைக் கொடுக்க தாங்களே முயற்சிக்கின்றனர். மேலும் சிலர் இப்போது அவர்களால் காண முடியவில்லை

என்றாலும், இந்த விஷயத்தில் எப்படியாவது பரிசுத்த ஆவிக்கு உதவும்படியாக, அது சொல்ல முடியாத கூக்குரல்களுக்கு ஈடு செய்யும்படியாக, அந்த அளவுக்கு குரல் கொடுக்கிறார்கள். பரிசுத்த ஆவி ஒரு நபராக இருந்தால், அது உண்மையிலேயே விசித்திரமாக இருக்கும். மேலும் பரிசுத்த ஆவி, பிதாவுடனும் குமாரனுடனும் "அதிகாரத்தில் சமமானவர்" என்று பெயர் சபை கற்பிக்கப்பட்டு வலியுறுத்தினால், தேவனுடைய ஜனங்களின் சார்பாக சொல்ல முடியாத வார்த்தைகளினால், பிதாவிடமும், குமாரனிடமும் உரையாற்றுவது அவசியமில்லை என்பதை கண்டுகொள்ள வேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசு நாம் அவரிடம் நேரடியாக வரலாம் என்றும் மேலும் "பிதா தாமே உங்களை நேசிக்கிறார்" என்று உறுதியளித்தவராக, நாம் பிதாவிடமும் நேரடியாக செல்ல முடியும் என்று கூறினார். ஆயினும், நாம் பிதாவினாலும், குமாரனாலும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்காக பரிந்து பேசக்கூடியவரும், வாக்குக்கடாங்காத பெரும் மூச்சோடு நமக்காக வேண்டுதல் செய்யும், மத்தியஸ்தராகிய பரிசுத்த ஆவியின் மூலமாக நாம் பிதாவினிடமும் குமாரனிடமும் செல்ல வேண்டும் என்று சிலர் இந்த வேத வசனத்தின்படி பரிசீலிக்கிறார்கள். பரிசுத்த ஆவியைப் பற்றியும் அதன் அலுவலைப் பற்றியும் இருக்கும் குழப்பான சிந்தனைக்கு இது இசைவாக காணப்படுகிறது.

வாக்குக்கடாங்காத பெரும் மூச்சு உச்சரிக்க முடியாவிட்டால் அவை முனகலாக இருக்க முடியாது அதாவது உச்சரிக்கப்படாத எதுவும் முனகல் ஆகாது என்பதை நாம் கருத்தில் கொள்ளும்போது, இந்த விளக்கத்தின் பிழை மேலும் கவனிக்கப்படத்தக்கதாக உள்ளது. பரிசுத்த ஆவி, சர்வல்லமையுள்ள யேகோவா தேவனின் செல்வாக்கு அல்லது வல்லமை, ஞானமாக தன்னை வெளிப்படுத்த முடியாது என்று அர்த்தம் என்றால், இந்த வாக்கியம் விசித்தரமாகவும், முரண்பாடாகவும் தோன்றும். கடந்த காலங்களில் தேவனுடைய சிந்தை, சித்தம், ஆவி அனைத்தும் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் மற்றும் செயல்களின் மூலம் ஏராளமாக வெளிப்பட்டதை நாம் அறிவோம். இன்று அவருடைய வல்லமையோ, திறனோ குறைந்து விட்டதாக நாம் கருத முடியாது. "ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்." என்ற இந்த வசனத்தின் பொருள் என்ன?

தேவனுடைய ஆவி வேண்டுவதாக நாம் நினைப்பதில் தவறு உள்ளது. மாறாக, நமக்காக பரிந்து பேசும் ஆவி, நம்முடைய சொந்த ஆவி, பரிசுத்தவான்களின் ஆவி, இதுவே தேவனிடம் வேண்டுதல் செய்கிறது. பெரும்பாலும் தன்னை சரியாக வெளிப்படுத்தத் தவறிவிடுகிறது. இந்த வேத பகுதியை இதோடு தொடர்புடையதாக பார்வையிட்டால், இதன் விளக்கம் வெளிப்படும். பாவச் சுமை நிறைந்த மனுக்குலம் அதன் பிடிகளில் சிக்கி தவிப்பதாக அப்போஸ்தலர் எழுதுகிறார். மேலும் தேவனுடைய புத்திரர் தங்களுடைய இரட்சிப்பின் அதிபதியோடே மகிமைப்படுத்தப்படும் போது, சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்படும் என்று அவர் உறுதியளிக்கிறார். (வசனங்கள் 19-20) பின்னர் அவர் உலகின் தவிப்பிலிருந்து சபை தவித்துக்கொண்டிருக்கும் தற்போதைய நிலைக்கு செல்கிறார். "அதுவுமல்லாமல், ஆவியின் முதற் பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்"(23)

ஒரு காலத்தில் உலகத்திற்குரியதாக இருந்தது சிந்தை, இப்போது சபையாக புதுப்பிக்கப்பட்டு அல்லது மறுரூபமாக்கப்பட்டு, பரிசுத்தமானதும் ஆவிக்குரியதாகவும் இருக்கிறது. ஆனால் நம்முடைய சரீரங்கள் மாம்சத்தில், ஆதாமின் அபூரணத்தில் உள்ளது. ஆகவே புது சிருஷ்டிகளாகிய நமக்கு மாம்சம் சுமையாக உள்ளது. எனவே முதலாம் உயிர்த்தெழுதலில் வாக்களிக்கப்பட்ட கிறிஸ்துவின் சாயலுக்கு விடுவிக்கப்பட நாம் ஏங்கி தவிக்கிறோம். விசுவாசத்தினால், பூமிக்குரிய சரீரம் மரித்துவிட்டதாக நாம் எண்ணிக்கொண்டு, பூரணமான புது சிருஷ்டிகள் என்று நம்மை குறித்து நாம் நினைத்துக் கொள்ளலாம். அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று அப்போஸ்தலர் விளக்குகிறார்.(24) பின்னர், நாம் எவ்வாறு நம்மை எண்ணலாம் என்பதைக் காட்டிய அவர், தெய்வீக நிலைப்பாட்டில் இருந்து நாம் நம்மை "புதிய" மற்றும் "பரிசுத்தம்" மற்றும் "ஆவிக்குரிய" ஜீவிகளாக எண்ணப்படுகிறோம் என்பதை அவர் நமக்கு விளக்கம் அளிக்கிறார். தேவன் இந்த நிலைப்பாட்டில் இருந்து நம்மைப் பார்க்கும்போது, மாம்சத்தையும் அதன் பலவீனங்களையும் குறைபாடுகளையும் காணமாட்டார் என்பதைக் காட்டுகிறார். ஆனால் ஆவி, சிந்தை, நோக்கங்கள், சித்தம், "புது சிருஷ்டி" அனைத்தும் தேவனுடைய ஊழியத்திற்கு அர்ப்பணிக்கப்படுகிறது. நம்முடைய பரிசுத்த ஆவி (புது சிந்தை) எப்போது ஆயத்தமாக இருக்கும் என்றும், நம்முடைய மாம்சம் எவ்வளவு பலவீனமாக இருக்கும் என்பதையும் தேவன்

நன்கு அறிவார். அவர் நம்மை மாம்சத்தின் படி அல்ல, ஆவியின் படியே நம்மை நியாயந்தீர்க்கிறார்.

நம்முடைய ஜெநிப்பிக்கப்படுதல், புது சித்தத்தை ஏற்றுக்கொள்ளுதல், முழுமையாக தேவனிடத்தில் அர்ப்பணிக்கப்படுதல் ஆகியவை நம்மை தேவனோடு ஒரு புது உறவுக்குள் நம்மை கொண்டு வந்தது. இந்த புதிய நம்பிக்கைகளுக்குள் நாம் சந்தோஷப்படுகிறோம். ஆகவே," அந்தப்படியே ஆவியானவரும் (நம்முடைய புதிய, பரிசுத்த சிந்தை) நமது பலவீனங்களில் (சரீர)நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், (நாம் விரும்பியபடி எப்போதும் செய்ய முடியாதவர்களாக இருப்பதால்)ஆவியானவர்தாமே (நம்முடைய பரிசுத்த சிந்தை)வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு( நமக்காக - சேர்க்கப்பட்ட வார்த்தை, பழைய பிரதிகளில் காணப்படவில்லை. )வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்"

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், தேவன் தம்முடைய ஜனங்களின் மாம்சத்தின் அபூரணத்தை பொருள் படுத்தாமல், அவர்களுடைய இருதயத்தின் விருப்பங்களை, ஜெபத்தின் வழியாகவும், ஊழியத்தின் வழியாகவும் ஏற்றுக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறார். இப்படிப்பட்டவர்களின் இருதயத்தின் விருப்பத்தையும் அவர் ஏற்றுக்கொள்கிறார். தேவனுடைய பிள்ளைகள் அடிக்கடி தகாதவிதமாக அவரிடம் விண்ணப்பித்திருந்தும், நம்முடைய அறியாமை மற்றும் பலவீனத்திலும், நம்முடைய பரலோகத் தகப்பன் நம்முடைய வார்த்தைகளுக்கு பதிலாக நம் இருதயங்களின் நோக்கங்களை ஏற்றுக்கொள்வது நமக்கு எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம்! பரிசுத்த ஆவியினாலும் நெருப்பினாலும் அபிஷேகம் பெறும்படி தேவனுடைய ஜனங்கள் ஜெபிப்பதைக் கேட்கும் போதெல்லாம் இதைப் பற்றி நாம் நினைக்கிறோம். அவர் மேற்க்கோள் காட்டிய வேத பகுதியை சரியாக புரிந்து கொள்ளாமல், நல்ல மனதோடும் ஆசீர்வாதத்தைப் பெறும் விருப்பத்துடனும் ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது. உண்மையில் அவர் ஒரு ஆசீர்வாதத்தை தொடர்ந்து ஒரு சாபத்தை கேட்கிறார். கிறிஸ்து பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று யோவான் ஸ்நானகனால் முன் உரைக்கப்பட்டது. இந்த பகுதியான ஆசீர்வாதம், பெந்தெகொஸ்தே நாளில் காத்திருந்த சபையின் மீதும், "மீதமுள்ள "உண்மையான இஸ்ரயேலின் மீதும் வந்தது. ஆனால் அதன் பிந்தின காரியம் அதாவது அக்கினியின் ஞானஸ்நானம், அழிவு, உபத்திரவம் ஆகியவை மேசியாவை புறக்கணித்த யூத தேசத்தின் மேல் வந்தது. இது கி.பி 70 ஆம் ஆண்டில் அவர்களை முற்றிலும் அழித்தது. ஆனால் மிகவும் அன்பான தேவன் தம் ஜனங்களின் ஜெபங்களுக்கு அவர்கள் கேட்பதற்கு ஏற்ப பதில் அளிக்காமல், அவர்களின் மனதின் நோக்கங்களின்படி அவர்களுக்கு ஆசீர்வாதங்களை மட்டுமே அளிக்கிறார்.

சிலர் தவறுகளில் அகப்பட்டு, விழுந்து போன மனித சுபாவத்தினாலும், பலவீனத்தினாலும் சாத்தானால் அவர்கள் சிக்கியிருக்கலாம். அவர்கள் மிகவும் சோகமாக கிருபாசனத்திற்கு செல்லும் போது, ஜெபிப்பதற்கு வார்த்தைகள் இல்லாமல், அவர்களின் பாரத்தை குறித்து ஆவியில், அதாவது சிந்தையில் தவிக்கிறார்கள். ஆனால் அவர்கள் சரியான மொழியில் அவர்களின் விண்ணப்பங்கள் கேட்கப்படுவதற்கு சரியாக வகுக்கப்படவேண்டும் என்று தேவன் வற்புறுத்தவில்லை, அதற்கு பதிலாக அவர் அவர்களுடைய சொல்ல முடியாத இருதயத்தின் தவிப்புக்கும் விருப்பத்திற்கும் தேவையான மன்னிப்பையும், அவருடைய ஆசீர்வாதத்தையும் ஆறுதலையும் பதிலாக அளிக்கிறார். ஆகவே சொல்ல முடியாத ஜெபங்களுக்கு, அவர் பதிலளித்து, மன்னிப்பின் உணர்வோடு பலத்தையும் ஆசீர்வாதத்தையும் வழங்குகிறார்.

"இவைகளை குறித்து நாம் என்ன சொல்லுவோம்" என்று கூறி அப்போஸ்தலர் இது தொடர்பான தன்னுடைய முழு வாதத்தின் தொகுப்பையும் வழங்குகிறார். (தேவன் நம்முடைய சார்பாக எல்லா முன்னேற்பாடுகளையும் செய்திருக்கிறார் என்ற உண்மையை நாம் காணும் போது, நம்முடைய விருப்பத்திற்கு முரணான நமது பலவீனங்களையும் குறைபாடுகளையும் புறக்கணித்து, அவைகளை நம்முடைய கிரியைகளாக கருதாமல், நம்முடைய முடமான விண்ணப்பங்களை புறக்கணித்து, நம்முடைய விருப்பங்களை வெளிப்படுத்த நாம் அறியாத போதும், அபூரணமான ஜெபங்களில் நாம் தவிக்கும் போதும், நம்முடைய மனதின் ஆவிக்கு ஏற்ப நம்மை ஆசீர்வதிக்கும்படி அவர் ஏற்பாடுகளை செய்திருக்கிறார் என்று நாம் முடிக்கிறோம். ) "தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார் ? " - வசனம் 31.